# பாடல்கள்

## 1

புதிய எருசலேம் நகரே, புனித மகிமை வீசிடுதே
இசைந்தே இணைந்தே எழும்பிடுதே
இதுவோ அசையா தென்றென்றுமே - புதிய

### சரணங்கள்

1. மூலைக்குத் தலைக்கல் கிறிஸ்தேசு
அப்போஸ்தலர் தீர்க்கர் அஸ்திபாரம்
போதகரும் சுவிசேஷகரும்
மாளிகையாய் விசுவாசிகளும் - புதிய எருசலேம்

2. ஆதி பிதாக்கள் காத்திருந்த
ஜோதி நிறைந்த திருநகரம்
பூரண மகிமை அடைந்திடவே
பூவினில் விரைவாய் இயங்கிடுதே - புதிய எருசலேம்

3. தோன்றிடும் புதிய பூமியிலே
பூரண தேவ மகிமையிலே
மா ஒளி வீச மகிழ்வுடனே
இனிதாய் எழிலாய் இறங்கிடுதே - புதிய எருசலேம்

4. பளிங்குபோல் தெளிந்த ஜீவதண்ணீர்
பாய்ந்திடும் ஜீவ நதியுண்டு
பன்னிரு விதமாய் கனிதரவும்
பரிசுத்த ஜீவ விருட்சமுண்டு - புதிய எருசலேம்

5. அருவருப்பும் பொய்யும் தீட்டுள்ளதும்
அதில் பிரவேசிப்பதே இல்லையே
இனி ஒரு சாபமும் இருப்பதில்லை
இனி அது மிக தாமதிப்பதில்லை - புதிய எருசலேம்

## 2

ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி
அரியணை அமர்ந்திட எதிர்நோக்கி
அனுதினம் கறைதிரை பிழை போக்கி
ஆயத்தப்படுத்துகின்றாள் அவை கூட்டி – ஆட்டுக்

**சரணங்கள்**

1. மணவாளனின் அழகில் மயங்கிவிட்டாள்
மண்ணுலக மாயைகளை வெறுத்துவிட்டாள்
பாடுகளுடன் நேசரைப் பாடி மகிழ்ந்தே
பரிசுத்த ஜீவியத்தில் பழகிவிட்டாள் – ஆட்டுக்

2. ஆவியில் நிறைந்து பெலன் நிறைவாக்கி
ஆவியின் ஒருமைதனை வலுவாக்கி
இசைவாய் இணைந்தே ஒரே வாசஸ்தலமாய்
எழும்பி பிரகாசிக்கின்றாள் எருசலேமாய் – ஆட்டுக்

3. கன்னிகைகள் சொற்கணையால் துளைக்கும் போது
முள்ளுகளுள் லீலிபோன்று மகிழுகின்றாள்
வாசனையை வீசி நேசர் அன்பைக் கவர்ந்து
நேசர் அன்பு போதும் என்றே புகழுகின்றாள் – ஆட்டுக்

4. கொடி கெடி படை என அணி வகுத்தாள்
அழகில் விண்மதி என ஜொலித்துவிட்டாள்
அருணோதயம் போலவே உதித்துவிட்டாள்
பகலவன்போல் தொடர்ந்து பிரகாசிப்பாள் – ஆட்டுக்

5. சூலமித்தி சூலமித்தி சூலமித்தியே
எருசலேம் எருசலேம் எருசலேமே
இரண்டு சேனைக் கொப்பாகவே இயங்குகின்றாள்
அம்மினதாபின் இரதம்போல விளங்கிடுவாள்
– ஆட்டுக்

## 3

துதியே துதியே துதியே துதியே
துதியுமக்கே துதியே - துதியே

**சரணங்கள்**

1. தூதகணங்கள் தூயவர் உந்தன்
பாத சேவை செய்து பணிந்தும்மைத் துதிக்கும்
வேத முதல்வனும் நீர் - துதியே

2. அண்ட சராசரம் அனைத்துமே ஒன்றாய்
விண்டலதிபா வியந்தும்மைத் துதிக்கும்
மண்டலதிபனும் நீர் - துதியே

3. பரிசுத்தர் யாவரும் பரமனே உம்மைத்
தரிசிக்க நாடி தாழ்ந்தும்மைத் துதிக்கும்
பரிசுத்த தேவனும் நீர் - துதியே

4. அந்தகாரத்தின் அடிமைகளுக்கு
சுந்தர ஒளியை சுடரிடச் செய்ய
வந்த குமாரனும் நீர் - துதியே

5. மீட்கப்பட்டவர்கள் ஆனந்தங்கொண்டு
பாட்டுகள் பாடி மகிழ்ந்தும்மைத் துதிக்கும்
ஆட்கொண்ட நாதனும் நீர் - துதியே

6. கர்த்தாதி கர்த்தனை இராஜாதி ராஜனை
நித்தியமான எம் தேவாதி தேவனை
துத்தியம் செய்திடுவோம் - துதியே

## 4

காணீர் அற்புதம் வானத்திலே
மணி மாதிவளோர் பெரும் அதிசயமே

**சரணங்கள்**

1. சூரியனை அணிந்தவளாய்
தேவனின் நீதியைத் தரித்தவளாய்
கிறிஸ்தென்னும் சந்திரன் சாட்சியிலே – நின்று
கிருபையிலே நிதம் நிலைப்பவளே – காணீர்

2. தலையினிலே பன்னிரண்டு
தாரகையின் முடி வீசும் ஒளி
ஆவியின் ஆளுகையால் நிறைந்த – திரு
அப்போஸ்தலரது ஊழியமே – காணீர்

3. தேவ புத்திரர் வெளிப்படவே
வேதனை கொண்டவள் அலறுகிறாள்
யாவையும் ஆளுமோர் ஆண் மகவை – அவள்
ஈன்றிடும் வேளையே வந்ததினால் – காணீர்

4. விண்ணொடு நேர் சுத்தரையே
வீழ்த்தி தன் வாலாலோர் வலுசர்ப்பமே
விழுங்கிட ஆவலாய் ஆண்மகவை – அது
விழிப்புடன் அவள் முன்னே நிற்கிறதே – காணீர்

5. ஜெயமெடுத்தோர் ஆண்மகவாய்
சேர்ந்திட தேவ சிங்காசனத்தே
கிறிஸ்துவின் நிறைவென்னும் பூரணமே – வர
விசுவாசத்தில் நிலைத்தோங்கிடுவோம் – காணீர்

## 5

ஐயா கொல்கதா மலை நாதா - எனக்கு
யார் துணை சொல் அனுகூலா - எனக்
காறுதல் சொல் அனுகூலா

**சரணங்கள்**

1. பாறைக்குள் தேரைப் போலானேன் - நான்
பல துயர் பட்டவனானேன் - 2
ஆலைக்குள் கரும்பு போலானேன் - இந்த
அவதிக்குள் முகம் காட்ட வாருமேன் ராஜா - ஐயா

2. பெற்றோர்கள் கைவிட்ட போதும் - என்
பிறவிகள் மறந்திட்ட போதும் - 2
மற்றோர்கள் இரங்காத போதும் - உம்மை
மறக்கவே மாட்டேன் என் தேவ தேவா - ஐயா

3. பலரும் பலதைச் சொல்லி மாய்த்து - என்னை
அலைவாய் துரும்பு போலாய்த்து - 2
தொலையாத கவலைக்குள் மாய்த்து - இன்று
துரத்தி விட்ட கதியைப் பார்த்துப் பார்த்து - ஐயா

4. ஊரெல்லாம் தூற்றிட்ட போதும் - என்
உள்ளம் நொறுங்கின போதும் - 2
நீர் சொன்ன வாக்குகள் எல்லாம் - ஐயா
நீங்கவே நீங்காதென் நேச நேசா

5. துங்கா இஸ்ரவேலின் ராஜா - ஏழை
துயர் நீக்கும் மகிமை யெகோவா - 2
மங்காத வாக்குரைத்த தேவா - உம்மை
மறக்கவே மாட்டேன் என் தேவ தேவா - ஐயா

6. தாகமுள்ள போதெல்லாம் வாரும் - நல்ல
அமர்ந்த தண்ணீரண்டை சேரும் - 2
பணமும் விலையுமின்றி தாரும் - நீர்
பருகிட தாகத்தை தீரும் தீரும் - ஐயா

## 6

மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே
மூன்றாணி மீதில் காயம் அடைந்தே

**சரணங்கள்**

1. லோகப் பாவம் தீர்க்க பலியான
தேவ ஆட்டுக்குட்டியானவர்
சொந்தமான இரத்தம் சிந்தி மீட்டு
இந்தளவாய் அன்பு கூர்ந்தவர் – மீட்பர்

2. இயேசுவே கல்வாரி சிலுவையில்
ஏறி ஜீவன் தந்திராவிடில்
ஏழையான் என் பாவ பாரங்களை
எங்கு சென்று தீர்த்துக் கொள்ளுவேன் – பூவில் – மீட்பர்

3. தேவனே என்னை ஏன் கைவிட்டீரோ
என்று ஏசு கதறினாரே
பாவத்தால் பிதாவின் முகத்தையும்
பார்க்கவும் முடியவில்லையே – அவர் – மீட்பர்

4. அன்னை தந்தையாவரிலும் மேலாய்
அன்பு கூர்ந்தார் அண்ணல் இயேசுவே
ஆச்சரிய தேவ அன்பைப்பாட
ஆயிரம் நாவுகள் போதுமோ – பதி – மீட்பர்

5. பாவ பாரம் லோகக் கவலைகள்
தாவி உன்னைச் சூழ்ந்த போதிலும்
தேடி நாடி ஓடி வந்தால் உன்னைத்
தேற்றி ஆற்றித் தாங்குவார் அவர் – இப்போ – மீட்பர்

6. கோரமாம் சிலுவைக் காட்சி கண்டால்
கல் மனமும் உருகிடுமே
மாய லோக ஆசை வஞ்சிக்குமே
மாறிடாத இயேசு போதுமே – என்றும் – மீட்பர்

## 7

கல்வாரி நாயகா கருணையின் வடிவம் தேவா
காசினி மீதென்னை நேசக்கரம் நீட்டி
பாசமாய் மீட்டீரே – கல்வாரி நாயகா

**சரணங்கள்**

1. என் பாவம் யாவையுமே, மன்னித்து மறந்தீரே
உன் இரத்தம் சிந்தி என்னையும் மீட்டு
கிருபையால் இரட்சித்தீரே – கல்வாரி

2. துன்பம் துயர் வரினும், தாங்கிட பெலனளிப்பீர்
சோர்வுறும் நேரம் அன்புடன் தேற்றி
அருமையாய் அரவணைப்பீர் – கல்வாரி

3. உலகத்தின் மாய்கையில் நான்
வீழ்ந்து மடியாமலே
உம் கரம் பற்றியே உம் பின்னே நடந்தே
உம் வழி ஏகிடுவேன் – கல்வாரி

4. வாழ்நாளை வீண்நாளாய்
நான் கழித்திடாமலே
ஆத்தும பாரம் பெற்றென்றும் வாழ
கிருபையாய் பெலனளிப்பீர் – கல்வாரி

5. உம் சித்தம் என்றென்றுமே
நான் செய்ய அழைத்தீரே
என் சித்தம் வேண்டாம் உம் சித்தம் போதும்
என்றும் நான் செய்திடுவேன் – கல்வாரி

6. விண்மேக மீதினிலே
நீர் வரும் வேளையிலே
உம்மை நான் சந்திக்க ஆயத்தமாக்கும்
உம்மோடு வாழ்ந்திடுவேன் – கல்வாரி

## 8

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதி போலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

**சரணங்கள்**

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டை வா – சிலுவை

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே – சிலுவை

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப் பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்
பாவமெல்லாம் சுமந்தார் – சிலுவை

4. நித்திய ஜீவனை வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய் – சிலுவை

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத் தீர்க்க வாரும்
ஜீவத் தண்ணீரான கர்த்தர் இயேசு நாதர்
ஜீவன் உனக்களிப்பார் – சிலுவை

## 9

கொல்கொதாவே கொலை மரமே
கோர மரணம் பாராய் மனமே
கோர மனிதர் கொலை செய்தார்
கோரக் காட்சி பார் மனமே

**சரணங்கள்**

1. கந்தை அணிந்தார் நித்தை சுமந்தார்
   கள்ளர் நடுவில் கொலை மரத்தில்
   எந்தனை மீட்க இத்தனைப் பாடேன்
   எந்தன் ஜீவ நாயகா (2) – கொல்கொதாவே

2. என்னை மீட்ட கொலை மரமே
   அன்னையே நான் என்ன செய்வேன்
   என்னை உமக்கே ஒப்புவித்தேன்
   என்றென்றுமாய் நான் வாழ (2) – கொல்கொதாவே

3. வானம் பூமி ஒன்றாய் இணைந்த
   வல்ல தேவா உமக்கே சரணம்
   வாடி வாடி கொலை மரத்தில்
   நிற்கும் காட்சி பார் மனமே (2) – கொல்கொதாவே

4. அல்லேலூயா அல்லேலூயா
   அல்லேலூயா அல்லேலூயா
   அல்லேலூயா அல்லேலூயா
   அல்லேலூயா என்றென்றுமாய் (2)– கொல்கொதாவே

## 10

பாவிக்குப் புகலிடம் இயேசு இரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

**அனுபல்லவி**

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே – பாவி

**சரணங்கள்**

1. காட்டிக்கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கொதா மலைக்கு இயேசுவை – பாவி

2. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன்போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுகாயமும் அடைந்தாரே – பாவி

3. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்.
இதைக்காணும் உள்ளம் தாங்குமோ – பாவி

4. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடி வா – பாவி

5. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடி வா – பாவி

6. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா – பாவி

## 11

அந்தோ கல்வாரியில் அருமை ரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்குகிறார்

**சரணங்கள்**

1. மகிமை மாட்சிமை மறந்திழந் தோராய்
   கொடுமைக் குருசைத் தெரிந்தெடுத்தாரே
   மாய லோகத்தோ டழியாது யான்
   தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே – அந்தோ

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
   அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
   பல நிந்தைகள் சுமந்தாலுமே
   பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே – அந்தோ

3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
   கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
   குருதி வடிந்தவர் தொங்குகிறார்
   வருந்தி மடிவோரையும் மீட்டிடவே – அந்தோ

4. அதிசயம் இது இயேசுவின் நாமம்
   அதிலும் இன்பம் அன்பரின் தியானம்
   அதை எண்ணியே நிதம் வாழுவேன்
   அவர் பாதையே நான் தொடர்ந்தேகிடவே – அந்தோ

5. சிலுவைக் காட்சியைக் கண்டு முன்னேறி
   சேவை புரிவேன் ஜீவனும் வைப்பேன்
   என்னைச் சேர்த்திட வருவேன் என்றார்
   என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன் – அந்தோ

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் இயேசுன்னை அழைக்கிறாரே

**சரணங்கள்**

1. பார் திருமேனி வாரடி ஏற்றார்
பாரச் சிலுவைதனைச் சுமந்துசென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்
பயமின்றி வந்திடுவாய் – ஆணிகள்

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுமே
உணர்ந்திதை யுடனே உன்னதரண்டை
சரண்புகுவாய் இத்தருணம் – ஆணிகள்

3. கிருபையின் வாசல் அடைபடு முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாயே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் அளித்திடுவார் – ஆணிகள்

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினை
பகிர்ந்திடு வாருந்தன் இருதயந்தனிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய் – ஆணிகள்

5. இயேசு அல்லாது இரட்சிப்புத் தர ஓர்
இரட்சகர் வேறு இகமதி லுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே – ஆணிகள்

## 13

ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடே
என் இயேசு குருசை சுமந்தே
என் நேசர் கொல்கொதா மலையின்மேல் நடந்தே
– ஏறுகின்றார்

**சரணங்கள்**

1. கன்னத்திலவன் ஓங்கி அடிக்க
சின்னப் பிள்ளைபோல் ஏங்கி நின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகின்றான் – ஏறுகின்றார்

2. மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே
நெஞ்சைப் பிளந்தான் ஆ! கொடுமை
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியேப் பார் – ஏறுகின்றார்

3. இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப் படுத்தி ஏற்றுக்கொண்டார்
நேசிக்கின்றாயோ இயேசு நாதரை
நேசித்து வா குருசெடுத்தே – ஏறுகின்றார்

4. சேவல் கூவிடும் மூன்று வேளையும்
சொந்தக் குருவை மறுதலித்தான்
ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார் – ஏறுகின்றார்

5. பின்னே நடந்த அன்பின் சீஷன்போல்
பின்பற்றி வா சிலுவைவரை
காடியைப் போல கசந்திருக்கும்
கஷ்டங்களை அவரிடம் சொல் – ஏறுகின்றார்

6. செட்டைகளின் கீழ் சேர்த்தணைத்திடும்
சொந்தத் தாயின் அன்பதுவே
எருசலேமே! எருசலேமே!
என்றழுதார் கண்கலங்க – ஏறுகின்றார்

## 14

1. கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தன் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே

**பல்லவி**

விலையேறப் பெற்ற திருரத்தமே – அவர்
விலாவினின்று பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை – மாற்ற
விலையாக ஈந்தனரே

**சரணங்கள்**

2. பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கிணையாகுமோ
அன்னையினும் அன்பு வைத்தே
தன் ஜீவனை ஈந்தாரே – விலை

3. சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன்போல்
மங்கா வாழ் வளிக்கவே – விலை

4. எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப்பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பதையே
சிந்தித்தே சேவை செய்வேன் – விலை

5. மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணி லவன் எம்மாத்திரம்
மன்னவா உம் தயவே – விலை

# 15

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் - இயேசென்
சொந்தமானாரே

**சரணங்கள்**

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே - உயிர்

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே - உயிர்

3. எம்மாவூர் சீஷர்களின்
எல்லா மனவிருள் நீக்கினாரே
எம்மனக் கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே - உயிர்

4. மரணமுன் கூர் எங்கே?
பாதாளமுன் ஜெயமெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் - உயிர்

5. ஆவியால் இன்றும் என்றும்
ஆ! எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எமக்களித்தாரே
அல்லேலூயா துதி சாற்றிடுவோம் - உயிர்

6. பரிசுத்த மாக்குதலை
பயத்தோடென்றும் காத்துக்கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே - உயிர்

# 16

கர்ததர் உயிர்த்தெழுந்தார் – இன்றும்
கல்லறை திறந்திருக்க
நற்செய்தி தரிசனங்கள்
சாற்றி கீர்த்தனம் பண்ணிடுவோம்

**சரணங்கள்**

1. காரிருளில் கண்ணீருடன்
கல்லறை நோக்கியே சென்றனரே
அற்புதக் காட்சியும் கண்டிட ஸ்தீரிகள்
ஆச்சர்யம் அடைந்தனரே – கர்த்தர்

2. மரியாளே என்ற சத்தம்
மாதிகைப் பாய் அவள் கேட்டிடவே
ரட்சகர் தரிசனம் கண்டு முன்னோடி
“ரபூனி” என்றழைத்தாள்

3. பயந்திடவே சீஷர்களே
பூட்டின உள்ளறை தங்கினரே
மெய்ச் சமாதானத்தின் வாக்குகள் கூறி
மேசியா வாழ்த்திச் சென்றார் – கர்த்தர்

4. சந்தேகித்தான் தோமாவே
சீஷர்கள் கூறின சாட்சிதனை
உயிர்த்த நம் இயேசுவின் தேகத்தைத் தொட்டே
உண்மையைக் கண்டுணர்ந்தான் – கர்த்தர்

5. அதிகாலை கரையோரம்
அன்பரைக் கண்டு பிரமித்தனரே
பேதுரு அன்பினை சோதித்துக் கேட்டார்
போஜனம் பகிர்ந்தளித்தார். – கர்ததர்

6. மரித்தவரே உயிர்த்தெழுந்தார்
மானிடர் தேடிடும் தேவனிவர்
ஜீவனைத் தந்து நம் பாவங்கள் தீர்த்து
ஜீவனோ டுயிர்த் தெழுந்தார் – கர்த்தர்

7. கர்த்தரின் நாள் நெருங்கிடுதே
கிறிஸ்துவுக்குள் மரித்தோர் எழும்ப
கல்லறைகள் திறக்க பறப்பாரே
கண்ணிமை நேரத்திலே – கர்த்தர்

### சரணங்கள்

1. கல்வாரி மாமலைமேல் கைகால்கள் ஆணிகளால்
கடாவப் பட்டவராய் கர்த்தர் தொங்கக் கண்டேன்
குருசின் வேதனையும் சிரசின் முள்முடியும்
குருதி சிந்துவதும் உருக்கிற்றென் மனதை

2. அஞ்சாதே என் மகனே மிஞ்சும் உன் பாவத்தால்
நெஞ்சம் கலங்காதே தஞ்சம் நானே உனக்கு
எனக்கேன் இப்பாடு உனக்காகத் தானே
ஈனக்கோலம் அடைந்தேன் உன்னை ரட்சித்தேன் என்றார்

3. கர்த்தரின் சத்தமதை சத்தியமென்று நம்பி
பக்தியுடன் விழுந்து முத்தம் செய்தேன் அவரை
என் பாவம் நீங்கியதே எக்கேடும் ஓடியதே
சந்தேகம் மாறியதே சந்தோஷம் பொங்கியதே

## 18

யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார்
நரகை ஜெயித்தெழுந்தார்

**சரணங்கள்**

வேதாளக் கணங்கள் – ஓடிடவே – ஓடிடவே
உருகி வாடிடவே – யூத

வானத்தின் சேனைகள் துதித்திடவே – துதித்திடவே
பரனைத் துதித்திடவே – யூத

மரணச் சங்கிலிகள் தெறிபட்டன – தெறிபட்டன
நொடியில் முறிபட்டன – யூத

எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே – எங்கும் கேட்குதே
பயத்தை எங்கும் நீக்குதே – யூத

மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார் – அக மகிழ்ந்தார்
பரனை அவர் புகழ்ந்தார் – யூத

உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை – மரிப்பதில்லை
இனி மரிப்பதில்லை – யூத

பாவத்திற்கென்று ஒரு தரம் மரித்தார் – தரம் மரித்தார்
ஒரே தரம் மரித்தார் – யூத

கிறிஸ்தவரே நாமவர் பாதம் பணிவோம் – பாதம் பணிவோம்
பதத்தைச் சிரமணிவோம் – யூத

## 19

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கை கொட்டிப் பாடிடுவோம்
இயேசு ராஜன் உயிரித்தெழுந்தார் - அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் - ஆ . . . ஆ

**சரணங்கள்**

1. பார் அதோ கல்லறை மூடினப் பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதி முன்? - ஆ . . . ஆ - கீதம்

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுவோம் - தாம்
கூறிய மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு - ஆ . . . ஆ - கீதம்

3. அன்னா காய்பா ஆசாரியர் சங்கம்
அதிரடி கொள்ளுகின்றார் - இன்னா
பூத கணங்கள் இடி ஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார் - ஆ . . . ஆ - கீதம்

4. வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம்
வருகின்றார் ஜெயவீரன் நம்
மேள வாத்தியம் கைமணிப் பூரிகை
எடுத்து முழங்கிடுவோம் - ஆ . . . ஆ - கீதம்

என் மீட்பர் உயிரோ டிருக்கையிலே எனக்
கென்ன குறையுண்டு நீ, சொல் மனமே

**சரணங்கள்**

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தார்
என்னோடிருக்கவே எழுந்திருந்தார்
விண்ணுல குயர்ந்தார், உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே, சுகபத்திர மருளும் – என்

2. பாவமோ மரணமோ, நரகமோ, பேயோ
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய் – என்

3. ஆசி செய்திடுவார், அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக் காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்
மோட்ச வழி சத்யம் வாசல் உயிரெனும் – என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டுங் கைவிடா திருப்பார்
பாவமன்னிப் பளிப்பார், பாக்கியங் கொடுப்பார்
பரம பதிவியினுள் என்றனை எடுப்பார் – என்

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்

பொல்லான் அம்புக ளெய்திடட்டும்
ஆனது ஆகட்டும், அருள் மழை பெய்திடும்
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள் – என்

## 21

எழுந்தார் இறைவன் – ஜெயமே ஜெயமெனவே
எழுந்தார் இறைவன்

**சரணங்கள்**

1. விழுந்தவரைக் கரையேற்றப் – பாவத்
தழுந்து மனுக்குலத்தை மாற்ற, விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற (2) – எழுந்தார்

2. செத்தவர் மீண்டும் பிழைக்க, உயர்
நித்திய ஜீவனை அளிக்கத் – தேவ
பக்தர் யாவரும் களிக்க (2) – எழுந்தார்

3. கருதிய காரியம் வாய்க்கத் – தேவ
கருதி மொழிக ளெல்லாம் காக்க – நம்
இருதிறத் தாரையும் சேர்க்க (2) – எழுந்தார்

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்க – கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க – இப்
பூவின் மீது சபை செழிக்க (2) – எழுந்தார்

5. ஏதுந் தீவினை செய்யாத் தூயன் – எப்
போதுமே நன்மை புரி நேயன் – தப்
பாதுகாத்திடும் நல்லாயன் (2) – எழுந்தார்

## 22

இயேசு மானிடனாய்ப் பிறந்தார்
இந்த லோகத்தை மீட்டிடவே
இறைவன் ஒளியாய் இருளில் உதித்தார்
இந்த நற்செய்தி சாற்றிடுவோம்

**சரணங்கள்**

1. மேய்ப்பர்கள் இராவினிலே – தங்கள்
மந்தையைக் காத்திருக்க
தூதர்கள் வானத்திலே தோன்றி
தேவனைத் துதித்தனரே – இயேசு

2. ஆலோசனை கர்த்தரே – இவர்
அற்புதமானவரே
விண் சமாதானப் பிரபு சர்வ
வல்லவர் பிறந்தனரே – இயேசு

3. மாட்டுத் தொழுவமதில் – பரன்
முன்னணையில் பிறந்தார்
தாழ்மையைப் பின்பற்றுவோம் அவர்
ஏழ்மையின் பாதையிலே – இயேசு

4. பொன், பொருள், தூபவர்க்கம் – வெள்ளைப்
போளமும் காணிக்கையே
சாட்சியாய்க் கொண்டு சென்றே வான
சாஸ்திரிகள் பணிந்தனரே – இயேசு

5. அன்னாளும் ஆலயத்தில் – அன்று
ஆண்டவரை அறிந்தே
தீர்க்கதரிசனமே கூறி
தூயனைப் புகழ்ந்தனளே – இயேசு

6. யாக்கோபில் ஓர் நட்சத்திரம் – இவர்
வாக்கு மாறாதவரே
கண்ணிமை நேரத்தில் நம்மை
விண்ணதில் சேர்த்திடுவார் – இயேசு

## 23

சந்தோஷ விண்ணொளியே இயேசு
சாந்த சொரூபி அவர்
பள்ளத்தாக்கின் லீலி – சாரோனின் ரோஜா
பாரில் மலர்ந்துதித்தார்

**சரணங்கள்**

1. இன்ப பரலோகம் துறந்தவர்
துன்பம் சகித்திட வந்தவர்
பாவ மனிதரை மீட்டவர்
பலியாகவே பிறந்தார் – சந்தோஷ

2. பூலோக மேன்மைகள் தேடாதவர்
பேரும் புகழும் நாடாதவர்
ஒன்றான மெய் தேவன் இயேசுவே
என் ஆத்ம இரட்சகரே – சந்தோஷ

3. ஜீவன் வழி சத்தியம் எல்லாமிவர்
தேவாதி தேவ சுதன் இவர்
இயேசு அல்லால் வேறு யாருமில்லை
இரட்சண்யம் ஈந்திடவே – சந்தோஷ

4. ஆடம்பர வாழ்வை வெறுத்தவர்
அண்ணல் எளிமையாய் வாழ்ந்தவர்
எம்மைத் தம்மைப்போல் மாற்றிடும்
இயேசுவைப் பின்பற்றுவோம் – சந்தோஷ

5. எங்கள் சமாதானப் பிரபு இவர்
இயேசு அதிசயமானவர்
வேதம் நிறைவேறும் காலமே
வேகம் வருகின்றாரே – சந்தோஷ

## 24

பிறந்தார், பிறந்தார்
வானவர் புவி மானிடர் புகழ்
பாடிடப் பிறந்தார்

**சரணங்கள்**

1. மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மாதேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார் – பிறந்தார்

2. பாவ உலக மானிடர்மேல்
பாசம் அடைந்தவரே
மனக் காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்
மா ஜோதியாய்த் திகழ்ந்தார் – பிறந்தார்

3. பொறுமை, தாழ்மை, அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம்வரையும் தன்னை தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றார் – பிறந்தார்

4. கந்தைத் துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப் பெற்றஉடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன் – பிறந்தார்

5. குருவைத் தொடரும் சீஷர்களும்
குருபோல மாறிடுவார்
அவர் நாமம் தரித்தவர் யாவருமே
அவர் பாதையில் நடப்போம் – பிறந்தார்

6. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதை எங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம் – பிறந்தார்

## 25

**பல்லவி**

மானிட உருவில் அவதரித்த
மாசுடர் ஒளியே கிறிஸ்தேசுவே

**சரணங்கள்**

1. ஆத்தும மீட்பை ஏற்படுத்த
அவனியிலே உனக்காய் உதித்தார்
அண்டி வருவாய் வேண்டி அடைவாய்
அண்ணலே ஆத்தும வினை நீக்குவார் – மானிட

2. கூவி அழைப்பது தேவ சத்தம்
குருசில் வடிவது தூய ரத்தம்
பாவ மன்னிப்பு ஆத்ம இரட்சிப்பு
பாக்கியம் நல்கிட அவரே வழி – மானிட

3. இயேசுவின் நாமத்தின் வல்லமையே
இதை நாடுவோர்க்கு விடுதலையே
துன்பக் கட்டுகள் காவல் சிறைகள்
இன்று அகற்றுவார் நீயும் நம்பி வா – மானிட

4. அற்புதங்கள் கர்த்தர் செய்திடுவார்
அதிசயங்கள் அவர் காட்டிடுவார்
உண்மை நிறைந்த உள்ளம் திறந்து
உன் கர்த்தர் இயேசுவை விசுவாசிப்பாய் – மானிட

5. கர்த்தர் உன்னை இனி கைவிடாரே
கடைசிவரை தளராதே நம்பு
என்றும் நல்லவர் கர்த்தர் வல்லவர்
இயேசுவிடம் வந்தால் புறம்பே தள்ளார் – மானிட

## 26

ஆனந்த கீதங்கள் எந்நாளும் பாடி
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்
அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா (2)
அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா (2)

**சரணங்கள்**

1. புதுமை பாலன் திருமனுவேலன்
வறுமைக்கோலம் எடுத்தவதரித்தார்
முன்னுரைப்படியே முன்னணைமீதே
மன்னுயிர் மீட்கவே பிறந்தாரே – ஆனந்த

2. மகிமை தேவன் மகத்துவ ராஜன்
அடிமை ரூபம் தரித்திர லோகம்
தூதரும் பாட மேய்ப்பரும் போற்ற
துதிக்குப் பாத்திரன் பிறந்தாரே – ஆனந்த

3. மனதின் பாரம் யாவையும் நீக்கி
மரண பயமும் புறம்பே தள்ளி
மாசமா தானம் மாதேவ அன்பும்
மாறா விசுவாசமும் அளித்தாரே – ஆனந்த

4. அருமை இயேசுவின் திருநாமம்
இனிமை தங்கும் இன்னல்கள் நீங்கும்
கொடுமை பேயின் பெலன் ஒடுங்கும்
வலிமை தந்திடும் நாமமிதே – ஆனந்த

5. கருணை பொங்க திருவருள் தங்க
கிருபை பொழிய ஆர்ப்பரிப்போமே
எம்முள்ளம் இயேசு பிறந்ததாலே
எண்ணியே பாடிக் கொண்டாடுவோம் – ஆனந்த

# 27

தேவாதி தேவன் இராஜாதி இராஜன்
பாவ உலகினில் வந்துதித்தார்

**அனுபல்லவி**

ஏரோது மாளிகை தேடாத மா இராஜன்
ஏழைத் தொழுவத்தில் ஜெனித்தவர்

**சரணங்கள்**

1. வானத்தில் தோன்றும் ஓர் நட்சத்திரம்
வான சாஸ்திரிகள் முன்னில் சென்றாலும்
பாதை தவறியே சோகமடைந்தபின்
பாலகன் இயேசுவைக் கண்டடைந்தார் – தேவாதி

2. சத்திரத்திலே ஸ்தலமில்லையே
சத்திய தேவன் தலை சாய்க்கவே
தாழ்மை சொரூபியே தாழ இறங்கியே
தாங்கும் தொழுவத்தைக் கண்டடைவோம் – தேவாதி

3. கண்ணாரக் கண்டேன் உம் இரட்சணியத்தை
காலா காலமாகக் காத்திருந்தேன்
என்று சிமியோன் தன் கையில் எடுத்து நம்
இயேசுவை வாழ்த்தியே கண்டடைந்தார் – தேவாதி

4. தள்ளின கல்லே தலைக் கல்லாக
தாமதமின்றி வருகின்றவர்
ஆயர் குடிலிடைப் பாலகனாய்த் தோன்றும்
தூய பிதா முகங் கண்டடைந்தேன் – தேவாதி

## 28

ஈனலோகத்தில் இயேசு ஏன் பிறந்தார்
ஈன பாவிகளை மீட்கத்தான் பிறந்தார்

**சரணங்கள்**

1. ஆ! அதிசயம் ஆ! ஆ! அதிசயம்
அன்பரின் ஜெநிப்பு அதிசயம் - ஆ!ஆ!ஆ!ஆ!
அன்பரின் சிறப்பு அதிசயம் - ஈனலோகத்தில்

2. மா! மகிமையே மா! ஆகா மகிமையே
மனுக்குலம் மீட்ட மகிமையே - ஆ!ஆ!ஆ!ஆ!
மனுவுரு எடுத்த மகிமையே - ஈனலோகத்தில்

3. பார் பரிசுத்தர் பார் அதோ பரிசுத்தர்
பரலோக மேன்மையை துறந்ததால் - ஆ!ஆ!ஆ!ஆ!
பாவியின் சாயல் அணிந்ததால் - ஈனலோகத்தில்

4. ஆ! அருமையாம், ஆ! ஆ! அருமையாம்
தாழ்மையும் அருமை, பெருமையாம் - ஆ!ஆ!ஆ!ஆ!
சிலுவை மரணம்வரை தாழ்ந்ததால் - ஈனலோகத்தில்

5. ஆ! அல்லேலூயா ஆ! அல்லேலூயா
ஆகாயம் மகிழ்ந்து ஜொலித்ததால் - ஆ!ஆ!ஆ!ஆ!
ஆட்டிடையர் கண்டு களித்ததால் - ஈனலோகத்தில்

# 29

1. உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதனமாமே
காரிருள் நீங்கிடக் காசினி மீதிலே
கதிரொளியாய் ஜெனித்தார்

**அனுபல்லவி**

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே - (2)

**சரணங்கள்**

2. மானிடர் மேலிவர்க் கன்பிதுவோ
மனுக்கோலமாய் மனு வேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாணொளியாய் ஜெனித்தார் - அல்லே

3. தாரகையென அவர் தோன்றிடவே
நேர் பாதையில் நடத்திடவே
தற்பரன் கிருபையும் சத்திய மீந்திட
தன் ஒளியாய் ஜெனித்தார் - அல்லே

4. வாழ்த்துவோம் பாலகன் இயேசு பரன்
வல்ல தேவனின் ஏக சுதன்
வாஞ்சித்தாரே எம்மில் வாசம் செய்திடவே
வாணொளியாய் ஜெனித்தார் - அல்லே

5. தாவீதின் வேரிவராய் அவனின்
ஜெய ராஜ்யம் ஸ்தாபிக்கவே
தாசனின் ரூபமாய் தரணி மீதிலே
தான் உதித்தார் ஒளியாய் - அல்லே

அரசனைக் காணாமல் இருப்போமோ?
நமதாயுளை வீணாகக் கழிப்போமோ?
பரம்பரை ஞானத்தை பழிப்போமோ?
யூதர் பாடனுபவங்களை ஒழிப்போமோ? - யூத

**சரணங்கள்**

1. யாக்கோபில் ஓர் வெள்ளி, உதிக்குமென்றே இஸ்ரேல்
ராஜ செங்கோல் எங்கும் கதிக்குமென்றே
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்து பாலாம் தீர்க்கன்மொழி
பொய்யாத பாக்கியமே - யூத அரசனை

2. தேசோமயத் தாரகை, தோன்றுதுபார்! மேற்கு
திசை, வழிகாட்டி முன் செல்லுதுபார்
பூசனைக் காண நல்கொடைகள் கொண்டே அவர் பொன்முடி
வணங்குவோம் நடவும் இன்றே - யூத அரசனை

3. அலங்கார மனை ஒன்று, தோன்றுது பார் அதன்
அழகு மனமும் கண்ணும் கவர்ந்தது பார்
இளவரசங்கிருக்கும் நிச்சயம் பார், நாம் எடுத்த கருமம்
சித்தியாகிடும் பார் - யூத அரசனை

4. அரமனையில் அவரைக் காண்னோமோ,
அதை அகன்று தென்பக்கம் திரும்புவோமே
மறைந்த உடு அதோ பார் திரும்பினதே
பெத்லகேம், வாசலில் நமைக் கொண்டு
சேர்க்குது பார் - யூத அரசனை

5. பொன் தூபவர்க்கம், வெள்ளைப் போளமிட்டே - ராயர்
பெற்கழல் அர்ச்சனை புரிவோமே
வன்கண்ணன் ஏரோதைப்பாராமல் தேவ வாக்கினால்
திரும்பினோம் சோராமல் - யூத அரசனை

## 31

ஆதித்திரு வார்த்தை திவ்விய அற்புதப் பாலனாகப் பிறந்தார்
ஆதந்தன் பாவத்தின் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரையோரை யீடேற்றிட

### அனுபல்லவி

மாசற்ற ஜோதி திரித்துவத் தோர்வஸ்து
மரிய கன்னியிட முதித்து (2)
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகி
மின்னுஞ்சீர் வாசகி, மேனிநிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொரூபனார், ரஞ்சிதனார்
தாம், தாம், தன்னர வன்னர
தீம், தீம் தீமையகற்றிட
சங்கிர்த, சங்கிர்த, சங்கிர்த சந்தோஷ
ஷமென சோபனம் பாடவே
இங்கிர்த, இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட - ஆதி

### சரணங்கள்

1. ஆதாம் ஓதி ஏவினார் ஆபிரகாம் விசுவாசவித்து
யூதர் சிம்மாசத் தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத் தானுதித்தார் - ஆதி

2. பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்
மேலாக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார் - ஆதி

3. அல்லேலூயா சங்கீர்த்தனம், ஆனந்த கீதங்கள் பாடவே
அல்லைகள், தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார் - ஆதி

## 32

1. பூரண ஆசீர் பொழிந்திடுமே
பூரிப்போடு வாழ்ந்து வளம் பெறவே
ஜீவ தண்ணீராலே தாகம் தீர்ப்பதாலே
தேவநதி பாய்ந்தே செழித்தோங்குமே

**பல்லவி**

வானம் திறந்துமே வல்ல ஆவியே
வந்திறங்கி வரமே தந்தருளுமே
அன்பின் அருள் மாரியே வாருமே
அன்பரின் நேசம் பொங்கிப்பாடவே

**சரணங்கள்**

2. ஆத்தும தாகம் தீர்க்க வாருமே
ஆவியில் நிறைந்து மகிழ்ந்திடவே
வல்ல அபிஷேகம் அக்கினி பிரகாசம்
சொல்லரும் சந்தோஷம் உள்ளம் ஊற்றுமே – வானம்

3. தேவன்பின் வெள்ளம் புரண்டோடுதே
தாவி மூழ்கினோமே நீச்சல் ஆழமே
சக்தி அடைந்தேக பக்தியோடிலங்க
சுத்த ஜீவ ஊற்றே பொங்கிப் பொங்கிவா – வானம்

4. மா பரிசுத்த ஸ்தலமதிலே
மாசில்லாத தூய சந்நிதியிலே
வான் மகிமை தங்க வாஞ்சையும் பெருக
வல்லமை விளங்க துதி சாற்றுவோம் – வானம்

5. குற்றங் குறைகள் மீறுதல்களும்
முற்றுமாக நீங்க சுட்டெரித்திடும்
இயேசுவின் சிலுவை இரத்தமே என் தேவை
எந்தன் ஆத்துமாவை வெண்மையாக்குமே – வானம்

6. மேகத்திலே நான் வந்திறங்குவேன்
வேகமே ஓர் நாளில் வெளிப்படுவேன்
என்றுரைத்த தேவா ஏக திவ்ய மூவா
இயேசுவே இறைவா வேகம் வாருமே – வானம்

## 33

பேரின்ப நதியே தாகத்தைத் தீர்த்திட
பின்மாரியாகப் பொழிந்திடுமே

**சரணங்கள்**

1. எலியாவின் தேவன் எங்கே என்றானே
சலியாமல் ஓடி சால்வை பெற்றானே
பரலோக ராஜ்யம் பரிசுத்தவான்கள்
பலவந்தமாக்கும் காலம் இதுவே (2) - பேரின்ப

2. மங்கும் திரிகள் நெரிந்த நாணல்
தேங்கும் தண்ணீர்கள் போன்ற அநேகர்
அனலுமில்லாத குளிருமில்லாத
அனுபவத்தோடே ஜீவிக்கின்றாரே (2) - பேரின்ப

3. சவுலைப் பவுலாய் மாற்றிடும் தேவா
சடுதி ஒளியால் சந்திக்கும் மூவா
உலரும் எலும்பும் உயிரை அடையும்
உயிர் மீட்சி தாரும் என் இயேசு நாதா (2) - பேரின்ப

4. பரிசுத்த ஆவி பெற்றிட வாரீர்
பரித்த தேவ அழைப்பபைப் பாரீர்
தேடுங்கள் கிடைக்கும் கேளுங்கள் தருவேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றுரைத்தாரே (2) - பேரின்ப

5. ஊனர் குருடர் தீரா நோயாளர்
ஊமை செவிடர் பேயால் வாடுவோர்
அற்புத செயலால் ஆரோக்கியமடைய
ஆண்டவரிடமே வேண்டிடுவோமே (2) - பேரின்ப

6. சத்திய பரனை பக்தியுடனே
நித்திய யுகமாய் பாடிடுவேனே
ஏதேனின் ஜீவ ஊற்றுகளருகே
ஏழை என் தாகம் தீர்த்திடுவேனே (2) - பேரின்ப

## 34

எரியு மக்கினி போலு மதாவி – நீர்
சொரிந்திடும் பரனே – தினந்தினமாய்

உரைத்திட நாவால் உயிருடன் மொழிகள்
சொரிந்திடும் வரங்கள் நிறைந்தொழுக – இப்போ

**சரணங்கள்**

1. சிநேக அக்கினி என்னில் எரிந்தெழும்பி – பெரும்
தாகமாத்மாக்கள் மேலோங்கிடவே
அன்பினுரைகளால் கடின உள்ளமிளகி
வேக மரண பாதைவிட்டு விலக – அவர் – எரியு

2. பலிபீடத்தின் திரு அக்கினியால் – என்
அதரத்தின் குறைகள் அகன்றிடவும்
பலவித நூதன வசனங் களுரைக்க
பலமான கிருபை பற்றிடவும் – வாரும் – எரியு

3. உம்மில் அடியேன் பிரகாசித்திட – நான்
என்னை முழுதுமாக வெறுத்துவிட்டேன்
மன்னவா எந்தனில் வந்து அவதரித்து
வானக்கினியால் முற்றும் கழுவிவிடும் – வந்து – எரியு

4. தேசமெல்லாம் பற்றி எரிந்திடவே – உம்
தாசரிலக்கினி மூண்டெரிந்து
நாச உலகந்தினில் அக்கினி போல் உப
தேசிக்க திருநல் வார்த்தைகளை – உப – எரியு

5. அக்கினி பூவிலிட வந்தவரே – மிக
விக்கினம் பெருகுதே பாருமதை
அக்கினி யாயும தடியார்களெரிந்திட
அக்கினி அபிஷேகம் அளித்து விடும் – இப்போ – எரியு

## 35

பரிசுத்த ஆவியானவரே எங்கள் மீதினிலே
வந்திறங்கி வல்லமையாக கிரியை செய்யும்

**சரணங்கள்**

1. பெந்தேகொஸ்தின் தினமதிலே
வந்திறங்கி சீஷர்களை
சந்தித்ததுபோல் ஏழைகள் மீதும்
எந்தையே அமர்ந்திடுவீரே – பரிசுத்த

2. பற்பல பாஷைகள் பேசிடுவோம்
தற்பரன் மாண்பினை உரைத்திடுவோம்
அற்புத அடையாளம் செய்திட பாரில்
சொற்படி அருள்மாரி பொழிவீர் – பரிசுத்த

3. பேயின் சக்தி தகர்ந்திடவே
நோயின் பெலனும் அகன்றிடவே
சோரும் உள்ளங்கள் உணர்ந்தெழும்பிடவே
தாரும் ஓர் அபிஷேகம் தயவாய் – பரிசுத்த

4. ஆதி அன்பு குறைந்திடுதே
ஆதி கிரியை மறைந்திடுதே
ஆத்துமாக்கள் மாள்வதைக் காண
ஆறுதல் இல்லையே சுவாமி – பரிசுத்த

5. ஆவியால் உம் அன்பதையே
ஆழ்ந்து ருசிக்க அளித்திடுமே
அனலில்லாத அனுபவம் நீங்க
அன்பரே இறங்கிடுவீரே – பரிசுத்த

# 36

ஊற்றும் ஊற்றும் உன்னத ஆவியை ஊற்றும்
நேச அக்கினி பற்றிப் பிடிக்கவே ஊற்றும்
உள்ளத்தின் ஆழம் ஏங்கிடுதே ஆவிக்காய்
நிரம்பி வழிய வழிய ஊற்றிவிடும்

அல்லேலூயா நிரம்புதே என் பாத்ரம்
அல்லேலூயா பொங்குதே என்னுள்ளம்

**சரணங்கள்**

1. ஊற்றும் ஊற்றும் வல்லமையை ஊற்றும்
வெற்றி சிறக்கும் ஊழியம் செய்யவே ஊற்றும்
உலகின் ஒளியை ஏற்றிடவே உமக்காய்
பொங்கி வழிய வழிய ஊற்றிவிடும்

அல்லேலூயா நிரம்புதே என் பாத்ரம்
அல்லேலூயா பொங்குதே என்னுள்ளம்

2. ஊற்றும் ஊற்றும் அபிஷேகத்தை ஊற்றும்
ஆரோன் சிரசில் ஊற்றியதுபோல் ஊற்றும்
எலியாவின் வரமும் வல்லமையைப் பெறவே
எங்கள் மீது இப்போ ஊற்றும்

அல்லேலூயா நிரம்புதே என் பாத்ரம்
அல்லேலூயா பொங்குதே என்னுள்ளம்

ஊற்றும் ஊற்றும் உன்னத ஆவியை ஊற்றும்
நேச அக்கினி பற்றிப் பிடிக்கவே ஊற்றும்

லலலா லால லலலா
லலலா லால லலலா

## 37

பொங்கி வரும் அருள் மனிதனை மாற்றிடுதே
மங்கிப்போன மனம் புதுவாழ்வில் மலர்ந்திடுதே

**சரணங்கள்**

1. தீயவர் திருடரும் கொடியவர் கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் ஓடியே வா – பொங்கி

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினைப்
பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகாராஜன் உன்னைத் தான் அழைக்கிறார்
நம்பி நீ ஓடியே வா – பொங்கி

3. கிருபையின் நாட்களை தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில் வருந்திட வேண்டாம் நீ
அழைக்கிறார் ஓடியே வா – பொங்கி

## 38

என்னை பெலப்படுத்தும் இயேசுவால் – நான்
எல்லாமே செய்து முடிப்பேன்

தரணியில் நற்செய்தி ஊழியம் பரவிட
விரைவினில் பல மக்கள் மீட்கப்பட – என்னை

**சரணங்கள்**

1. சின்னஞ்சிறு கிராமங்களில்
சீர்மிகுந்த நகரங்களில்
பன்னெடுங்காலமாய் மக்கள்
பக்தி தாகத்தில் வாடுகிறார்
தாகம் தீர ஜீவ நீர்
வேகம் வா இயேசு என்றே – என்னை

2. சொந்த மக்கள் நான் துறப்பேன்
சுய ஆசைதான் வெறுப்பேன்
எந்த திசை சென்றிடவும்
இயேசுவுக்காக முன் வருவேன்
பாடுகள் சகிப்பேன் நான்
பாரினில் அருட்பணிக்காய் – என்னை

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா இராஜனே வந்திடுவார்

**சரணங்கள்**

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே – எக்காள

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்கு தாம் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே – எக்காள

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார் – எக்காள

4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம் – எக்காள

5. கள்ளர்கள் பரவி அங்குமிங்கும்
கர்த்தரின் வார்த்தையை புரட்டுகின்றார்
கர்த்தரே வாரும் வாஞ்சையைத் தீரும்
கருத்துடன் நாம் விழித்திருப்போம் – எக்காள

பிரதான தூதன் எக்காளம் முழங்க
பரமன் இயேசு வருவார் (2)

**அனுபல்லவி**

சாயங்காலத்திலோ நடுராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ
அதிகாலையிலோ எந்த வேளையிலோ
பரமன் இயேசு வருவார் (2)

**சரணங்கள்**

1. இருவர் வயலில் இருப்பார்
இரண்டு ஸ்தீரிகள் எந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார்
ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படுவார் – சாயங்

2. நோவா காலத்தின் சம்பவம் போல்
நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண் கொண்டும்
பலர் அசந்து வெறித்திருப்பார் – சாயங்

3. லௌகீக கவலைகளினாலும்
இலச்சை மிகுந்த வெறியினாலும்
எம் இருதயம் பாரம் அடையாமல்
எச்சரிக்கையுடன் காத்திருப்போம் – சாயங்

4. இரவும் பகலும் விழிப்பாய்
இருதயம் நொறுங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னியாக நாமும்
கர்த்தன் வருகைக்குக் காத்திருப்போம் – சாயங்

5. தவிக்கும் உலகம் அந்த நாளில்
தலைகளை உயர்த்தி நடப்போம்
வருகை நெருங்க கர்த்தர் இயேசு
வாசற்படியில் வந்து நிற்கிறார் – சாயங்

## 41

1. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி
தேவ பர்வதம் தன் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார்
பூலோக மக்களும் கண்டிடுவார்

**பல்லவி**

இயேசு கிறிஸ்து வருகின்றார்
இந்தக் கடைசிக் காலத்தில்
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டு புலம்பிடுமே

**சரணங்கள்**

2. ஏழாம் தலைமுறை ஏனோக் குரைத்த
எல்லாம் நிறைவேறும் காலம் நெருங்க
இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார் – இயேசு

3. தம்மை விரோதித்த அவ பக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயம் தீர்த்திடுவார் – இயேசு

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய்
எல்லா அநீதிக்கும் கூலி பெறுவாய்
கல்வாரிச் சிலுவை அண்டிடுவாய்
கர்த்தரை நம்பியே தப்பிடுவாய் – இயேசு

5. அந்திக் கிறிஸ்தன்று அழிந்து மாள
அன்பராம் இயேசுவே ஜெயம் சிறக்க
வாயில் இருபுறம் கருக்குள்ள
வாளால் நெருப்பாக யுத்தம் செய்வார் – இயேசு

6. கையால் பெயர்க்காத கல்லொன்று பாயும்
கன்மலையாகி இப்பூமி நிரப்பும்
கிரீடங்கள் பாகைகள் கவிழ்ந்திடும்
கிறிஸ்தேசு உரிமை பெற்றிடுவார் – இயேசு

7. யுத்தம் தொடங்குமுன் மத்திய வானம்
சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே
ஆண்டவர் இயேசுவை அழைக்கின்றோம் – இயேசு

## 42

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலோமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு அல்லேலூயா! அல்லேலூயா

**சரணங்கள்**

1. பாவத்தின் சுமையகற்றி – கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மை கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரே – அல்லேலூயா! – கர்த்தா

2. நீதியின் பாதையிலே – அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்தபோதும் மாறாத இன்ப
புதுவாழ்வைத் தருகின்றாரே – அல்லேலூயா! – கர்த்தா

3. மறுமையின் வாழ்வினிலே – இயேசு
மன்னவன் பாதத்திலே
பசிதாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவேன் – அல்லேலூயா! – கர்த்தா

## 43

கடைசிக் காலம் இதுவே
காலையிலோ மாலையிலோ – சேவல் கூவிடும் நேரத்திலோ
ஜீவாதிபதி இயேசு ராஜராஜன்
சீக்கிரம் வருகிறாரே – எமக்காய்

**சரணங்கள்**

1. மோச உலகம் நாசமடையும்
மாய வேஷங்கள் கடந்துபோகும்
உலக ஆசைகள் மனதை மயக்கும்
உயர்ந்த பரிசுத்த வாழ்வே போதும் – கடைசி

2. பூமி அதிர்ச்சி, பஞ்சம், பசியும்
பாரில் வேதனை ஆரம்பமாகும்
பகைகள் யுத்தங்கள் பரவும் கொள்ளைநோய்
இவைகள் முடிவின் அடையாளங்கள் – கடைசி

3. கள்ளக் கிறிஸ்துக்கள் எங்கும் எழும்பி
கூடுமானால் வஞ்சிப்பார் நம்மையும்
அசுத்த ஆவியும் அற்புதம் செய்திடும்
அதனை நிதானித்து நாம் எதிர்போம் – கடைசி

4. காட்டிக் கொடுக்கும் கேட்டின் மகனே
கள்ளத் துரோகியாம் யூதாசின் ஆவி
நல்லோரைப் பகைக்கும் நன்மையைக் கெடுக்கும்
பொல்லாங்கன் ஒழிந்திட நாம் ஜெபிப்போம் – கடைசி

5. இயேசு வருவார் நம்மை அழைக்க
ஏறிச் செல்வோம் மேகத்திலே நாம்
தலையை உயர்த்தி நிமிர்ந்து நோக்குவோம்
திரும்பி வருகிறார் அன்புடனே – கடைசி

## 44

1. இளைப்பாறுதல் ஈந்திடும் நாடே
இன்ப இயேசுவின் மோட்ச வீடே
புவியாத்திரை தீர்த்திடும் போதே
பரலோகம் அளித்திடுமே

**பல்லவி**

எந்தன் வாஞ்சை உயர் சீயோன்
என்னை வந்தவர் சேர்த்துக் கொள்வார்
கண்ணீர் யாவையுமே மிக அன்புடன்
கர்த்தர் தாமே துடைத்திடுவார்

**சரணங்கள்**

2. இந்த மண்ணின் ஆசை வெறுத்தேன்
இப்புவி எந்தன் சொந்தமல்ல
இன்பம் எண்ணம் மனம் எல்லாம் இயேசு
இலக்கை நோக்கித் தொடருகிறேன் - எந்தன்

3. நம் முன்னோர் பலர் அக்கரை மீதே
நமக்காகவே அவர் காத்திருக்க
விண்ணில் ஜீவ நதிக்கரை ஓரம்
வேகம் நானும் சேர்ந்துகொள்வேன் - எந்தன்

4. அற்பமான சரீரம் அழிந்தே
அடைவேன் அன்று மருரூபமாக
புதியராகம் குரல் தொனியோடே
புதுப் பாட்டு பாடிடுவேன் - எந்தன்

5. பரலோகமதிலே இயேசுவே அல்லால்
பரம ஆனந்தம் வேறில்லையே
அங்கு சேர்ந்து அவர் முகம் காண்பேன்
ஆவல் தீர அணைத்துக்கொள்வேன் - எந்தன்

6. உண்மையாக உம் ஊழியம் செய்ய
உன்னத அழைப்பை ஈந்தீரே
தவறாமலே காத்த கரத்தில்
தருவேன் என் ஆவியை நான் - எந்தன்

## 45

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

**சரணங்கள்**

1. வருத்தம் பசி தாகம்
மன துயரம் அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன் – பரலோகமே

2. சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே – பரலோகமே

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவைப் பின்பற்றுவேன் – பரலோகமே

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன் – பரலோகமே

5. பரம சுகம் காண்பேன்
பரன்தேசம் அதில் சேர்வேன்
இராப்பகல் இல்லையே
இரட்சகர் வெளிச்சமே – பரலோகமே

6. அழைப்பின் சத்தம் கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே – பரலோகமே

7. பளிங்கு நதியோரம்
சுத்தர் தாகம் தீர்த்திடுவார்
தூதர்கள் பாடிட
தூயனை தரிசிப்பேன் – பரலோகமே

## 46

அசைவாடும் ஆவியே
தூய்மையின் ஆவியே
இடம் அசைய உள்ளம் நிரம்ப
இறங்கி வாருமே

**சரணங்கள்**

1. பெலனடைய நிரப்பிடுமே
பெலத்தின் ஆவியே
கனமடைய ஊற்றிடுமே
ஞானத்தின் ஆவியே – அசை

2. தேற்றிடுமே உள்ளங்களை
இயேசுவின் நாமத்தினால்
ஆற்றிடுமே காயங்களை
அபிஷேக தைலத்தினால் – அசை

3. துடைத்திடுமே கண்ணீரெல்லாம்
கிருபையின் பொற்கரத்தால்
நிறைத்திடுமே ஆனந்தத்தால்
மகிழ்வுடன் துதித்திடவே – அசை

## 47

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

**சரணங்கள்**

1. துணை பிரியாது, தோகையிம்மாது
சுப மண மக்களிவர் இது போது
மணமுறையோது வசனம் விடாது
வந்தனரு மதருள் பெறவேது - நல்ல - மண

2. ஜீவ தயாபரா, சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண வலங்காரா,
தேவ குமாரா, திருவெல்லையூரா,
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரோ? நல்ல - மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்க மாசாரம் அன்பு உதாரம்
அம்புவி தனில் மனைக் கலங்காரம் - நல்ல - மண

## 48

மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்களநாதனே

**சரணங்கள்**

1. மங்கள நித்திய மங்களம் நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுக்கத்தனாம் ஆபிரகாம் தேவன் நீ – மங்களம்

2. மங்கள மணமகன் . . . . க்கும்
மங்கள மணமகள் . . . . க்கும்
மனுவேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முக்தியளித்திடும் நித்தியனே உனை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் – மங்களம்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியம் நீ
இத்தரை இத்திரு மணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே – மங்களம்

## 49

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

**பல்லவி**

வீசிரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியராம் வான் ராஜனே
ஆசீர்வதித்திடும்

**சரணங்கள்**

1. இம்மண மக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும் ஓங்கச்செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோ டன்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்கவே
ஊக்கமருளுமே – வீசிரோ

2. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சார்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்
ஏற்ற வான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே – வீசிரோ

3. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துமை என்றும் பிரஸ்தாபிக்க
ஆ! தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன் – வீசிரோ

# 50

இந்த மங்கம் செழிக்கவே கிருபை செய்யும்
எங்கள் திரித்துவ தேவனே

**அனுபல்லவி**

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில் சென்றம்பணத்தைக்
கந்தரசமாகச் செய்த விந்தைபோல, இங்கேயும் வந்து-இந்த

**சரணங்கள்**

1. ஆதித் தொடுத்தன்பை எடுத்தாய் மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்
நீதி வரம் நாலுங் கொடுத்தாய் - பெற்றுப் பெருகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத போதனே அந்தப்படி உம்
ஆதரவைக் கொண்ட சுதன் நீதியை நம்பிப்புரிந்த
- இந்த

2. தக்க ஆபிராமும் விண்டனன் - அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்
முக்கிய ஆரன் நிலத்தண்டினன் - நினைத்தபடி
சக்கியமதாகக் கண்டனன்
பக்குவம் உரைத்திடாரே பேக்காளும் ஈசாக்குக்கு
தக்க மணவாளியாகத் தந்து தயை செய்தாற்போல
- இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே அருளும்பரி
சுத்த சுவிசேட நேசனே
பக்தர்கள் பவ விமோசனே - பழுதணுவும்
அற்ற கிறிஸ்தேசு ராஜனே
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுபசோபனமாய்
- இந்த

## 51

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

**பல்லவி**

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

**சரணங்கள்**

2. தம்புரோடும் வீணையோடும் தேவனைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள் - இரா

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள் - இரா

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள் - இரா

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தைப் பரிசுத்தர்கள் நிரப்புவார் துதியுங்கள் - இரா

## 52

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

**அனுபல்லவி**

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

**சரணங்கள்**

1. காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார் - இந்த
2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளதாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே - இந்த
3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன் படிக்கைகளை
உண்மையாய் கர்த்தர் காத்துக்கொள்வார்- இந்த
4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே - இந்த
5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலை மேலிருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம் - இந்த
6. ஆனந்தம் பாடி திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய் - இந்த

## 53

அதிசயமான ஒளிமய நாடாம்
என் இயேசுவின் நாடாம்
நான் வாஞ்சிக்கும் நாடாம்

**சரணங்கள்**

1. பாவம் இல்லாத நாடு – ஒரு
சாபமும் காணா நாடு (2)
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னதத்தில் ஓசன்னா – அல்லேலூயா – அதிசய

2. சந்திர சூரியன் இல்லை – ஆனால்
இருள் ஏதும் காணவில்லை (2)
தேவகுமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமவர் – என்றும் பகல் – அதிசய

3. விதவிதக் கொள்கை இல்லை – பல
பிரிவுள்ள பலகை இல்லை (2)
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்புமயம் – அன்புள்ளோர் செல்லும் – அதிசய

4. பிரச்சினை ஏதும் இல்லை – வீண்
குழப்பங்கள் ஒன்றும் இல்லை (2)
மொழி நிறம் ஜாதிப் பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை – அன்பே மொழி – அதிசய

5. இயேசுவின் இரத்தத்தினால் – பாவம்
கழுவினால் செல்லலாமே
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப்பூவில் எவரும் வேண்டாம் – இன்றே வாரீர் – அதிசய

## 54

அழைத்தீரே இயேசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

**சரணங்கள்**

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயரதொனியோ இதை யார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ - அழைத்தீரே

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே
எத்தனை நன்மைகளோ உனக்காக நான் செய்தேனல்லோ
என்றே உரைத்தென்னை ஏங்கி அழைத்தீர்
எப்படி நான் மறப்பேன் - அழைத்தீரே

3. ஆதி விஸ்வாசம் தங்கிடவே
ஆண்டவர் அன்பு பொங்கிடவே
ஆதி அப்போஸ்தலரே உபதேசம் அளித்தனரே
நல் பூரண தியாக பாதை நடந்தே
நன்றியுடன் உழைப்பேன் - அழைத்தீரே

4. எந்தன் ஜெபத்தை கேட்டிடுமே
ஏழை ஜனத்தை மீட்டிடுமே
எந்தன் பிதா சித்தமே என் போஜனமும் அதுவே
என் பிராணனைக் கூட நேசித்திடாமல்
என்னையும் ஒப்படைத்தேன் - அழைத்தீரே

5. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும் - அழைத்தீரே

## 55

இது அதிசயமே எனக்கானந்தமே
இன்ப பரலோகம் துறந்தெனக்காய்
இகத்தில் இயேசுவே மனுவாய் உதித்தார்

**சரணங்கள்**

1. விண்ணையும் துறந்து இம்மண்ணுலகில்
உன்னையும் எண்ணியே தம் மனதில்
தாழ்மையில் ரூபமே தாம் எடுத்து
தயாபரனாய் தோன்றினார் – தேவ – இது

2. மானிடர் மன இருள் நீக்கிடும் மெய்
மாபிரபை யோடிலங்கும் மகிபன்
மன்னுயிர் மீட்கவே தன்னுயிரைத்
தந்தாரே விந்தையிதே – கர்த்தர் – இது

3. சமாதான பிரபுவாய் ஜெகத்தில் வந்தே
சமாதானம் எனதுள்ளமே பொழிந்தார்
நன்றியோடே நானும் பாடிடுவேன்
தற்பரன் இயேசுவையே – எந்தன் – இது

4. பறந்திடும் பறவைக்கும் கூடு உண்டே
பதுங்கிட நரிக்கும் ஓர் குழியுமுண்டே
இயேசுவுக்கோ தலை சாய்த்திடவோ
எங்குமோர் ஸ்தலமுமில்லை – இது

5. சாந்தமும் தாழ்மையும் நீதியுமே
சிறப்புடன் விளங்கிடுதே அவரில்
இந்நுகமே எனக்கெந்நாளுமே
சொந்த மென்றேற்றிடுவேன் – என்றும் – இது

# 56

அல்லேலூயா துதிமகிமை – என்றும்
இயேசுவுக்கே செலுத்திடுவோம்
ஆ! அல்லேலுயா அல்லேலூயா அல்லேலூயா (2)

**சரணங்கள்**

1. சிலுவையை சுமப்பாயா – அல்லேலூயா
உலகத்தை வெறுப்பாயா
உலகத்தை வெறுத்து இயேசுவின் பின்னே
ஓடி வருவாயா – அல்

2. மோட்சத்தை அடைந்திடவே – அல்லேலூயா
பாடுகள் படவேண்டும்
பாடுகள் மத்தியில் பரமன் இயேசுவில்
நிலைத்தே நிற்கவேண்டும் – அல்

3. ஜெபத்திலே தரித்திருந்து – அல்லேலூயா
அவர் சித்தம் நிறைவேற்று
முடிவு பரியந்தம் அவரில் நிலை நிற்க
பெலனைப்பெற்றுக் கொள்ளு – அல்

4. சென்றவர் வந்திடுவார் – அல்லேலூயா
அழைத்தே சென்றிடுவார்
அவருடன் செல்ல ஆயத்தமாவோம்
அவருடன் வாழ்ந்திடவே – அல்

## 57

அவர் எந்தன் சங்கீதமானவர்
பெலமுள்ள கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான அவரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்துவோம்

**சரணங்கள்**

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவன் அவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும் (2)
திக்கற்ற பிள்ளைகளின் தேவன் அவரே (2) – அவர்

2. இரண்டு மூன்றுபேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன் (2)
இருகரம் தட்டி என்றும் வாழ்த்திடுவோம் (2) – அவர்

3. வானவர் கிறிஸ்தேசு நாமம் அதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும் (2)
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம் (2) – அவர்

## 58

ஆத்துமமே, என் முழுஉள்ளமே – உன்
ஆண்டவரேத் தொழுதேத்து – இந்நாள் வரை
அன்புவைத் தாதரித்த – உன்
ஆண்டவரைத் தொழுதேற்று

**சரணங்கள்**

1. போற்றிடும் வானோர் – பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள – ஆத்து

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத – ஆத்து

3. தினம் தினம் உலகில் நீ செய்பலவான
வினை பொறுத்தருளும் மேலான – ஆத்து

4. வாதை, நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த – ஆத்து

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – ஆத்து

6. துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே
இதயமே, உள்ளமே, என் மனமே – ஆத்து

## 59

இதுவரை செய்த செயல்களுக்காக
இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம் (2)

**சரணங்கள்**

1. உவர் நிலமாக இருந்த என்னை
விளைநிலமாக மாற்றிய உம்மை
அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில்
நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி (2)
– இதுவரை

2. தனி மரமாக இருந்த என்னை
கனி மரமாக மாற்றிய உம்மை
திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில்
இன்னிசை முழங்கியே பாடுவேன் நன்றி (2)
– இதுவரை

3. உம் சித்தம் செய்திட அழைத்தவர் நீரே
சொந்தமாய் என்னையே ஏற்றுக் கொள்வீரே
சோர்விலும் தாழ்விலும் சோதனை யாவிலும்
தாங்கினீர் தயவாய் பாடுவேன் நன்றி (2)
– இதுவரை

# 60

1. உத்தமமாய் முன்செல்ல உதவி செய்யும் யேகோவா
   ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக்கொள்ள உதவும்
2. பலவிதமாம் சோதனைகள் உலகத்தில் எமை வருத்தும்
   சாத்தானின் அக்னி யாஸ்திரங்கள் எண்ணா நேரத்தில் தாக்கும்
3. தீர்மானங்கள் தோற்கா வண்ணம் காத்துகொள்ள உதவும்
   நேர்மையாக வாக்கைக் காக்க வழிவகுத்தருள வேண்டும்
4. இவ்வுலகமான மாயாபுரி அழியப்போவது நிச்சயம்
   இரட்சகரே நீர் இராஜவாக வருவது அதிநிச்சயம்
5. தூதரோடு பாடலோடு பரலோகில் நான் உலாவ
   கிருபை செய்யும் இயேசு தேவா உண்மை வழிகாட்டியே

# 61

இம்மட்டும் கிருபை தந்த தேவா
இனிமேலும் கிருபை தாரும் மூவா
இன்றும் என்றும் உம்மில் நான் நிற்கவே
இயேசு நீர் என்னில் உருவாகவே
உம்மைக் காணவே

**சரணங்கள்**

1. சோதிக்கப்பட்ட தூய தேவா
சோதனையில் பெலன் தாரும் மூவா
துன்பங்கள் தொல்லைகள் சூழ்கையிலே
இன்ப ஒளியை எனில் வீசியே - இருள் நீக்குமே

2. பக்தியில்லை நான் ஆராதிக்க
யுக்தியில்லை உம்மை நான் துதிக்க
சத்திய ஆவியின் வல்லமையால்
சக்தியைத் தாரும் உத்தமராய் - உம்மைத் துதிக்க

3. நன்றியால் உள்ளம் பூரிக்குதே
என்றுமே உம்மில் நான் நிற்கவே
அன்று உதிரம் சிந்தினதால்
இன்று உம் அன்பு பெருவெள்ளமாய் புரண்டோடுதே

4. சத்துருவான சாத்தான் என்னையே
நித்தம் நெருக்கி ஏய்க்கையிலே
கர்த்தனே ஜெயம் பெற்றிடவே
சத்திய ஆவியின் வல்லமையை - என்னில் ஊற்றும்

5. ஜெபத்தின் ஆவி என் அகத்தில் ஊற்றும்
ஜெபத்தினால் உலகை நான் ஜெயிக்க
உன்னதா உலகை நீர் ஜெயித்தீர்
உம் நாமத்தினால் நான் ஜெயிப்பேன் - அல்லேலூயா

## 62

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

**சரணங்கள்**

1. ஆதியும் நீரே – அந்தமும் நீரே
ஜோதியும் நீரே – என் சொந்தமும் நீரே – எந்த
2. தாய் தந்தை நீரே – தாதியும் நீரே
தாபரம் நீரே – என் தாரகம் நீரே – எந்த
3. வாழ்விலும் நீரே – தாழ்விலும் நீரே
வாதையில் நீரே – என் பாதையில் நீரே–எந்த
4. வானிலும் நீரே – பூவிலும் நீரே
ஆழியில் நீரே – என் ஆபத்தில் நீரே – எந்த
5. துன்ப நேரத்தில் இன்பமும் நீரே
இன்னல் வேளையில் – மாறாதவர் நீரே – எந்த
6. தேவனும் நீரே – என் ஜீவனும் நீரே
ராஜராஜனாம் – என் சர்வமும் நீரே – எந்த

## 63

எல்லாம் இயேசுவே எனக்கெல்லாம் இயேசுவே
தொல்லைமிகு மிவ்வுலகில் சுகம் இயேசுவே

**சரணங்கள்**

1. ஆயனும் சகாயனும் நேயனுமுபாயனும்
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும்
2. தந்தை தாயினம் ஜனம் பந்துள்ளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும்
3. கவலையிலாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும்
4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்
5. அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்தியமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும்
6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞான கீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும்

## 64

உம் இரத்தமே உம் இரத்தமே சுத்தம் செய்யுமே
உம் இரத்தமே என் பானமே

**சரணங்கள்**

1. பாய்ந்து வந்தநின் இரத்தமே
சாய்ந்தோர்கட்கு அடைக்கலமே
பாவிகள் நேசர் பாவி என்னை
கூவிக் கழுவினீர் என்னை - உம்

2. நேசர் சிலுவை சத்தியம்
நாசமடை வோர்க்குப் பைத்தியம்
இரட்சிப்படைவோர் சத்தியம்
அச்சயன் காப்பார் நித்தியம் - உம்

3. நின் சிலுவையில் சிந்தின
வன்மையுள்ள இரத்தத்தினால்
என் பாவத்தை பரிகரித்தீர்
அன்புள்ள தேவ புத்திரர் - உம்

4. பன்றி போல சேற்றில் புரண்டேன்
நன்றி இல்லாமல் திரிந்தேன்
கரத்தால் அணைத்தீர்
வரத்தால் ஆசீர்வதித்தீர் - உம்

5. ஐயனே உமக்கு மகிமையும்
துய்யனே துதி கனமும்
மெய்யனே எல்லா வல்லமையும்
உய்யனே உமக்கல்லேலூயா - உம்

## 65

எக்காலமும் எந்நேரமும் கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்
எந்நாளிலும் எவ்வேளையும் கர்த்தரை ஸ்துதித்திடுவேன்
துதி துதி துதி என்றும் செலுத்திடுவேன்
துதி துதி துதி கீதம் பாடிடுவேன் – எக்காலமும்

**சரணங்கள்**

1. போராட்டம் எது வந்தாலும் போராட பெலன் தருவார்
நல்ல போராட்டம் போராடி நான் இயேசுவோடு வாழ்ந்திடுவேன் – துதி

2. நிந்தனை அவமானங்கள் நித்தமும் சூழ்ந்திட்டாலும்
வாராவினை வந்தாலும் வல்ல இயேசுவோடு நான் நடப்பேன் – துதி

3. சோதனை எது வந்தாலும் சோராமல் வாழ்ந்திடுவேன்
சோதனையை ஜெயிக்க வல்ல இயேசுவை பின்பற்றி நடப்பேன் – துதி

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும் கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்
இயேசுவின் பொறுமையைப் போல் நான் எந்நாளும் வாழ்த்திடுவேன் – துதி

## 66

பிறந்துவிட்டார் பிறந்துவிட்டார் எனது உள்ளத்தில்
அவர் பிறந்ததினால் குதுகலம் பார் எங்கள் இல்லத்தில்
பாவ சாபம் ரோகம் தீர்க்கும் தேவ மைந்தனாம்
இந்த பாவ உலகை ஜெயிக்க வந்த இயேசு ராஜனாம் – பிறந்து

**சரணங்கள்**

1. கர்த்தத்துவம் அவரின் தோளில் கடலைப் போலவே
மகிமையைத் துறந்த தேவன் முன்னணை மேலே
அதிசயமான தேவன் ஆலோசனைக் கர்த்தர்
நித்திய பிதா இவர் சமாதான பிரபு இவர் – பிறந்து

2. அவர் பார்வைபட்ட இடத்தில் பாவம் பறந்துபோய்விடும்
அவர் கால்கள் பட்ட இடத்தில் கஷ்டம் கரைந்து போய்விடும்
அதிசயமான தேவன் ஆலோசனைக் கர்த்தர்
நித்திய பிதா இவர் சமாதானப் பிரபு இவர் – பிறந்து

## 67

உள்ளம் ஆனந்த கீதத்திலே!
வெள்ளமாகவே பாய்ந்திடுதே!
எந்தன் ஆத்தும நேசரையே!
என்றும் வாழ்த்தியே பாடிடுவேன்!

**சரணங்கள்**

1. பாவ பாரம் நிறைந்தவனாய்!
பல நாட்களாய் நான் அலைந்தேன்!
அந்த பாரச் சிலுவையிலே . . .
எந்தன் பாரங்கள் சுமந்தவரே! – உள்ளம்

2. மலை போன்றதோர் சோதனையில்!
மகிபன் அவர் கைவிடாரே!
கல்வாரியின் அன்பினிலே . . .
கனிவோடுன்னை அணைத்திடுவார் – உள்ளம்

3. உலகம் முடியும் வரையும்!
உந்தனோடிருப்பேன் என்றவர்!
வாக்கு மாறிடா நேசரையே . . .
நம்பிடுவாய் துணை அவரே – உள்ளம்

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் – தேவா
என்றென்றும் நான் பாடுவேன்

**அனுபல்லவி**

இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்காய்

**சரணங்கள்**

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே – எண்

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே – எண்

3. நீரினில் வாழ்கின்ற யாவும் – இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே – எண்

4. வால வயதுள்ளோரும் – மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே – எண்

## 69

என் மீட்பர் கிறிஸ்து பிறந்தார்
எனக்கென்ன ஆனந்தம்
என் மீட்பர் இயேசு உதித்தார்
எனக்கென்ன பேரின்பம்

**சரணங்கள்**

1. பூலோகமெங்கும் ஓர் செய்தி
மேலோகமெங்கும் விண் ஜோதி
நரர் வாழ்ந்திடவே பெரும் நீதி
நீர் வாரும் மெய் ஜோதி – என்

2. உந்தன் மகிமையை என்றென்றும் சொல்வேன்
உந்தன் கிருபையின் மேன்மையைக் கண்டேன்
நித்திய ஜீவ கிரீடம் எனதின்றே
பரலோக வாழ்வின்றே – என்

3. ஆ அல்லேலூயா துதி பாடு
இன்று அமலன் பிறந்தார் பாரு
மோட்ச வாசலை திறந்தார் பாரு
எந்நாளும் புகழ் பாடு – என்

## 70

என் மீட்பரே என் இரட்சகா
என் தேவனே என் கேடகம்
நான் நம்பின என் கோட்டையும்
என் துருகமும் நீரே

**சரணங்கள்**

1. துதிகளின் பாத்திரனே
திருச்சித்தம் போல் நடத்தி
துர்ச்சன ப்ரவாகத்தில் தேற்றினீர் – போற்றுவேனே
சார்ந்தும்மை நான் ஜீவிப்பேனே
சரணம் சரணம் மேசியாவே – என் மீட்பரே

2. தினம் தினம் உம் அருளால்
தீமைகள் வெல்லுவேன் நான்
கன மகிமை யாவும் உமக்கே செலுத்துவேனே
உம்மாலே ஒருவனாக சேனைக்குள் பாய்ந்திடுவேன்
வாழ்நாளெல்லாம் நீர் என் தஞ்சம்
வழி நடத்தும் மேசியாவே – என் மீட்பரே

# 71

கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது
கர்த்தரின் சத்தம் மகத்துவமுள்ளது
திரண்ட தண்ணீர்மேல் ஜலப்பிரவாகம்மேல்
தற்பரன் முழங்குகின்றார் அல்லேலூயா!

**சரணங்கள்**

1. பலவான்களின் புத்திரரே!
பரிசுத்த அலங்காரமாய்
கனம் வல்லமை மகிமை
கர்த்தருக்கே செலுத்திடுங்கள்
பிதாகுமாரன் பரிசுத்தாவியின்
புது ஆசீர்வாதம் பெருக – கர்த்தரின்

2. கேதுரு மரங்களையும்
லீபனோனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம்
கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது முன்னிலை
ஜெய வீரனாகச் செல்கிறார் – கர்த்தரின்

3. அக்கினி ஜீவாலைகளை
அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனாந்திரத்தை
கர்த்தர் சத்தம் அதிரப் பண்ணும்
ராஜாவாகவே கர்த்தர் வீற்றிருப்பார்
ராஜரீகமெங்கும் ஜொலிக்கும் – கர்த்தரின்

4. பெண் மான்கள் ஈனும்படி
பலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும்
கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து சமாதான மீந்து
பரன் எம்மை ஆசீர்வதிப்பார் – கர்த்தரின்

## 72

கர்த்தனே எம் துணையானீர்
நித்தமும் எம் நிழலானீர்
கர்த்தனே எம் துணையானீர்

**சரணங்கள்**

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கல மாயினார்
மனுமக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர் – கர்த்தனே

2. பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
தூசி என்றென்னை இகழ்ந்தும் விட்டார்
ராஜா, உம் அன்பு எனைக் கண்டது
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை
– கர்த்தனே

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார்
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை
– கர்த்தனே

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
ராஜனே, உமைப் பாடக்கூடுமோ?
ஜீவனை உமக்களிக் கின்றேனே
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை
– கர்த்தனே

## 73

காலையும் மாலை எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்

**அனுபல்லவி**

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

**சரணங்கள்**

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையால் இரட்சிப்பு மானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினமும் வாழ்ந்திடுவேன் – காலை

2. எனக்கெதிராய் ஓர் பாளையமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார் – காலை

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன் – காலை

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடி சேர்த்தென்னை மறைப்பார்
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப் பாதுகாத்து
உயர்த்துவார் கன்மலைமேல் – காலை

5. எந்தன் முகத்தை தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
தம்முகத்தைத் தேடுவேனே கூப்பிடும் என் சத்தம் கேட்டு
தயவாகப் பதிலளிப்பார் – காலை

## 74

1. என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!
சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தையெல்லாம்
மன்னித்து விட்டாரே

2. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனை ஸ்தோத்தரிப்போம்

3. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தங்கியே விட்டாரே

4. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளினதாலே
நிச்சயம் ஸ்வாமியை பற்றிய சாட்சி
பகர வேண்டியதே

5. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனை ஸ்தோத்தரிப்போம்.

# 75

காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்
நம்பிவா இயேசுவை நம்பிவா இயேசுவை

**சரணங்கள்**

1. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என்மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன் – நம்பி

2. கன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் உன்னைக் கரம்பிடித்தார்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகு போல எழும்பிடுவாய் – நம்பி

3. அத்திமரம் துளிர் விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை – நம்பி

## 76

கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
சிலுவையின் மாநிழலில்
கன்மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டு கொண்டோம்

**சரணங்கள்**

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும்
ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில்
மந்தைகள் நடுவினில்
நெருங்கவும் முடியாது – நாம் கிறிஸ்தவின்

2. இரட்சிப்பின் கீதங்களும்
மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார்மேக இருட்டினில்
தீபமாய் இலங்கிடும்
கர்த்தரால் இசை வளரும் – நாம் கிறிஸ்தவின்

3. தேவனின் இராஜ்ஜியத்தை
திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையாய் ஜெபித்திடும்
அதற்கென்றே வாழ்ந்திடும்
யாருக்கும் கலக்கம் இல்லை – நாம் கிறிஸ்தவின்

4. பொல்லோனின் பொறாமைகளும்
மறைவான சதி பலவும்
வல்லோனின் கரத்தினில்
வரைபடமாயுள்ள
யாரையும் அணுகாது – நாம் கிறிஸ்தவின்

# 77

1. சருவ லோகாதிபா நமஸ்காரம்!
   சருவ சிருஷ்டிகரே நமஸ்காரம்!
   தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
   தயாபர பிதாவே, நமஸ்காரம்
2. திரு அவதாரா நமஸ்காரம்!
   ஜெகத் திரட்சகனே நமஸ்காரம்
   தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
   தருவினில் மாண்டோய் நமஸ்காரம்
3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
   பரம சற்குருவே நமஸ்காரம்
   அருபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
   அரியசித்தே சதா நமஸ்காரம்
4. முத்தொழி லோனே நமஸ்காரம்!
   மூன்றிலொன் றோனே நமஸ்காரம்
   கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா
   நித்திய திரியேகா நமஸ்காரம்.

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

**சரணங்கள்**

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாரட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே - தோத்திரம்

2. ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்ய மதுர அன்பே - தோத்திரம்

3. மாய உலக அன்பே - நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே - தோத்திரம்

4. ஆதரவான அன்பே - நித்தம்
அன்னைபோல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமான தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே - தோத்திரம்

5. வாக்கு மாறாத அன்பே - நித்தம்
வார்த்தையுரைத் தென்னை தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே - தோத்திரம்

## 79

தாசரே இத் தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்த மாக்குவோம்
நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம், மாயிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம் – தாசரே

**சரணங்கள்**

1. வருத்தப்பட்டு பாரஞ் சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவபாரத்தை
நமது துக்கத்தை நமது துன்பத்தை சுமந்து தீர்த்தாரே
– தாசரே

2. பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே – தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள் படுகுழிக்குள் விழுந்தனரே – தாசரே

4. இந்து தேசமாது சிரோமணிகளை
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட – தாசரே

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நாம் முயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம் – தாசரே

## 80

துதி உமக்கே இயேசு நாதா
வாழ்த்திடுவோம் உம்மையே
நித்தமும் காக்கும் உம் கிருபைகளையே
எண்ணியே துதித்திடுவோம்

**சரணங்கள்**

1. ஆதி அந்தமில்லா அனாதி தேவனே
அடைக்கலமானீர் எமக்கு நீரே
மாறா விஸ்வாசத்தை எமக்குத் தந்தீரே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

2. கடந்த நாளெல்லாம் வழுவாமல் எம்மை
காருண்யத்தாலே காத்தீரே
வல்ல தேவனே உம் வாக்குகளையே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

3. தாயினும் மேலாய் அன்புகூர்ந்தீர்
தந்தை போல் எமைக் காத்தீரே
ஜீவனைத் தந்த உம் அன்பினையே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

4. ஜெயம் பெற்றோராய் சேவை செய்து
ஜீவனை வைத்தே துதித்திடவே
நித்திய ஜீவனை எமக்குத் தந்தீரே
எண்ணியே துதித்திடுவோம் - துதி

5. உன்னதர் உந்தன் மகிமையைக் காண
சீயோனை எமக்குக் காட்டினீரே
இயேசுவே உந்தன் வருகையின் நாளை
எண்ணியே துதித்திடுவோம் - துதி

## 81

தேவ ஜனமே பாடி துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரில் களித்திடுவோம்

**சரணங்கள்**

1. சென்ற நாளில் கண்ணின் மணிபோல்
காத்த தேவனை துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம் – தேவ

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனைத் துதித்திடுவோம் – தேவ

3. கர்த்தர் நாமம் ஓங்கி படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராய் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம் – தேவ

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரிப்பார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம் – தேவ

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம் – தேவ

## 82

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர் திருச்சபையானோரே

**சரணங்கள்**

1. காசினிதனிலே நேசமதாக
கஷ்டத்தை உத்தரித்தே - பாவக்
கசடதை அறுத்து சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே - தேன்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி என் மனமே - தேன்

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம்
உபாயமாய் நீங்கிவிடும் - என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ மனமே - தேன்

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் - நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார்
ஆசைகொள் நீ மனமே - தேன்

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம் - அதைப்
பிடித்துக்கொண்டால்தான் பேரின்ப வாழ்வைப்
பெறுவாய் நீ மனமே - தேன்

தோத்திரம் செய்வேனே
இரட்சகனைத் தோத்திரம் செய்வேனே (3)
பாத்திரமாக இம்மாத்ரம் கருணை வைத்த
பார்த்திபனை யூதக்கோத்திரனை என்றும் – தோத்

**சரணங்கள்**

1. அன்னை மரி சுதனை – புல் மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை – தோத்

2. கந்தை பொதிந்தவனை – வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க்கானந்த மாட்சியளித்தோனை
வானபரன் என்னும் ஞான குணவானை – தோத்

3. செம்பொன்னுருவானை – தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று பைம்பொன்மலர் தூவி – தோத்

நன்றியால் துதி பாடு
நம் இயேசுவை உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் – நன்றி

**சரணங்கள்**

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும் – நன்றி

2. துன்மார்க்கதுக் கேதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்து
சங்கீத கீர்த்தனம் பாடு – நன்றி

3. சரீரம், ஆத்துமா ஆவியினாலும்
சோர்ந்து போகும் வேளையிலெல்லாம்
துதிசத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும் – நன்றி

என்னையே கூப்பிடுவாய்
மறுமொழி கொடுத்திடுவேன்
கடினமும் அறியாததும்
காரியம் அறிந்திடுவாய்

**சரணங்கள்**

1. சகல வியாதி வேதனையும்
அகற்றி உன்னைக் குணப்படுத்தி
ஆரோக்கிய வாழ்வு அளித்திடுவேனே
உந்தன் பரிகாரியே – என்னையே

2. உந்தன் துக்கம் மாற்றிடுவேன்
களிப்பின் தொனியும் எழும்பிடுமே
துதியொலி கேட்கும் மகிழ்ச்சியும் தங்கும்
உன்னை விடுவிப்பேன் நான் – என்னையே

3. மேன்மையான வாக்குத்தத்தம்
அருமையான வார்த்தைகளை
நிறைவேற்றும் தேவன் நானே அறிவாய்
உனக்கு செவி கொடுப்பேன் – என்னையே

4. வேத சத்தியம் அறிவதினால்
தேவ நன்மை தங்கிடுமே
சமாதானம் அருளி சவுக்கியம் அருளி
உன்னைத் தாங்கிடுவேன் – என்னையே

5. வானில் மீன் போல ஜனமதையே
பூவில் நானே பெருகச் செய்வேன்
ஊழிய பாதையில் உயர்வினைக் காண்பாய்
உன்னைத் உயர்த்திடுவேன் – என்னையே

## 86

நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா

**அனுபல்லவி**

துதிபாடிட இயேசுநாதா
பதினாயிரம் நாவுகள் போதா

**சரணங்கள்**

1. துங்கன் இயேசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனைத் தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூய தூயனை - நெருங்கிடுவோம் - நிகரே

2. கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம் - நிகரே

3. பொன், பொருள்களும் அழிந்திடுமே
மண்ணும் மாயையு மறைந்திடுமே
இதினும் விலை பெறும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே - நிகரே

4. தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர் கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார் - நிகரே

5. கொந்தளிக்கும் அலைகளையும்
கால் மிதித்திடும்த் கர்த்தரவர்
அடங்கிடுமே அதட்டிடவே
அக்கரை நாமும் சேர்ந்திடவே - நிகரே

6. ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார்
ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார்
மா சந்தோஷ நாள் நெருங்கிடுதே - நிகரே

# 87

பரம எருசலேமே பரலோகம் விட்டிறங்குதே
அலங்கார மணவாட்டியாய் அழகாக ஜொலித்திடுதே
ஆமென் அல்லேலூயா (4)

**சரணங்கள்**

1. எருசலேமே கோழிதன் குஞ்சுகளை
ஏற்றணைக்கும் ஏக்கத்தின் குரல் கேட்டேன்
தாய்ப் பறவை துடித்திடும் பாசம் கண்டேன்
தாபரமாய் சிறகினில் தஞ்சமானேன்
- கனிவான எருசலேமே

2. ஜீவ தேவன் நகரினில் குடிபுகுந்தேன்
சீயோன் மலைச் சீருக்குச் சொந்தமானேன்
நீதி தேவன் நிழலடி சிரம் புதைத்தேன்
நீதிமான்கள் ஆவியில் மருவி நின்றேன்.
- மேலான எருசலேமே

3. சர்வ சங்க சபையின் அங்கமானேன்
சர்வ லோக நடுவரின் அருகில் வந்தேன்
பரிந்துரைக்கும் இரத்தத்தில் மூழ்கி நின்றேன்
பரிவாரமாய் தூதர்கள் ஆடி நின்றார்
- ஆஹா என் எருசலேமே

4. விடுதலையே விடுதலை விடுதலையே
லோகமதின் மோகத்தில் விடுதலையே
நானேயெனும் சுயவாழ்வின் விடுதலையே
நாதர்தனில் வாழ்வதால் விடுதலையே
- சுயாதீன எருசலேமே

5. கண்ணீர் யாவும் கனிவோடு துடைத்திடுவார்
எண்ணமதின் ஏக்கங்கள் தீர்த்திடுவார்
மரணமில்லை மனநோயின் துயரமில்லை
அலறலில்லை அழுகையின் சோகமில்லை
- தலைநகராம் எருசலேமே

மகிமைமேல் மகிமை அடைந்திடுவேன்
மறுரூபமாவேன் மனமதிலே
மகிழ்ந்திடவே தரிசிக்கவே பரன் முகமே

**சரணங்கள்**

1. உந்தன் பாதம் என்னை பலியாய்
உண்மை மனதுடன் ஒப்படைத்தேன்
ஏற்றுக் கொண்டருளும் தேவ பெலன் விளங்கும்
தேற்றி உயிர்ப்பித்திடும் – தம் ஆவியினால் – மகிமை

2. தேவ சாயல் தேவ சமூகம்
தேவ பிள்ளைகள் அடையும் பாக்யம்
எந்தன் வாஞ்சையிதே என்று சேர்ந்திடுவேன்
என்னை நிரப்பிடுமே – தம் ஆவியினால் – மகிமை

3. ஜீவ ஜலமே பொங்கி வருதே
ஜீவ ஊற்றுகள் திறந்தனவே
தம் கரம் பிடித்தேன் அங்கு வழி நடத்தும்
தாகம் தீர்த்திடுவேன் – தம் ஆவியினால் – மகிமை

4. பாதம் ஒன்றே போதும் என்றேன்
பேசும் ஆண்டவர் தொனியும் கேட்டேன்
இன்ப வாக்குகளே எந்தன் போஜனமே
என்னை பெலப்படுத்தும் – தம் ஆவியினால் – மகிமை

5. திவ்ய குணங்கள் நாடி ஜெபித்தேன்
தூய வாழ்க்கையின் தேவை அதுவே
தேவ சேவையிலே பாடு சகித்திடவே
தாரும் பொறுமை பெலன் – தம் ஆவியினால் – மகிமை

6. ஆவி, ஆத்மா தேகம் முழுவதும்
அன்பர் இயேசுவின் சொந்தமாமே
பூரணம் அருளும் ஆயத்தப்படுத்தும்
பாடிப்பறந்திடுவேன் – தம் ஆவியினால் – மகிமை

## 89

யேகோவா நிசி யோகோவா நிசி
யேகோவா நிசியை யேகோவா நிசியை
ஏற்றிப் பாடுவோம்
எங்கள் கொடி வெற்றிக் கொடியே (2)

**சரணங்கள்**

1. வீறு கொண்டெழுவீர் இயேசு வீரரே
மாறுகொண்டு மன்னர் முன்னே செல்கிறார்
சீறியெழும் சிங்கங்கள் நாம் அல்லவோ
மீறும் எதிரி சதிகளுக்கு மிரளவா
யூதசிங்கம் யுத்தசிங்கமே (2) – யேகோவா

2. கர்த்தர் துணை நின்று யுத்தம் செய்வாரே
கலங்கி நிற்க காரணங்கள் இல்லையே
கைகளைத் தளர்த்திடாமல் தாங்கியே
கர்த்தர் இயேசு சத்ய ஆவி நிற்கிறார்
கர்த்தர் வல்ல யுத்த வீரரே (2) – யேகோவா

3. சத்ரு வெள்ளம்போல் ஏறி வருகின்றான்
சத்ய ஆவி வேகம் கொடியை ஏற்றுவார்
கோலியாத்தின் வேஷம் இங்கே செல்லுமா?
கோஷமிடும் இளைஞரின் முன் நில்லுமா?
கர்த்தர் நாமம் வல்ல கோட்டையே (2) – யேகோவா

4. ஆவியில் நிறைந்து ஜெபம் செய்வோமே
ஆயுதங்கள் அணிந்து களம் செல்வோமே
ஆர்ப்பரித் தலங்கமதை வீழ்த்தியே
ஆவிகளின் சேனைகளை வெல்வோமே
கொடிகள் ஏந்தும் படைகள் அல்லவோ (2) – யேகோவா

5. நமக்கிருக்கும் இந்த பெலன் போதுமே
நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே
பட்டயமோ புயபலமோ தேவையா?
பரம தேவ ஆவி நம்மில் இல்லையா?
ஜீவ தேவ சேனையல்லவோ? (2) – யேகோவா

6. முடிந்ததென்று முழங்கி நிற்கும் வீரனே
முற்றும் அவனை முறியடித்த தீரனே
சிலுவையில் சிரம் நசித்த சீலனே
சிலுவைக் கொடியை ஏற்றும் தேவ பாலனை
வெற்றி வாகை சூட்டிப் பணிகிறோம் (2) – யேகோவா

7. அல்லேலூயா தேவநாமம் வாழ்கவே!
அல்லேலூயா இயேசு இராஜா வருகவே!
அல்லேலூயா ஆவி புகழ் ஓங்கவே!
அல்லேலூயா தேவபடை வெல்கவே!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்கவே! (2) – யேகோவா

# 90

நான் நேசிக்கும் தேவன் இயேசு என்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர்
நான் பாடி மகிழ்ந்திடுவேன் என் இயேசுவை துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம் அவர் பாதத்தில் அமந்திருப்பேன்

**சரணங்கள்**

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் நேரத்தில்
படகாய் வந்திடுவார்
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார் – நான் பாடி

2. பாவ நோயாலே வாடும் வேளையில்
மருந்துவராகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார் – நான் பாடி

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனை
தேற்றிட வந்திடுவார்
கால் தளர ஊன்று கோலாய்
காத்திட வந்திடுவார் – நான் பாடி

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனி கலங்கிடேன்
எந்தனுக்கே காவல் அவர்
நான் உடல் அவர் உயிரே – நான் பாடி

## 91

வழிநடத்தும் வல்ல தேவன் வாழ்வில் நாயகனே
வாழ்வில் நாயகனே நம் தாழ்வில் நாயகனே

**சரணங்கள்**

1. பரதேசப் பிரயாணிகளே நாம் வாழும் பாரினிலே
பரமானந்தத்தோடே செல்வோம்
பரமன் நாட்டினிற்கே - இயேசு
பரன் தம் வீட்டினிற்கே - வழிநடத்தும்

2. போகும் வழியைக் காட்டி நல்ல போதனை செய்வார்
ஏகும் சுத்தர் மீது கண்கள்
இருத்தி நடத்துவார் - இயேசு
திருத்தி நடத்துவார் - வழிநடத்தும்

3. அந்தகார சக்திகள் எம்மை அணுகிடாமலே
சொந்தமான தம் ஜனத்தை
சூழ்ந்து காப்பாரே - இயேசு
துணையாய் நிற்பாரே - வழிநடத்தும்

4. வாதை நோய்கள் வன்துன்பங்கள் வருத்திய போதும்
பாதையில் நாம் சோர்ந்திடாமல்
பலப்படுத்திடுவார் - இயேசு
திடப்படுத்திடுவார் - வழிநடத்தும்

5. காடானாலும் மேடானாலும் கடந்து சென்றிடுவோம்
பாடானாலும் பாடிச் செல்வோம்
பரவசமுடனே - இயேசு
பரன்தான் நம்முடனே - வழிநடத்தும்

# 92

1. ஸ்தோதிரம் இயேசுநாதா உமக்கென்றும்
   ஸ்தோத்திரம் இயேசுநாதா
   ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
   திருநாமத்தின் ஆதரவில்

2. வான தூதர் சேனைகள் மனோகர
   கீதங்களால் எப்போதும்
   ஓய்வின்றிப் பாடித் துதிக்க மாபெரும்
   மன்னவனே உமக்கு

3. நின் உதிரமதினால் திறந்த நின்
   ஜீவ புது வழியாம்
   நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
   சேரவுமே சந்ததம்

4. இத்தனை மகத்துவமுள்ள பதவி இப்
   புழுக்களாம் எங்களுக்கு
   எத்தனை மா தயவு நின்கிருபை
   எத்தனை ஆச்சரியம்

5. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக்
   கூட உம் நாமத்தினால்
   தந்த நின் கிருபைக்காய்
   உமக்கென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

6. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில்
   யாருண்டு ஜீவ நாதா
   நீரேயன்றி இகத்தில் வேறோரு
   தேற்றமில்லை பரனே

## 93

ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

**பல்லவி**

தேவனே நீர் பெரியவர் தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர் தேவனே நீர் வல்லவர் – ஜீவ

**சரணங்கள்**

1. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ – தேவனே

2. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள்மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர் – தேவனே

3. வாக்குத் தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்த நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர் – தேவனே

4. நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாயலோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்கமாட்டீரோ – தேவனே

## 94

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார் (2)

**சரணங்கள்**

1. செங்கடலும் அவர் சொல்ல இரண்டாய் நின்றது
பெருங்கோட்டை ஒன்று தரை மட்டமானது
அவர் சொல்ல குருடனின் கண் திறந்தது
அவர் தொட குஷ்டரோகி சுத்தமாயினான் – ஜீவி

2. உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக்காட்டும் நல்ல மேய்ப்பரே – ஜீவி

## 95

ஜெபமே என் வாழ்வின் செயலாக மாற
ஜெப ஆவியால் என்னை நிறைத்திடுமே
ஜெபமின்றியே ஜெயமில்லையே
ஜெப சிந்தை எனில் தாருமே

**சரணங்கள்**

1. இரவெல்லாம் ஜெபித்த என் தேவனே – உம்
இதயத்தின் பாரம் என்னிலும் தாரும்
பொறுமையுடன் காத்திருந்தே
போராடி ஜெபித்திடவே – ஜெபமே

2. சோதனையணுகா விழிப்புடன் ஜெபிக்க
சோதனையிலும் சோர்ந்திடா ஜெபிக்க
மாமிசத்தின் பெலவீனத்தில்
ஆவியின் பெலன் தாருமே – ஜெபமே

3. எந்த சமயமும் எல்லா மனிதர்க்கும்
பரிசுத்தவான்கள் பணிகள் பலனுக்கும்
துதி ஸ்தோத்திரம் ஜெபம் வேண்டுதல்
உபவாசம் என்னில் தாருமே – ஜெபமே

4. முழங்காலில் நின்றே முழுமனதுடனே
விசுவாசம் உறுதியில் உண்மையாய் ஜெபிக்க
உம் வருகை நாளதிலே
உம்முடன் சேர்ந்திடவே – ஜெபமே

# 96

1. அன்பில் என்னைப் பரிசுத்தனாக்க
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ

**பல்லவி**

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்

**சரணங்கள்**

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாம் உம் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை – என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேறாய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகித்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர – என்

4. வருங்காலங்களில் முதற்பேறாய்
நீர் இருக்க நாம் சோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே – என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் எப்படி பதில் செய்குவேன்
இம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னைத் தந்தேன் நடத்திடுமே – என்

## 97

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே – ஆ அடைக்கலமே

**சரணங்கள்**

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லா நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே – ஆ அடைக்கலமே

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்துவமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமிதே – ஆ அடைக்கலமே

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோரைக் கிருபை சூழ்ந்து கொள்ளுமே – ஆ அடைக்கலமே

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கி னீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக்கொண்டீரே
அழுகையை களிப்பாக மாற்றிவிட்டீரே – ஆ அடைக்கலமே

5. பாவங்களை பாராதென்னைப் பற்றிக்கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே – ஆ அடைக்கலமே

அன்னை அன்பிலும் விலை
என் இயேசுவின் தூய அன்பே
தன்னை பலியாய்த் தந்தவர்
உன்னை விசாரிப்பார்

**சரணங்கள்**

1. பாவச் சேற்றினில் வீழ்ந்தோரை
பரன் சுமந்து மீட்டாரே
தம் நாமத்தை நீ நம்பினால்
தளர்ந்திடாதே வா . . . – அன்னை

2. மாய லோகத்தின் வேஷமே
மறைந்திடும் பொய் நாசமே
மேலான நல் சந்தோஷமே
மெய் தேவன் ஈவாரே – அன்னை

3. தேவ ராஜ்ஜிய பாக்கியமே
தினம் அதை நீ தேடாயோ
உன் தேவனை சந்தித்திட
உன் ஆயத்தம் எங்கே – அன்னை

4. ஜீவ புஸ்தகம் விண்ணிலே
தேவன் திறந்து நோக்குவார்
உன் பேர் அதில் உண்டோ என்றே
உன்னை நிதானிப்பாய் – அன்னை

5. உந்தன் பாரங்கள் யாவையும்
உன்னை விட்டே அகற்றுவார்
உன் கர்த்தரால் கூடாதது
உண்டோ நீ நம்பி வா . . . – அன்னை

# 99

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

**பல்லவி**

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெருவெள்ளமே

**சரணங்கள்**

1. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எமைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம் - ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும்புயல் அடித்து கவிழ்த்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தியெமை
காத்தாரே கருணையுடன் - ஆத்துமமே

4. யோர்தானைக் கடப்போம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் சிறந்தே
என்றென்றும் வாழ்ந்திடுவோம் - ஆத்துமமே

5. பரிசுத்த வான்களின் பாடுகளெல்லாம்
அதிசீக்கிரத்தில் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் - ஆத்துமமே

## 100

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவரென் ஆத்துமாவிற்கே
ஆனந்தமாக ஆசிகளருளும்
ஆண்டவர் இயேசுபோல் ஆருமில்லையே

**பல்லவி**

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறெங்குமில்லையே

**சரணங்கள்**

2. தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனென் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார் – இயேசு

3. அழுகையின் தாழ்வில் நடப்பவரே
ஆழிபோல் வான் மழை நிறைக்குமே
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
பெலத்தின் மேல் பெலமடைந்திடுவீர் – இயேசு

4. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார் – இயேசு

5. மகிமையும் நம்பிக்கை சந்தோஷமும்
மகிழ்ச்சியின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம் – இயேசு

# 101

1. இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள்ப் பயன்படுத்தும்

**பல்லவி**

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

**சரணங்கள்**

2. தரிசு நிலங்கள் அனேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர் – திறவுண்ட

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள் – திறவுண்ட

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம், ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும் – திறவுண்ட

5. இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும், தோல்வியும் ஆக்கிடுமே – திறவுண்ட

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந்தியாவின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமம் விரைந்திடுமே – திறவுண்ட

## 102

இரங்குமே என் இயேசுவே
இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவி கதறியே இராவும் பகலுமே
கெஞ்சும் ஜெபங்கேளுமே

**சரணங்கள்**

1. நித்தம் எமக்காய்ப் பரிந்து பேசும்
நள்ளிரவின் நண்பனே
அன்பின் பிதா முன்னில் இன்று ஜெபித்திடும்
அன்பர் ஜெபம் கேளுமே - இரங்குமே

2. உற்றார் பெற்றாரும் குடும்பங்களும்
மற்றும் பலர் மாள்வதைக்
கண்டு சகித்திடாதென்றும் ஜெபித்திடும்
கண்ணீர் ஜெபம்கேளுமே - இரங்குமே

3. அன்று நினிவே அழிவைக் கண்டே
அன்பாய் இரங்கினீரே
யோனா உரைத்ததும் ஆலோசனை தந்து
ஏழை ஜெபம்கேளுமே - இரங்குமே

4. எத்தனை துன்பம் சகித்து மீட்டீர்
எல்லாமே வீணாகுமோ
அத்தி மரத்திற்கு அன்று இரங்கினீர்
அந்த ஜெபம் கேளுமே - இரங்குமே

5. சோதனையினின்று இரட்சித்தீரே
சோதோமின் பக்தனையே
ஆபிரகாம் அன்று வேண்டி ஜெபித்தார்
ஆதி ஜெபம்கேளுமே - இரங்குமே

6. ஐந்து கண்டத்தின் ஜனத்திற்காக
ஐங்காயங்கள் ஏற்றீரே
தேவன் இல்லை என்று கூறி மடிவோரைத்
தேடும் ஜெபம்கேளுமே - இரங்குமே

7. பிள்ளைகள் அப்பம் கிடைத்திடாதோ
பேதைகள் கேட்டிடவே
மேஜைத் துணிக்கைகள் தாரும் எனக்கெஞ்சும்
மாந்தர் ஜெபம்கேளுமே - இரங்குமே

8. தாரும் உயிர் மீட்சி சபைதனில்
சோரும் உள்ளம் மீளவே
கர்த்தாவே உம் ஜனம் செத்த நிலை மாற
பக்தர் ஜெபம் கேளுமே - இரங்குமே

## 103

சந்தோஷம் பொங்குதே (2)
சந்தோஷம் என்னில் பொங்குதே - அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார் முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

**சரணங்கள்**

1. வழி தப்பி நான் திரிந்தேன்-பாவவழியதை சுமந்தலைத்தேன்
அவர் அன்பு குரலே அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே - சந்தோஷம்

2. சத்துரு சோதித்திட - தேவ உத்தரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே - சந்தோஷம்

3. பாவத்தில் ஜீவிப்பவர் பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில் நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடு என்றும் வாழுவேன். - சந்தோஷம்

## 104

இஸ்ரவேலென் ஜனமே என்றும்
இடறிட வேண்டாம்
யேகோவா உன் தெய்வமானால்
ஏதும் பயம் வேண்டாம்

**சரணங்கள்**

1. ஓங்கும் புயமும் பலத்த கரமும்
உன் பக்கமேயுண்டு தாங்கும் கிருபை
தயவு இரக்கம் தாராளமாயுண்டு – இஸ்ர

2. பார்வோன் கைக்கு விடுத்து மீட்ட
பஸ்கா ஆட்டுக்குட்டி ஆரோன்
மோசே என்னும் நல்ல ஆசாரியர் உண்டு – இஸ்ர

3. செங்கடலில் வழிதிறந்த சீயோன் நாயகனே
பங்கமின்றி பாலைவனத்தில்
பராமரித்தாரே – இஸ்ர

4. சத்துருக்களை சிதற அடித்த
சர்வ வல்ல தேவன் யுத்தத்தில் உன்
முன்னே நின்று ஜெயமெடுத்தாரே – இஸ்ர

5. பயப்படாதே சிறுமந்தையே பார்
நான் உன் மேய்ப்பன் தயங்காதே
மனம் கலங்காதே உன் தேவன் தினம் காப்பேன் – இஸ்ர

## 105

**பல்லவி**

இரட்டிப்பான நன்மைகள் தந்திட
இயேசு வாக்களித்தாரே

**அனுபல்லவி**

முன்மாரிமேல் பின்மாரி மழையே
உன்னதத்தினின்று வந்திறங்குதே

**சரணங்கள்**

1. பெலத்தின் மேலே மா பெலனே
புதுபெலன் நாம் பெற்றிட
சால்வைதனை எலிசா அடைந்தாற்போல்
சோர்வின்றி பெலன் என்றும் நாடுவோம் – இரட்

2. கிருபையின்மேல் மா கிருபை
கர்த்தரிடம் நாம் பெற்றிட
ஸ்திரீகளுக்குள் மரியாள் பெற்ற பாக்கியம்
ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம் – இரட்

3. ஜெயத்தின் மேலே மா ஜெயமே
ஜெயத்தொனியாய்ப் பெற்றிட
போர்முனையில் சிறு தாவீது போல
போர் வீரராக என்றும் ஜெயிப்போம் – இரட்

4. நம்பிக்கையின் மேல் நம்பிக்கை
நல் விசுவாசம் பெற்றிட
ஆதி அப்போஸ்தலர் காலம் நடந்த
அற்புதங்கள் நாம் என்றும் காணுவோம் – இரட்

5. பரிசுத்தம் மேல் பரிசுத்தம்
பங்கமில்லாமல் பெற்றிட
நீதியின் சூரியன் இயேசுவுடன்
நீதி அணிந்து என்றும் ஆளுவோம் – இரட்

6. மகிமையின் மேல் மா மகிமை
மறுரூபம் நாம் பெற்றிட
கண்ணிமை நேரத்திலே பறந்தேகி
கர்த்தருடன் நாம் என்றும் வாழுவோம் – இரட்

## 106

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தின் முன் நடப்போம்
இனி எல்லாருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

**பல்லவி**

நம் இயேசு ராஜாவே இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

**சரணங்கள்**

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம் - நம்
3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்த பார் முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம் - நம்
4. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம் - நம்

# 107

என்னை நேசிக்கின்றாயா (2)
கல்வாரி காட்சியைக் கண்டபின்னும்
நேசியாமல் இருப்பாயா?

**சரணங்கள்**

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பினதால்
ஓடி வந்தேன் மானிடனாய் - என்னை

2. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கிறேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாற வா - என்னை

3. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப்பார்
பரிகாச சின்னமாம் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய் - என்னை

உம்மை நேசிக்கின்றேன் நான் (2)
கல்வாரி காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ

உறக்கம் தெளிவோம்
உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரி தொனிதான்
மழைமாரி பொழியும்
நாள்வரை உழைத்திடுவோம்.

**சரணங்கள்**

1. அசுத்தம் களைவோம் அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க நம்மிடை கருத்து
வேற்றுமையின்றி வாழ்வோம் – உறக்கம்

2. அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்த சாட்சிகள் நம்மிடை தோன்றி
நாதனுக்காய் மடிவோம் – உறக்கம்

3. கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும்
தரித்திரர் ஆனதில்லை
இராஜிய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப் பட்டதில்லை – உறக்கம்

4. உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா ஒருவர் உங்கள்
நடுவில் வந்துவிட்டார் – உறக்கம்

சரணங்கள்

1. உன்னதமானவரின் – உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

பல்லவி

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார் (2)

சரணங்கள்

2. தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே – அவர்

3. இரவின் பயங்கரத்துக்கும் – பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் – அவர்

4. ஆயிரம் பதினாயிரம் – பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே – அவர்

5. தேவன் உன் அடைக்கலமே – ஒரு பொல்லாப்பும்
உன்னைச்சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் – அவர்

6. உன் வழிகளிலெல்லாம் உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடித்
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் – அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் – அவர்

8. ஆபத்திலும் அவரை நான் நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் – அவர்

## 110

இயேசு ராஜனின் திருவடிக்கு சரணம் சரணம் சரணம்
ஆத்ம நாதரின் மலரடிக்கு சரணம் சரணம் சரணம்

**சரணங்கள்**

1. பார் போற்றும் தூய தூய தேவனே
மெய் ராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணை யாவும் ஆனீரே - சரணம் (3)
- இயேசு

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதரே
ஏழை என்னை ஆற்றித் தேற்றிக் காப்பீரே - சரணம் (3)
- இயேசு

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்மா சரீரத்தைப் படைக்கிறேன் - சரணம் (3)
- இயேசு

4. உந்தன் சித்தம் செய்ய அருள் தாருமே
எந்தன் சித்தம் யாவும் என்றும் ஒழிப்பீரே
சொந்தமாக ஏற்று என்னை ஆட்கொள்ளும் - சரணம் (3)
- இயேசு

5. அல்லேலூயா பாடி வந்து துதிப்பேன்
மனதார உம்மை என்றும் போற்றுவேன்
அல்லேலூயா அல்லேலூயா ஆமென் - சரணம் (3)
- இயேசு

## 111

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசம் செய்கிறாரே

**சரணங்கள்**

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே – தம்
ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே – இதோ

2. தேவ ஆலயமும் அவரே – தூய
ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே – இதோ

3. சீயோனே உன் வாசல்களை – ஜீவ
தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனைக் கூறி
உயர்த்திடுவோம் அவரை – இதோ

4. முன்னோடியாய் இயேசுபரன்
மூலைக்கல்லாகி சீயோனிலே
வாசம் செய்திடுமுன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் – இதோ

5. இந்த உலகத்தை வெறுத்திடுவோம் – அதன்
இச்சைகள் எறிந்திடுவோம்
நம் அன்பின் பிதாவே நம் அகமதில் வசித்திட
ஆயத்தம் செய்திடுவோம் – இதோ

# 112

இன்பமிதே பேரின்பமிதே
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே

**சரணங்கள்**

1. பாவம் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே
வாதை போக்க வந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்ப

2. நேற்றும் இன்றும் மாறா நாமம்
இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே – இன்ப

3. ஜீவ பாதை காட்டும் நாமம்
இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்ப

4. சாவு பயங்கள் நீக்கும் நாமம்
இயேசு நாமமே
சாபம் ரோகம் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே – இன்ப

5. தேவ ராஜ்யம் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே
தேவநீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே – இன்ப

## 113

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம்

**சரணங்கள்**

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக் களிக்கும் – இயேசு

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பாரெங்கும் வாசனை வீசிடும் நாமம் – இயேசு

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம் – இயேசு

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம் – இயேசு

5. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றி லொன்றாக ஜொலிப்பவர் நாமம் – இயேசு

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசைத் துரத்திட்ட நாமம் – இயேசு

## 114

இன்ப இயேசுவையே தினம் துதித்திடுவேன்
புகழ்பாடி மகிழ்ந்திடுவேன்
இனிமை சுகமே அளித்தோர் அவரை
பண்பாடி வாழ்த்திடுவேன்

**சரணங்கள்**

1. கோரத்தின் எல்லை புயலினில்
பேரலை வீசும் கடலினில்
மாளும் பாவி என்னைத் தூக்கி
தோளில் தாங்கிக் கரை சேர்த்தார்
மகிபன் அருளின் வடிவாம் அவரை
மகிழ்வாகப் பாடிடுவேன் – இன்ப

2. மாந்தர்கள் கைவிட்ட வேளைதனில்
மாமன்னர் என்னைச் சேர்த்துக் கொண்டார்
ஜீவ இரத்தமதால் மீட்டார்
தூய வாழ்வுதனைத் தந்தார்
மகவாய் எடுத்தே அணைத்தார் கரத்தில்
மகிழ்வாகப் பாடுகின்றேன் – இன்ப

3. வானக வேந்தன் என்றென்றுமே
வாழ்ந்திட தந்தேன் என்னுள்ளமே
வான தூதர் போல நானும்
வாழ்வு காண வாக்குத் தந்தார்
வருவார் அழைப்பார் வானகம் செல்லுவேன்
வல்லோனை வாழ்த்திடுவோம் – இன்ப

## 115

பாடும் பாடல் இயேசுவுக்காக
பாடுவேன் நான் எந்த நாளுமே
என் ராஜா வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் லீலி அவரே

**சரணங்கள்**

1. அழகென்றால் அவர் போலே
யார்தான் உண்டு இந்த லோகத்தில்
வண்ண மேனியோனை எண்ணிப் பாடிடவே
என் உள்ளம் மகிழ்வாகுதே - பாடும்

2. அன்பினிலே என் நேசருக்கே
என்றென்றுமே இணையில்லையே
என்னை மீட்டிடவே தன் ஜீவன் தந்தார்
என் நேசர் அன்பில் மகிழ்வேன் - பாடும்

3. தெய்வம் என்றால் இயேசு நாதனே
சாவை வென்று உயிர்த்தெழுந்தாரே
என் பொன் நேசரின் மார்பில் சாய்ந்தோனாக
நான் பாடுவேன் பாமாலைகள் - பாடும்

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் - ஏசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

**சரணங்கள்**

1. பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர் - உம்

2. புது எண்ணெயால் புது பெலத்தால்
புதிய கிருபை புதுக்கவியால்
நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர் - உம்

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசை கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர் - உம்

4. என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே - உம்

5. கனி செடி நீர் நிலைத்திருக்கும்
கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கிளை நறுக்கி களை பிடுங்கி
கர்த்தரே காத்தென்னை சுத்தம் செய்யும்- உம்

6. என் இதய தெய்வமே நீர்
எனது இறைவா ஆரூயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்
நேச முகம் என்றும் கண்டிடுவேன் - உம்

7. சீருடனே பேருடனே
சிறந்து ஜொலிக்கும் கொடுமுடியில்
சீக்கிரமாய் சேர்த்திடுவீர்
சீயோனை வாஞ்சித்து நாடுகிறேன் - உம்

## 117

1. உன்னையும் என்னையும் இரட்சிக்கவே
   இயேசு தம் ஜீவனை ஈந்தனரே
   குருசில் கண்டேன் (3) என் இயேசுவை

2. பாவத்தின் தோஷத்தை மன்னிக்கவே
   பரன் தம் இரத்தத்தைச் சிந்தினரே
   குருசில் கண்டேன் (3) என் இயேசுவை

3. மன்னிப்பும் மோட்சமும் அடைந்திட
   நானே வழி சத்தியம் ஜீவன் என்றார்
   சோர்ந்திடாதே நம்பியே வா
   நிச்சயம் நேசர் ஏற்றுக் கொள்வார்

4. இயேசு உன்னை அன்பாய் அழைக்கிறார்
   அவரை நீ இன்று எற்றுக் கொள்வாய்
   அழைக்கிறார் (3) அன்புடனே

5. இரட்சகர் பாதம் நீ பற்றிக் கொண்டால்
   நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வாய்
   அல்லேலுயா (3) ஆ . . . மென்.

# 118

உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயா?
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா? (2)

**பல்லவி**

உனக்காக நான் மரித்தேன்
எனக்காக நீ என்ன செய்தாய் (2)

**சரணங்கள்**

1. உலக மேன்மை அற்பமென்றும்
உலக ஆஸ்தி குப்பையென்றும்
உள்ளதினின்று கூறுவாயா?
ஊழியம் செய்ய வருவாயா? - (2)
2. மேய்ப்ப னில்லாத ஆடுகள் போல்
மேய்கின்றார் பாவப் புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுகின்றாயா - (2)
3. இயேசு என்றால் என்ன விலை?
என்றே கேட்டிடும் எத்தனை பேர்?
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா? - (2)
4. ஐந்து சகோதரர் அழிகிறாரே
யாரையாவது அனுப்பிடுமே
யாரை நான் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக? - (2)

# 119

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே

**பல்லவி**

இயேசு போதுமே! இயேசு போதுமே!
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

**சரணங்கள்**

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயங்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே – இயேசு
3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார் – இயேசு
4. மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐஸ்வர்யம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் – இயேசு

# 120

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவருமவரே
என் ஜீவனுக் கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

**சரணங்கள்**

1. தீமை செய்கிறவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
என் தேவன் அருகில் நின்று காத்து நிற்பார்
என்னைப் பகைத்தவர்கள் உடனே அழிவார்கள் - என்

2. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
தந்தை இயேசென்னைச் சேர்த்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
என்றும் நன்மையால் என்னை நடத்திடுவார் - என்

3. தீங்கு நாளில் அவர் என்னை மறைத்து
தம் கரத்தினால் தாங்கிடுவார்
தம் கூடார மறைவிலே ஒளித்து வைத்து
செவ்வையான பாதையில் நித்தம் நடத்திடுவார் - என்

4. உம் கிருபையிலே களி கூர்ந்து
வீண் மாயையை வெறுத்திடுவோம்
விண் உலகத்தின் வாழ்வை விரும்பியே நாம்
விசுவாசத்திலே என்றும் ஸ்திரப்படுவோம் - என்

# 121

உம்மைபோல் யாருண்டு
எந்தன் இயேசுநாதா
இந்த பார்தலத்தில்
உம்மைப்போல் யாருண்டு?
பாவப் பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்

**சரணங்கள்**

1. உலகம், மாமிசம் பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன், ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா, இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா, இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான் – உம்மை

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும், உருக்கும் உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறி களையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றிவாழ்க் கையுள்ள மகனாய்த் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும் – உம்மை

3. வீட்டிலும், ஊரிலும் செல்லுமி டமெங்கம்
சோதனை வந்திடில் கர்த்தாநீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக்கருகில் அழைக்க ஏவிடும்
முழுங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோ றும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும். – உம்மை

## 122

1. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
அவரையே நேசிக்கிறேன்

**பல்லவி**

அல்லேலூயா துதி அல்லேலூயா எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தரைக் கொண்டாடுவேன்

**சரணங்கள்**

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசி பொழிந்தெனக் கென்றும்
சுக பெலன் அளித்தாரே - அல்லேலூயா

3. சில வேளை இமைப் பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைந்தாரே
கடுங்கோபம் நீக்கித் திரும்பவும் என்மேல்
கிருபையும் பொழிந்தாரே - அல்லேலூயா

4. பஞ்சகாலம் பெருகிட நேர்ந்தாலும் தாம்
தஞ்சமும் ஆனாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே - அல்லேலூயா

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட என்
கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாமும் வானத்தை நோக்கி
அனுதினமும் காத்திருப்போம் - அல்லேலூயா

# 123

என் நேசர் இயேசுவின் மேல் சாய்ந்தே
துன்ப வானாந்தரத்தில் நடந்திட
இன்ப நல் வாழ்வடைந்தேன் -2

**சரணங்கள்**

1. லீலிபுஷ்பம் சாரோனின் ரோஜா
பாலிலும் வெண்மை தூய பிதா
பூரண ரூப சௌந்தர்யமே
பேர் சிறந்த இறைவா - என்

2. கன்னியர்கள் நேசிக்கும் தேவா
கர்த்தரின் நாமம் பரிமளமே
இயேசுவின் பின்னே ஓடி வந்தோம்
என்னையும் இழுத்துக் கொண்டார் - என்

3. நேசக் கொடிமேல் பறந்தோங்க
நேசர் பிரசன்னம் வந்திறங்க
கிச்சிலி மரத்தின் கீழ் அடைந்தேன்
கர்த்தரின் ஆறுதலே - என்

4. தென்றலே வா வாடையே எழும்பு
தூதாயீம் நற்கனி தூயருக்கே
வேலி யடைத்த தோட்டமிதே
வந்திங் குலாவுகின்றார் - என்

5. நாட்டினிலே பூங்கனி காலம்
காட்டுப் புறாவின் பாட்டொலிக்க
கன்மலைச் சிகரம் என் மறைவே
இந்நேரமே அடைந்தேன் - என்

6. நேசத்தழல் இயேசுவின் அன்பே
நேசம் மரணம் போல் வலிதே
வெள்ளங்கள் திரண்ட தண்ணீர்களால்
உள்ளம் அணைந்திடாதே - என்

7. நித்திரையே செய்திடும் ராவில்
நித்தம் என் ஆத்மா நல் விழிப்பே
என் கதவருகே நின்றழைத்த
இயேசுவை நேசிக்கிறேன் - என்

8. தூபஸ்தம்பம் போலவே எழும்பி
தேவ குமாரன் வந்திடுவார்
அம்மினதாபின் இரதம் போல
அன்றுபறந்து செல்வேன் - என்

## 124

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளது - யாரிடம்

இறைவா . . . . இயேசுவே
இறைவா . . . . இயேசுவே

**சரணங்கள்**

1. அலைமோதும் உலகினிலே
ஆறுதல் நீர் தரவேண்டும்
அண்டி வந்தோம் அடைக்கலம் நீர்
ஆதரித்தே அரவணைப்பீர் (2) - யாரிடம்

2. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா!
குணமதிலே மாறாட்டம்
குவலயம்தான் இணைவதெப்போ? (2) - யாரிடம்

3. வேரறுந்த மரங்களிலே
நிலைத்திருக்கும் மலர்களைப் போல்
உலகிருக்கும் நிலை கண்டு
உமது மனம் இரங்காதோ (2) - யாரிடம்

## 125

மன்னிப்பு அருளும் மாபெரும் அரசே
உமதுள்ளம் சமுத்திரமோ? எனைத்
தண்டிக்க மறுத்த தரணியின் அரசே
உமதுள்ளம் கருணை ஊற்றோ?

**பல்லவி**

இது எங்கும் உண்டோ? இது எங்கும் உண்டோ?
எந்தன் சிந்தனைக்கு மேலான விந்தையல்லோ
என்னை தண்டிக்க மறுத்த தரணியின் அரசே
உமதுள்ளம் கருணை ஊற்றோ?

**சரணங்கள்**

1. கைகளும் கால்களும் செய்தவற்றை
அந்த ஆணிகள் துளைத்ததால் நீக்கினீரோ?
பல வலைகளில் சிக்கிய பாவி என்னை
இந்த வாதைகள் ஏற்று நீர் மீட்டதேனோ? - இது எங்கும்

2. பவுல் போன்ற தூயவர் செய்த வேலை
இந்தப் பாவியின் பொறுப்பில் தந்ததேனோ?
உந்தன் பரலோக தூதரும் விரும்பும் வேலை
இந்த தரணியில் எம்மிடம் வைத்ததேனோ? - இது எங்கும்

## 126

1. இறைவன் என்னைக் காக்கின்றார்
குறை ஒன்றும் எனக்கு இல்லையே
மகிழ்ச்சியூட்டும் இடத்தில் வைத்து
சிறகுகள் நிழலில் காக்கின்றார்

**சரணங்கள்**

2. புல்லும் மேய்ச்சலும் அருவியும் உள்ள
பாலும் தேனும் நிறைந்த கானான்
அழைத்துச் சென்று களைப்பை ஆற்றி
புத்துயிர் ஊட்டுகின்றார் – இறை

3. தீமை துன்பம் நெருங்கவிடாமல்
அரணும் கோட்டையும் புகலிடமான
வார்த்தை கேடயம் கவசமாக
காத்து வருகின்றார் – இறை

4. இருளும் பள்ளமும் எதிரியுமான
எரிகோ யோர்தான் தடைகளை மாற்றி
வாழ்வின் வழியை எனக்குக் காட்டி
சீயோனில் சேர்க்கின்றார் – இறை

## 127

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலாமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்

**சரணங்கள்**

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டு காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் – துதிப்பேன்

2. நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் – துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடுவேன்
தாழ்விலே என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன் – துதிப்பேன்

## 128

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனை பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

**பல்லவி**

ஆ! ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே

**சரணங்கள்**

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரோ
வாக்கு மாறாதவரே –ஆ! ஆனந்தம்

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர் –ஆ! ஆனந்தம்

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
இந்த நிலையில்லா வாழ்க்கையிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே –ஆ! ஆனந்தம்

5. பொன் வெள்ளியுமோ பெரும் பேர்புகழோ
பண ஆசையும் வீணல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அரும் இயேசுவே
போதும் எனக்கு நீரே –ஆ! ஆனந்தம்!

## 129

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்

**சரணங்கள்**

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன் – எனக்

2. மலைகள் பெயர்ந் தகன்றிடினும்
நிலைமாறி பூமி அதிர்ந்திடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே – எனக்

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல்தேவன்
இராப்பகல் உறங்காரே – எனக்

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப்படுத்தாதே – எனக்

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்குமென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இதுமுதலாய் – எனக்

## 130

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

**சரணங்கள்**

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைத்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே – என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலா தெவருமென்னை – என்னை

3. தாய்தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா எந்தன் புகலிடமே – என்னை

4. திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீர் அறியா யாதும் நேரிடா
என் தலைமுடியும் எண்ணினீரே – என்னை

5. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுகிறான் என்றுரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே – என்னை

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுதே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே – என்னை

7. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே – என்னை

## 131

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

**அனுபல்லவி**

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் அல்லேலூயா (2) – எந்தன்

**சரணங்கள்**

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார் – ஆனந்தம்
2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார் – ஆனந்தம்
3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார் – ஆனந்தம்
4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன் – ஆனந்தம்
5. இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காணக் காத்திருக்கிறேன் – ஆனந்தம்

எந்தன் ஜீவனிலும் மா அருமை
உந்தன் கிருபை கிறிஸ்தேசுவே
அந்தமேயில்லா அன்பின் ஆழமதை
எண்ணி நான் துதித்திடுவேனே

**சரணங்கள்**

1. சந்தோஷமுடன் துதி சாற்றிடுவேன்
சந்ததம் நல்கிடும் நன்மைகட்காய்
நாவினிலே திரு நாமத்தைப் போற்றிட
நாட்களும் போதுமோ நானிலத்தில் – எந்தன்

2. இகமதிலென் பெலன் குறைந்திடினும்
அகமதில் உம்பெலன் பெருகுவதால்
கழுகினைப்போல் புது வாலிபம் என்னுள்ளில்
கிருபையால் அனுதினம் வளர்ந்திடுதே – எந்தன்

3. கோதுமை மணி மண்ணில் மாய்வது போல்
சேவையில் ஜீவனை ஊற்றிடினும்
தேவாநின் கிருபையின் ஊற்றென்னில் பாய்வதால்
சோராது நிறைபலன் ஈந்திடுவேன் – எந்தன்

4. அற்புதமாய் என்னை அழைத்தவரே
அற்பமான எந்தன் சரீரத்தினை
தற்பரனே உந்தன் சாயலாய் மாற்றிடும்
ஒப்பற்ற சுவிசேஷம் ஈந்திட்டீரே – எந்தன்

5. கிருபையின் பூரணர் வெளிப்படும் நாள்
மகிமையாய் நெருங்கியே வந்திடுதே
சீர்பொருத்தி அவரோடு நாம் சீயோனில்
சேர்ந்தொன்றாய் வாழுவோம் நித்தியமாய் – எந்தன்

ஒப்புவித்தேன் ஐயனே
உம் சித்தம் செய்ய தந்தேனே
முற்றிலுமாய் அர்ப்பணித்தேன்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே

**சரணங்கள்**

1. சுட்டெரிக்கும் அக்கினியால்
சுத்திகரித்தெம்மை மாற்றிடுமே
ஆவி ஆத்மா சரீரமே
ஆத்தும நேசரே படைகின்றேன் – ஒப்பு

2. கண்ணீர் கவலை பெருகுதே
கர்த்தர் தம் வாக்காலே தேற்றிடுமே
உலக சிநேகம் பின்னே வைத்தே
உறுதியாக முன் சென்றிட – ஒப்பு

3. அத்தி மரம் துளிர்விடாமல்
ஆஸ்திகள் யாவும் அழிந்திடினும்
கர்த்தர்தம் அன்பை விட்டு நீங்கா
தூய கிருபை தந்தருளும் – ஒப்பு

4. எந்தனின் சிந்தை முன்னறிவீர்
எந்தனின் பாதை நீர் அறிவீர்
நல்ல பாதை நடந்திட
நாதனே என்னையும் அர்ப்பணித்தேன் – ஒப்பு

5. காடு மலைகள் போன்ற இடம்
கண்டு என்றும் அஞ்சிடாமல்
அழியும் ஆத்தும தரிசனம்
ஆண்டவா என்னிலே ஈந்தருளும் – ஒப்பு

6. சோதனை எம்மை சூழ்ந்திடினும்
சோர்ந்திடா உள்ளம் தந்தருளும்
ஜீவக் கிரீடம் முன்னே வைத்தே
ஜீவிய காலம் நடந்திட – ஒப்பு

# 134

ஓ இயேசு உமதன்பு எத்தனை பெரியது
ஆகாயம் பூமி மலை ஆழிகளுக்கெல்லாம் பெரியது

**சரணங்கள்**

1. அளவில்லா ஆனந்தத்தால் அகம் நிறைந்தது
ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது
அன்றாடம் காலை மாலைகளிலும் துதிக்க உயர்ந்தது
துதிக்க உயர்ந்தது - ஓ இயேசு

2. சங்கட சமயங்களில் மங்கியே வாடுகிறேன்
துங்கனே இரங்குமென ஏங்கியே நாடுகிறேன்
பங்கமில்லாமல் பதிலளிப்பேன் என்றதால் பாடுகிறேன்
என்றதால் பாடுகிறேன் - ஓ இயேசு

3. இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே நடந்தாலும்
அருமெந்தன் மேய்ப்பராய் அருகிலிருப்பதாலும்
கருணையா யென்னைக் கரம் பிடித்தே
கர்த்தரே காப்பதாலும், கர்த்தரே காப்பதாலும் - ஓ இயேசு

4. குறைவுள்ளோனானாலும் கூடவே இருக்கிறீர்
நிறைவாம் புல் தரையில் மெதுவாய் நடத்துகிறீர்
இறைவனாம் யேசு எல்லாவற்றாலும்
திருப்தியாக்குகிறீர், திருப்தியாக்குகிறீர் - ஓ இயேசு

5. தேவனுடைய வீட்டில் சித்தப்படி துதிப்பேன்
ஏக இதயத்துடனே என்றுமதை மதிப்பேன்
ஆராதிக்க அருகராம் இயேசு அல்லேலூயா ஆமென்
அல்லேலுயா ஆமென் - ஓ இயேசு

## 135

1. கர்த்தரிலும் தம் வல்லமையிலும்
கிருபையாய் யாவரும் பலப்படுவோம்
தீங்கு நாளிலே சாத்தனை எதிர்த்து நின்று
திராணியுடன் போர் புரிவோம்

**பல்லவி**

சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொள்வோம்
சாத்தானின் சேனையை முறித்திடுவோம் – அவர்
சத்துவ வல்லமையால்

**சரணங்கள்**

2. மாமிசம் இரத்தத் துடனு மல்ல
துரைத்தனம் அதிகாரம் அந்த காரத்தின்
லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்
போராட்டம் நமக்கு உண்டு – சர்வா

3. சத்தியமாம் கச்சையைக் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரித்தே
சமாதானத்தின் சுவிசேஷ பாதரட்சை
நாம் கால்களில் தொடுத்துக்கொள்வோம் – சர்வா

4. பொல்லங்கனெய்யும் அம்புகளை
வல்லமையோடெதிர்க்கும் ஆயுதம்
விசுவாசமென்னும் கேடகம் மேலே
வீரமுடன் பிடித்து நிற்போம் – சர்வா

5. இரட்சண்யமாம் தலைச்சீராவும்
எக்கணமும் அணிந்து கொள்ளுவோம்
தேவ வசனமென்னும் ஆவியின் பட்டயம்
தேவை அதைப்பிடித்துக் கொள்ளுவோம் – சர்வா

6. எந்த சமயத்திலும் சகல
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
பரிசுத்தர்கட்காகவே ஆவியினால்
மன உறுதியுடன் ஜெபிப்போம் – சர்வா

# 136

**பல்லவி**

கர்த்தர் துயர் தொனியாய்
கதறி முகம் கவிழ்ந்தே
இருள் சூழந்த தோட்டத்திலே
இதயம் நொறுங்கி ஜெபித்தார்

**சரணங்கள்**

1. மரணத்தின் வியாகுலமோ
மனிதர் துணை இல்லையோ
தேவதூதன் தேற்றிடவே
தருணம் நெருங்க ஒப்படைத்தார்
துன்ப சுமை சுமந்தார் - கர்த்தர்

2. துக்கத்தால் தம் சீஷர்களே
தலைசாய்த்து தூங்கினாரே
தம்மை மூவர் கைவிடவே
தூரமாய்க் கடந்தே திகிலடைந்தார்
தன்னந்தனிமையிலே - கர்த்தர்

3. பிதாவே இப்பாத்திரத்தின்
பங்கினை நான் ஏற்றுக் கொண்டேன்
ஆகட்டும் உமது சித்தம்
அது நீங்கிடுமோ என்றுரைத்தார்
ஆ! இரத்த வேர்வையுடன் - கர்ததர்

4. திறந்த கெத்சமனேயில்
துணிந்து வந்த பகைஞன்
என்ன துரோகம் செய்திடினும்
எந்தன் சிநேகிதனே என்றழைத்தார்
என்ன மா அன்பிதுவோ - கர்த்தர்

5. பரமன் ஜெப சத்தமே
பூங்காவினில் கேட்கின்றதே
பெருமூச்சுடன் அழைக்கும்
அவரோடிணைந்தே கண்ணீருடன்
ஆவியிலே ஜெபிப்பேன் - கர்த்தர்

6. இயேசு தாங்கின துன்பங்கள்
என்னைத் தாண்டியே செல்லாதே
எனக்கும் அதில் பங்குண்டே
சிலுவை மரண பாடுகளால்
சீயோனில் சேர்ந்திடுவேன் - கர்த்தர்

## 137

1. சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்கு கரம் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கு சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்த வேளை வந்திறங்கிடும்

**பல்லவி**

வானந் திறந்தருளும் பல தானங்களை இந்நேரமதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குருநாதனே
தேனிலும் மதுரம் திவ்ய ஆசீர்வாதங்கள்

**சரணங்கள்**

2. என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனேயும் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளி சிக்கிடாமல் கண்மணிபோல் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே - வானந்

3. சுயம் ஆடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மையினாவி தந்தருள வேணுமே
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே - வானந்

4. அதிகமதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இது சமயமுன்னத பெலனீந்திடும். - வானந்

## 138

கதிரவன் தோன்றும் காலையிதே
புதிய கிருபை பொழிந்திடுதே நல்
துதி செலுத்திடுவோம் இயேசுவுக்கே

**சரணங்கள்**

1. வான சுடர்கள் கானக ஜீவன்
வாழ்ந்திடவே பரன் மாட்சிமையே
காற்று பறவை ஊற்று நீரோடை
கர்த்தருக்கே கவி பாடிடுதே – கதிரவன்

2. காட்டில் கதறி கானக ஓடை
கண்டடையும் வெளி மான்களைப்போல்
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீராம்
தற்பரன் இயேசுவைப் பாடிடுவோம் – கதிரவன்

3. கர்த்தர் கிருபை என்றென்றும் ஓங்க
கர்த்தரே நல்லவர் என்றுரைப்போம்
கேரூபீன்கள் மத்தியில் வாழும்
கர்த்தர் இக்காலையில் எழுந்தருள்வார் – கதிரவன்

4. எந்தன் உதடும் உந்தனைப் போற்றும்
என் கரங்கள் குவிந்தே வணங்கும்
பாக்கியம் நான் கண்டடைந்தேனே
யாக்கோபின் தேவனை என் துணையே – கதிரவன்

5. காலை விழிப்பே கர்த்தரின் சாயல்
கண்களும் செவியும் காத்திருக்கும்
பாதம் அமர்ந்து வேதமே ருசித்து
கீதங்கள் பாடியே மகிழ்ந்திடுவேன் – கதிரவன்

6. வானம் பூமி யாவையும் படைத்தீர்
வானம் திறந்தே தோன்றிடுவீர்
ஆவல் அடங்க என்னையும் அழைக்க
ஆத்தும நேசரே வந்திடுவீர் – கதிரவன்

# 139

காலை நேரம் இன்ப ஜெப தியானமே
கருணை பொற்பாதம் காத்திருப்பேன்
அதிகாலையில் அறிவை உணர்த்தி
அன்போடு இயேசு தினம் பேசுவார்

**சரணங்கள்**

1. எஜமான் என் இயேசு முகம் தேடுவேன்
என் கண் கர்த்தாவின் கரம் நோக்குமே
எனக்கு ஒத்தாசை அவரால் கிடைக்கும்
என்னை அழைத்தார் அவர் சேவைக்கே - காலை

2. பலர் தீமை நிந்தை மொழிகள் உன்மேல்
பொய்யாய் சொன்னாலும் களி கூருவாய்
இதுவே உன் பாக்கியம் என இயேசு சொன்னார்
இந்த மெய் வாக்கு நிறைவேறுதே - காலை

3. சிலுவை சுமந்தே அனுதினமே
சோராமல் என் பின்னே வா என்றாரே
அவரோடே பாடு சகித்தாளுவேனே
ஆண்டாண்டு காலம் ஜெயமாகவே - காலை

4. பறந்து புறா போல் சிறகடித்தே
பாடிச் சென்றோர் நான் இளைப்பாறுவேன்
பரலோக வாசல் பரம சீயோனே
பூரித்து என்னை வரவேற்குமே - காலை

தேடுங்கள் கண்டடைவீர்
தேவ தேவனின் தூயத் திருமுகம் காணத்
தேடிடுவோம் அதிகாலமே

**சரணங்கள்**

1. சென்ற வாழ்நாளெல்லாம் காத்தார் – எந்தச்
சேதமும் வந்தணுகாமல்
இந்தப் புதுதினம் கண்டடைய
தந்தனரே தமது கிருபை – தேடுங்கள்

2. நல்ல சுகம் பெலன் தந்து – தம்
வல்ல நல் ஆவியும் ஈந்து
வல்ல பிசாசை ஜெயமெடுத்து
சொல்ல தம் அன்பெனிலே பொழிந்தார் – தேடுங்கள்

3. ஊண் உடை தந்தாதரித்து – இந்த
ஊழியப் பாதையில் காத்து
கூப்பிடும் வேளை செவி கொடுத்து
கேட்டிடும் யாவையும் ஈந்தனரே – தேடுங்கள்

4. ஜீவனும் உள்ள நாளெல்லாம் என்
தேவனைக் கீர்த்தனம் பண்ணி
ஓசையுள்ள கைத்தாளத்தோடே
நேசையா இயேசுவை ஸ்தோத்தரிப்போம் – தேடுங்கள்

5. காலையில் ஸ்தோத்திர கீதம் – இந்த
வேளையில் வேதத்தின் தியானம்
நல் ஜெபதூபம் எனது இன்பம்
நற்கிரியைகள் செய்துழைப்பேன் – தேடுங்கள்

6. கர்த்தரை நான் எப்பொழுதும் – என்
கண் முன்னில் நிறுத்தி நோக்க
நாள் முழுதும் அவர்பின் நடக்க
நேர்வழிப்பாதையும் காட்டிடுவார் – தேடுங்கள்

# 141

காலையில் துதிப்பேன், கருத்துடன் துதிப்பேன்
காலை தேடுவோர் கண்டடைவார்
என்ற கர்த்தரையே துதிப்பேன்

**சரணங்கள்**

1. போன ராவிலே காத்தீர், புதுக் காலையைக் காணச் செய்தீர்
தேனே என் உள்ளத்தில் தானே இருந்து - இந்நாளை கடக்கச் செய்வீர்
- காலையில்

2. இந்த வனாந்தரத்தில், எனக்கென்ன இடர்வந்தாலும்
இயேசுவே உம்மில், சார்ந்திருக்கும் எந்தன் ஜெயம் ஜெயம் நீர்தானே
- காலையில்

3. ஆதி அன்பை இழந்தே, ஜனம் வாடித் தவித்திடுதே
ஆதி சபை அதிகாலையில், பெற்ற பின்மாரி பொழிந்திடுமே
- காலையில்

4. காலைதோறும் கிருபை, புதிதாக விளங்குதையா
காசினிலே உமதாசை மேவிட விண் காட்சியளியுமய்யா
- காலையில்

5. புதிதான உம் கிருபை, என்னில் உதிரமாய் சிந்தினதால்
பதினாயிரம் துதி, அதிகாலையில் கூறி பாடி புகழ்ந்திடுவேன்
- காலையில்

6. கறை திறை யாவும் நீக்கி, சுத்த கற்புள்ள கன்னிகையாய்
வானில்வரும் மணவாளனை சந்திக்க வாஞ்சை பெருகுதையா
- காலையில்

7. இயேசுவே நீர் வந்தாலும் என்னை மரணம் சந்திட்டாலும்
ஆயத்தமாய் உந்தன் சேவை செய்து அல்லேலூயாவோடெதிர் நோக்குவேன்
- காலையில்

## 142

1. கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதை
கடலின் ஆழம்போல் கருணையோடிரக்கம்
கரையில்லை அவரன்பு கறையற்றதே

**பல்லவி**

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசுவைப் போல் வேறு நேசரில்லையே

**சரணங்கள்**

2. கொடுமைப்போர் சீறல் பெருவெள்ளம் போல
அடிக்கையில் மோதிய மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் திடனாய்
வெயிலுக்கு ஒதுங்கும் விண் நிழலுமானார் – இயேசு

3. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரனின் விசுவாசத்தாலே நாம்
ஜீவித்து சேவிக்க திடமனித்தார் – இயேசு

4. கல்லும் முள்ளுகளுள்ள கடினப் பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம்முன் செல்கிறார் – இயேசு

5. சீயோனை சிறப்புடன் சேர்த்திட இயேசு
சீக்கிரம் வரும்நாள் நெருங்கி வந்திடுதே
முகமுகமாகவே காண்போமே அவரை
யுகயுகமாகவே வாழ்ந்திடுவோம் – இயேசு

# 143

**பல்லவி**

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

**சரணங்கள்**

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனை கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும் - கர்த்தரை

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்
கருத்தாய் காத்திடுவார் - கர்த்தரை

3. உள்ள மதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார் - கர்த்தரை

4. அன்பு மிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரைத் தள்ளிடாமல்
தாங்கி அணைத்திடுவார் - கர்த்தரை

5. நீதிமானின் சிரசின் மேல்
நித்திய ஆசீர் வந்திறங்குமே
கிருபை, நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே - கர்த்தரை

6. இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மைவிட்டே முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை இராஜியத்தில் - கர்த்தரை

# 144

1. கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

**பல்லவி**

விசுவாசியே நீ பதறாதே
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

**சரணங்கள்**

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம் – விசுவாசியே

3. திருச் சபையே கிரியை செய்வாய்
திவ்விய அன்பில் பெருகிடுவாய்
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவார் – விசுவாசியே

4. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார் – விசுவாசியே

5. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய் – விசுவாசியே

# 145

கர்த்தாவே என் பெலனே
உம்மில் அன்பு கூர்ந்திடுவேன்
துருகமும் நீர் கேடகம் நீர்
இரட்சண்யக் கொம்பும் அடைக்கலம் நீர்

**சரணங்கள்**

1. மரணத்தின் கட்டுகள் சூழ்ந்த போதும்
துர்ச்சனப் பிரவாகம் புரண்ட போதும்
நெருக்கத்தின் மத்தியில் குரல் எழுப்ப
உருக்கமாய் வந்து உதவி செய்தார் – கர்த்தாவே

2. தயை செய்பவனுக்கு நீர் தயையுள்ளவர்
உத்தமனை நீர் உயர்த்திடுவீர்
புனிதனுக்கு நீர் புனிதரன்றோ
புதிய கிருபையின் உறைவிடமே – கர்த்தாவே

3. உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன்
உம்மாலே மதிலை தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்திடுவேன்
சதா காலமும் ஜெயம் எடுப்பேன் – கர்த்தாவே

4. இரட்சணயக் கேடகம் எனக்குத் தந்தீர்
உமது கரம் என்னை உயர்த்தும்
கர்த்தரை அல்லால் தேவன் இல்லை
அவரே எந்தன் கன்மலையாவார் – கர்த்தாவே

5. பெலத்தினால் என்னை இடைகட்டி
மான்களின் கால்களைப் போலாக்கி
நீதியின் சால்வையை எனக்குத் தந்து
உயர் ஸ்தலத்தில் என்னை நிறுத்துகின்றார் – கர்த்தாவே

## 146

1. கானகப்பாதை காடும் மலையும்
காரிருளே சூழ்ந்திடினும்
மேகஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவாய்

**பல்லவி**

பயப்படாதே கலங்கிடாதே
பாரில் இயேசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்

**சரணங்கள்**

2. எகிப்தின் பாவ வாழ்வை வெறுத்தே
இயேசுவின் பின்னே நடந்தே
தூய பஸ்கா நீ புசித்தே
தேவ பெலனால் முன் செல்லுவாய் - பயப்

3. கடலைப் பாரும் இரண்டாய் பிளக்கும்
கூட்டமாய்ச் சென்றே கடப்பாய்
சத்ரு சேனை மூழ்கி மாளும்
ஜெயஞ் சிறந்தே முன் செல்லுவாய் - பயப்

4. குளிர்ந்த ஏலீம் பன்னீரூற்றும்
காணுவாய் பேரீச்சமரம்
கன்மலையில் தாகம் தீர்த்து
மன்னா ருசித்தும் முன் செல்லுவாய் - பயப்

5. கசந்த மாரா உன்னைக் கலக்கும்
கஷ்டத்தால் உன் கண் சொரியும்
பின் திரும்பி சோர்ந்திடாதே
நன்மை அருள்வார் முன் செல்லுவாய் - பயப்

6. கொடுமை யுத்தம் உன்னை மடக்கும்
கோர யோர்தான் வந்தெதிர்க்கும்
தாங்கும் கர்த்தர் ஓங்கும் கையால்
தூக்கிச் சுமப்பார் முன் செல்லுவாய் - பயப்

7. புதுக்கனிகள் கானான் சிறப்பே
பாலும் தேனும் ஓடிடுமே
இந்தக் கானான் கால் மிதித்து
சொந்தம் அடைய முன் செல்லுவாய் - பயப்

## 147

தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே நாமே அவ்வாலயமே

**சரணங்கள்**

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
அவருக்காய் கிரயமாய் கொள்ளப்பட்டோம்
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோமே நாம்
தேவ பிள்ளைகளானோம் அவர் சொந்த ஜனமானோம் - தேவ

2. நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே சரீரத்தின் சொந்தமானார்
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக்கொள்வோம் பரிசுத்த ஜாதியாக - தேவ

3. கர்த்தருடன் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம்
ஆவியினாலும் சரீரத்தினாலும்
மகிமை செலுத்திடுவோம் கர்த்தருக்கே என்றும் - தேவ

4. கறை திரை இல்லா சபையாக
கற்புள்ள கன்னிகையைப் போல
இயேசுவுக்காக ஜீவிப்போமே என்றும்
அவர் சித்தம் செய்திடுவோம். மணவாட்டியாகிடுவோம் - தேவ

## 148

1. காட்டு மரங்களின் நடுவில்
ஒரு கிச்சிலி மரம் போல
பரிசுத்தர்கள் மத்தியிலே
இயேசு சிறந்து விளங்குகிறார்

**பல்லவி**

போற்றுவேன் எந்தன் நேசரை
ஜீவகாலமெல்லாம் இவ்வனந்தரத்தில்
நன்றியோடே நான் பாடிடுவேன்

**சரணங்கள்**

2. சாரோனின் ரோஜா அவரே
பள்ளத்தாக்கின் லீலி அவரே
பரிசுத்தரில் சுத்தரவர்
பதினாயிரங்களில் சிறந்தோர் – போற்று

3. ஊற்றுண்ட தைலம் உம் நாமம்
அதன் வாசனை வீசிடுதே
நிந்தை பாடு நெருக்கங்களில்
நானும் நற்கந்தமாகச் செய்யும் – போற்று

4. மனச் சஞ்சலம் தாங்கிடாமல்
துக்க காகரத்திலமிழ்கையில்
திருக்கரம் நீட்டி எடுத்தணைத்தே
பயப்படாதே என்றுரைத்தவரே – போற்று

5. என் பாதைக்குத் தீபமும் நீர்
என் வாழ்வுக்கு ஜீவனும் நீர்
என் சேவைக்கு வல்லமை நீர்
என் ஆவிக்கு ஆறுதல் நீர் – போற்று

6. உம் திருமுகம் பார்த்திருப்பேன்
உம் திருமறை படித்திருப்பேன்
உம் திருப்பணி செய்திருப்பேன்
உம் திருவடி அமர்ந்திருப்பேன் – போற்று

7. உம் திருச்சித்தம் செய்திடவே
இதோ ஆயத்தமாக வந்தேன்
என் வேலையை முடித்துதுமா
உம் சமூகமே சேர்ந்திடுவேன் – போற்று

## 149

1. தேவபிதா தங்கும் சீயோனே
தெரிந்தெடுக்கப்பட்ட தாபரமே
பிதாவின் மகிமை யடைந்தவர்கள்
சதாகாலமும் அங்கு வாழுவார்

**பல்லவி**

பரன் சீயோன் மலை உயர் சிகரம்
புது எருசலேம் தேவ நகரம்
அது இறங்கியே வருகின்றதே – அங்கு
இயேசு என் சுதந்திரமே

**சரணங்கள்**

2. முன் குறித்தே என்னைப் பேர் சொல்லி
முதற்பலனாய் தந்த சம்பத்துமாய்
மாசில்லா மணவாட்டியாம் சபையாம்
நேசித்தென்னை இயேசு அழைத்தார்

3. ஆதாம் இழந்ததாம் ஏதேனில்
அழியாமை நித்திய ஜீவனுடன்
மணாளன் கிறிஸ்துவின் சாயலுடன்
மறுமையில் விளங்கிடுவோம்

4. சீயோனைச் கட்டி முடிப்பாரே
ஜெயமெடுத் தோரையும் சேர்த்திடவே
ஆகாய மீதினில் ஆரவாரத்தோடே
அன்பர் இயேசு வருகின்றாரே

## 150

1. கிருபை இரக்கம் நிறைந்ததோர்
கிருபாசனம் ஆ! தோன்றிடுதே
தருணமேது என்கிலும் நல்ல
சகாயம் பெற்றிட ஏற்றதே

**பல்லவி**

கிருபையே பெருகுதே
கல்வாரியினின்றும் பாய்ந்திடுதே
என்னுள்ளம் நன்றியால் பொங்கி வழியுதே
என்ன என் பாக்கியமிதே

**சரணங்கள்**

2. நம்மைப் போலவே சோதிக்கப்பட்டும்
நாதனோர் பாவமற்றவராய்
நாளும் நம் குறைகள் கண்டுருகும்
நல்ல ஆசாரியர் நமக்குண்டே – கிருபை

3. நம் பெலவீனத்தில் அவர் பெலன்
நல்கிடுவார் பரிபூரணமாய்
நாடுவோமே மாறா கிருபையை
நமக்காயவர் ஜீவிப்பதால் – கிருபை

4. வானங்களின் வழியாய் பரத்தில்
தானே சென்ற இயேசுவாமெமது
மா பிரமான ஆசாரியரை
பற்றிடுவோம் நோக்கி நம்பிக்கையாய் – கிருபை

5. பிதாவண்டை சேரும் சுத்தர்கட்காய்
சதா பரிந்து பேசியே நிற்பார்
இதோ எம்மையே முற்று முடிய
இரட்சிக்க வல்லமையுள்ளவரே – கிருபை

## 151

**பல்லவி**

கிருபை எம்மைச் சூழ்ந்துகொள்ளும் – தம் கிருபை
கர்த்தரில் மகிழ்வோம் களிகூர்ந்திடுவோம்
கண்டடைந்தோம் கிருபை

**சரணங்கள்**

1. யோர்தானைக் கடந்து வந்தோம் – எங்கள்
இயேசுவில் பெலன் அடைந்தோம்
சேனையின் கர்த்தர் முன்னே நடந்தார்
சோர்வின்றிக் காத்துக் கொண்டார் – கிருபை

2. தேசமே பயப்படாதே – எங்கள்
தேவன் கிரியை செய்கின்றார்
தேசத்தில் நன்மை சேஷமம் அருள்வார்
தாசர்கள் வேண்டிடுவோம் – கிருபை

3. கர்த்தர் இவ்வாண்டினிலே – பெருங்
காரியம் செய்திடுவார்
கால் வைக்கும் தேசம் இயேசு தருவார்
காத்திருந்தே அடைவோம் – கிருபை

4. ஆண்டுகள் நன்மையினால் – முடி
சூண்டு வளம் பெருக
தேசத்தின் மீதே கண்களை வைத்தே
பாசமாய் நோக்கிடுவார் – கிருபை

5. ஜாதி ஜனங்களையும் – வந்து
மோதி அசைத்திடுவார்
காத்துத் தவிக்கும் உள்ளம் மகிழும்
கர்த்தரே வந்திடுவார் – கிருபை

6. உண்மையும் நேர்மையுமாய் – இந்த
ஊழியம் செய்திடுவோம்
தூய கற்புள்ள தேவ சபையாய்
தீவிரம் சேர்த்திடுவோம் – கிருபை

## 152

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன்னேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

**சரணங்கள்**

1. ஆருயிர் அன்பராம் எங்களுடனே
ஜீவய பாதையிலே - இயேசுபரன்
அனுதினமும் வழிநடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே - கிருபை

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் - வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக்காருமில்லை - கிருபை

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர - அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒருமனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய் - கிருபை

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் - பெற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினைக் காத்துக்கொள்வோம் - கிருபை

5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே - வாருமென்பீர்
சீயோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசுதாம் வெளிப்படுவார் - கிருபை

# 153

கீத சத்தத்தால் கெம்பீரமாகவே
கீர்த்தனம் செய்வேன் கர்த்தரை என்றுமே
ஆனந்தமாக ஆர்ப்பரிப்புடனே - நித்
யானந்தரை நான் நிதமும் பாடுவேன்

**சரணங்கள்**

1. வீணையினாலும் தம்புருவினாலும்
கின்னரத்தாலும் என் நாவினாலுமே
சுரமண்டல தொனியும் முழங்க
சீரேசு நாதனை சிறப்பாய்ப் பாடுவேன் - கீத

2. பத்து நரம்பும் போதாதென்றெண்ணியே
மெத்தவும் மனம் துதியால் நிறைந்தே
உத்தம ஆசீர் உள்ளத்தில் பெற்றிட
உன்னத தேவனை உயர்த்தி துதிப்பேன் - கீத

3. நானிலந்தனில் நல் இயேசுவின் எல்லா
நன்மைகளையும் ஒவ்வொன்றாய் எண்ணியே
நன்றியினாலென் இதயம் பொங்கிட
நடனமாடியே ஆவியில் மகிழ்வேன் - கீத

4. தேவ ஆவியால் இன்னிசை நாதங்கள்
ஏக சத்தமாய் இசைந்திலங்கிட
தேவ மகிமை மேகமாய் இறங்க
தேவாதி தேவனை புகழ்ந்து போற்றுவேன் - கீத

5. தேவ சேவைக்காய் மகிமை சாட்சியாய்
ஜீவன் சுகம் என் பெலன் யாவுமீந்தே
மேள வாத்திய மங்கள கீதங்கள்
எக்காள தொனியாய் எங்கும் முழங்குவேன் - கீத

6. ஜெயங்கொண்டோனாய் சீயோன் சிகரத்தில்
ஜெய வீரனாம் இயேசுவுடனே நான்
சுரமண்டலம் கரத்தில் ஏந்தியே
ஜெயத்தின் கீதங்கள் களிப்பாய்ப் பாடுவேன் - கீத

## 154

குதூகலம் நிறைந்த நன்னாள்
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

**சரணங்கள்**

1. தளகர்த்தனாம் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெயகீதங்கள் பாடிடுவோம் - குதூகலம்

2. புவிமீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மனம் மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியைச் சேர்ந்திடவே - குதூகலம்

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர்நோக்கி
புது எருசலேமாய் தூய நகரமதாய்
நாம் ஆயத்தமாகிடுவோம் - குதூகலம்

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம் - குதூகலம்

5. தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார் - குதூகலம்

## 155

கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை

**சரணங்கள்**

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழ்வோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம் - கோடா

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தம் கரத்தில் ஏந்தி நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே - கோடா

3. குருவி பறவை வானம்பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம் - கோடா

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர் - கோடா

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவகுமாரன் வந்திடும் நாள்
தூயர் முகம் கண்டு கெம்பீரிப்போம் - கோடா

# 156

சிங்கார மாளிகையில் ஜெய கீதங்கள் பாடிடுவோம்
சீயோன் மாணவாளனுடன்

**சரணங்கள்**

1. ஆனந்தம் பாடி அன்பரைச் சேர்த்து
ஆறுதலடைந்திடுவோம் - அங்கே
அலங்கார மகிமையின் கிரீடங்கள் சூடி
அன்பரில் மகிழ்ந்திடுவோம் - சிங்கார

2. துயரப் பட்டவர் துதித்துப் பாடுவார்
துதியின் உடையுடனே அங்கே
உயரமாம் சீயோன் உன்னதரோடு
களித்துக் கவி பாடுவோம் - கிங்கார

3. முள்முடி நமக்காய் அணிந்த மெய் இயேசுவின்
திருமுகம் கண்டிடுவோம் - அங்கே
முத்திரையிட்ட சுத்தர்கள் வெண்ணங்கி
தரித்தோராய்த் துதித்திடுவார் - சிங்கார

4. பூமியின் அரசை புதுப்பாட்டாய் பாடி
புன்னகை பூத்திடுவோம் - புது
எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டோராய்
மண்ணாசை ஒழித்திடுவோம் - சிங்கார

5. அவருரைத்த அடயாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே - அவர்
வரும் வேளையறியா திருப்பதால் எப்போதும்
ஆயத்தமாயிருப்போம் - சிங்கார

6. குருசை சுமந்தே பரிசுத்தர் முன்னால்
குருத்தோலை பிடித்திடுவோம் - அங்கே
கற்புள்ள கறைபடா கர்த்தரைப் பின்பற்றினோர்
மீட்பின் கீதம் பாடுவோம் - சிங்கார

## 157

1. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு - அதை
அறிந்தே அகமகிழ்வோம்

**பல்லவி**

ஜெய கிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடந்திடுவார்
ஜெயக் கீதங்கள் நாம் பாடியே
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே

**சரணங்கள்**

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டுவிடேன்
என்றுரைத்தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே - ஜெய

3. மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்பப் பாதைக் காட்டிடுவார் - ஜெய

4. சத்துரு கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம் - துதி - ஜெய

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் நம்மைச் சேர்க்கும் வரை
வழுவாமல் காத்துக்கொள்வார் - ஜெய

# 158

**பல்லவி**

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

**சரணங்கள்**

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் – திருப்பாதம்

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே – திருப்பாதம்

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன் – திருபாதம்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே – திருபாதம்

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப்பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே – திருபாதம்

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே – திருப்பாதம்

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன் – திருப்பாதம்

8. பலர் தள்ளின மூலைக்கல்லே
பரம சீயோன் மீதிலே
பிரகாசிக்கும் அதை நோக்கி
பதறாமலே காத்திருப்பேன்– திருப்பாதம்

# 159

கண்களை ஏறெடுப்பேன் – மாமேரு நேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்

**அனுபல்லவி**

விண் மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
எண்ணில்லா வொத்தாசை எந்தனுக்கே வரும் – கண்களை

**சரணங்கள்**

1. காலைத் தள்ளாடவொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாடவொட்டார்
வேலையில் நின்றிஸ்ரவேலரை காப்பவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காதவர் – கண்களை

2. பக்தர் நிழல் அவரே – என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தாது
அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே – கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்களை

## 160

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

**பல்லவி**

ஆ, அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

**சரணங்கள்**

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே – ஆ

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே – ஆ

4. இந்த வனாந்திர யாத்திரையில்
அன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே – ஆ

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே – ஆ

## 161

தேவ கிருபை என்றுமுள்ளது
அவர் கிருபை என்றுமுள்ளது
அவரைப் போற்றி துதித்துப் பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

**சரணங்கள்**

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர்தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன்சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

5. வெள்ளம்போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

6. நித்திய தேவனாம் சத்திய பரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

தேவசித்தம் நிறைவேற என்னையும் ஒப்படைக்கிறேன்
தேவசத்தம் என்னுள்ளம் பலமாகத் தொனிக்குதே

**சரணங்கள்**

1. முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களைக் கவரும் லீலிபுஷ்பம்போல்
என்னையுமே தம் சாயலாய்
என்றென்றும் உருவாக்குவார் – தேவ

2. பொன்னைப்போல புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவேனென்றென்றுமே
திராணிக்குமேல் சோதித்திடார்
தாங்கிட பெலனளிப்பார் – தேவ

3. அத்திமரம் துளிர்விடாமல்
ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய்
நித்தமும் மகிழ்ந்திருப்பேன் – தேவ

4. நீதிமானை அனுதினமும்
சோதிக்கப் பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன் – தேவ

5. முன்னறிந்து அழைத்தவரே
முன்னின்று நலமுடன் நடத்துவார்
சகலமும் நன்மைக்கென்றே
சாட்சியாய் முடித்திடுவார் – தேவ

6. சோதனையை சகிப்பவனே
சாந்தமும் பொறுமையுமுள்ளவனே
ஜீவ கீரிடம் பெற்றிடுவான்
ஜோதியாய் பிரகாசிப்பான் – தேவ

7. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர்நாள்
கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்
இரட்டிப்பான பங்கைப்பெற
இரட்சகர் அழைத்திடுவார் – தேவ

## 163

தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன் (2)
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின் புகழ்பாட வேண்டும்

**சரணங்கள்**

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே – பாரில்

2. பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கிடுமே – பாரில்

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன்தாருமே – பாரில்

4. பரலோகில் இடம் உண்டு என்றவரே
பரிவாக என்னைச் சேர்க்க வேகம் வாருமே – பாரில்

## 164

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம் பாதம் தொழுகிறோம்

**அனுபல்லவி**

இயேசுவே உம் திவ்ய நாமத்திலே
இன்பமுடன் கூடி வந்தோமே

**சரணங்கள்**

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் கண்பாருமே – தேவா

2. சாரோனின் ரோஜா லீலிபுஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம் – தேவா

3. கர்த்தர் செய்த உபகாரங்களை
கணக்குரைத் தெண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரைத் தொழுகிறோம் – தேவா

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே – தேவா

5. நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே – தேவா

6. எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே – தேவா

## 165

தேவ ஆசீர்வாதம் பெருகிடுதே
துதிகள் நடுவே கர்த்தர் தங்க
தூதர் சேனை தம் மகிமையோடிறங்க

**சரணங்கள்**

1. எழும்பு சீயோனே ஒளி வந்ததே
எரிந்திடும் விளக்கே திருச்சபையே
காரிருளே கடந்திடுதே
கர்த்தரின் பேரொளி வீசிடுதே – தேவ

2. நலமுடன் நம்மை இதுவரையும்
நிலைநிறுத்திடுதே அவர் கிருபை
கண்மணிபோல் கடைசிவரை
காத்திடும் பரமனை வாழ்த்திடுவோம் – தேவ

3. குறித்திடும் வேளை உயர்த்திடுவார்
கிறிஸ்துவின் கரத்தில் அடங்கிடுவோம்
தாழ்வில் நம்மை நினைத்தவரை
வாழ்வினில் துதித்திட வாய் திறப்போம் – தேவ

4. தெரிந்தெடுத்தார் தம் மகிமைக்கென்றே
பரிந்துரைத்திடுவார் பிழைத்திடுவோம்
இரட்சிப்பினால் அலங்கரித்தார்
இரட்சகர் திருவடி சேர்த்திடுவார் – தேவ

5. பெருந்தொனி கேட்க ஏறிடுவோம்
பரலோகந் திறந்தே அவர் வருவார்
உன்னதத்தில் உயர் ஸ்தலத்தில்
என்றென்றும் அவருடன் வாழ்ந்திடுவோம் – தேவ

தேவசாயல் ஆகமாறி
தேவனோடிருப்பேன் - நானும்

**சரணங்கள்**

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே தம்
விண்ணவர் சாயல் அடைவேன் - தேவசாயல்

2. பூமியின் கூடாரம் என்றும்
பெலவீனமே அழிந்திடுமே
கைவேலையில்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன் - தேவசாயல்

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார் - தேவசாயல்

4. ஆவியின் அச்சாரமீந்தார்
ஆயத்தமாய்ச் சேர்த்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே - தேவசாயல்

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகு போல பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவக்கிரீடம் பெற்றிடுவேன்- தேவசாயல்

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய்த் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே - தேவசாயல்

7. உன்னத சீயோன் மலைமேல்
என் அருமை இயேசுவுடன்
ஜெய வீட்டினிலே மகிழ்ந்தே நான்
ஜீவிப்பேனே நீடூழியாய் - தேவசாயல்

# 167

நல்லாவி ஊற்றும் தேவா
நற்கனி நான் தர நித்தம் துதிபாட
நல்லாவி ஊற்றும் தேவா

**சரணங்கள்**

1. பெந்தெகொஸ்தே நாளிலே
உந்தனாவி ஈந்தீரே
இந்த வேளையில் இறங்கிடுவீரே
விந்தை செய் விண் ஆவியே – நல்லாவி

2. மெத்த அசுத்தன் நானே
சுத்தாவி கொண்டெனையே
சித்தம் வைத்தென்றும் சுத்தம் செய்வீரே
சத்திய பரிசுத்தரே – நல்லாவி

3. ஆவியின் கனி ஒன்பதும்
மேவி நான் தந்திடவும்
ஜீவியமெல்லாம் புவிமீதிலே
சுவிசேஷ பணியாற்றவும் – நல்லாவி

4. பாவம் செய்யாதிருக்க
பாரில் சாட்சி பகர
பார் மீட்க வந்த பரமனையே
பாரோர்க்கு எடுத்துரைக்க – நல்லாவி

## 168

நன்றியால் பாடிடுவோம் (2)
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே

**சரணங்கள்**

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள்வரையும்
தயவாய் மா தயவாய் - ஆ, ஆ - நன்றி

2. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம்வரை
உடன் சுதந்தரராய் இருக்க
கிருபையின் மகாதானமது வருங்
காலங்களில் விளங்க - ஆ, ஆ - நன்றி

3. ஜீவனைத் தியாகமாய் வைத்த பலர் கடும்
சேவையில் மரித்தார்
சேர்ந்து வந்து சேவை புரிந்து
சோர்ந்திடாது நிற்போம் - ஆ, ஆ - நன்றி

4. மித்ருக்களான பலர் நன்றியிழந்தே
சத்ருக்களாயினாரே
சத்தியத்தைச் சார்ந்து தேவ
சித்தம் செய்திடுவோம் - ஆ, ஆ - நன்றி

5. அழைக்கப்பட்டோரே நீர் உன்னத அழைப்பினை
அறிந்தே வந்திடுவீர்
அளிவில்லாத் திரு ஆக்கமிதனை
அவனியோர்க்களிப்பீர் - ஆ, ஆ - நன்றி

6. சீயோனைப் பணிந்துமே கிறிஸ்தேசு இராஜனாய்
சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சுந்தரன் முகமே - ஆ, ஆ - நன்றி

## 169

1. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானிலமெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

**பல்லவி**

தேவ கிருபை எங்கும் பெருக
தேவனை ஸ்தோத்தரிப்போம்
பாவ இருள் அகல
தேவ ஒளி அடைந்தோம்

**சரணங்கள்**

2. அவரை நோக்கிக் கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தார் – தேவ

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே
அவர் நம்மைத் தெரித்தெடுத்தார் – தேவ

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்கவர் அருள் புரிவார் – தேவ

5. நமது கால்கள் மான்களைப் போல
நடந்து ஓடிப்பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில் – தேவ

6. பரமனேசு வந்திடும் போது
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம் – தேவ

## 170

1. நான் பாவச்சேற்றினிலே வாழ்ந்தேன்
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
ஏசென்னை மீட்டாரே

**பல்லவி**

என் நாவிலே புதுப் பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறுபிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

**சரணங்கள்**

2. என் ஆத்ம மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணினதால்
சொந்த தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய்
சிந்தி இரட்சித்தாரே - என்

3. கார்மேகம் போல் என் பாவங்கள்
கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே - என்

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்துவிட்டாரே
மா பரமானந்தம் - என்

5. இரத்தாம் பரம் போல் சிவப்பான
இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார் - என்

6. மேற்கு திசைக்கும் கிழக்குக்கும்
மா எண்ணிலா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினார் - என்

7. நான் ஜலத்தினால் நல் ஆவியினால்
நான் மறுபடியும் பிறந்தேன்
தேவனின் ராஜ்யம் சேர்வதற்காக
தேடிக்கொண்டேன் பாக்கியம் - என்

8. அங்கேயும் சீயோன் மலைமீதே
ஆனந்தக் கீதங்கள்
ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சூழ
அன்பரைப் பாடிடுவேன் - என்

## 171

அந்தகார வல்லமைகளை தேவ பெலத்தால் முறியடிப்பேன்
இயேசுவின் இரத்தம் எந்தன் பாதுகாப்பு
பயமில்லை வெற்றி எனக்கே என்றும் - 2
போராயுதம் தரிப்பேன் போர்செய்வேன் போர்செய்வேன்

**சரணங்கள்**

1. சேனைகளின் கர்த்தர் நாமத்தில் பெரும்
மதில்களை தாண்டிடுவேன்
ஆகாய மண்டல லோகாதிபதிகள்
நடுங்கியே மறைந்திடுவார் - பயந்து - 2 - அந்தகார

2. சர்ப்பங்களை மிதித்திடவும் - பெரும்
தேள்களை நசுக்கிடவும்
அதிகாரம் உண்டு வல்லமையுண்டு
தோல்வியில்லை ஜெயம் எனக்கே என்றும் - 2 - அந்தகார

3. வெள்ளம் போல சாத்தான் வந்தாலும் - தூய
ஆவியாலே கொடியேற்றுவேன்
ஆவியின் பட்டயம் வேதத்தின் வசனம்
சாத்தானை வீழ்த்திடுமே - வஞ்சக - 2 - அந்தகார

# 172

நன்றியால் பொங்குதே எமதுள்ளம்
நாதன் செய்பல நன்மைகட்காய்
நாடோறும் நலமுடன் காத்தனரே
நன்றியால் ஸ்தோத்தரிப்போம் – அல்லேலூயா

**சரணங்கள்**

1. கடந்த வாழ்நாளில் கருத்துடனே
கண்மணிபோல் நம்மை காத்தனரே
கண்ணீர் கவலையினை மாற்றினாரே
கனிவுடன் ஸ்தோத்தரிப்போம் – அல்லேலூயா – நன்றி

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் தந்து
ஜீவிய பாதையில் நடத்தினாரே
ஜீவ காலமெல்லாம் ஸ்தோத்தரிப்போம்
ஜீவனின் அதிபதியை – அல்லேலூயா – நன்றி

3. அற்புத கரம் கொண்டு நடத்தினாரே
அதிசயங்கள் பல புரிந்தனரே
ஆயிரம் நாவுகள்தான் போதுமோ
ஆண்டவரைத் துதிக்க – அல்லேலுயா – நன்றி

4. பாவ சேற்றினில் அமிழ்ந்த நம்மை
பாசக் கரம் கொண்டு தூக்கினாரே
கன்மலைமேல் நம்மை நிறுத்தி அவர்
கருத்துடன் காத்தனரே – அல்லேலூயா – நன்றி

5. பொருத்தனை பலிகள் தினம் செலுத்தி
பொற்பரன் இயேசுவை வாழ்த்திடுவோம்
ஸ்தோத்திர பாத்திரன் இயேசுவையே
நேத்திரமாய் துதிப்போம் – அல்லேலூயா – நன்றி

# 173

பாரீர் கெத்சமனே பூங்காவிலென் நேசரையே
பாவியெனக்காய் வேண்டுதல் செய்திடும் சத்தம் தொனித்திடுதே

**சரணங்கள்**

1. தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏக சுதன் படும்
பாடுகள் எனக்காக – பாரீர்

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியும் உந்தன் சித்தம் செய்ய என்னை தத்தம்
செய்தேன் என்றாரே – பாரீர்

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ளமுருகியே வேண்டுதல்
செய்தனரே – பாரீர்

4. மும்முறை தரை மீதே தாங்கொண்ணா வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே பாதகர்
மீட்புறவே – பாரீர்

5. அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே நொந்து
அலறுகின்றார் – பாரீர்

6. என்னையும் தம்மைப்போல மாற்றும் இம் மா நேசத்தை
எண்ணி எண்ணியே உள்ளம் கனிந்து நான் என்றும்
புகழ்ந்திடுவேன் – பாரீர்

## 174

பரிசுத்தர் கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ

**சரணங்கள்**

1. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் நீக்குமே
பாவி நீசப் பாவி நானையா
தேவா இரக்கம் செய்யமாட்டீரோ – பரிசுத்தர்

2. மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ?
கல் தின்னக் கொடுக்கும் பெற்றோர் உண்டோ?
பொல்லாதோர் கூடச் செய்திடார்
நற்பிதா நலமருள்வார் – பரிசுத்தர்

3. பாருந் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன்
பரிசுத்தம் கெஞ்சுகின்றேன் – பரிசுத்தர்

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும்
“பரிசுத்தம்” என எழுதும் – பரிசுத்தர்

## 175

பரிசுத்த ஆவி எங்கள் மீதிலே
பொழியும் இந்த வேளையிலே
பிரசன்னத்தால் நிரப்பி எம்மை
புது சக்தியை அளித்திடுமே

**சரணங்கள்**

1. இம்மண்டலம் முழுவதையும்
உம் ஆவியால் நிரப்பிவிடும்
அனுப்பியே தாரும் பரிசுத்த அக்கினி
அந்தகாரத்தை நீக்கிவிடும் – பரி

2. தேவ செய்தி அளிக்கவிருக்கும்
தேவ பிள்ளையை பெலப்படுத்தும்
தேவ லோகத்தின் இரகசியங்களை
தேவா எங்கட்கு வெளிப்படுத்தும் – பரி

3. பேயின் சக்தி தகர்த்திடவே
நோயின் சாபம் அகற்றிடவே
வல்லமை தாரும் பெலன் அருளும்
வரம் தந்தெம்மை அபிஷேகியும் – பரி

4. பரலோகத்தின் அதிபதியே
பரலோகத்தின் பலகனிகள்
திறந்தே கொட்டிடும் கிருபை சொரியும்
திருப்திபடுத்தி அனுப்பும் – பரி

# 176

இயேசுவையே துதி செய் நீ மனமே
இயேசுவையே துதி செய் - கிறிஸ்தேசுவையே
துதி செய் நீ மனமே இயேசுவையே துதி செய்

**சரணங்கள்**

1. மாசாணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து - இயேசுவையே
2. அந்தர வான்தரையுந்தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தர நந்தன் - இயேசுவையே
3. எண்ணின காரியம் யாவு முடிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க - இயேசுவையே

# 177

1. போற்றி துதிப்போம் எம் தேவதேவனை
புதிய கிருபையுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா ஏசுவை நாம்
என்றும் பாடித் துதிப்போம் - (2)

**பல்லவி**

இயேசு என்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே
என் நேசரேசுவை நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன் - (2)

**சரணங்கள்**

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரங்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் - இயேசு

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தழிந்து மாளாமல்
ஆர்ப்பின் ஜெயத்தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன் - இயேசு

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து ஜீவ
பாதை என்றும் ஓடுவேன் - இயேசு

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
ஈந்து தொண்டு செய்குவேன் - இயேசு

# 178

போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
பொற்பரன் இயேசுவையே
புவியில் அவர்போல் வேறில்லையே

**சரணங்கள்**

1. தந்தையைப் போல தோளினிலே
மைந்தரெமை சுமந்தவரே
எந்நாளுமே அவர் நாமமே
இந்நிலத்தே நாம் துதித்திடுவோம் - போற்றி

2. கனமகிமை புகழடைய
கருணையால் ஜெநிப்பித்ததாலே
கனலெரியின் சோதனையில்
கலங்கிடுமோ எம் விசுவாசமே - போற்றி

3. ஞாலமெல்லாம் கண்டதிசயிக்க
ஆவியின் அபிஷேகத்தாலே
ஏக சரீரமாய் நிறுத்த
இணைத்தனரே நம்மை தம் சுதராய் - போற்றி

4. ஆதி அப்போஸ்தல தூதுகளால்
அடியாரை ஸ்திரப்படுத்தி
சேதமில்லா ஜெயமளித்தே
கிறிஸ்துவின் நற்கந்தமாக்கினாரே - போற்றி

5. சீயோனே மா சாலேம் நகரே
சீரடைந்தே திகழ்வாயே
சேவிப்பாயே உன் நேசரையே
சிறப்புடனே இப்பார்தலத்தே - போற்றி

## 179

1. போற்றிடுவேன் பராபரனை – துதி
சாற்றிடுவேன் சர்வ வல்லவரை
ஸ்தோத்திர பாத்திரன் இயேசுவையே
நேத்திரமாய் என்றும் பாடுவேன்

**பல்லவி**

ஆ! ஆர்ப்பரித்தே அகமகிழ்வேன்
ஆண்டவர் அன்பதை எங்கும் கூறுவேன்
கண்மணிபோல் கருத்துடனே
கைவிடாமல் என்னைக் காத்தனரே

**சரணங்கள்**

2. எத்தனையோ பல நன்மைகள்
இத்தனை ஆண்டுகளாய் அளித்தார்
கர்த்தரே நல்லவர் என்பதையே
கருத்துடனே ருசித்திடுவேன் – ஆ!

3. பயப்படாதே என்றுரைத்தனரே
பரிசுத்த ஆவியானவரே
வெள்ளம் போல் சத்துரு வந்திடினும்
விரைந்தவரே கொடியேற்றினார் – ஆ!

4. பொருத்தனைகள் துதிபலிகள்
பணிவுடன் செலுத்தி ஜெபித்திடுவேன்
ஆபத்துக்காலத்தில் கூப்பிடுவேன்
ஆண்டவரே செவிகொடுப்பார் – ஆ!

5. நித்தமும் போதித்து நடத்தி
நித்திய ஆலோசனை அளிப்பார்
முடிவிலே மகிமையில் சேர்த்திடுவார்
மகிழ்ந்திடுவேன் நித்தியமாய் – ஆ!

# 180

**பல்லவி**

மறுரூப மலைமீதிலே
மகிமையைக் கண்ட வாழ்வினிலே
மகா பெலன் வந்திறங்கிடுதே

**சரணங்கள்**

1. உன்னத ஜீவன் புறப்படுதே
உயர் ஸ்தலமதிலே ஏற்றிடுதே
மகிமை மகிமை மா மகிமை விளங்கும்
மலைவாசம் என் மனம் மகிழும் - மறுரூப

2. தேவ பர்வத கொடுமுடியில்
தேவ சமூகம் இறங்கிடுதே
அருணோதயம் போல் மேகமும் நிழலிடுதே
அண்ணல் வாக்கங்கு தொனித்திடுதே - மறுரூப

3. கன்மலைத் தேனும் அருந்திடவே
என் ஆவி ஆத்மா செழித்திடுதே
எனது வாழ்வை போஷிக்கும் பங்கிதுவே
எங்கள் யாக்கோபின் சுதந்திரமே - மறுரூப

4. அக்கினிக் கோட்டை சூழ்ந்திடுதே
ஆவியின் பெலனே காத்திடுதே
ஜெபமே ஜெயமே தீங்குநாளின் அரணே
உபவாசம் நல் அனுபவமே - மறுரூப

5. ஆச்சரியமான ஆலோசனை
அன்பரின் பாதம் கிடைத்திடுதே
ஜெயமாய் முழங்கும் ஸ்தோத்திர ஆராதனையும்
ஜெபபதூபம் அங்கேறெடுப்பேன் - மறுரூப

6. சீயோனில் கர்த்தர் ஏற்றிடுவார்
சீக்கிரம் நம்மைச் சேர்த்திடுவார்
ஒலிவ மலைமேல் அன்றவர் பாதம் நிற்கும்
ஒளியாம் இயேசு வந்திடுவார் - மறுரூப

## 181

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்த பார்தலத்தின் சொந்தக்காரரவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

**பல்லவி**

ஆ! ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே - இந்த

**சரணங்கள்**

2. சின்னஞ்சிறு வயதில் என்னை குறித்துவிட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார் - ஆ!

3. எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன் - ஆ!

4. நரகாக்கினைக்கே நேராய்த் தீவிரிக்கும்
நரரை வழிதிருப்பிடவே
பரனே உமது வரமே தருவீர்
கிருபை நிறைவே பெறவே - ஆ!

5. தந்தை தாயுடனே இந்த லோகமதில்
எந்தன் சொந்தமானோர் எவரும் - என்னைத்
தள்ளிடினும் நேசர் தள்ளுவாரோ? எந்தன்
உள்ளத்தில் தங்குவாரே - ஆ!

6. தொல்லை துயர் வறுமை தீரா நோய் மரணம்
சொல்லொண்ணாப் பெரும் சோதனையோ?
அல்லேலூயா பாடி அகமகிழ்ந்திடுவேன்
அல்லல் யாவுமே அகன்றிடுமே - ஆ

7. அவர் வரும் நாளினில் என்னைக் கரம் அசைத்தே
அன்பாய் கூப்பிட்டுச் சேர்த்துக்கொள்வார்
அவர் சமூகமதில் என்றும் அவருடனே
ஆடிப் பாடியே மகிழ்ந்திடுவேன் - ஆ!

# 182

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆண்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே
மந்தையில் சேரா ஆடுகளே

**அனுபல்லவி**

அழைக்கிறார் இயேசு அவரிடம் பேசு நடத்திடுவார்

**சரணங்கள்**

1. காடுகளில், பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை!

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
எனை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்!

3. எனக்காய் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திடக் கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறோம் – தர வேண்டும்

# 183

மாலையில் துதிப்போம் மகிழ்வுடனே மனக்களிப்புடனே
மாண்புகழ் இயேசுவை வானவரோடே
மாலையில் துதிப்போம்

**சரணங்கள்**

1. காலை மாலை உறங்காரே - நம்
காவலனாயிருப்பாரே
ஆவலுடன் துதி சாற்றிடுவீரே - மாலை

2. கிருபையின் வாக்குத் தந்தாரே - அதை
அருமையாய் நிறை வேற்றினாரே
உரிமையுடன் புகழ் சாற்றிடுவாரே- மாலை

3. சோதனை வந்திட்ட நேரம் - அவர்
போதனை செய்தார் அந்நேரம்
சாதனையாகவே நிற்கச் செய்தாரே - மாலை

4. அழைத்த மெய் அழைப்பிலேதானே - நாம்
உழைத்திட பெலன் தந்த தேனே
பிழைத்திட ஜீவன் கிறிஸ்துவில்தானே - மாலை

5. வயல் நிலம் ஏராளம் காட்டி - அதில்
அறுவடை தாராளம் ஏற்றி
அரிக்கட்டோடே வர கிருபை செய்தாரே - மாலை

6. ஆணி துளைத்திடத்தானே - தன்னை
தியாகமாய் கொடுத்திட்ட தேனே
ஏகமாய் இயேசுவின் நாமத்தைத்தானே - மாலை

7. உன்னதருக்கு மகிமை - ஆ
பூமியிலே சமாதானம்
மனுஷரில் பிரியம் உண்டாகச் செய்தாரே - மாலை

# 184

**பல்லவி**

பாரிடத்தில் நாடி நம்மைத் தேடி வந்த இயேசுவை
பாடிப் பாடி துதி சாற்றுவோம்
மேசியாவுக்கோ இந்த நீசக் குடிலோ
ஓசன்னா ! ஓசன்னா !! உன்னதத்திலே

**சரணங்கள்**

1. அன்பினைப் பாருமே தேவனின் செயலே
மானிடர் பாவம் சுமப்பார்
தேவாட்டுக்குட்டியாய் - மெய்யான பலியாய்
ஜீவன் வைத்திடவே - வந்தனரே - பாரி

2. சாவையும் நோவையும் பேயையும் யாவையும்
மாய்த்திடும் அதிபதியே
கல்வாரிதனிலே - தொல்லுலகோருக்காய்
அல்லல்களுறவே - நினைந்தவர் - பாரி

3. சீயோனில் இராஜனாய் வீற்றிட உற்றவர்
சேயனாய் வரவென்னவோ
அன்பினாலல்லவோ - இந்நிலையாகவோ
மன்னுருவாகவே தெரிந்தாரே - பாரி

4. தம்மைப்போலாக்கவே நம் துயர் போக்கவே
இம்மையில் இறங்கினாரே
கண்ணீர் பெருகுதே - அவ்வன்பையெண்ணியே
கொண்டுள்ளம் நன்றியால் - சேவிப்போமே - பாரி

5. இன்னும் இவ்வுலகில் நாமேதுமில்லையே
இன்பராம் இயேசுவின்றியே
போதும் அவ்வன்பிதே - நம் ஜீவன் யாவுமே
நாதன் அவருக்கே - சொந்தமன்றோ - பாரி

## 185

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

**சரணங்கள்**

1. வாழ்நாளெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக்கொள்வார் – வரு

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை – வரு

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர்நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை – வரு

4. வானத்தின் கீழே பூமி மேலே
வானவர் இயேசு நாமமல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே – வரு

5. தீராத பாவ வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய – வரு

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பேரை ஜீவ புஸ்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார் – வரு

# 186

வாரும் தேவா வான சேனைகளுடனே
வந்து வரமருள் அளித்திடுமே

**சரணங்கள்**

1. பாவம் அகற்றினீரே – உந்தன்
பாதம் பணிந்திடுவேன் – எந்தன்
பரிசுத்தர் போற்றிடும் பரம தேவா
தரிசிக்கத் திருமுகமே – வாரும்

2. ஆதி அன்பிழந்தே – மிக
வாடி தவித்திடுதே – ஜனம்
மாமிசமானவர் யாவரிலும்
மாரியைப் பொழிந்திடுமே – வாரும்

3. அற்புத அடையாளங்கள் – இப்போ
அணைந்தே குறைந்திடுதே – வல்ல
ஆதி அப்போஸ்தலர் காலங்களின்
அதிசயம் நடத்திடுமே – வாரும்

4. கறைகள் நீக்கிடுமே – திருச்
சபையும் வளர்ந்திடவே – எம்மில்
விழிப்புடன் ஜெபித்திடும் வீரர்களை
விரைந்தெங்கும் எழுப்பிடுமே – வாரும்

5. கிருபை பெருகிடவே – உம்
வருகை நெருங்கிடுதே – மிக
ஆத்ம மணாளனைச் சந்திக்கவே
ஆயத்தம் அளித்திடுமே – வாரும்

## 187

விசுவாசத்தாலே நாமும் பிழைப்போம்
பசுமை செழிப்புடன் வாழ்வோம்
இயேசு தேவனை நம்பினோரே

**அனுபல்லவி**

விசுவாசம் எம்மில் கடுகளவிருந்தால்
வீழ்த்திடுவோம் மலையைக் கடலிலே
உலகை ஜெயித்திடுமே விஸ்வாசம்
உத்தம இதயத்தில் தங்கும் - விஸ்வாசத்தாலே

**சரணங்கள்**

1. கர்த்தரைக் கண்டு விசுவாசிப்பதிலும்
காணாமல் நம்பினால் பாக்கியமே
தரிசித்தல்ல விசுவாசத்தாலே
தங்கி நம்மை வசிக்கும் கர்த்தருக்குள்
பரிசுத்தாவியிலே மகிழ்ந்து நாம்
பூரண மகிமை அடைவோம் - விசுவாசத்தாலே

2. வீரர்களாக நின்றிடுவோமே
விசுவாச சோதனை நேர்ந்திடினும்
பொன்னைப்போல் நெருப்பில் புடமிட்ட போதும்
பொன்னாக நம் விசுவாசம் விளங்க
புகழ்ச்சி கனம் மகிமை கிடைக்குமே
பரமன் வெளிப்படும் நாளில் - விசுவாசத்தாலே

3. ஆபிரகாமின் விஸ்வாச மார்க்கம்
அந்த அடிச்சுவட்டில் நடப்போர்
வாழ்வினிலே நீதி கிறிஸ்துவின் மூலம்
வாக்குத்தத்த ஆசீர்வாத நன்மைகள்
ஜெயத்தின் மேல் ஜெயக்கொண்டு பக்தர்கள்
சந்ததம் சுதந்தரிப்போமே - விசுவாசத்தாலே

4. தேவ குமாரன் வந்திடும் நாளில்
தூய விசுவாசத்தோடே பறப்போம்
மூலைக்கல் இயேசு திட அஸ்திபாரம்
மாளிகையாய் அவர்மேல் இணைந்து நாம்
பரம அழைப்புடன் சேர்ந்து சீயோனில்
பிதாவின் முகம் கண்டு வாழ்வோம் - விஸ்வாசத்தாலே

## 188

1. மேகங்கள் நடுவே வழி பிறக்கும்
பூதங்கள் கடந்து கடந்து போகும்
தூதர்கள் கூட்டங்கள் சூழ்ந்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன் (2)

**பல்லவி**

வானத்தில் வானத்தில் நடு வானத்தில்
இயேசுவின் கைகளில் நான் இருப்பேன்
பரமன் இயேசுவின் புன்னகை முகம்
என் கண்களில் உள்ளத்தில் நிறைந்து நிற்கும் (2)

**சரணங்கள்**

2. நாற்றிசையினின்றும் கூடிடுவார்
நாதனின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
ஸ்தோத்திர கீதமே தொனித்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன் (2) - வானத்தில்

3. கண்ணீரும் துன்பமும் கடந்துபோகும்
கண்ணிமைப் பொழுதில் நடந்துவிடும்
கர்த்தரின் வருகை நாளின் போது
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன் (2) - வானத்தில்

4. திருடன் வருகை போல் இருக்கும்
தீவிரம் அவர் நாள் வெகு சமீபம்
காலையோ மாலையோ நள்ளிரவிலோ
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன் (2) - வானத்தில்

# 189

விளைந்த பலனை அறுப்பாரில்லை
விளைவின் நற்பலன் வாடிடுதே
அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அந்தோ! மனிதர் அழிகின்றாரே

**சரணங்கள்**

1. அவர் போல் பேசிட நாவு இல்லை
அவர் போல் அலைந்திட கால்கள் இல்லை
எண்ணிலடங்கா மாந்தர் சத்தம்
உந்தன் செவியினில் தொனிக்கலையோ - விளைந்த

2. ஆத்தும இரட்சண்யம் அடையாதவர்
ஆயிரமாயிரம் அழிகிறாரே
திறப்பின் வாசலில் நிற்பவர் யார்?
தினமும் அவர் குரல் கேட்கலையோ - விளைந்த

3. ஆத்தும தரிசனம் கண்டிடுவாய்
ஆண்டவர் வாக்கினை ஏற்றிடுவாய்
விரைந்து சென்று சேவை செய்வாய்
விளைவின் பலனை அறுத்திடுவாய் - விளைந்த

4. ஒருமனம் ஒற்றுமை ஏகசிந்தை
சபைதனில் விளங்கிட செயல்படுவாய்
நிமிர்ந்து நிற்கும் தூண்களைப் போல்
நிலைவரமாய் என்றும் தாங்கி நிற்பாய் - விளைந்த

5. ஆவியின் வரங்கள் ஒன்பதனை
ஆவலுடன் நீயும் பெற்றிடுவாய்
சபையின் நன்மைக்காய் உபயோகிப்பாய்
சந்ததம் சபையிலே நிலைத்திருப்பாய் - விளைந்த

6. தேவனின் சேவையில் பொறுப்பெடுப்பாய்
உந்தனின் பங்கினை ஏற்றிடுவாய்
கர்த்தர் நாட்டின தோட்டத்திலே
கடைசி வரை நீயும் கனிக்கொடுப்பாய் - விளைந்த

# 190

யேகோவாயீரே யேகோவாயீரே
பாருருவாகுமுன்னரே
யாவுமெனக்காய் முடித்தீரே
கிறிஸ்து இயேசுவிலே - முன்
அறிந்து அழைத்தவரே

**சரணங்கள்**

1. ஆபிரகாமுக்காய் தேவ பர்வதத்தில்
ஆயத்தமாக்கி நீர் வைத்ததோர் ஆட்டைப்போல்
தாயினகத்தில் யான் சேயனாய்த் தோன்றுமுன்
தற்பரனே யாவும் கருதி வைத்தீர் - யேகோவாயீரே

2. கானக மீதிலே என்னைப் பின் தொடர்ந்தே
ஞானக் கன்மலையாய் தாகங்கள் தீர்ப்பாரே
வான மன்னாவாம் உம் மாறிடா வார்த்தையால்
மாற்றுகிறீர் மண்ணின் சாயலென்னில் - யேகோவாயீரே

3. பாரிலென் கரங்கள் போரினில் ஜெயிக்க
நீரே உம் நித்திய புயத்தால் தாங்கியே
ஆனந்த தைலத்தால் என் உள்ளம் வழிய
அன்பரே நீர் அபிஷேகிக்கிறீர் - யேகோவாயீரே

4. அன்பரே உம்மிலே அன்பு கூர்ந்தோர்க்கு
ஆயத்தமாக்கிய ஆனந்த நன்மைகள்
கண்கள் கண்டதில்லை கேட்டறிந்ததில்லை
காண யான் ஆவியால் கருணை செய்தீர் - யேகோவாயீரே

5. அந்த நாள் வரையும் எந்தனைக் காப்பீரே
எந்தையே உமக்காய் சொந்தமாயளித்தேன்
சந்ததம் நிலைக்கும் சீயோன் பர்வதம் போல்
என்றும் கிருபையினால் இருப்பேன் -யேகோவாயீரே

## 191

இயேசு மணாளா ஆசை நீரே
பாரினில் நினைக்கையில் வேறொன்றெனக்கில்லையே
பாரினில் நினைக்கையில் வேறொன்றெனக்கில்லையே
– இயேசு

**சரணங்கள்**

1. நீர் என் பாவம் போக்கினீர்
நீர் என் வியாதியைத் தொலைத்தீர்
நித்தியமான விடுதலை ஈந்தீர்
நின் சொந்தமாக்கிக் கொண்டீர் – இயேசு

2. நீர் என் துக்கம் மாற்றினீர்
நீர் என் கண்ணீரைத் துடைத்தீர்
நீதியின் பாதையில் நடத்துகின்றீர்
நீர் என்னைத் தாங்குகின்றீர் – இயேசு

3. நீர் என் பாரம் எடுத்துக்கொண்டீர்
நீங்கிடா சந்தோஷம் ஈந்தீர்
நின்னிலிருந்து நான் வேறு பிரியாது
நின் சமாதானமீந்தீர் – இயேசு

4. தேனினும் இனிய நின் வசனம்
தேற்றுகிறதே என் ஆத்துமாவை
தேவ மகிமையாம் ஆவியினாலே
என் பாத்திரம் நிறைகிறதே – இயேசு

5. கானக வழியில் கோர புயலால்
காரிருள் சூழ்ந்திடும் வேளை
காருண்ய கரங்களால் காத்து என்னை
கனிவுடன் ஆதரித்தீர் – இயேசு

6. பார்த்தவர் பலர் பகடி செய்ய
பாடுகள் மிக நிதம் பெருகிட
பாரிதின் இன்பங்கள் மறந்து நானும்
பாடி மகிழச் செய்தீரே – இயேசு

7. வாரும் மணாளா மேக மீதில்
வாடிடா என்னை வாழ்விக்கவே
வான்முடி மன்னனாம் நின்னோடு சேரவே
வாஞ்சிக்குதே என்னுள்ளம் – இயேசு

## 192

இன்ப இயேசுவின் இணையில்லா நாமத்தைப் புகழ்ந்து
இகமதில் பாடிட தருணமிதே
இயேசுவைப் போல் நல் நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவோம்

**சரணங்கள்**

1. நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீங்கிடாதென்னை தோளின்மேல் சுமந்தே நித்தம் நடத்துகிறீர்
என்னையும் உம் ஜனமாய் நினைத்தே - ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய் - இன்ப

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே ஆழ்ந்து நான் மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினைக்காட்டியே பட்சமாய் பார்த்தெடுத்தீர்
பாரில் பரிசுத்தராக்குதற்காய் - மிக
பரலோக நன்மைகளால் நிறைந்தீர் - இன்ப

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே வாஞ்சித்துக் காத்திடுதே
வானிலும் இந்தப் பூவிலும் நீர் - என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைந்தே - இன்ப

4. சீயோனில் நீர் சிந்தை வைத்தீர் சேர்த்தொன்றாய் கட்டுதற்காய்
திவ்வியபிஷேகம் தந்தெம்மை நிறுத்தி சேர்த்தீரே சுத்தருடன்
சேதம் வராமலே காத்ததினால் - உம்மை
சேவிப்போம் நித்திய நித்தியமாய் - இன்ப

5. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்தரிப்போம் அன்பரை உளம் கனிந்தே
அளவில்லாத ஜீவனை அளித்தே அற்புத ஜெயம் ஈந்தீரே
அல்லேலூயா துதி கன மகிமை - உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம் - இன்ப

## 193

அன்பிலே பூரணரே – எங்கள் ஆனந்த ரூபா அதிசய ராஜா
அழகில் சிறந்தோனே – எங்கள் ஆசையின் கோமானே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் அன்னியராம் எமை
அழைத்தணைத்தீரே

**சரணங்கள்**

1. காத்தீரே கருணையுடன் – எம் கலக்கங்கள் நீக்கி
கனிவுடன் தூக்கி
கதியில்லா ஏழைகளின் பெரும் கவலைகளைப் போக்கி
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் ஆறுதல் அளித்தீர்
அனுதினம் துதிப்பேன் – அன்பிலே

2. ஆனந்தம் ஆனந்தம் – உம் ஆருயிர் ஈந்தீர்
அவனியில் வந்தீர்
அலகைதனை வென்றீர் – அவன் அடிமைகளை மீட்டீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் அல்லேலூயா பாடி
அகமகிழ்ந்திடுவோம் – அன்பிலே

3. கோடையில் குளிர் தருவே – கடும் வாடையின்
மறைவே ஏழையின் உறவே
கூடுவோம் திருப்பாதம் – தினம் பாடுவோம் அவர் கீதம்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் அன்பே, அன்பே
அன்பே அன்னையின் மேலாய் – அன்பிலே

4. நித்திய பரிசுத்தரே – உம் வருகையில் அடியாரைப்
பரிசுத்தம் செய்யும்
உத்தம ஜீவிகளாய் – நல் நித்திய வாழ்வினிலே
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் அல்லேலூயா கீதம்
பாடி மகிழ்வோம் – அன்பிலே

5. தோத்திரம் துதியுமக்கே – தேவா அன்பின் ஆழம்
அறிந்து புகழ்வோம்
ஆயத்தமுள்ளோர்க்கே – நீர் அருணோதயமாவீர்
ஆ! ஆனந்தம் ஆ! ஆனந்தம் அல்லேலூயா பாடி அக
மகிழ்ந்திடுவோம் – அன்பிலே

## 194

ஆதி மெய் தேவனே உம் அன்பிற்கோர் எல்லையுண்டோ
நீதியாம் ஜோதி அனாதி தேவனே – உம்
நீதிக்கோர் எல்லையுண்டோ

எத்தனையோ பாவங்கள் அத்தனே அகற்றினீர்
பத்திலோர் பங்கு போதாதென்றெண்ணி நான்
தத்தம் செய்தேன் உமக்கே

**சரணங்கள்**

1. எத்தன் எனக்காக இன்னுயிர் கொடுத்தீரே
எதைச் செலுத்துவோம் இயேசுவின் அன்பிற்கு
இதயம் ஈடாகுமோ – ஆதி மெய்

2. ஆழ்ந்த கடலிலே அமிழ்ந்து போன என்னை
தூக்கி எடுத்த உம் அன்பை நினைக்க என்
துதிகள் தான் போதுமோ – ஆதி மெய்

3. பாவத்தில் மாண்ட என்னை கோபத்தால் அழிக்காமல்
இரட்சித்த உந்தன் அன்பை நினைத்து நான்
பட்சமாய்ப் போற்றிடுவேன் – ஆதி மெய்

4. கெத்சமனே பூங்காவில் – பட்சமாய் வேண்டி நிற்கும்
இரத்த வெள்ளத்தில் கத்திக் கதறும் மெய்
சத்தம் தொனித்திடுதே – ஆதி மெய்

5. அலையும் புயலுமாய் அமிழ்த்தி வீழ்த்துகையில்
நான்தான் பயப்படாதிருங்கள் என்ற உம்
அன்பின் தொனி கேட்குதே – ஆதி மெய்

6. எண்ணும் நன்மை எதுவும் என்னிலே இல்லை ஐயா
பின்னே ஏன் என்னை நேசித்தீரோ
என்னில் கொண்ட உம் அன்புதானோ – ஆதி மெய்

# 195

என் ஆத்துமா அனுதினம் உம்மைத் தேடும்
என் இயேசுவே அகமகிழ்ந்தும்மைப்பாடும்
துதி செய்தலே ஏற்றதுவே
தேன் போன்ற இனிமை என் நாவினிலே

**பல்லவி**

கர்த்தாவை மகிமைப்படுத்திடுவேன்
கனிவான ஸ்தோத்திரப் பலிகளால்
நாள்தோறும் தேவ நீதியைச் சொல்லி
நேர்மை மனதோடு வாழ்ந்திடுவேன் – என் ஆத்துமா

**சரணங்கள்**

1. எந்தன் துதி தொனியும் முழங்க
எரிகோ மதிலும் வீழ்ந்திடுமே
நாலா திசை கேட்க ஸ்தோத்தரிப்பேன்
நல்லவர் எனதாண்டவர் – கர்த்தாவை

2. என் ஸ்தோத்திரம் கருத்தோடு செய்வேன்
எனையும் நினைத்தார் என் தாழ்விலே
தன்னைத்தான் தாழ்த்தினால் உயர்த்துவார்
சொன்னவர் எனதேசுவே – கர்த்தாவை

3. இம்மானுவேல் இதுவே அவர் நாமம்
எம்மோடிருப்பார் எக்காலமும்
நித்திய ஜீவனும் சந்தோஷமும்
நல்கிடும் கிறிஸ்தேசுவே – கர்த்தாவை

4. பூவில் ஜனம் துணிவான பாவம்
பல செய்வதினால் தீர்ப்பைப் பெறும்
நியாயதிபதி இயேசு வருகிறார்
நீதியை நிலை நாட்டுவார் – கர்த்தாவை

5. அல்லேலூயா பரலோகக் கூட்டம்
அல்லும் பகலும் ஓயாமலே
கர்த்தாவின் நாமத்தில் ஆர்ப்பரிப்போம்
கிருபை பொழிகின்றதே – கர்த்தாவை

# 196

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

**பல்லவி**

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

**சரணங்கள்**

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தையெல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர் – ஜெபமே

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடு வேண்டிக்கொள்வோம் – ஜெபமே

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம் – ஜெபமே

## 197

அழகாய் நிற்கும் யார் இவர்கள்
திரளாய் நிற்கும் யார் இவர்கள்
சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்

**சரணங்கள்**

1. ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ
ஐந்து தாலந்தோ உபயோகித்தார்
சிறிதானதோ பெரிதானதோ
பெற்ற பணி செய்து முடித்தோர் - அழகாய்

2. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள் - அழகாய்

3. எல்லா ஜாதியார் எல்லாக் கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தார் - அழகாய்

4. வெள்ளை அங்கியைத் தரித்துக்கொண்டு
வெள்ளைக் குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமை என்று - அழகாய்

5. ஆட்டுக்குட்டிதான் இவர் கண்ணீரை
அற அகற்றி துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப்பருக இயேசு தாமே - அழகாய்

6. ஆதிப்பிதாவே ஆட்டுக்குட்டியே
தூய ஆவியே துதி ஸ்தோத்திரம்
கன மகிமை பெலன் வல்லமை
என்றென்றைக்கும் உம்முடையதே - அழகாய்

## 198

இயேசுவோடு இணைந்த வாழ்வினை
தேடித் தெரிந்து கொண்டேன் - இதுவே
தூய தேவ அன்பே - போதும்
மாய உலகினிலே

**சரணங்கள்**

1. மனித அன்பு மாறி மறையும்
மாறிடாத தேவ அன்பே
இணையில்லாத நல்ல பங்கே
இதற்கு நிகர் எதுவும் - இல்லையே
இம்மை மறுமையிலே - இயேசுவோடு இணைந்த

2. பஞ்சமோ பசி பட்டயமோ
மிஞ்சம் துன்பம் தொல்லை வந்தும்
கிறிஸ்துவின் அன்பை விட்டொன்றும்
பறித்து பிரித்திடாதே - என்னையும்
பரமன் கைவிடாரே - இயேசுவோடு இணைந்த

3. உலக ஆசை பாவம் பெருக
உண்மை நேர்மை எங்கும் இல்லை
இதனைக் காணும் நீதிமான்கள்
இதயம் நொறுக்கிடுதே தினமும்
கதறி ஜெபித்திடவே - இயேசுவோடு இணைந்த

4. எனது ஆவி ஆத்மா தேகம்
இயேசு சொந்தமாகக் கொண்டார்
மரணமோ என் ஜீவனோ நான்
மகிமை மேல் மகிமை - அடைந்தே
மகிபன் முகம் காண்பேன் - இயேசுவோடு இணைந்த

## 199

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதையோடே
நீரே வழியும் சத்தியமும் ஜீவனுமே

2. துன்பப் பெருக்கினிலே சோர்ந்திடேனே
அன்பரறியாமல் வந்திடாதே
கண்மணிபோல் நீர் காத்திடுவீர் கனிவுடன் – அன்பரென்

3. முட்செடியைப் போலப் பற்றிடுமே
மோசமடையாய் நீ முற்றிலுமே
ஏங்கிடாதே நீ நேசர் அதில் தோன்றுவாரே – அன்பரென்

4. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் உன்னை விரட்டிடினும்
ஆ! நேசரே உம் இன்ப சத்தம் ஈந்திடுவீர் – அன்பரென்

5. ஈனச் சிலுவை ஏறிட்டீரே
எந்தனுக்காய் கஷ்டப்பட்டிட்டீரே
துன்ப மூலமாய் எய்திடுவேன் இன்பக் கானான் – அன்பரென்

6. தாழ்மையில் மேன்மை நான் கண்டிடவோ
பன்னிரு சீஷர் பாதம் கழுவி
பாவ உலகில் இடமில்லை சாய்ந்திடவே – அன்பரென்

7. சொந்த ஜீவனை நீர் என்னிலீந்து
அன்பில் இணைத்தீரே வல்லமையால்
எந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே – அன்பரென்

8. மாயையான இந்த லோகமதில்
மாய்ந்தழியுமே இம்மாந்தர் அன்பு
நேற்று மின்றென்றும் மாறாதவர் நேசர்தானே – அன்பரென்

9. வஞ்சனையான இப்பார்தலமே
வஞ்சிக்குமே உன்னைத் தந்திரமாய்
வாஞ்சித்திடாதே மோசமான இப்பார்தலத்தை – அன்பரென்

## 200

விந்தைக் கிறிஸ்தேசு ராஜா!
உந்தன் சிலுவை என் மேன்மை (2)
சுந்தரம் மிகும் இந்தப்பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – விந்தை

**சரணங்கள்**

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக இருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே – விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன் – விந்தை

3. சென்னி, விலா, கை காலினின்று
சிந்துதோ! துயரோடன்பு
மன்னா இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன் – விந்தை

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கையீந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் – விந்தை

## 201

இனி தாமதமோ நாதா! நீர் வரவே
கோடாகோடி தூதர் சங்கமாய் மேகத்தில்
ஆ! எத்தனை நாள் காத்து நான் பார்க்கணும்
என் ஆத்ம நாதா! உம் முகம் காணவே

**சரணங்கள்**

1. நிலையில்லா உலகில் பல துன்பங்கள் – ஆ!
பெரும் அலைகள் போல் புரள்கிறதே
பார் உலகத்திலே பெருகிடுதையோ
பரிதாபமான மன சஞ்சலங்கள்!
வந்து சேர்த்துக்கொள்ளும் என்னை நீர் வேகமாய்
இன்றும் நோக்குகிறேன் உம்மை நான் ஏகனாய் – ஆ! – இனி

2. வாழ்கிறார் மனுஷர் நம்பிக்கையற்ற
இளைப்புள்ளோராய் இப்பாருலகில்
வியாகுல சிந்தை பெருகுவதாலே
நிர்பந்தராய் கண்ணீர் விடுகிறாரே
பூவினில் அந்தகாரம் மூடுதென் நாதனே
அந்தோ சிந்திக்கையில் என்ன பரிதாபமோ – ஆ! – இனி

3. ஆதி விசுவாசம் தள்ளி அநேகர்
லோக சுகங்களைத் தேடுகிறார்
தியாகிகளான சகோதரர் கூட்டம்
பதவிகள் தேடி அலைகின்றாரே
ஐயோ! விசுவாச ஜீவியம் நஷ்டமாய்
என் இளைப்பாறல் இன்றும் என்றும் உம்மிலே – இனி

4. நீதியின் சூரியா இயேசு மகேசா
உதித்திட கால மாகிடுமோ
உமது மகிமை நான் அணிந்திடவே
பொங்கு தென்னுள்ளம் அனுதினமும்
தேவா காரிருள் முற்றுமே மாற்றியே
மாரி மின்னல் ஒளி இன்றுமே வீசவே – இனி

5. வானிலெக்காளம் தொனித்திடும் நேரம்
மண்ணிலுறங்குவோர் எழுந்திடுவார்
மண்ணின் சரீரமாயுள்ள சுத்தர்
விண்ணின் சரீரம் அணிந்தவராய்
அன்றும் மத்திய வானில் நாதனே
உம்மை மணந்திடும் நேரம் என் காந்தனே! – இனி

## 202

1. சீர்மிகு வான்புவி தேவா தோத்திரம்!
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய் தோத்திரம்!
ஏர்குணனே தோத்திரம்! அடியார்க்கு
இரங்கிடுவாய் தோத்திரம் மா நேசா! – சீர்மிகு

2. நேர்மிகு அருள் திரு அன்பா தோத்திரம்!
நித்தமும் உமக்கடியார்களின் தோத்திரம்!
ஆர் மணனே தோத்திரம் உனது
அன்பினுக்கே தோத்திரம், மா நேசா! – சீர்மிகு

3. ஜீவன், சுகம், பெலன் யாவுக்கும் தோத்திரம்!
தினம், தினம் அருள் நன்மைக்காகவும் தோத்திரம்!
ஆவலுடன் தோத்திரம் உனது
அன்பினுக்கே தோத்திரம் மா நேசா! – சீர்மிகு

4. ஆத்தும நன்மைக்காகவும் தோத்திரம்!
அதிசய நடத்துதற்காகவும் தோத்திரம்!
சாற்றுகிறோம் தோத்திரம் உனது
தகுமன்புக்கே தோத்திரம், மா நேசா! – சீர்மிகு

5. மாறாப் பூரண நேசா தோத்திரம்!
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்திரம்!
தாராய் துணை தோத்திரம் இந்தத்
தருணமே கொடு தோத்திரம், மா நேசா – சீர்மிகு

## 203

போற்றி புகழ்ந்திடுவோம் அல்லேலூயா – துதி
சாற்றி மகிழ்ந்திடுவோம் அல்லேலூயா

**அனுபல்லவி**

கடந்திட்ட காலமெல்லாம் கண்ணின் மணியைப்போல
காத்தாரே தேவன் நம்மை அல்லேலூயா – தினம் போற்றி

**சரணங்கள்**

1. பாவத்தை போக்கினாரே அல்லேலூயா – தம்
கோபத்தை மாற்றினாரே அல்லேலுயா
சாபத்தினால் உண்டான ரோகத்தை மாற்றியவர்
சோகத்தைத் தீர்த்தாலே அல்லேலூயா – தினம் போற்றி

2. தாய் உன்னை மறந்தாலும் அல்லேலுயா – தன்
சேயைப்போல் காத்திடுவார் அல்லேலூயா
நேயன் நம் யேசு கிறிஸ்து தாயினும் மேலவராய்
தூய வரம் அளித்தார் அல்லேலூயா – தினம் போற்றி

3. சோதனை காலத்திலே அல்லேலுயா – நாம்
வேதனைப் பட்டிட்டாலும் அல்லேலூயா
நாதன் நம் இயேசு கிறிஸ்து வேதம் நமக்கிருக்க
சேதம் ஒன்றும் வராது அல்லேலூயா – தினம் போற்றி

4. பயங்கரப் புயல் உன்மேல் அல்லேலூயா – வெகு
விரைவாக வீசினாலும் அல்லேலூயா
கப்பலில் உள்ள கிறிஸ்து கரங்கொண்டு காத்திடுவார்
தட்டி எழுப்பிடுவார் அல்லேலூயா – தினம் போற்றி

5. பூமி முழுவதிலும் அல்லேலூயா – உன்னை
சாட்சியாய் வைத்திடுவார் அல்லேலூயா
மறுதலித்தாலும் நீதான் மனங் கசந்தழுதுமே
அருகில் வந்தால் அணைப்பார் அல்லேலூய – தினம் போற்றி

## 204

தூய தூய தேவனை நாம்
போற்றி ஏற்றி புகழ்ந்திடுவோம்

**சரணங்கள்**

1. ஸ்தோத்திரக் கீதங்கள் முழங்கிடுதே - அல்லேலூயா
அல்லேலூயா துதி ஸ்தோத்திரமே
பாவமாம் சேற்றினில் புரண்டவர் எம்மையே
பாசமாய் இரங்கியே இரட்சித்தாரே - தூய தூய

2. நன்றியால் உள்ளங்கள் நிறைந்திடுதே - அல்லேலூயா
அல்லேலூயா துதி ஸ்தோத்திரமே
எத்தனை துன்பங்கள் துயரங்கள் பெருகினும்
இத்தனை கருணையாய் தாங்கிடும் மெய்-தூய தூய

3. ஆதரவளித்திடும் ஆருயிரே - அல்லேலூயா
அல்லேலூயா துதி ஸ்தோத்திரமே
கோரமாய் சோதனை சூழ்ந்திடும் வேளையில்
மாறா தம் வார்த்தையால் தேற்றுவாரே - தூய தூய

4. ஆவியில் பாடியே அகமகிழ்வோம் - அல்லேலூயா
அல்லேலூயா துதி ஸ்தோத்திரமே
மேலோக பாக்கியம் எண்ணிடும் வேளையில்
மா பரமானந்தம் பொங்கிடுதே - தூய தூய

5. அன்பின் மணாளனே வந்திடுவார் - அல்லேலூயா
அல்லேலூயா துதி ஸ்தோத்திரமே
பூரண பரிசுத்தவான்களோடேகியே
பரம சீயோனில் வாழ்ந்திடுவோம் - தூய தூய

## 205

என் தேவனாகிய கர்த்தாவே
உம்மை என்றேன்றைக்கும் துதிப்பேன்
அல்லேலூயா - அல்லேலூயா (2)

**சரணங்கள்**

1. கர்த்தாவே என் சத்துருக்கள் என்னை
மேற்கொண்டு மகிழ விடாதிரும்
நீர் என்னைக் கை தூக்கி எடுத்தபடியால்
நானும்மை என்றென்றும் போற்றுவேன் - என்

2. உம்மை நான் நோக்கி கூப்பிட
நீர் என்னை குணமாக்கினீர்
பாதாளத்திலிருந்தென்னை ஏறப்பண்ணி
என்னை நீர் உயிருடன் காத்தீர் - என்

3. கர்த்தரின் சுத்தவான்களே
அவரைக் கீர்த்தனம் பண்ணிடுங்கள்
அவர் பரிசுத்தத்தின் நினைவுகளை
ஆடிப்பாடியே கொண்டாடுங்கள் - என்

4. ஆண்டவர் கோபம் ஒரு நிமிஷம்
அவர் தயவோ நீடிய வாழ்வு
சாயங்காலத்தில் அழுகை தங்கும்
விடியற் காலத்தில் களிப்புண்டாகும் - என்

5. அசைக்கப்படுவதில்லை யென்று
அடியேன் வாழ்வில் சொன்னேன்
என் பாவத்தை நீக்கப் பண்ணினீர்
நானோ கலங்கினவனானேன் - என்

6. குழியில் நான் இருக்கையில்
என் இரத்தத்தால் என்ன லாபம்
புழுதி உம்மை துதித்துக் கொண்டு
உந்தன் சத்தியத்தை அறிவிக்குமோ - என்

7. கர்த்தாவே உம்மைக் கூப்பிட்டேன்
கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்
என் புலம்பலை நீர் களிப்பாக மாற்றி
களிப்பின் கட்டினால் கட்டினீர் - என்

## 206

உம்மைத் துதிப்பேன் கர்த்தாதி கர்த்தாவே
உம் கிரியைகள் அதிசயமானதே!
உம்மைத் துதிப்பேன் தேவாதி தேவனே
உம் ஆலோசனைகள் அருமையானதே

**சரணங்கள்**

1. என்னை ஆராய்ந்து அறிந்து இருக்கிறீர்
என் நினைவுகளையும் தூரத்தில் அறிவீர்
என் நாவினிலே சொல் பிறக்குமுன்னமே
எந்தன் தேவனே அவை யாவும் அறிவீர் – உம்மை

2. உமக்கு மறைவாய் இருளும் மூடாதே
இரவும் பகலைப்போல் வெளிச்சமாகுமே
உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்
இந்த அறிவு ஆச்சரியமானதே – உம்மை

3. நான் வானில் சென்றாலும் அங்கேயிருக்கிறீர்
விடியற்காலத்து செட்டையில் பறந்தாலும்
பாதாளத்தில் படுக்கை போட்டாலும் – உம்
வலது கரத்தால் என்னைப் பிடிக்கிறீர் – உம்மை

4. உம் ஆவிக்கு மறைவாய் எங்கே நான் போவேன்
உம் சமூகத்தில் என்னைப் படைக்கிறேன்
உமது கண்களும் என் கருவைக் கண்டதே
உருவாக்கப்பட்ட என் எலும்பைக் கண்டீரே – உம்மை

5. என்னை சோதித்து அறிந்து கொள்ளுமே
வேதனை வழி – என்னின்று அகல
நித்திய வழி என்னை நடத்துமே
எந்தையே எந்தன் உள்ளம் பாடிட – உம்மை

## 207

அழைக்கிறார் அன்பு உள்ளம் கொண்ட அண்ணல் இயேசு
ஆவலோடு ஐங்காயங்கள் காட்டி – அழைக்கிறார்

**சரணங்கள்**

1. கள்ள உள்ளம் கொண்ட மானிடரை – இயேசு
கைவேலையில்லாத வீட்டில் சேர்க்க
முள்முடியும் சூண்டார் மூங்கிலால் அடியுண்டார்
முன்னும் பின்னுமாகவே தள்ளுண்டார் – அழைக்கிறார்

2. உன்னதத்தில் உந்தனையே சேர்க்க – இயேசு
உலகிலே பலியாக மாண்டார்
கன்னத்தில் அறைய காறியும் உமிழ
கஷ்டங்களும் கட்டுகளும் அடைந்தார் – அழைக்கிறார்

3. கொஞ்சக்காலமே தனக்கு உண்டென்று – சாத்தான்
மிஞ்சியே அலைகின்ற இக்காலத்தில் அஞ்சிடாமல்
இயேசுவின் பாதமே அடைந்திட்டால்
அத்தனையும் மேற்கொண்டுன்னைத் தாங்குவா – அழைக்கிறார்

4. பாவத்தோடு பாரில் நீ மரித்தால் – அந்தோ
பாதாளத்தில் சேரவேண்டி நேரும்
பாவங்களை மன்னித்து பரலோகம் தந்திடும்
பாசமுள்ள இயேசுவண்டை ஓடிவா – அழைக்கிறார்

5. அந்தரங்கமான காரியங்களை – தேவன்
நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார்
அதற்கேற்ற பலனை அடைந்தே நீ தீருவாய்
அவரிடம் பட்சபாதமில்லையே – அழைக்கிறார்

6. இப்பொழுது காணும் வானம் பூமி – இயேசு
வரும்போது வெந்தழிந்து போகும்
புதிய வானம் தோன்றும் புதிய பூமி காணும்
பூரிப்பாக இயேசுவண்டை ஓடிவா – அழைக்கிறார்

# 208

ஸ்தோத்திரம் ஏற்றிப் போற்றுவோம் எங்கள் தேவ தேவனை
கூடியே இன்பமாய் ஏக மனதுடனே மகிபனை

**சரணங்கள்**

1. பாவத்தை போக்கிய தேவா ஸ்தோத்திரம்
பாதையும் சத்தியமும் ஜீவனே! – ஸ்தோத்திரம்
ஞான குருவே! – ஸ்தோத்திரம்
மெய்யான புகலிடமே ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

2. நோய் பிணி யாவையும் சுமந்தாய் ஸ்தோத்திரம்
நேத்திரம் போல் என்னைக் காத்தாய்! ஸ்தோத்திரம்
பேரின்பமே! ஸ்தோத்திரம்
பாய்ந்தோடும் ஔஷதமே ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

3. அல்லல்கள் யாவும் தீர்த்தாய்! ஸ்தோத்திரம்
பொல்லாத பேயையும் வென்றாய்! ஸ்தோத்திரம்
வல்லவனே! ஸ்தோத்திரம்
தொல் உலகில் எல்லாமுமே ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

4. சோதனை வேளையில் ஜெயமே! ஸ்தோத்திரம்
சோர்ந்திடும் வேளையில் திடமே! ஸ்தோத்திரம்
சொல் தவறாய்! ஸ்தோத்திரம்
சந்ததமே சாற்றிடுவோம் ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

5. பரிசுத்த ஜீவிதம் அளித்தாய் ஸ்தோத்திரம்
பரலோக பாக்கியம் ஈந்தாய்! ஸ்தோத்திரம்
சேர்த்திடுவீர்! ஸ்தோத்திரம்
விண் வீட்டில் மகிழ்ந்திடவே ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

6. ஆதியும் அந்தமும் நீரே ஸ்தோத்திரம்
அதிசய நடத்துதற்காகவும் ஸதோத்திரம்
அல்லேலூயா ஸ்தோத்திரம்
என்றென்றும் ஆரணனே! ஸ்தோத்திரம் – ஸ்தோத்திரம்

## 209

1. ஆ! எந்தன் பாக்கியத்தை எண்ணிடவே
எனக்கானந்தமே பரமானந்தமே
மேதினி கஷ்டங்கள் மறந்து வேகம் எந்தன்
பாக்கிய தேசமதில் சேர்ந்திடுவேன் – அதில்
மகிமையைக்காண உள்ளம் துடித்திடுதே – அங்கு
மகிபனை என்றும் வாழ்த்தி துதித்திடுவேன் – ஆ!

2. பூலோக மேன்மைகள் ஒன்றும் வேண்டாம் – இப்
பூவின் சம்பாத்தியங்கள் ஒன்றும் வேண்டாம்
லோகம் எனக்கும்நான் லோகத்திற்கும் – முற்றும்
யாகமாய் அர்ப்பணம் செய்கிறேன் நான் – நாச
லோகமே நேசம் – வெறும் கிலேசமல்லோ
சொர்க்கலோக வாசம் உள்ளம் வாஞ்சித்திடுதே – ஆ!

3. இமைப்பொழுதே வரும் கஷ்டமெல்லாம் – என
எண்ணிடா மகிமையின் பதவிதானே
சடுதியில் வரும் நேசர் அரை நொடியில் நான்
அடைந்திடும் மணவறை மகிழ்வாசமே – எந்தன்
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்
அவரடி தொழு புகழ்பாடி ஆர்ப்பரிப்பேன் – ஆ!

4. கோடா கோடி தூதர் போற்றிடவே கவி
பாடும் மனோகரக் கீதங்களும்
வீணைகள் கைகளில் ஏந்தி நின்று – என்றும்
மகிமையின் சங்கீதம் பாடிடுவார் – அன்று
விண்ணில் நின்று அண்ணலையே போற்றிடுவேன் – அங்கு
விண்ணவர் சாயலாய் வாழ்த்திப் பாடிடுவேன் – ஆ!

5. சிலுவை சுமந்து நான் ஏகிடுவேன் – அவர்
சிலுவையை எங்கும் கூறி உயர்த்திடுவேன்
சிலுவையின் பாடுகள் பெருகிடவே – நான்
சிலுவையின் ஜெயக்கீதம் பாடிடுவேன் – அப்போ
சிலுவையின் மேன்மையால் களித்திடுவேன் – நான்
சிலுவையால் வரும் முடி அணிந்திடுவேன் – ஆ!

## 210

இயேசுவின் நேசத்தால் என் உள்ளம் பொங்குதே
அவ்வன்பின் மாட்சிமை அறிவுக் கெட்டுமோ

**அனுபல்லவி**

ஆ! என்ன ஆழமே இயேசுவின் நேசமே
அதன் தியானமே ஜீவிய பாக்கியமே

**சரணங்கள்**

1. லோகமுண்டாகு முன் என்னையும் கண்டாரே
லோகத்தில் வந்து தன் ஜீவனைத் தந்தாரே
உன்னத அழைப்பால் தன்னோடு தங்கிட
என்னைத் தகுதியாய் எண்ணிய நேசமே - இயேசுவின்

2. சீயோனில் எனக்காய் மூலைக்கல்லாகியே
சீயோனில் என்னையும் சேர்த்தொன்றாய் கட்டியே
மோலோக நாதரின் வேலையை முடித்த
மேலான சிற்பியாம் இயேசுவின் நேசமே - இயேசுவின்

3. உன்னத அன்பென்னும் ஒப்பாற்ற ஈவினால்
தன்னைப்போல் என்னையும் தெய்வீகமாக்குவார்
சத்துருவா மெனைத் தம் சொந்தமாக்கிய
உத்தமர் இயேசுவின் உன்னத நேசமே - இயேசுவின்

4. மணவாளன் இயேசுவின் மங்கள நாளதில்
மணவாட்டி கூட்டத்தில் மாபாவி சேர்ந்திட
கொடிய பாடுகள் குரூர யூதரால்
காரணமின்றியே சகித்த நேசமே - இயேசுவின்

5. ஜீவ கிரீடமும் ஜோதியாம் அங்கியும்
நீதியின் செங்கோலும் தரித்து வாழ்ந்திட
முள்முடி அணிந்து நிந்தையும் சகித்த
மன்னாதி மன்னனின் மாறாத நேசமே - இயேசுவின்

6. மீட்பின் சங்கீதங்கள் சீயோனில் பாடுவேன்
மேலோக தூதரும் அப்பாடல் பாடிடார்
கல்வாரிக் குன்றின்மேல் கை காலறையுண்ட
கர்த்தாதி கர்த்தரின் காதல் என் கீதமே - இயேசுவின்

## 211

கிருபை வேண்டும் நாதா இயேசுவே உம் திவ்விய
கிருபை வேண்டும் நாதா இவ்வாராதனையில்

**சரணங்கள்**

1. உம் கிருபைதான் வேண்டும் சொர்க்கீய இராஜாவே
   உம் கிருபையல்லாது எங்களால் ஆகாது – கிருபை
2. ஏழு பிசாசுகள் ஓட்டியே மரியாளை
   அன்பாய் நேசித்து அன்பால் நிரப்பிய – கிருபை
3. இருவராம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
   இருதயம் குளிர்ந்திட இனிமையாய்ப் பேசின – கிருபை
4. பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
   பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய் கூறின – கிருபை
5. பெந்தேகொஸ்தின் நாளில் அன்பராம் சீஷர்மேல்
   உந்தன் ஆவியை மாரிபோல் பொழிந்தே – கிருபை
6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
   நேசமாம் கிருபையை என்மேலும் ஊற்றிடும் – கிருபை
7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
   தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட – கிருபை
8. அடியாராம் ஏழைகள் உம்மைச்சந் தித்திட
   முடிவு வரைக்குமே காத்திடும் கிருபையால் – கிருபை

## 212

வானங்களும் வானாதி வானங்களுமே
கொள்ளா அற்புதா

### சரணங்கள்

1. கிருபையும் நிபந்தனையும் அருமையாய் காத்த தேவரீர்
பார்த்து வந்தீர் பராமரித்தீர் சேர்த்து இம்மட்டும் நடத்துகிறீர்
- வானங்களும்

2. எல்லா ஜாதி ஜனங்களும் வல்ல ரட்சிப்டையச் செய்யும்
கல்வாரியின் ரத்தத்தினால் பொல்லாததை சுத்தி செய்யும்
- வானங்களும்

3. நீதி நியாயமுள்ள தேவா ஜோதியில் வாசம் செய்பவா
வாதிகளை சிநேகிப்பவா போதியதைப் பொழிகிறவா
- வானங்களும்

4. நீரே ராஜாதி ராஜாவே கர்த்தாதி கர்த்தரானவரே
எங்களை ராஜாவாக்கினீரே ஆசாரியர்களாக்கினீரே
- வானங்களும்

5. பஞ்சம் பட்டினி கொள்ளை நோயில் கெஞ்சுவோரின் தஞ்சமானவா
அஞ்சுகிறோம் நெஞ்சில் தேவா எஞ்சுகிறோம் மிஞ்சும் மூவா
- வானங்களும்

6. கைகளினால் கட்டப்பட்டதில் காணப்படா வல்ல தேவா
மெய்யாயெம்மில் இருக்கிறவா செய்கைகளினால் தெரிகிறவா
- வானங்களும்

7. நித்திய வாசியானவா சத்தியமாம் பெயர் கொண்டவா
இத்தரையில் எம்மோடுள்ளவா அத்தனே உமக்கல்லேலூயா
- வானங்களும்

## 213

கர்த்தாவே என் பெலனே
உம்மில் அன்பு கூருவேனே
உத்தமமானதும் வழிதானே

**சரணங்கள்**

1. என் கன்மலையும் என் கோட்டையும்
என் இரட்சகரும் என் தேவனும்
உன் கேடகமும் இரட்சண்யக் கொம்பும்
என் உயர்ந்த அடைக்கலம் ஆனவரே – கர்த்தாவே

2. மரணக் கட்டுகள் சூழ்ந்து கொண்டது
துர்ச்சனப் பிரவாகம் பயப்படுத்தினது
பாதாளக் கட்டுகள் சூழ்ந்து கொண்டது
மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தது – கர்த்தாவே

3. வானங்களைத் தாழ்த்தி இறக்கினார்
பாதங்களின் கீழ் இருள் இருந்தது
கேரூபின் மேலேறி வேகமாய் சென்றார்
காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார் – கர்த்தாவே

4. இருளைத் தமக்கு மறைவிடமாக்கி
மேகங்களைக் கூடாரம் ஆக்கினார்
வானங்களில் கர்த்தர் குமுறினார்
தமது சத்தத்தைத் தொனிக்கப் பண்ணினார் – கர்த்தாவே

5. தயவுள்ளவனுக்கு தயவுள்ளவரே
உத்தமனுக்கு நீர் உத்தமரே
புனிதனுக்கு நீர் புனிதரானவரே
மாறுகிறவனுக்கு மாறுகிறவரே – கர்த்தாவே

6. சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர்
மேட்டிமையான கண்களைத் தாழ்த்துவீர்
தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்
இருளை நீர் வெளிச்சம் ஆக்குவீர் – கர்த்தாவே

7. உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன்
தம்மாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்து பிடிப்பேன்
நிர்மூல மாக்கும் வரைக்கும் திரும்பேன் – கர்த்தாவே

# 214

தேவனே நான் உமதண்டையில்-இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்
மாவலிய கோரமாக வன்சிலுவை மீதினில் நான்
கோவே தொங்க நேரிடினும் ஆவலாய் உமதண்டை சேர்வேன்
- தேவனே

**சரணங்கள்**

1. யாக்கோப்பைப்போல் போகும் பாதையில்-பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட
துக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என்கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன் வாக்கடங்கா நல்ல நாதா
- தேவனே

2. பரத்துக்கேறும் படிகள் போலவே-என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே
கிருபையாய் நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னை அழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்
- தேவனே

3. நித்திரையினின்று விழித்து-காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய் என்றன் கல்லை நாட்டுவேனே
எந்தன் துன்பத்தின்வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்
- தேவனே

4. ஆனந்தமாம் செட்டை விரித்து - பரவசமாய்
ஆகாயத்தின் ஏறிப் போயினும்
வானமண்டலங்கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறுகாலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிசேர்வேன்
- தேவனே

## 215

ஆனந்த துதிஒலி கேட்கும் ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்
ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்
ஆண்டவர் வாக்குப் பலிக்கும்

**சரணங்கள்**

1. மகிமைப்படுத்து வேனென்றாரே மகிபனின் பாசம் பெரிதே
மங்காத புகழுடன் வாழ்வோம், மாட்சிமை பெற்றுயர்ந்திடுவோமே
குறுகிடமாட்டோம் குன்றிட மாட்டோம்
கறையில்லா தேவனின் வாக்கு - ஆ... -ஆ ஆனந்த

2. விடுதலை முழுங்கிடுவோமே, விக்கினம் யாவும் அகலும்
இடுக்கண்கள் சூழ்ந்திடும்வேளை, இரட்சகர் மீட்பருள்வாரே
நுகங்கள் முறிந்திடும் கட்டுகள் அறுந்திடும்
விடுதலைப் பெருவிழா காண்போம் - ஆ... -ஆ ஆனந்த

3. யாக்கோபு நடுங்கிடுவானோ, யாக்கோபின் தேவன்துணையை
எருசலேம் வாழ்வை அடைந்தோம், இயேசுவின் மார்பில் சுகிப்போம்
பதறாத வாழ்வும் சிதறாத மனமும்
பரிசாக தேவனருள்வார் - ஆ... -ஆ ஆனந்த

4. வல்லமை வேண்டிடுவோமே, விண்ணவர் சாயல் அடைவோம்
ஸ்தோத்திரம் செலுத்திடுவோமே, திருச்சபை வாழ்வில் சுகிப்போம்
மணவாட்டியாகத் தெரிந்தெடுத்தாரே
அல்லேலூயா முழங்கிடுவோம் - ஆ... -ஆ ஆனந்த

# 216

ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே என்தன்
ஆவியும் அவரில் களிக்கின்றதே – இதோ

**அனுபல்லவி**

நேர்த்தியாய்ப் பாடுவேன் நிதங்கனிந்தே எந்தன்
பார்த்திபனுட பதந்தினம் பணிந்தே – இதோ– ஆத்துமா

**சரணங்கள்**

1. அடிமையின் தாழ்மையைப் பார்த்தாரே என்னை
அனைவரும் பாக்கிய மென்பரே
முடிவில்லா மகிமை செய்தாரே – பல
முடையவர் பரிசுத்தர் என்பாரே – இதோ! – ஆத்துமா

2. பயப்படும் பக்தருக்கிரங்குகிறார் – நரர்
பார்த்திட பெருஞ்செயல் புரிகின்றார்
உயர்த்திடும் நரர்களைச் சிதறடிப்பார் – தன்னை
உகந்தவர் தாழ்ந்திடில் உயர்த்துகின்றார் – இதோ! – ஆத்துமா

3. முற்பிதாக்களுக்கவர் சொன்னதுபோல் – அந்த
முனியாபிராமுட ஜனமதன்பால்
நட்புடன் நினைவொடு நல்லிஸ்ரேல் – அவன்
நலம் பெற ஆதரித் தார்மறவேன் – இதோ! – ஆத்துமா

## 217

யாவும் செய்து முடிப்பார் எனக்காக (2)
யுத்தம் செய்து ஜெயிப்பார் என் இயேசு (2)

**சரணங்கள்**

1. உலக தோற்ற முன்னே எனக்காக
தம்மையே தானமாகத் தந்தார்
உலக சிருஷ்டிப்பில் எனக்காக
யாவையும் செய்து முடித்தார் - யாவும்

2. கல்வாரி சிலுவையில் எனக்காக
ரத்தத்தை தியாகமாக ஈந்தார்
சிலுவை மரத்தில் எனக்காக
பாவமதை ஜெயித்தார் என் இயேசு - யாவும்

3. நித்திய ராஜ்ஜியத்தில் எனக்காக
யாவையும் செய்து முடித்தார்
வானவரோடென்றும் வாழ்ந்திடவே
கிருபையின் வாசலைத் திறந்தார் - யாவும்

4. மணவாளனாகிய என் இயேசு
வருகையில் எடுத்துக் கொள்வார்
அவரோடு என்றென்றும் வாழ்ந்திடவே
ஆயத்தமாக்கிக் கொள்வார் - யாவும்

குணப்படு பாவி – தேவ
கோபம் வரும் மேவி – இப்போ
கணப்பொழுதில் காயம் மறைந்துபோம்
காலமிருக்கையில் சீலமதாக நீ – குணப்படு

**சரணங்கள்**

1. கர்த்தனை நீ மறந்தாய்
அவர் கற்பனையைத் துறந்தாய்
புத்தியின்மை தெரிந்தாய்
பொல்லா பாவ வழி திரிந்தாய்
புத்தி கெட்ட ஆட்டுக்குட்டியே ஓடிவா
உத்த மேய்ப்பனார் கத்தியழைக்கிறார் – குணப்படு

2. துக்க மடையாயோ? – பாவி
துயரமாகாயோ?
மிக்க புலம்பாயோ?
மனம் மெலிந்துருகாயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்க தொடராயோ? – குணப்படு

3. தாவீ தரசனைப்போல்
தன்னைத் தாழ்த்தும் மனாசேயைப்போல்
பாவி மனுஷியைப்போல்
மனம் பதைத்த பேதுரு போல்
தேவனுக்கேறாத தீமை செய்தேனென்று
கூவிப்புலம்பு நல் ஆவியின் சொற்படி – குணப்படு

4. உன்னை நீ நம்பாதே!
இவ்வுலகையும் நம்பாதே
பொன்னை நீ நம்பாதே
எப்பொருளையும் நம்பாதே
தன்னைப் பலியிட்டு தரணி மீட்டவர்
நின்னையும் இரட்சிப்பார், அன்னவரைபற்று – குணப்படு

## 219

தேவனைத் துதியுங்கள் – அல்லேலூயா, தேவனைத் துதியுங்கள் – (2)

**சரணங்கள்**

1. வல்லமையுள்ள கிரியைகட்காக அல்லேலூயா !
மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காக – அல்லேலூயா
எக்காள தொனியோடே – அல்லேலூயா!
தேவனைத் துதியுங்கள் – தேவனை

2. வீணை சுரமண்டலத்தோடும் அல்லேலூயா!
தம்புரு நடனத்தோடும் – அல்லேலூயா!
யாழோடும் தீங்குழலோடும் – அல்லேலூயா!
தேவனைத் துதியுங்கள் – தேவனை

3. ஓசையுள்ள கை தாளத்தோடும் – அல்லேலூயா!
பேரோசையுள்ள தாளங்களோடும் – அல்லேலூயா!
சுவாசமுள்ள யாவும் – அல்லேலூயா!
கர்த்தரை துதிப்பதாக – தேவனை

# 220

1. நான் உம்மைப் பற்றி இரட்சகா ! வீண் வெட்கம் அடையேன்
   பேரன்பைக்குறித் தாண்டவா ! நான் சாட்சி கூறுவேன்

   சிலுவை யண்டையில் நம்பி வந்து நிற்கையில்
   பாவ பாரம் நீங்கி வாழ் வடைந்தேன்
   எந்த நேரமும் எனதுள் எத்திலும்
   பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ, உந்தன் நல்ல நாமத்தை, நான் நம்பி சார்வதால்
   நீர் கைவிடீர்! இவ்வேளையை காப்பீர் தேவாவியால் – சிலு

3. மா வல்ல வாக்கின் உண்மையை கண்டுணரச் செய்தீர்
   நான் ஒப்புவித்த பொருளை விடாமல் காக்கிறீர் – சிலு

4. நீர் மாட்சியோடு வருவீர், அப்போது களிப்பேன்
   ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர், மெய்ப்பாக்யம் அடைவேன் – சிறு

## 221

என் மனமே நீ இயேசுவை நேசி
அவரை ஆசி ஆனந்த மடைவாய்
எந்த நேரமும் நீயே சிந்தை சிதறாமலே
அந்தரங்கமாக நினைப்பாயே – என் மனமே

**சரணங்கள்**

1. உலக சிநேகம் ஒரு நிமிஷமே
பாவ சிநேகம் பறந்து போகுமே
தேவனை சிநேகித்தால் தியங்க வேண்டாம் நீயே
ஆவலாக அவரை நினைப்பாயே – என் மனமே

2. பாவத்தை நீயும் பற்றுற ஒழித்தே
சாபத்தை நீயும் தகர்த்தெறிவாயே
ஆபத்தான அப்பாதை தேவ கோபம் வருமே
சாபத்தை நீக்க வந்த இயேசுவை நேசி – என் மனமே

3. சிம்சோனைப் போல் சிநேகம் கொள்ளாதே
அம்ச மெல்லாம் அழிந்து போகுமே
நசரேயனான சிம்சோன் நாசமானானே அன்று
பெலிஸ்தரினால் கொல்ல ஏதுவானானே – என் மனமே

4. மனக் கடினத்தினால் மாகேடு வருமே
மனப்பாரத்தினால் மா தொல்லை நேருமே
மனப்பாரம் எல்லாம் நீங்க மா சந்தோஷமே பொங்க
மாசில்லாத இயேசுவை நேசி நீயே – என் மனமே

# 222

சீயோனின் பாதையில் சேர்ந்திடும் வீரரே
சொல்லுவீரே அதி வேகமாய்

**சரணங்கள்**

1. காரிருள் பூமியை மூடிடுதே
கர்த்தரின் வருகை சமீபமாகுதே
காத்து நிற்கும் தேவ சேயராம் உம்மிலே
கர்த்தரே தம் ஒளி வீசுவார் - சீயோனின்

2. கொந்தளித்தே ஜனம் மாறிடுதே
சந்ததமாய் நிந்தைகள் ஏறிடுதே
சொந்தமாய் மீட்டவர் அன்பினால் தந்த மா
சந்தோஷமாம் நதி மூழ்கியே - சீயோனின்

3. காசியினிலே உன்னை தாய் மறப்பாளோ
ஆயினும் எந்நாளும் நான் மறந்திடேன்
கைத்தலம் தன்னிலும் கண்மணி போலுமே
காத்திடுவேன் என்றும் வாக்கதே - சீயோனின்

4. ஜோதியாய் உன் நீதி சூரியன் போலும்
ஜொலிக்குமே இரட்சிப்பு தீவட்டி போலும்
கீதமும் நாதமும் கேட்டிட உன்னிலே
ஆதிபரன் இயேசு ஆக்குவார் - சீயோனின்

5. சீயோன் கோபுரம் ஒளி வீசிடும் நகர்
நேயரே! அதோ நீர் நோக்கிடுவீரே
தூதர்கள் கோடியாய் துதித்திடும் தொனியை
கேட்டு நீர் செல்லுவீர் ஆவலாய்! - சீயோனின்

## 223

நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
இராப்பகலை ஒழுங்காய் கடக்கிறேன்
என்றும் நடக்கிறேன் பின் திரும்பேனே
இயேசு இரட்சகர் பின்னே

**பல்லவி**

நடக்கிறேனே இரட்சகருடனே
கடக்கிறேனே கரம் பிடித்தே
விழிப்பாயிருந்து ஜெயம் காண்பேனே
ஒளியில் நடக்கிறேன்

**சரணங்கள்**

1. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
மன காரிருள் மூடினும் பயப்படேன்
மீட்பின் கீதம் பாடி செல்வேனே
என் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

2. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் ஆசீர்வாதங்கள் அடைகிறேன்
வீண் பாரங்களை விடுகிறேன்
என் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

3. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
மேய்ப்பன் அவர் சத்தம் அறிகிறேன்
நோய்வாய்ப் பட்டாலும் நடப்பேனே
தூயன் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

4. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
முன்னோடின அவரை நோக்குகிறேன்
வன் சிலுவை எடுத்துச் செல்வேனே
என் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

## 224

இயேசு என்னும் இனிய நாமம்
இந்த காசினியோர் அறிய நாமும்
சுவிசேஷமதை பாரினிலே காட்டுவோம்
விசுவாசமதை நாட்டில் நிலை நாட்டுவோம்

**சரணங்கள்**

1. பாவத்தைப் போக்க சாபத்தை நீக்க
பக்தனாய் வந்தார் பரிசுத்தனாய் வந்தார் – இயேசு

2. நிந்தை சுமந்து கந்தை அணிந்து
விந்தையாகவே அவர் சொந்தமாய் வந்தார் – இயேசு

3. ஆகாய மேன்மை அத்தனையும் வெறுத்து
அவர் அறிய அவர் ஆகுடில் வந்தார் – இயேசு

4. மகிமை கெடாத மாது மரியின்
பாலகனாய் வந்தார் அனுகூலனாய் வந்தார் – இயேசு

5. வேதாள பேயை பாதாளம் வரையில்
ஒழிக்க வந்தார் அதை அழிக்க வந்தார் – இயேசு

6. பரிசுத்த வான்கள் பருகிக் களிக்க
இகத்தில் வந்தார் அவர் அகத்தில் வந்தார் – இயேசு

7. வாதைநோய் துன்பம் யாவையும் நீக்க
கர்த்தனாய் வந்தார் தம்மை தத்தமாய்த் தந்தார் – இயேசு

## 225

விசுவாசிகளே விசுவாசிகளே
உயர்த்திடுவீர் ஜெயத்தின் கொடிகள்
எக்காள சத்தம் கேட்கும் காலம் சமீபம்
நம் நேசர் வாறாரே நாம் நன்றாய் வாழ்வோமே

**சரணங்கள்**

1. வரிசையிலே நேராய் நிற்போம்
போர் வீரர் நாமே நல்வீரர் நாமே
சர்வாயுத வர்க்கம் தரித்தவர்களாய்
நல்வீரராய் நிற்போம் ஆத்மீக வீரராய் - விசுவாசிகளே

2. அரைக் கச்சையாம் சத்தியம் கட்டுவீர்
மார்க்கவசமாம் நீதியைத் தரிப்பீர்
சீராவாம் இரட்சிப்பைத் தலையில் தரிப்பீர்
ஆத்மாவில் தரிப்பீர் எப்போதும் தரிப்பீர் - விசுவாசிகளே

3. சமாதானமாம் சமாதானமாம்
சுவிசேஷம் தரிப்பீர் கால்தனில் தரிப்பீர்
எல்லாவற்றிற்கும் மேலாய் தீ அம்பை அவிப்பீர்
தீ அம்மை அவிப்பீர் - விசுவாசிகளே

4. போராட்டமுள்ளது போராட்டமுள்ளது
இப்பூ வோரோடல்ல ஜலத்தோடுமல்ல
ஆகாயத்தின் அந்தகார லோகாதிபதி
அசுத்த ஆவிகள் சேனைகளுடனே - விசுவாசிகளே

5. இளைப்பு நீங்கிப்போம் களைப்பு நீங்கிப்போம்
கர்த்தர்தாம் வருவார் ஆனந்தம் கொள்ளுவோம்
ஆனந்தம் நித்தியானந்தம் நித்தம் கொள்ளுவோம்
ஜெயமே என்றென்றும் ஜெயமே என்றென்றும் - விசுவாசிகளே

## 226

என் மீட்பர் இயேசு நாயகா
உம் அனாதி அன்பின் கிரியையே
மா நீசப்பாவி என்னையுமே
கல்வாரியண்டை ஏவுதே

**பல்லவி**

ஆ! ஒப்பற்ற கல்வாரியே
உம் அன்பை யார் கூறுவார்
மெய் பக்தியற்ற பாவியை
கல்வாரிக் காட்சியால் இன்றே
உம் பாதம் அண்டப்பண்ணுமே

**சரணங்கள்**

1. என் பாவத்தில் அழிந்தேனே
மெய் இன்பத்தை வெறுத்தேனே
பொல்லா உலகை நேசித்தேனே
நல்லோனே கிருபை கூறுமே – ஆ!

2. வஞ்சக லோக மாய்கையில்
நெஞ்சை அமிழ்த்தி மாண்டியிடும்
பஞ்சமா பாதகனாம் என்னை
தஞ்சம் நீர் தந்தாட் கொள்ளுமே – ஆ!

3. என்னண்டை சேரும் பாவியை
தள்ளேன் என்றுரைத்தவரே
உம் ஆசி பெற்றோனாய் விளங்க
தந்தேன் என்னை முற்றிலுமாய் – ஆ!

## 227

மாசில்லாத் தேவாட்டுக்குட்டியின்
திரு ரத்தத்தால் நானும் மீட்கப்பட்டேன்
மீட்கப்பட்டேன் நான் மீட்கப்பட்டேன்
மீட்பரின் ரத்தத்தால் மீட்கப்பட்டேன் என்றும்

**சரணங்கள்**

1. பாவப் பிணியால் கட்டுண்ட என்னை
பட்சமாக தேவன் மீட்க வந்தார்
மீட்க வந்தார் என்னை காக்க வந்தார்
அவர் பார்க்க வந்தார் – என்னை
சேர்க்க வந்தார் – என்றும் – மாசில்லாத

2. காட்டொலிவ மரமாம் என்னை
கருணையாக சீர்த்திருத்தம் செய்தார்
சுய ஒலிவ மரக்கிளையை வெட்டி அதில்
சுதந்திரமாகவே ஒட்ட வைத்தார் என்றும் – மாசில்லாத

3. முன்னே தேவன் அற்றவனாம் என்னை
முழுவதுமே பயம் நீங்கச் செய்தார்
பாவியும் நிர்பாக்கியனாம் என்னை
பரிசுத்தம் செய்யவே தரிசிக்க வந்தாரே – மாசில்லாத

4. கர்த்தராலே மீட்கப்பட்டோர் எல்லாம்
களிப்புடன் ஆனந்தம் பாடிடுவார்
நித்திய மகிழ்ச்சி நிலைத்திருக்கும் – அதின்
நிந்தையும் தவிப்பும் நீங்கிப்போம் – என்றும் – மாசில்லாத

## 228

வருவீர் மன மகிழ - அரசே
வருவீர் மன மகிழ
வருவீர் விரைவாய் ஆசிகள் தருவீர்

**சரணங்கள்**

1. அருள் மாரி அளித்திடவே ஆ! ஆ! ஆ!
காரிருள் அகற்றிடவே
பாரில் பாவிகள் பரனடி பணிய - வருவீர்

2. இயேசுவின் நாமமதை ஆ! ஆ! ஆ!
நேசர்கள் உயர்த்திடவே
பேசுமடியார் பெலனடைந்திடவே - வருவீர்

3. உன்னத பெலனீய ஆ! ஆ! ஆ!
உண்மையுடன் நடக்க
கன்மலையும்மை பின்தொடர - வருவீர்

4. ஆதிசபை யானதுபோல் ஆ! ஆ! ஆ!
ஆவியின் வரங்களினால்
அலங்கரித்தெம்மை ஆட்கொண்டருள - வருவீர்

5. தூயனுமைத் துதிக்க ஆ! ஆ! ஆ!
தூய்மை அகம் தரிக்க
காயம் முழுவதும் உமக்கே படைக்க - வருவீர்

6. ஆயத்தமாகிடவே ஆ! ஆ! ஆ!
நாயகன் வருகையில்
மாயமான யாவையுமகற்ற - வருவீர்

## 229

பரலோகநாடெந்தன் இன்ப நாடாமெனக்கு
என்று நான் காண்டு களிப்பேனோ
ஆ! மகிமையே ஆ! பேரின்பமே
என்று நான் கண்டானந்திப்பேனோ

**சரணங்கள்**

1. சேவை செய்திடுவார் தூதர்கள் நானங்கு
சேவிப்பேன் நித்திய நேசரை
ஆ! என் இன்பமே ஆனந்த பாக்கியமே
நாவினால் இயம்பவும் ஏலாதே – பரலோக

2. சொர்க்கத்தில் ஆ! எந்தன் நம்பிக்கை
சொர்ணமயமான வேலைகள்
சோபனக் கீதமே சுந்தர நாடதே
கர்த்தர் ஒருமித்து வாழ்வாரே – பரலோக

3. தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள் ஜீவிப்பார்
மாதா பிதா மற்றும் சகோதரர்
உத்தம ஜீவிகள் சொர்க்கத்தின் வாசிகள்
கஷ்டம் சகித்திட சுத்தர்கள் – பரலோக

4. ஏசுவே என் சம்பத்தல்லவோ நிச்சயம்
என்று மழியா சுதந்திரம்
ஈலோக இன்பத்தை குப்பையென்றெண்ணினேன்
ஏசுவே எந்தன் இன்பமே – பரலோக

5. வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை லோகத்தில்
சொல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை மாயையே லோகத்தின் இன்பமே
வாடா முடி சூட ஏகுவேன் – பரலோக

## 230

தேவன் நம் அடைக்கலமும் பெலனும்
ஆபத்து காலத்திலே - அனுகூலம் துணையே

**சரணங்கள்**

1. பர்வதம் அதிர்ந்தாலும் - இந்த
பூமிநிலை மாறினாலும்
ஜலங்கள் பொங்கி, மலைகள் அதிர்ந்தும்
பயப்படோம் நாமே - தேவன் நம்

2. ஓடும் ஓர் நதியுண்டே - அதின்
நடுவில் நம் தேவன் உண்டே
பொங்கும் சந்தோஷம் எங்கும் நிரப்பும்
தேவன் அதின் சகாயம் - தேவன் நம்

3. ஜாதிகள் இராஜ்ஜியங்கள் மிக
வேகம் கொந்தளிக்கின்றதே
சேனையின் கர்த்தர் நம்மோடிருக்க
தேவன் நம் அடைக்கலமே - தேவன் நம்

4. பூமியின் பாழ்கடிப்பை பாரும்
கர்த்தர் நடப்பிக்கின்றாரே
யுத்தம் நிறுத்தி வில்லை ஒடித்தார்
கர்த்தரின் செயலிதுவே - தேவன் நம்

5. அமர்ந்திருந்து நானே
தேவனென்று அறிவீர் என்றாரே
ஜாதிகட்குள்ளே பூமியின் மேலே
கர்த்தரே உயர்ந்திருப்பார் - தேவன் நம்

## 231

அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்
எங்கள் இயேசு ராஜன் வானில்
தோன்றும் நாள் - அல்லேலூயா (3)

**சரணங்கள்**

1. இந்தப் பூமி வெந்துருகி சாம்பலாகுமே
சிந்தித்து மனந்திரும்பி அவரை அண்டிக்கொள்
விரைவுடன் ஓடிவா விண்ணிலே சேரவா
வேகமாய் வேகமாய் வேகமாய் - அந்த நாள்

2. கஷ்டம் நஷ்டம் பட்டப்பாடு பறந்து போகுமே
பஞ்சம் பசி தாகமுமே மறைந்து போகுமே
வாதை நோய் துன்பமும் வருத்தங்கள் யாவுமே
நீங்குமே நீங்குமே நீங்குமே - அந்த நாள்

## 232

பரிசுத்த வான்களின் தேவனே, பாரில் தமது வருகை வரையும்
துய பெலனால் தாங்குமே (2)

**சரணங்கள்**

1. தீமைஉலகில் வேகம்பெருகி தேவஜனமும் மாளுதே
மாயும்உலகை மீட்கும்கிருபை மேலும்தேவை தாருமே
– பரிசுத்த

2. கருணையுள்ளம் இதயத்தாலே கிருபையாகப் பாருமே
கடினஇதயம் உடைந்துஉருக புதியகிருபை தாருமே
– பரிசுத்த

3. வாடிவதங்கும் தேவஜனத்தைத் தேற்றும்கிருபை தாருமே
தேவநதியாய்ப் பாய்ந்துசபையைத் தாங்கும்கிருபை தாருமே
– பரிசுத்த

4. தீயஉலகை ஜெயிக்ககிருபை தினமும்வாழ்வில் தாருமே
தூயவாழ்வில் செழித்துஓங்க ஜீவநதியாய் பாயுமே
– பரிசுத்த

5. தேவமகிமை துதியில்பெருக நாவில்இனிமை தாருமே
மாயஉலகை மறந்துதுதிக்க மாறாக்கிருபை தாருமே
– பரிசுத்த

## 233

இஸ்ரவேலே நீ பாக்கியவான் இஸ்ரவேலே நீ பாக்கியவான் (2)
பூத்துக் காய்த்து பலனால் உலகை நிரப்பும் காலம் வந்ததே(4)

**சரணங்கள்**

1. பரவிப்பாயும் ஆற்றைப்போல பரவிவருவாய் உலகிலே
பாலைவனங்கள் களித்துப்பாடும் பசுமைக்காலம் வந்ததே

2. நதியின்ஓரத் தோட்டத்தைப்போல நற்கனிமரங்கள் செழிக்குமே
சிங்காரவனமாய் எங்குமேமகிழ்ந்து மங்காதமகிமை ஜொலிக்குமே

3. யாக்கோபின்தூளை எண்ணுவதாரோ யாக்கோபின் தேவன் பெரியவர்
அக்கிரமம்அவனில் கர்த்தர் காண்பதில்லை அவரே அவனின் அடைக்கலம்

4. ராஜகெம்பீரம் உனக்குள்இருக்கும் ராஜாஉன்னோடு இருக்கிறார்
காண்டாமிருகம் போன்ற பாலத்தை கர்த்தரே உனக்கும் கொடுக்கிறார்

5. சிங்கம்போல் படுத்து சிங்கம்போல் எழுந்து சிங்கம்போல் நிமிர்ந்து நடக்கிறாய்
ரட்சிக்கப்பட்ட ஜனமே உனக்கு ஒப்பானவன் யார் உலகிலே

## 234

அன்புள்ள இயேசைய்யா, உம் பிள்ளை நான் ஐயா
ஆனந்த ஒளி பிறக்கும் வாழ்வெல்லாம் வழி திறக்கும்

**சரணங்கள்**

1. காடுமேடு ஓடிய ஆடு என்று என்னை வெறுத்திடவில்லை
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
நாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் - அன்புள்ள

2. பகலில்மேகம் இரவில்ஜோதி பசிக்குமன்னா ருசிக்கஉம் அன்பு
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
நாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் - அன்புள்ள

3. தாகம்தீர ஜீவதண்ணீர் உள்ளங்கையில் என்னையும்கண்டீர்
நாடி என்னைத் தேடிய தயவல்லவோ
நாடுவேன் வாழ்வெல்லாம் இன்பம் - அன்புள்ள

## 235

இயேசுவின் நாமமே திரு நாமம் – முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்

**சரணங்கள்**

1. காசினியில் அதனுக் கிணையில்லையே – விசு
வாசித்தவர் களுக்குக் குறை யில்லையே – இயேசுவின்

2. இத்தரையில் மெத்த அதிசய நாமம் – அதை
நித்தமும் தொழுபவர்க்கு ஜெய நாமம் – இயேசுவின்

3. உத்தம மகிமைப் பிரதாப நாமம் – இது
சத்திய விதேய மன மொத்த நாமம் – இயேசுவின்

4. பட்சமுடன் இரட்சைசெயு முபகாரி – பெரும்
பாவப் பிணி தவிர்க்கும் பரிகாரி – இயேசுவின்

தந்தானைத் துதிப்போமே, திருச்சபையாரே கவி–பாடிப்பாடி
விந்தையாய் நமக்கனந்த னந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத்

**சரணங்கள்**

1. ஒய்யாரத்துச் சீயோனே-நீயும் மெய்யாகவே களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித்துதி செய்குவையே, மகிழ்
கொள்ளுவையே நாமும் - தந்தானைத்

2. கண்ணாரக் களித்தாயே -
நம்மைக் காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரிபோல் பெய்துமே - தந்தானைத்

3. சுற்றாங்கத்து நற்சபையே -
உனை முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தமின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்து உயிர் வரம் - தந்தானைத்

4. தூரத்திரிந்த சீயோனே -
உனைத் தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
ஆரங்கள் பூட்டியலங்கரித்து உனை
அத்தன் மணவாட்டியாக்கினது என்னை - தந்தானைத்

5. சிங்காரக் கன்னிமாரே-உம் அலங்காரக் கும்மியடித்துப் படித்து
மங்காத உன் மணவாளன் இயேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும் - தந்தானைத்

## 237

பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்தியம்

**பல்லவி**

இயேசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சம் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம் – அல்லேலூயா

**சரணங்கள்**

1. உலக இன்பம் நம்பாதே
அதன் இச்சையாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே நாளிலே
ஓர் காசும் கூட வராதே – அல்லேலூயா

2. உன் காலமெல்லாம் போகுதே போகுதே
உலகம் மாய்கையிலே
ஓ தேவ கோபம் வருமுன் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ – அல்லேலூயா

3. மா பாவியான என்னையும் என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய் – அல்லேலூயா

## 238

ஸ்துதி ஸ்தோத்திரம் தேவா!
தூய யேகோவா! அல்பா! ஒமேகா!

**சரணங்கள்**

1. கடந்த பல்லாண்டாய் கர்த்தர் நின் தயவால்
கருணை சொரிந்து அனுதினம் காத்தாய் – நின்
கழலடி தொழும் எம்மை கடைக் கண்ணால் பாராய்
கருணாகர தேவா! – ஸ்துதி

2. பக்தரைக்கூட்டி பாரினில் தேற்றி
பரம அமுத மன்னாதின மூட்டி – பாதம்
போற்ற நீர் செய்த பெருந்தயைக்காக
புகழென வரதமுதே – ஸ்துதி

3. ஜோதியின் ராஜா சுயப்பிரகாசா
சுருதி பொருளொப்பில்லா சருவேசா – நிதம்
துதிக்க நின்பாதம் துணைசெய் எப்போதும்
தூயா திரியேகா! – ஸ்துதி

## 239

மனிதன் யாரேன்று உலகில் யாருக்கும் தெரியாது
அவன் உருவம் கண்டு இவன்தான் என்று
சொல்லிவிடாதே அவனைத் தள்ளிவிடாதே

**சரணங்கள்**

1. மனிதனைப் படைத்த கடவுள் அவனை (2)
மண்ணென்று சொன்னாரே
அவன் மண்ணென்று கண்டும்
தேடியே வந்து ஜீவனைத் தந்தாரே
உறவும் அன்பும் உள்ளவன் மனிதன்
என்பதை மறவாதே அவன் பழக்கம் கண்டு
இவன்தான் என்று முடிவு செய்யாதே
அவனை இழந்துவிடாதே - மனிதன்

2. உலகினில் பிறந்த மனிதரனைவரும்
தனித்தனி மனிதர்களே
இந்த மனிதர்கள் கூட்டத்தில்
தேடியே செல்வோம் தேவனின் பிரியர்களே
பரந்த இத்தேசம் இயேசுவைக் கண்டால்
எத்தனை நன்மை பெறும்
விரைந்தே உழைப்போம் அழுதே ஜெயிப்போம்
தொழுவோம் அவர் பாதம் இந்த தேசத்திற்கே ஷேமம் - மனிதன்

## 240

பாதம் ஒன்றே வேணும் - இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

**சரணங்கள்**

1. நாதனே துங்கமெய் - வேதனே பொங்குநற்
காதலுடன் துய்ய-தூதர் தொழுஞ் செய்ய- பாதம்

2. சீறும் புயலினால் - வாரிதி பொங்கிட
பாரில் நடந்தாற்போல்-நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமல்கொண்ட-வாசனைத் தைலத்தை
ஆசையுடன் மரி-பூசிப் பணிந்தபொற் - பாதம்

4. போக்கிடமற்ற எம் - ஆக்கினை யாவும்
நீக்கிடவே மரந்-தூக்கி நடந்த நற்- பாதம்

5. பாதம் அடைந்தவர்க்-காதரவாய் பிர
சபதம் அருள் இயேசு-நாதனே என்றும் உன் - பாதம்

## 241

பயந்து கர்த்தரின் பக்தி வழியில்
பணிந்து நடப்போன் பாக்கியவான்
முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்கியம் மேன்மை காண்பான்

**சரணங்கள்**

1. உண்ணுதற்கினிய கனிகளைத்தரும்
தண்ணிழல் திரட்சைக் கொடிபோல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள் - பயந்து

2. ஒலிவ மரத்தைச் சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போலே
மெலிவிலா நல்ல பாலருன் பாலே
மிகவும் களித்து வாழ்வார் அன்பாலே - பயந்து

3. கர்த்தருன் வீட்டைக் கட்டாவிடில் அதைக்
கட்டுவோர் முயற்சி வீணாம் அறி இதை
கர்த்தரால் வரும் சுதந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை - பயந்து

## 242

மதுர கீதம் பாடிடுவோம்
மன்னன் இயேசுவின் நாமத்தை போற்றிடுவோம்
ஆனந்தமாக கீதங்கள் பாடி ஆண்டவர்
நாமத்தை உயர்த்திடுவோம் – மதுர

**சரணங்கள்**

1. வானங்கள் மேலாய் உயர்ந்தவரை
வாழ்த்திப் புகழ்ந்து துதித்திடுவோம்
இயேசுவே வாரும் வாஞ்சையைத் தீரும்
வார்த்தையைப் பேசும் வல்லமை தாரும் – மதுர

2. தூதர்கள் போற்றும் தேவன் நீரே
தீங்கொன்றும் செய்யா ராஜன் நீரே
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்று
தம்மிடம் வருவோரை தள்ளாத நேசர் – மதுர

3. மாந்தர்கள் போற்றும் ராஜன் நீரே
மரணத்தை ஜெயமாக வென்றவரே
மன்னிப்பை அளித்தீர் மாந்தரை மீட்டீர்
மறுரூப மாக்கி மகிமையில் சேர்ப்பீர் – மதுர

## 243

வேத புத்தகமே வேத புத்தகமே
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே

**சரணங்கள்**

1. பேதைகளின் ஞானமே - பெரிய திரவியமே
பாதைக்கு நல் தீபமே - பாக்யர் விரும்பும் தேனே!
- வேத

2. என்னை எனக்குக் காட்டி-என் நிலைமையை மாற்றப்
பொன்னுலகத்தைக் காட்டிப்-போகும் வழி சொல்வாயே
- வேத

3. துன்ப காலம் ஆறுதல்-உன்னால் வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய்-என்றும் நம்பின பேர்க்கே
- வேத

4. பன்னிரு மாதங்களும்-பறித்துண்ணலாம் உன் கனி
உன்னைத் தியானிப்பவர்-உயர்கதி சேர்த்திடுவார்
- வேத

## 244

இராஜாதி இராஜன் மகிமையோடே
வான மேகத்தில் எழுந்நள்ளாறாய்

**சரணங்கள்**

1. கிலேசம் தீர்ந்து நாம் நித்தியம் வஸிப்பான்
வாஸமொருக்கான் போய ப்றியன் தான்(2)-இராஜாதி

2. நிந்ந கஷ்டத பரிஹாஸங்கள்
துஷிகளெல்லாம் தீரான் காலமாய் (2) - இராஜாதி

3. ப்ராணப் ப்ரியன்றே பொன்னு முகத்தெ
தேஜஸ்ஸோடே நாம் காணான் நேரமாய் (2) - இராஜாதி

4. காந்தனுமாயி வாஸம் செய்யுந்ந
காலம் ஸமீபாமாயி ப்ரியரே (2) - இராஜாதி

5. யுகாயுகமாய் ப்ரியன் கூடெநாம்
வாழும் ஸ்தினம் ஆஸன்னமாயி (2) - இராஜாதி

6. காஹள தொனி கேள்கும் மாத்ரயில்
மறுரூபமாய் பறந்திடும் ஞான் (2) - இராஜாதி

## 245

1. பரித்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்?
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

**பல்லவி**

மாசில்லா . . . சுத்தமா?
திருப்புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிடக் குணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

**சரணங்கள்**

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்?
மறு ஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்குக்குட்டியின் ரத்தத்தினால்? – மாசில்லா

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்?
மோட்சக் கரையேறிச் சுகிப்பீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்? – மாசில்லா

4. மாசு கறை நீங்கும் நீசப்பாவியே!
சுத்த ரத்தத்தின் சக்தியினால்
முத்திப் பேறுண்டாகும் குற்றவாளியே!
ஆட்குக்குட்டியின் ரத்தத்தினால் – மாசில்லா

## 246

தேவனைத் துதிப்பதும்
கீர்த்தனம் பண்ணுகிறதும் நல்லது

**சரணங்கள்**

1. எருசலேமைக்கட்டியே
கரிசனையாய் காக்கிறார்
துரத்துண்ட இஸ்ரவேலை
கரத்தால் கூட்டிச் சேர்க்கிறார் - தேவனைத்

2. இருதயம் நொருங்குண்டோர்களை
மிதமாய் குணமாக்குகிறார்
நொறுங்குண்டோர் காயங்களை
அருமையாய்க் கட்டுகிறார் - தேவனைத்

3. நட்சத்திரங்களின் இலக்கத்தை
அட்சயன் எண்ணுகிறார்
பட்சமாய் அவைகளை
உச்சரித் தழைக்கிறார் - தேவனைத்

4. ஆண்டவர் பெரியவர்
மீண்டும் பெலமுள்ளவர்
அறிவில் அளவில்லாதவர்
நெறியில் தவறாதவர் - தேவனைத்

5. சாந்த குணமுள்ளோர்களை
வேந்தன் உயர்த்துகிறார்
மாந்தரில் துன்மார்க்கரை
அகந்தமாய்த் தாழ்த்துகிறார் - தேவனைத்

6. கர்த்தரையே பாடுங்கள்
துதியுடன் கொண்டாடுங்கள்
சுரமண்டலத்தாலுமே
கீர்த்தனம் பண்ணிடுங்கள் - தேவனைத்

## 247

அல்லேலூயா பாடி ஆனந்தமாய்க் கூடி
ஆண்டவரைத் தேடி ஆராதனை செய்குவோம்
இயேசுவை ஆராதனை செய்குவோம்

**சரணங்கள்**

1. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றம் கொண்ட என்னை இரத்தத்தாலே மற்றினார்
கண்ணில் மணிபோல என்னை காலமெல்லாம் காத்து எந்தன்
கண்ணீரெல்லாம் துடைத்தார்
- அல்லேலூயா பாடி

2. கள்ளனான என்னை அவர் அள்ளியணைத்தார்
தள்ளாடிய என்னை துள்ளும் மானாக்கினார்
செல்லப்பிள்ளைபோல என்னை மெல்ல மெல்ல தட்டி எந்தன்?
அல்லல் எல்லாம் அகற்றிவிட்டார்
- அல்லேலூயா பாடி

3. எத்தனான என்னை அவர் மெத்த நேசித்தார்
சித்தம் கொண்டு என்னை பரிசுத்தமாக்கினார்
சத்தியத்தின் பாதையில் நித்தமும் நடத்தி என்னை
உத்தமனாய் மாற்றிவிட்டார்
- அல்லேலூயா பாடி

4. பாவியான என்னை பரிசுத்தமாக்கினார்
அவர் சித்தம் செய்ய என்னை அன்பாய் அழைத்தார்
பக்தனாக மாற்றி அவர் பரலோக காட்சி தந்து
சந்தோஷமாய் வாழச் செய்திட்டார்
- அல்லேலூயா பாடி

## 248

அபிஷேக நாதரே அக்கினி நேசரே
வல்லமையோடு எங்கள் நடுவில்
இறங்கி வாருமே

**சரணங்கள்**

1. ஆரோன் சிரசினிலே ஊற்றப்பட்டவரே (2)
ஆசாரியராக இராஜாக்களாக (2)
அபிஷேகித்திடுமே (2) - அபிஷேக நாதரே

2. தாவீதின் குமாரனாய் இறங்கி வந்தவரே (2)
வரங்களினாலும் வல்லமையினாலும் (2)
அபிஷேகித்திடுமே (2) - அபிஷேக நாதரே

2. உன்னத மேகத்தினால் உள்ளத்தை நிரப்புமே (2)
உம்மைபோல் ஆக்குமே மறுரூபமாகவே (2)
அபிஷேகித்திடுமே (2) - அபிஷேக நாதரே

## 249

வரவேணும் எனதரசே மனுவேல் இஸ்ரவேல் சிரசே
அருணோதயம் ஒளிர்பிரகாசா அசரீரி ஒரே சருவேசா

**சரணங்கள்**

1. வேதா கருணாகரா மெய்யான பரா பரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே
நாதா உன் தாபரம் நல்குவாயே – வரவேணும்

2. படியோர் பாவ மோசனா பரலோக சிம்மாசனா
முடியா தருள் போசனா முதன் மாமறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடிதொழு மேன்மையின் எந்தாய் – வரவேணும்

3. வானோர் தொழும் நாதனே மறையாகம போதனே
கானாவின் அதீதனே கலிலேய வினோதனே
ஞானாகரமே நடுநிலையோவா
நண்பா உனத நன்மையின் மகாதேவா – வரவேணும்

## 250

ஆயிர வருட அரசாட்சியே
பரிசுத்தவான்களின் இராஜ்ஜியமே
பரமபிதா வேத வாக்கிதே
பசுமை பொற்காலம் வருகின்றதே

**சரணங்கள்**

1. பசுவும் கரடியும் கூடிமேயுமே
புலியும் வெள்ளாடும் படுத்திருக்கும்
ஒருமித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான் – ஆயிரம்

2. இடுக்கண்கள் தீங்கு இழைப்பார் இல்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும்
குழந்தையின் கரங்கள் பாம்பின் மண் புதரில்
களங்கம் பயமின்றி விளையாடுமே – ஆயிரம்

3. வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே
விருட்சங்கள் இனிய கனி தருமே
அமைதியும் நிலவும் சுக வாழ்வு துளிர்க்கும்
அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே – ஆயிரம்

4. கிறிஸ்தேக ராஜா புவி ஆளுவார்
கிடைக்கும் நல்நீதி எளிவர்க்கே
பரிபூர்ணமடைந்த மெய் தூய பக்தர்கள்
பரனோடு நீடூழி அரசாளவே – ஆயிரம்

## 251

ஐயையா நான் வந்தேன் - தேவ
ஆட்டுக்குட்டி வந்தேன் (2)

**சரணங்கள்**

1. துய்யன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தி
துஷ்டன் எனை அழைத்தீர் - தயை
செய்வோம் என்றே இதை அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி வந்தேன் - ஐயையா

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன் என்று - நில்லேன்
தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் - ஐயையா

3. எண்ணம் வெளியே போராட்டங்கள் உட்பயம்
எத்தனை எத்தனையோ - இவை
திண்ணம் அகற்றி எளியனை ரட்சியும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் - ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப்பது சுத்திகரித்
தென்னை அரவணையும் - மனம்
தேற்றிக் கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி வந்தேன் - ஐயையா

5. மட்டற்ற உம் அன்பினாலே தடை ஏதும்
மாறி அகன்றதுவே - இனி
திட்டமே உந்தன் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் - ஐயையா

## 252

1. இயேசுவே உம் நாமத்தினால்
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

**பல்லவி**

எங்கள் தேவனே எங்கள் ராஜனே
என்றும் உம்மையே சேவிப்போம் அல்லேலூயா
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

**சரணங்கள்**

2. மண்ணை நாடிப் பொன்னை அடைந்தோம்
புகழ்தேடி ஏமாற்றம் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால்

3. நிலையில்லா இவ்வுலகில்
மனமற்று அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
சாகா ஜீவன் கண்டடைந்தோம்

4. உன்னை கண்டழைக்கும் சத்தத்தை
கேட்டாயோ ஓ பாவியே
இன்று இயேசுவண்டை வாராயோ
நித்திய ஜீவன் பெற்றிடவே

5. இயேசுவை நாம் பின் செல்வோம்
உலகை என்றும் வெறுப்போம்
துன்பப்பாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பெலத்தால்

## 253

துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை
அல்லேலூயா பாடி
துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை
துதிப்பேன் லோகத்தின் பாவத்தை நீக்கிடத்
தூயவனாய் வந்த தேவ குமாரனைத்

**சரணங்கள்**

1. கருணை நிறைந்த கண்ணுள்ளோரவர்
தம் ஜனத்தின் கூக்குரல்
கருணை கூர்ந்து கேட்கும் காதுள்ளோர்
லோக பாவ சுமைதனை
சிரசு கொண்டு சுமந்தளிக்க வென்றே
குருசெடுத்துக் கொல்கொதாவில் சென்றோரைத் - துதிப்பேன்

2. பொற் குத்துவிளக்கு ஏழு மத்தியிலே
எங்கள் இயேசு நாயகர்
பொற் கச்சை மார்பினில் கட்டி நிற்கிறார்
நீல அங்கி தரித்தோராய்க்
கற்பிக்கும் காரியம் கவனமாகக் கேட்டுச்
சொற்படி செய்வோரைத்
தப்பாமல் மீட்போரைத் - துதிப்பேன்

3. வழியும் சத்தியமும் ஜீவனுமவரே
அவரருகில் வருவீர்
வழியிலாறுதல் செய்பவரவரே
லோக பாவத்தை சுமந்தார்
பழைய சுபாவங்கள் ஒழித்து முற்றுமாய்
அழித்துப் பக்தரை மோட்சத்தில் சேர்ப்போரைத் - துதிப்பேன்

## 254

சீயோன் மலையில் தேவ மகிமை எங்கும் வீசிடுதே
சர்வ வல்ல தேவன் அரசாளுகின்றார் – சீயோன்

**சரணங்கள்**

1. பெரு வெள்ளத்து இரைச்சலைப்போல்
பலத்த இடி முழக்கங்கள் போல்
புதுப்பாட்டின் தொனி அங்கு ஒலிக்கின்றதே
மகிமைப்படுகின்றார் பரமபிதா – சீயோன்

2. அங்கே மலைமேல் நிற்கிறார்
ஆட்டுக்குட்டி யானவரும்
அவரோடிணைந்து பிதா நாமம் நெற்றியில்
அணிந்து நிற்கின்றார் பரிசுத்தர் கூட்டமே – சீயோன்

3. வாயில் கபடமுமில்லை
ஆடைதனில் கறையுமில்லை
மானிடர் மத்தியில் முதற் பலனிவர்கள்
இலட்சத்து நாற்பது நாலாயிரம் பேர் – சீயோன்

4. அருமை இயேசுவின் பின்னே
அலைந்து திரிந்த பாதங்கள்
மலையின் மீதிலே நின்று ஜொலிக்கின்றதே
அவர்கள் அப்போஸ்தல ஊழியரே – சீயோன்

5. சர்வ பூமியே பயத்துடன் கேள்
சத்திய சுவிசேஷத்தையே
நித்திய சந்தோஷம் நிறைவாய்ப் பெறவே
நீயும் வந்திடுவாய் தருணம் இதுவே – சீயோன்

## 255

அழகானவர் அருமையானவர் இனிமையானவர் (2)
மகிமையானவர் மீட்பரானவர் (2)
அவர் இயேசு இயேசு இயேசு (2)

**சரணங்கள்**

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் ராஜா (2)
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலன்
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர் (2)
என்னுடையவர் என் ஆத்தும நேசரே - அழகானவர்

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானவர் (2)
ஆற்றித் தேற்றி காத்திடும் தாயுமானவர்
என்றென்றும் நடத்திடும் எந்தன் இராஜா (2)
என்னுடையவர் என் நேச கர்த்தரே - அழகானவர்

3. கல்வாரி மேட்டிலே கொல்கொதாவிலே (2)
நேச ரத்தம் சிந்தியே என்னை மீட்டார்
பாசத்தின் எல்லைதான் இயேசுராஜா (2)
என்னுடையவர் என் அன்பு இரட்சகர் - அழகானவர்

## 256

எனக்கு உம் கிருபை போதுமே – நேசரே
எனக்கு உம் கிருபை போதுமே
கவலைகள் நிறைந்த துன்ப உலகிலே

**சரணங்கள்**

1. துணையில்லா ஒரு மாடப்புறா போல்
தவிக்கும் என்னை சேர்த்திட வாரும்
நாதனின் வருகை தாமதமானால்
விழாமல் காத்திடுமே – என்னை
விழாமல் காத்திடுமே – எனக்கு

2. சிங்கத்தின் குகையில் தள்ளிவிட்டாலும்
அக்கினியால் எனை இழுத்தெறிந்தாலும்
உள்ளம் கலங்கும் நேரங்கள் எல்லாம்
விழாமல் காத்திடுமே – என்னை
விழாமல் காத்திடுமே – எனக்கு

3. சிகிட்சைக்கு ஒரு வைத்தியனும் இல்லை
ஆறுதல் அடைய இடமும் இல்லை
உமது வழியும் கிருபை வசனமும்
மண்ணில் என் ஆறுதலே – இந்த
மண்ணில் என் ஆறுதலே – எனக்கு

## 257

சமாதானம் நல்கும் நாமம் இயேசு நாமமே
மனசாந்தி தரும் இனிய நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே இயேசு நாமமே கிறிஸ்தேசு நாமமே(2)

**சரணங்கள்**

1. அன்னை தந்தை சொந்தம் யாவும் இயேசு நாமமே
தன்னைத் தந்த இன்ப நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே இயேசு நாமமே கிறிஸ்தேசு நாமமே
– சமாதானம்

2. பாவ வினை போக்கும் நாமம் இயேசு நாமமே
பரலோக வாழ்வில் சேர்க்கும் நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே இயேசு நாமமே கிறிஸ்தேசு நாமமே
– சமாதானம்

3. பொன்னும் வெள்ளி புகழ் பொருளும் இயேசு நாமமே
என் உள்ளில் வாழும் ஏக நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே இயேசு நாமமே கிறிஸ்தேசு நாமமே
– சமாதானம்

## 258

**பல்லவி**

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

**சரணங்கள்**

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித்துதித்திடும் நாமமது – (2) இயேசு

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே – (2) இயேசு

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது – (2) இயேசு

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது – (2) இயேசு

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடைமுற்றும் அகற்றிடும் நாமமது – (2) இயேசு

# 259

**பல்லவி**

இயேசு கிறிஸ்துவின் நாமமிதே
இனிமையாமே இன்பமதுவே
ஏழைக்கும் ஆறுதலே

**சரணங்கள்**

1. நாமம் அதிசயமே தேவதாசரின் புகலிடமே
நானிலந்தனிலே யாவரும் வணங்கிடவே
நாதன் இயேசுவின் நாமமதையே
நன்றியுடன் புகழ்வோம் – இயேசு

2. அளிப்பேன் யாவையுமே என் நாமத்தில் என்றனரே
அழிக்க வலியவனை வல்லமையுண்டதிலே
களிப்போம் வல்ல நாமமதையே
கனிந்தே பாடிடுவோம் – இயேசு

3. நோய்கள் நீங்கிடவும் நவ பாஷைகள் பேசிடவும்
சர்ப்பங்களை எடுக்க சக்தி ஈந்ததுவும்
உத்தமர்கள் போற்றி புகழும்
கர்த்தரின் நாமமதே – இயேசு

4. சாவுக் கேதுவான கொடும் நஞ்சைப் பருகிடினும்
சேதப்படுத்தாதே காக்க வல்லதுவே
நாதன் ஈந்த தைலமெனவே
நமக்காய் ஊற்றுண்டதே – இயேசு

5. பாவ இருளதனைப் போக்கும் புண்ணிய நாமமதாய்
பாரில் இறங்கினாரே தேவனின் அன்பதுவே
இயசே கிறிஸ்து நேசரிவரே
ஆசைக்கு கந்தவரே – இயேசு

## 260

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா
ஆசீர்வதியும் என் நேசக் கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

**சரணங்கள்**

1. கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே – ஊற்று

2. ஜீவ தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுவீர்
கனி தந்திட நான் செழிந்தோங்கிட
கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம் பெற்றிட – ஊற்று

3. இரட்சிப்பின் ஊற்றுகளெந்தன் சபை தனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுவீர்
ஆத்ம பாரமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே – ஊற்று

4. திறக்கப் பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக் கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்தர் சமூகத்தில் ஜெயம் பெற்றிட – ஊற்று

5. கிருபையின் ஊற்றுகள் பெருகிடவே
புதுபெலன் அடைந்து நான் மகிழ்ந்திடவே
பரிசுத்தத்தை பயத்துடனே
பூரணமாக்கிட தேவ பெலன் தாருமே – ஊற்று

## 261

துதிப்பதே என் தகுதியல்லோ
துதித்திடுவேன் என் இயேசுவை

**சரணங்கள்**

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்
கருணை நிறைந்த கரங்கள் தந்தார் - துதிப்பதே

2. வியாதி நேரத்தில் வல்லமை தந்தார்
சோதனை நேரத்தில் ஜெபம் தந்தார்
கைவிட்ட நேரத்தில் ஜீவன் தந்தார்
ஆரோக்கிய நேரத்தில் அடக்கம் தந்தார் - துதிப்பதே

3. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்
தூய்மை நிறைந்த பார்வை தந்தார்
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார் - துதிப்பதே

4. ஆபத்து நேரத்தில் அடைக்கலம் தந்தார்
பெலவீன நேரத்தில் பெலன் தந்தார்
செய்தி நேரத்தில் தூது தந்தார்
பாடிய நேரத்தில் பரவசம் தந்தார் - துதிப்பதே

5. வளம் நிறைந்த வாழ்வு தந்தார்
மகிமை நிறைந்த தாழ்மை தந்தார்
அன்பு நிறைந்த ஆட்கள் தந்தார்
ஆவி நிறைந்த அறிவு தந்தார் - துதிப்பதே

6. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்
சத்தியம் நிறைந்த சபை தந்தார்
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்
ஒளி நிறைந்த வழி திறந்தார் - துதிப்பதே

தேவனை உயர்த்தித் துதியுங்கள்
அவர் நாமத்தைப் போற்றியே – தேவனை

**அனுபல்லவி**

தேவனின் செயல் அதிசயமென்று
அதிசய மென்று சொல்லி – தேவனை

**சரணங்கள்**

1. கொடியனின் சீறல் கடுமையாய் வரினும்
திடபெலனும் ஏழைக் கடைக்கலமானார்
பாடும் பலவந்தர் ஆரவார மென்றும்
ஆரவாரம் என்றுமே – தேவனை

2. இவரே நம் தேவன் இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் ரட்சிப்பினால் களி கூர்ந்திடுவோம்
இவர் பகைவனை வென்று கீழ்ப்படுத்தி
வென்று கீழ்ப்படுத்தினார் – தேவனை

3. கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட
உத்தம ஜாதியே உட்பிர வேசியுங்கள்
பக்தருக் கென்று பலத்த நகரம்
பலத்த நகரம் உண்டு – தேவனை

4. அன்னியர் ஆள்வதில்லை இந்நிலம் தன்னில் நம்மை
மன்னாதி மன்னனே நம் மகிபனாயிருப்பார்
மன்னரும் தேவ சமாதானந் தங்கும்
சமாதானம் தங்கிடுமே – தேவனை

5. புனிதராய் மரித்தோர் பூரித் தெழும்புவார்
பனிபோல் கிருபையை பக்தரின்மேல் பொழிவார்
இனி உலகத்தில் இன்னல் பெருகிடும்
இன்னல் பெருகிடுமே – தேவனை

6. மறைவிடமு முண்டு மன்னின் ஜனத்திற்கே
குறை விசாரிக்கும் கோபத்தின் நாளிலே
அறைக்குள் மறைந்து ஆனந்திக்கும் சபை
ஆனந்திக்கும் சபையே – தேவனை

7. சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது
அருந்த யாவருக்கும் ஆயத்த மாக்குவார்
நிந்தையை நீக்கிக் கண்ணீரைத் துடைத்து
கண்ணீரைத் துடைத்திடுவார் – தேவனை

# 263

எநிக்கு நிந் கிருப மதியே பிரியனே
எநிக்கு நிந் கிருப மதியே

**சரணங்கள்**

1. இணையராகு ஒரு பிராவுபோல்
ஞாநிந்து பிரியனில் சேருவான்
நாதா வருவான் தாமச மெங்கில் (2)
வீழாதே நிற்தேணமே எநிக்கு
வீழாதே நிற்தேணமே - எநிக்கு நிந்

2. சிம்கத்தின் குகா எநிகேகியாகிலும்
அக்கினியால் லென்னே வலுச்செரிஞ்ஞாலும்
உள்ளம் கலங்கும் பிரதி சந்தி கழில் (2)
வீழாதே நிற்தேணமே எநிக்கு
வீழாதே நிற்தேணமே - எநிக்கு நிந்

3. ஆஸ்ரயிப்பான் ஒரு தேகியும் இல்லா
அசுசிப்பான் ஒரு ஸ்தலமுமில்லா
ஒற்நே மாத்ரம் நின் ஜீவ மொழிகள் (2)
மண்ணிலென் ஆஸ்வாசமாய் எநிக்கு
மண்ணிலென் ஆஸ் வாசமாய் - எநிக்கு நிந்

## 264

நேசர் அவர் என் நேசரவர்
நேசரிலெல்லாம் விசேஷித்தவர்
சோகமடைந்தேன் நேசமதால்

**சரணங்கள்**

1. வெண்மையும் சிவப்புமானவரே
கண்ணைக் கவர்ந்திடுபவர் அவரே
பதினாயிரங்களில் சிறந்தவரே
அதிசயமானவர் அவர் பெயரே

**அனுபல்லவி**

இவரென் ஆத்தும நேசரே
வருவார் எனக்காய் வேகமே - நேசர்

2. அவர் தலை முழுவதும் பொன்மயமாமே
அவர் தலை மயிர் சுருள் சுருளாமே
காகத்தின் நிறம் அவர் முடியாமே
லோகத்தின் ஒளி விளக்கவராமே - இவரென்

3. அவர் கண்கள் கண்ணீர் நிறைந்தவைகள்
கவரும் புறாக்கண்கள் போன்றவைகள்
பாலிலே கழுவப் பட்டவைகள்
நேர்த்தியாய் பதிக்கப் பட்டவைகள் - இவரென்

4. அவரின் கன்னங்கள் உதடுகளாம்
மலர்களின் வாசனை வீசிடுமாம்
தங்க வளையல்போல் அவர் கரமாம்
தங்கத்தைப்போல் அங்கம் உடையவராம் - இவரென்

5. ரூபமதில் அவர் கிணை அவரே
லீபனோன் மகிமை உடையவரே
கேதுருபோல் அவர் உயர்ந்தவரே
ஏதமிலா சிறப்பானவரே - இவரென்

6. வார்த்தை பேசிடும் வாய் மதுரமாமே
வார்த்தைகள் கிருபை பொழிந்திடுமே
வார்த்தை என்பதும் அவர் பெயரே
வார்த்தைகளால் துதி சாற்றிடவே - இவரென்

7. துள்ளிக் குதித்து மலை மேட்டினிலே
வந்திடும் நேசரின் தொனியதுவே
ஆரவார சப்தம் முழங்கிக் கொண்டே
மேகத்தில் ஜோதியாய் தோன்றுவாரே - இவரென்

## 265

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந் தனைவரும் பாடிடுவோம்
ஞானரட்சகர், நாதர் நமை – இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ்

**சரணங்கள்**

1. சங்கு கனம், வளர் செங்கோ லரசவை
தளராதுள கிறிஸ்தான வராம்,
எங்கள் ரட்சக ரேசு நம்மை – வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் – புகழ்

2. முந்து வருட மதினில் மனுடரில் வெகு
மோச கஸ்திகள் தனிலே யுழல,
தந்து நமக்குயி ருடையுணவும் – வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால் – புகழ்

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகுகொடும்
பாழ் கொள்ளை நோய்விஷ தோஷத்திற்கும்
தஞ்ச ரட்சகர் தவிர்த்துநமை – இத்
தரைதனில் குறை தணித்தாற்றியதால் – புகழ்

## 266

அற்புதர் (4) இயேசு அற்புதர் – அண்டினோர்
வாழ்வை இன்பமாய் மாற்றும் இயேசு – அற்புதர்

**பல்லவி**

எல்லோரும் பாடுங்கள் கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடனே சங்கீதம் பாடுங்கள்

**சரணங்கள்**

1. எத்தனை துன்பங்கள் நம்மில் வந்தபோதும்
தீர்த்த இயேசு அற்புதர்
என்னென்ன தொல்லைகள் நம்மில் சூழ்ந்தபோதும்
காத்த இயேசு அற்புதர்
உலகத்தி லிருப்போனிலும் எங்கள் இயேசு
பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரைத் தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதரே – எல்லோரும்

2. அலை கடல் மேலே நடந்தவர்
எங்கள் இயேசு அற்புதர்
அகோர காற்றை அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர்
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளிலே
ஆகிலும் மூன்றாம் நாள் உயிருடன்
எழுந்த இயேசு அற்புதரே – எல்லோரும்

## 267

ஆசீர்வாதம் தேவனின் ஆசீர்வாதம்
இறங்கட்டுமே என்மேல் இறங்கட்டுமே

**சரணங்கள்**

1. பாவங்கள் சாபங்கள் அகற்றிட தேவா நீர்
பூமியில் உதித்ததால் ஸ்தோத்திரம்
இயேசுவின் ரத்தத்தில் மெய் ஆசீர்வாதங்கள்
இறங்கட்டுமே என்மேல் இறங்கட்டுமே – ஆசீர்

2. ஆவியில் மரித்தோரை உயிர்ப்பிக்கவே நீர்
சிலுவையில் மரித்ததால் ஸ்தோத்திரம்
நித்திய மகிமையில் மனிதனைச் சேர்த்திட
பரிசுத்த ஆவியை ஈந்தீரே – ஆசீர்

3. தேவனே நீர்தான் எங்கள் ஆசீர்வாதம்
உமது நன்மைகள் நிரம்பணுமே
உமது அன்பும் சத்தியமும் வல்லமையும்
என்றும் எங்கள் நம்பிக்கையே – ஆசீர்

## 268

ஞான தேவனின் நாமத்தை மறவாமல்
நாளும் துதித்திடுவோம்
அன்பு உள்ளம் கொண்ட ஆனந்த பெருங்கடல்
இன்ப துன்பங்களில் ஏற்ற துணையவர்

**சரணங்கள்**

1. கருணைக் கடலின்பால் கலப்பில்லா தேனின்பால்
உன்துயர் துடைத்திடும் இனியநாள் என என்பார்
2. என்றென்றும் உள்ளவர் ஏழைக் கிரங்குபவர்
எனக்காக வழக்காடும் நீதியின் தேவனவர்
3. வார்த்தையா யிருந்தவர் ஜீவனை அளித்தவர்
மாம்சத்தில் வெளிப்பட்டு சத்தியமாய் இருப்பவர்
4. சாவாமை யுடையவர் ஏகசக் ராதிபதி
ராஜாதி ராஜனவர் விரைவில் வருகிறவர்

# 269

போற்றுவோமே போற்றுவோமே
என் தேவரீரை இவ்வேளையிலே - நன்றியுடனே

**சரணங்கள்**

1. துங்கன் இயேசுவே தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்
மங்கா புகழும் மகிழ்ந்து போற்றி
எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமே ஒளி
மங்கிடாமலே தங்கிட வேணும் - போற்று

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே
ஆழி தன்னிலெம் பாவ மெறிந்த
அன்னை உத்தமனே
அன்றும் இன்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மண்ணதினிலே - போற்று

3. பாவம் போக்கியே சாபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே
துரோகி என்னையே சுத்திகரித்த
தூயா வேந்தனே
தூயா நேயா காய மாற்றியே
கருணாநிதியே பரிகாரியே - போற்று

4. பாரிலென்னையே பிரித்தெடுத்தோனே
தாவி வந்தோனே
அகமதினிலே ஆவி ஈந்திட
அருள் நிறைந்தவனே
தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க - போற்று

5. பூரணராகவே பூவில் வாழ்ந்திட
கிருபை ஆளித்தோனே
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே
மகிமை செலுத்திடுவேன்
கோனே தேனே கோதில்லாதோனே
கானம் பாடியே துதித்திடுவேன் - போற்று

# 270

**பல்லவி**

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

**அனுபல்லவி**

பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

**சரணங்கள்**

1. மாம்சமான யாவர் மீதும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்கத் தரிசனம் சொல்வாரே – பொழிந்திடும்

2. பெந்தேகொஸ்தே நாளின் போல
பெரிதான முழக்கத்தோடு
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும் – பொழிந்திடும்

3. மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையாக ஆவியைதாரும்
பிதாவே என்று அழைக்க
புத்திர சுவிகாரம் ஈந்திடும் – பொழிந்திடும்

## 271

**பல்லவி**

தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

**அனுபல்லவி**

ஆவலதாய் எனைப் பைம்புல் மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார்

**சரணங்கள்**

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் – தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்குகண் டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும் – தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுகதைலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார் – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரப்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன் – தேவ

# 272

வான்புறாவே எங்கள் மீதில் வந்தமர்ந்திடும்
வன் செட்டைகள் விரித்தே எம் அச்சமெல்லாம் அகல எம்மில்
வன் செயலால் வந்தமர்ந்திடும் – எம்மில்

**சரணங்கள்**

1. ஆவியின் அக்கினியால் தகித்திடவே
அனலுள்ள இருதயம் அளித்திடுமே
அன்பினால் அணைத்தோடும் கனலடைய
அனுதினம் அருள்மாரி சொரிந்திடுமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே – வான்

2. சோர்ந்திடும் உள்ளங்கள் உணர்வடைய
மாய்ந்திடும் சரீரங்கள் உயிரடைய
ஆண்டிடும் சக்திகள் அகன்றோடவே
அண்டிவரும் எமக்குநின் ஜெயந்தாருமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே – வான்

3. பற்பல பாஷைகள் மகிழ்ந்துரைக்க
அற்புத திருவன்பை புகழ்ந்துரைக்க
நற்செய்கையால் நவ சிருஷ்டியதில்
பொற்பரனே வளர்ந்திட பொழிந்திடுமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே – வான்

4. நேசரே நினைத்திடா வேளை வருவீர்
சேர்ந்திட தூயவரே உம்முடனே
வேளையும் காலமுன் சாயுமுன்னே
வேளையிது திறக்க நீர் இறங்கிடுமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே – வான்

## 273

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

**அனுபல்லவி**

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் என்னையும் உமக்காக
கொடுத்தீர் உம்மையும் எனக்காக – ஸ்தோத்திரம்

**சரணங்கள்**

1. வல்ல வான ஞான விநோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே (2)
அலையும் என்னையும் மீட்டீரே – ஸ்தோத்திரம்

2. நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவி யாவையும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே (2)
நம்பினோர்க் குந்தன் தயவாலே – ஸ்தோத்திரம்

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர்தானே (2)
எந்நாளும் எங்கள் துணை நீரே – ஸ்தோத்திரம்

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவா நீர்உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணுகா தும் மறைவினிலே (2)
தேடி யுமதடி தங்கிடுவேன் – ஸ்தோத்திரம்

5. அல்லேலூயா ஸ்தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டி களும்துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய் (2)
அன்பே உமையேத் துதித்திடுவேன் – ஸ்தோத்திரம்

# 274

**பல்லவி**

சோர்ந்து போகாதே மனமே
சோர்ந்து போகாதே

**அனுபல்லவி**

கண்டுனை அழைத்த தேவன் கைவிடுவாரோ – சோர்ந்து

**சரணங்கள்**

1. துன்பங்கள் தொல்லைகள் உன்னை சூழ்ந்துகொண்டாலும்
அன்பர் உன்னைத் தேற்றும் நேரம் ஆனந்தமல்லோ
– சோர்ந்து

2. சோதனைகளை சகிப்போன் பாக்கியவானல்லோ
ஜீவகிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம்
– சோர்ந்து

3. வாக்களித்த தேவனை நீ பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத் தாங்க மன்றாடு
– சோர்ந்து

## 275

நம்முடைய தெய்வம் இயேசுவல்லால் – இந்த
நானிலத்தில் வேறு தெய்வமில்லை – நம்

**சரணங்கள்**

1. கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம்
பாக்கிய முள்ளது எனப்படுமாம் – நம்

2. பாவ மறியாத பரிசுத்தராம் இயேசு
பாவிகளை இரட்சிக்க வந்தவராம் – நம்

3. கற்சிலை பேசுமோ வாய் திறந்து – நம்
கர்த்தர்இயேசு இன்னும் பேசுகிறார்– நம்

4. பற்பல கிருபைகள் பகரு கின்றார்
கற்புடன் அவர்பணி செய்திடவே – நம்

5. மறப்பாளோ தாய்தன் பாலகனை – நான்
மறப்பதில்லை என்னும் அன்பு தெய்வம் – நம்

6. ஏறெடுக்கும் நம் தேவைகட்கு – அவர்
மாறாமல் பதில்தரும் மகிபனவர் – நம்

7. சகலமும் படைத்த சர்வாதிகாரி இயேசு
சகலமும் ஜெயித்திட பரிகாரி – நம்

எந்நாளுமே துதிப்பாய் - என்னாத்துமாவே நீ
எந்நாளுமே துதிப்பாய்!

**அனுபல்லவி**

இந்நாள் வரையில் உன்னத னார்செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவுமறவாது - எந்

**சரணங்கள்**

1. பாவங்கள் எத்தனையோ-நினையாதிருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்தமா தயைவை நினைத்து - எந்

2. எத்தனையோ கிருபை-உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை?
நித்த முனை முடி சூட்டின துமன்றி
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால் - எந்

3. நன்மையாலுன்வாயை - நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை
உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு
இன்னுமிளமைபோ லாகவே செய்ததால் - எந்

4. பூமிக்கும் வானத்துக்கும் - உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்துக்கும்
சாமிபயமுள்ளவர்மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்தியமேயிது - எந்

5. மன்னிப்பு மாட்சிமையாம் - மா தேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே
மண்ணில் உன்பாவம் அகன்றத் தூரமே- எந்

6. தந்தைதன் பிள்ளைகட்கு-தயவோ டிரங்கானோ
தந்தைதன் பிள்ளைகட்கு
எந்த வேளையும் அவரோடு தங்கினால்
சொந்தம் பாராட்டியே தூக்கிச்சுமப்பாரே - எந்

## 277

எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமை தரித்துக்கொள்
தூசியை உதறிவிட்டு எழுந்திரு
தூயவரின் முகம் காண எழுந்திரு

**சரணங்கள்**

1. பாவங்களை உதறிவிட்டு எழுந்திரு
பரிசுத்தமாய் வாழ்ந்திடவே எழுந்திரு
உந்தன் ஒளி உதித்திடவே
உன்னதற்காய் வாழ்ந்திடவே
உன்னதத்தின் ஆவிபெற்று எழுந்திரு - எழும்பு

2. மரித்தோரைவிட்டு நீயும் எழுந்திரு
மகிபனின் சாயல் தரிக்க எழுந்திரு
கிறிஸ்துவில் நீ பிரகாசிக்க
கிறிஸ்துவுக்காய் ஜொலித்திடவே
கிறிஸ்துவின் ஆவிபெற்று நீ எழுந்திரு - எழும்பு

3. தூங்குகின்ற யோனாவே நீ எழுந்திரு
தூயவாக்கு சொல்லிடவே எழுந்திரு
காலம் இனி செல்லாது இது
கடைசிக் காலம் என்றுணர்ந்து
காலமதை ஆதாயம் செய்ய எழுந்திரு - எழும்பு

## 278

கிருபை மாகிருபை என்னை மீட்க வந்த தேவ கிருபை
கிருபை மாகிருபை இயேசு என்ற உன்னத கிருபை
ஆதியில் வார்த்தையாய் இருந்த கிருபை
மாம்சமாகவே வந்த கிருபை - கிருபை

**சரணங்கள்**

1. பாவியை மீட்கும் பரிசுத்தமாக்கும்
பரத்திலிருந்து வந்த பரிசுத்த கிருபை
கண்ணீர் துடைக்கும் கவலை போக்கும்
கஷ்டங்கள் நீக்கும் கர்த்தரின் கிருபை - கிருபை

2. நோய்களைத் தீர்க்கவே பாவத்தை போக்கவே
தாழ்மையின் உருவாய் மாறிய கிருபை
அடியேனை மீட்கவே வந்த கிருபை
ஐந்து காயங்கள் ஏற்ற கிருபை - கிருபை

3. மரித்த லாசருவை உயிர்பித்த கிருபை
மரணத்தை ஜெயித்த மாபெரும் கிருபை
வேதனை தீர்க்கும் வேண்டுதல் கேட்கும்
வேண்டிடும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் - கிருபை

# 279

**பல்லவி**

தினம் தினம் நம் தேவனையே
மனம் மகிழ்ந்து துதித்திடுவோம்

**சரணங்கள்**

1. இரக்கம் உருக்கம் நிறைந்தவரே
மறவாமல் நம்மை காப்பவரே
சிறந்த நாமம் உடையவரே
அரணான துணையாய் இருப்பவரே – தினம்

2. அன்பின் உருவம் உடையவரே
ஆண்டவர் அகிலத்தை சிருஷ்டித்தாரே
ஆறுதல் எல்லோர்க்கும் தருபவரே
அன்னைபோல அணைப்பவரே – தினம்

3. விண்ணின் மகிமை உடையவரே
மண்ணில் சமாதானம் தருபவரே
என்னில் தினமும் வாழ்பவரே
உன்னில் அழைத்தால் வருபவரே – தினம்

## 280

பரிசுத்தர் இயேசுவே உம் பரிசுத்தம் தாருமே
பரிசுத்த ஆவியால் எங்களை நிறைந்திடுமே

**சரணங்கள்**

1. அடிமை விலங்குடைத்து செங்கடல்தனை பிரித்தவரே - 2
   தடைகளை முறித்திடவே யோர்தான் நதிகளைநிறுத்தினீரே-2
2. பயந்துஒழிந்தவனைப் பார்த்து பராக்கிரமசாலி என்றீர்-2
   எத்தனாய் அலைந்தவனை நீர் இஸ்ரவேலாய் மாற்றிவிட்டீர்-2
3. தன் ஜனங்களை வழிநடத்த எரிகோ மதில்தனை
   தகர்த்தவரே - 2
   எதிரியை முறியடிக்க தன் தூதனை அனுப்பினீரே-2
4. கானானை சுதந்தரிக்க தன் ஜனங்களைச் சுமந்தவரே-2
   உத்தம பக்தர்களை தேவன் உயர்ந்திடச் செய்தீரே -2

## 281

உன்னத தேவன் உன்னுடன் இருக்க
உள்ளமே கலங்காதே – அவர்
உள்ளவரே என்றும் நல்லவரே
நன்மைகள் குறையாதே

**சரணங்கள்**

1. பாவத்தில் இருந்த உன்னை
பரிசுத்த மாக்கியவர்
தாழ்மையில் கிடந்த உன்ன
தம் தயவால் தூக்கியவர் – உன்னத

2. அந்நாளில்தம் பாதம் அமர்ந்த
அன்னாளின் ஜெபம் கேட்டார்
அனாதையாய்த் தவித்த – அந்த
ஆகாரின் துயர் தீர்த்தார் – உன்னத

3. இயேசு உன்முன் நடந்தால் – நீ
யோர்தானில் நடந்திடலாம்
விசுவாசம் உனக்கிருந்தால் – அந்த
எரிகோவை தகர்த்திடலாம் – உன்னத

## 282

என் சமூகம் உன்முன் செல்லும்
ஒன்றுக்கும் கலங்காதே
உன்னை ஒருபோதும் கைவிட மாட்டேன்
அழைத்தது நான் தானே

**சரணங்கள்**

1. ஆதி தகப்பனான அந்த ஆபிரகாமை அழைத்தது நான்
கரம்பிடித்தவனை கடல் மணலளவாய் கர்த்தர் நான்
நடத்தவில்லையா – என்

2. ஆடுகள் பின் அலைந்த அந்த தாவீதை அழைத்தது நான்
அந்த தாவீதின் வேரில் கிளையாய் துளிர்த்தவன்
தலையை நான் உயர்த்தவில்லையா – என்

3. ஈசாக்கின் தேவனும்நான் அந்த யாக்கோபின் தேவனும்நான்
அடிமையாய்ப் போன யோசேப்பை தேசத்து
அதிபதியாக்கினதும் நான் – என்

4. யாருக்கும் அடிமையில்லை நீ எவரிலும் தாழ்வதில்லை
ராஜாவைத் தள்ளி உன்னை ராஜாவாய் ஆக்கும்
ராஜாதி ராஜானும் நான் – என்

## 283

நீரின்றி வேறில்லை ஐயா
எல்லாமே நீர்தானே
உடலும் உள்ளமெல்லாம்
உயிரெல்லாம் நீர்தானே
உம்மைநாடி நாடி தினம் பாடிபாடி மகிழ்வேன்
உந்தன் பாதம்தேடிதினம் ஓடிஓடி வருவேன் – நீரன்றி

**சரணங்கள்**

1. துன்ப வேளையில் வேண்டிடும்போது
நல்ல துணை நீரே
தாங்கா துயரில் தவித்திடும்போது
தாங்கும் பெலன் நீரே
எந்தக் காலத்திலும் உம்மை ஸ்தோத்தரிப்பேன்
எந்த வேளையிலும் நினைப்பேன்
ஒரு இமைப்பொழுதும் உம்மை மறந்திடாமல்
என் வாழ்வினில் இனி – உம்மை

2. பாவப் பாதையில் பாரினில் அலைய
தேடி வந்தவரே
பாவி எனக்காய் சிலுவையில் தொங்கி
வாழ்வு தந்தவரே
உயிருள்ளவரை என் உன்னத
உயிரோடு கலந்திடுவேன்
இரவும் பகலும் இதயம் நிறுத்தி
இசை கானம்பாட – உம்மை

## 284

நிரப்பும் கர்த்தாவே நிரப்பும்
அக்கினி ஆவியினால்
ஊற்றும் கர்த்தாவே ஊற்றும்
உன்னதத்தின் ஆவியினால்

**சரணங்கள்**

1. பெலனடைந்து நான் பூமியெங்கும்
சாட்சியாய் ஜீவிக்கவே
பெலத்தின் ஆவியை தந்து என்றும்
தாங்கி வழிநடத்தும் – என் தேவா – நிரப்பும்

2. உலக இன்பமும் மேன்மை பெருமையும்
எல்லாம் அழியணுமே
சுயத்தின் ஆவியை சாம்பலாக்க
அக்கினி ஈந்திடுமே – என் தேவா – நிரப்பும்

3. தேவா உம்முடன் இரகசியங்களை
பேசி மகிழ்ந்திடவே
நவ நாவுகள் தந்து என்னில்
என்றும் உறவாடும் – என் தேவா – நிரப்பும்

அன்பே என்றும் பெரிது -2
சகோதர அன்பே என்றும் பெரிது -2
விசுவாசம் நம்பிக்கை அன்பு
அதில் அன்பே என்றும் பெரிது

**சரணங்கள்**

1. தேவனிடம் அன்பு வை
எல்லா மனிதரிடமும் அன்பு வை
ஏழை சகோதரனின் சிரிப்பில்
இறைவனை கண்டிடுவோம் - அல்லேலூயா

2. மன்னித்து மறந்திடுவோம்
ஊன்றக் கட்டுவோம் ஏற்றுக் கொள்வோம்
ஒருவருக்கொருவர் உதவுவோம்
பாராட்டி அன்பைப் பொழிவோம் - அல்லேலூயா

3. தாங்குவோம் உழைத்திடுவோம்
புத்தி சொல்லுவோம் ஜெபித்திடுவோம்
நன்கு கவனித்து கனப்படுத்தி
அன்புடன் செயல்படுவோம் - அல்லேலூயா

## 286

சகல ஜனங்களே கைதட்டிப் பாடுங்கள்
அவர் நல்லவர் சர்வ வல்லவர்
அவர் மகிமை நிறைந்தவர் - சகல

**சரணங்கள்**

1. செங்கடலைப் பிளந்தாரே
எரிகோவைத் தகர்த்தாரே
இன்றும் அதிசயம் செய்குவார்
அவர் நாமம் உயர்ந்தது - சகல

2. நீரை ரசமாய் மாற்றினாரே
மரித்த லாசரு உயிர்த்தாரே
இன்றும் நன்மையே செய்குவார்
அவர் வாக்கு மாறாதே - சகல

3. கடல்மேல் நடந்தாரே
காற்றும் கடலும் அடங்கிற்றே
இன்றும் அற்புதம் செய்குவார்
சர்வ வல்லமை உள்ளவர் - சகல

## 287

இயேசுவே வழி இயேசுவே சத்தியம்
இயேசுவே ஜீவன் வேறு வழியில்லையே

**சரணங்கள்**

1. கண்ணீரைக் காண்கின்றார்
கதறலைக் கேட்கின்றார்
சத்தமிட்டு நான் கூப்பிடுவேன்
சகாயம் செய்ய வந்திடுவார் – இயேசு

2. நண்பர்கள் கைவிட்டனர்
ஆத்ம நண்பர் இயேசு வந்தார்
ஆறுதல் மொழிகள் பல தந்தார்
ஆனந்த மடைந்து பாடுவேன் – இயேசு

3. வாழ்வை நீ வெறுத்திட்டாயோ
நண்பர் நம் இயேசு உண்டே
சாதி சமய பேதமின்றி
அணைத்து உன்னை ஆதரிப்பார்

## 288

இயேசுவின் நாமத்தை போற்றிடுவோம்
என்றும் அவர் துதி சாற்றிடுவோம்

**சரணங்கள்**

1. கரடு முரடான பாதையினில்
கால் தடுமாறி தியங்குகையில்
கருணையாய் பேசி கரமதை நீட்டி
காத்திடும் தயவதைப் பாடிடுவோம் – இயேசு

2. பாவத்தின் பாரத்தை நீக்கினாரே
சாபத்தின் கோரத்தைப் போக்கினாரே
சாகாது வாழ சாவதை வென்ற
தேவ குமாரனைப் பாடிடுவோம் – இயேசு

3. யோர்தானைக் கடந்திடும் நேரமதில்
அணைத்திடுவார் அவர் மார்பதினில்
அக்கரை சேர்த்து அகமகிழ்விக்கும்
அன்பரின் நாமத்தைப் பாடிடுவோம் – இயேசு

## 289

ஆவியானவரே அறுவடை நாயகரே
ஆத்தும ஆதாய ஊழியம் செய்ய
வல்லமை தருபவரே
ஆண்டு நடத்திடுமே

**பல்லவி**

வாரும் தேவ ஆவியே
விரைந்தாளும் எங்களையே
அனுதினமும் நிறைந்திடுமே
ஜெய ஊழியம் செய்திடவே

**சரணங்கள்**

1. என் சபையை நான் கட்டுகிறேன்
என்று சொன்னவரே – பதினேழு ஆயிரம்
கிராமங்களில் சபைகளை எழுப்பிடுமே
சத்தியம் நிலைத்திடவே
சமுதாயம் தழைத்திடவே – வாரும்

2. ஆத்தும தரிசனம் அளித்திடுமே
இதயத்தை ஆட்கொள்ளுமே
துதி வேண்டுதல் விண்ணப்ப ஆவிதனை
சபைகளில் ஊற்றிடுமே
தேவ ஜனம் ஆர்த்தெழவே
பலவானைக் கட்டிடவே – வாரும்

3. கசப்பின் வேரை அகற்றிவிடும்
அன்பைப் பொழிந்தருளும்
சபைப் பேதங்கள் யாவும் நீக்கிவிடும்
ஒற்றுமை ஓங்கச் செய்யும்
அன்பே மொழி உறவின் வழி
உலகத்தை வெல்லும் இனி – வாரும்

## 290

ராஜனே உம் வருகைக்கான
காலக்குறிகள் தெரிகின்றன
இயேசுவே நீர் வரும்போது
விழித்திருப்பவர்கள் பாக்கியவான்கள்
வாரும் இயேசுவே வாரும் வாரும் விரைந்து வாரும்

**சரணங்கள்**

1. மரித்து உயிர்த்தவர் இன்று வருகின்றார்
என்ற நினைவுடன் தாபரிப்போம்
மங்கள நாள் விடியும் காலை
ஏங்கும் கன்னியாய் காத்திருப்போம்

2. செல்வம் எங்கோ உள்ளம் அங்கே
என்ற உண்மையை மனதில் கொள்வோம்
விண்ணிலுள்ள மகிமை வாழ்வை
மண்ணிலே நாம் நடத்தி முடிப்போம்

3. உண்மையுடனே கடமை முடித்தோம்
இன்றும் என்றும் உயர்த்தப்படுவார்
ஜெபித்தும் உழைத்தும் சிலுவை சுமந்தோர்
தேவ வருகையில் பலனடைவார்

# 291

கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால்
அனேகத்தில் அதிகாரியாய்
மாற்றுவேன் என்ற என் நேசரே
நீர் என்னையும் மாற்றிடுவீர்

**சரணங்கள்**

1. வாழ்வில் நேரும் போரட்டங்கள்
தாக்கும் வழிகள் துன்பங்கள்
அத்தனையும் சகித்திடுவேன்
பெலன் தாருமே உன்னத பெலன் தாருமே

2. சோர்வில்லாது ஜெபித்திட
சலித்திடாது உழைத்திட
உத்தமமாய் வாழ்ந்திடவே பெலன் தாருமே
உன்னத பெலன் தாருமே

3. மரணம் என்னை சந்திக்கும்
நாள் வரையும் உண்மையாய்
உத்தமமாய் ஜீவிக்கவே கிருபை தாருமே
உன்னத கிருபை தாருமே

# 292

**பல்லவி**

இயேசு தானே அதிசய தெய்வம்
இன்றும் ஜீவிக்கிறார் நம் தெய்வம்

**சரணங்கள்**

1. அதிசயமே அவர் அவதாரம்
அதிலும் இனிமை அவர் உபகாரம்
அவரை தெய்வமாய் கொள்வதே பாக்யம்
அவரில் நிலைத்து இருப்பதே சிலாக்கியம் – இயேசு

2. இருவர் ஒருமித்து அவர் நாமத்திலே
இருந்தால் வருவார் இருவர் மத்தியிலே
அந்தரங்கத்தில் அழுது நீ ஜெபித்தால்
அவர் கரத்தால் முகந்தொட்டு துடைப்பார் – இயேசு

3. மனிதன் மறுபிறப்படைவ தவசியம்
மரித்தால் இயேசுவால் அடையும் ரகசியம்
மறுரூபமாகி மகிபனைத் தேடு
இறைவனோடு பரலோகம் சேரு – இயேசு

## 293

எங்கள் தேவ ஆவியே எங்கள் நடுவில் வாருமே
இந்த இடமும் அசைத்திடவே
இப்போ இறங்கி வாருமே

**சரணங்கள்**

1. பெலவீனம் போக்கும் எங்கள் ஆவியே
பெலன் ஈய இந்த வேளை வாருமே
வல்லமையாய் உமக்காக வாழ்ந்திட
உந்தன் தூய ஆவி தாருமே – எங்கள்

2. வியாதியைப் போக்கும் எந்தன் வல்லவரே
இந்த வேளை எங்கள் நடுவில் வாருமே
விடுதலை பெற்று உம்மை ஆராதிக்க
வல்லமையாய் கிரியை செய்திடுமே – எங்கள்

3. பரிசுத்தம் நாடி வரும் பரிசுத்தரே
நீர் விரும்பும் பரிசுத்தம் பெற்றிடவே
இந்த வேளை அக்கினியாய் நிரப்புமே
உந்தனுக்காய் நானும் வாழ்ந்திடுவேன் – எங்கள்

# 294

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத்வங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

**சரணங்கள்**

1. தினந்தோறும் உம் கானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமதுபோல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால் - துதி

2. அலை மோதும் இவ்வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும்போது
வழி காட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடடியார்களைக் காருண்யத்தால் - துதி

## 295

சத்திய தேவனின் பூரண வாழ்வை
அனுபவமாய் நாம் பெற வேண்டும் (2)

**சரணங்கள்**

1. தேவனே என்னைப் போதித்து நடத்தும்
தோல்வி வராமல் தாங்கியே நிறுத்தும்
உத்தம பக்தர்கள் சூழ்ந்து நின்றிட
இயேசுவை நோக்கித் தொடர உதவும்

2. துன்பங்கள் தொடர்ந்து வந்திட்ட போதும்
துணிந்து நின்ற யோபுவைப்போல
அனைத்து வளமும் அகன்று போனாலும்
ஆவதுபோல மகிழ்வேன் என்றும்

3. கொண்டது அனைத்தையும் குப்பையாய் கண்ட
லட்சிய வீரர் பவுலினைப்போல
இறுதிநாள் வரையிலும் உண்மையாய் இருந்து
அழியா மகுடம் முடிவிலே பெறுவேன்.

## 296

பெத்தலையில் பிறந்தவரைப்
பேற்றித் துதி, மனமே - இன்னும்

**சரணங்கள்**

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் - இங்கு
   தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார்-பெத்
2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் - இங்கு
   பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் - பெத்
3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
   மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே-பெத்
4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்-இங்கு
   ஆக்களுடை சத்தத்துக்குள் அழுது பிறந்தார் - பெத்
5. இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானை - நாம்
   எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே - பெத்

## 297

ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே
உன்னதத்திலே தாவீதின் மைந்தனுக்கு ஓசன்னா

**சரணங்கள்**

1. முன்னும் பின்னும் சாலேம் நகர், சின்ன பாலர் கூடினார்
அன்றுபோல இன்று நாமும், அன்பாய் துதி பாடுவோம்
2. சின்னமறி மீதிலேறி, அன்பர் பவனிபோனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்
3. பாவமதைப் போக்கவும், இப்பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசு ராஜா, பவனியாகப் போகிறார்.
4. பாலர்களின் கீதம் கேட்டு பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் விணையோடு பாடி தாளைமுத்தி செய்குவோம்
5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும் திரியேகரை போற்றுவோம்

# 298

1. பலியீடத்திலென்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருச்சித்தம்போல
ஆண்டு நடத்திடுவீர்

**பல்லவி**

கல்வாரி அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

**சரணங்கள்**

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னைக்
காத்துமக்காய் நிறுத்தி – கல்வாரி

3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும் – கல்வாரி

4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம்மாய
தேவா அருள் செய்குவீர் – கல்வாரி

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் – கல்வாரி

## 299

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

**சரணங்கள்**

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுமே கிருபை
வாழ் நாளெல்லாம் அதுபோதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே – தம்

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே – தம்

3. தினம் அதிகாலையில் தேடும் புதுகிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே – தம்

4. மாபரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை
மூடும் திரை கிழிந்திடவே
தைரியமாய் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே – தம்

5. ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியமும் கிருபை
என்றும் மறவேன் வாக்குதத்தம்
நீதியுமே சமாதானமே
நிலைத்திருக்கும் கிருபை தாருமே – தம்

6. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெபவரம் கிருபை தாருமே – தம்

7. கர்த்தர் வெளிப்படும்நாள் அளித்திடும் கிருபை
காத்திருந்தே அடைந்திடவே
இயேசுவே உம்மை சந்திக்கவே
இரக்கமாய் கிருபை தாருமே – தம்

# 300

1. மாறிடா எம் மா நேசரே - ஆ!
மாறாதவர் அன்பெந் நாளுமே
கல்வாரிச் சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே

**பல்லவி**

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணையேதும் வேறில்லையே - (2)

**சரணங்கள்**

2. பாவியாக இருக்கையிலே - அன்பாய்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே ஆ!

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் - தம்
உள்ளம்போல நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே ஆ!

4. ஆவியால் அன்பைப் பகர்ந்திட - தூய
தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க ஆ!

5. நியாயவிதி தினமதிலே - நீயும்
நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே ஆ!

6. பயமதை நீக்கிடுமே - யாவும்
பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே ஆ!

## 301

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே - எந்தன்
ஆத்துமா உம்மையே
வாஞ்சித்துக் கதறுமே

**அனுபல்லவி**

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

**சரணங்கள்**

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாய் இருக்கிறது
தேவனின் சந்நிதியில்
நின்றிட ஆத்துமா வாஞ்சிக்குமே - மான்

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் ரட்சிப்பினால்
தினமும் துதித்துப் போற்றிடுவாய் - மான்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும்
உம்மைத் தினமும் நினைக்கின்றேன் - மான்

4. தேவரீர் பகற்காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு எந்தன்
வாயிலிருக்கிறதே - மான்

5. கன்மலையாம் தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஏங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ - மான்

## 302

1. இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால் போதும்
நித்தியமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால் போதும்
அல்லேலூயா கூட்டத்தில் நான் மகிழ்ந்தால் போதும்

2. இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டு
வசனமாம் வேலியாலே காக்கப்பட்டு
கறைதிரை அற்ற பரிசுத்தரோடு
ஏழையான் பொன் வீதியில் உலாவிடுவேன்

3. தூதர்கள் வீணைகளை மீட்டும்போது
நிறைவான ஜெயகோஷம் முழங்கும்போது
அல்லேலூயா கீதம் பாடிக்கொண்டு
அன்பராம் இயேசுவோடு அகமகிழ்வேன்

4. முள் கிரீடம் சூட்டப்பட்ட தலையைப் பார்ப்பேன்
பொற்கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன்
வாரினால் அடிபட்ட முதுகைப் பார்த்து
ஒவ்வொரு காயங்களாய் முத்தம் செய்வேன்

5. என்னுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே
எந்தனின் பாக்கிய வீட்டை நினைக்கையிலே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
வர்ணிக்க எந்தன் நாவு போதாதையா

6. ஆஹா! எக்காளம் என்று முழங்கிடுமோ
ஏழை என் ஆவல் என்று தீர்ந்திடுமோ
அப்பா! என் கண்ணீர் என்று துடைக்கிறாரோ
ஆவலாய் ஏங்கிடுதே எனதுள்ளமே

## 303

எந்தன் இயேசுவே உந்தன் நேசமே
எந்தன் உள்ளம் உருகிடுதே
நல்ல பங்கினை நான் அடைந்தேன் திருப்பாதம்
வல்ல பராபரனே சரணம்

**சரணங்கள்**

1. அந்த மாது கண்களின் நீரை
அன்பரே உம் பாதம் ஊற்றினாளே
என் இதயமே தைலக் குப்பியே
என்னை நொறுக்கி ஒப்படைத்தேன் - எந்தன்

2. நன்றி என்றும் நான் மறவேனே
நம்பிக்கை கன்மலை என் இறைவா
எந்தன் துணை நீர் என்னை அறிவீர்
எந்தன் பாரம் தாங்கிடுவீர் - எந்தன்

3. உம்மையன்றி ஆதரவில்லை
உம் முகமே எனக்காறுதலே
கைவிடாமல் காக்கும் கரமே
கண்கள் அதனை நோக்கிடுதே - எந்தன்

4. மெய் விசுவாசபாதையில் செல்ல
மேன்மைமிகும் அழைப்பை அளித்தீர்
அன்பு, தயவு, ஞானம், பொறுமை
இன்னும் கிருபை தந்தருளும் - எந்தன்

5. கேட்டதெல்லாம் அன்புட னீந்தீர்
கூப்பிடும் வேளை செவி சாய்த்தீர்
இந்த உதவி என்றும் மறவேன்
இன்ப துதிகள் ஏறெடுப்பேன் - எந்தன்

6. எந்தன் மேன்மை சிலுவையல்லாமல்
ஏதுமில்லை இந்தப் பாரினிலே
உந்தனுடனே என்னை அறைந்தேன்
உந்தன் குருசில் பங்கடைந்தேன் - எந்தன்

7. இலக்கை நோக்கி ஓடுகின்றேனே
லாபமும் நஷ்டமென்றெண்ணுகிறேன்
ஒன்றே மனதில் உண்டு நினைவில்
சென்றே பரனைக் கண்டிடுவேன் - எந்தன்

## 304

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

**அனுபல்லவி**

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்

**சரணங்கள்**

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்த பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும் – சத்திய
2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும் – சத்திய
3. வேதப் பிரியர் தேவ புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார் – சத்திய
4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும் – சத்திய
5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன் மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே – சத்திய
6. வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும் – சத்திய

இயேசு ராஜாவே உம்மைத் தேடி வந்தோமே - 2
பாவமன்னிப்பு உம்மிடம் உண்டு - உம்மிடம் - 2
பரலோக ராஜ்யமும் உண்டு உண்டு உண்டு

**சரணங்கள்**

1. பாவத்தை மன்னிக்க அதிகாரமுள்ளவரே - 2
பாவியான எங்கள் மீது இரக்கம் கொண்டவரே - 2

2. நோயுற்றபோது மருத்துவர் நீர்தானே - 2
துயர் கொண்ட எங்களுக்கு விடுதலை நீர்தானே- 2

3. சமாதானமின்றி தவித்து நின்றோமே - 2
உள்ளமதில் நீர் வந்து உற்ற துணையானீரே - 2

4. தாழ்மையிலிருந்தேன் தயவாய் நினைத்தீரே - 2
தாகம் கொண்டேன் உம்மில் தாய்போல் காத்தீரே - 2

## 306

அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள் வசிக்கிறார் (2)

**சரணங்கள்**

1. தண்ணீரை ரத்தமாய் மாற்றினார் அதிசயம்–எகிப்து (2)
வெறும் தண்ணீரை திராட்சரசமாய் மாற்றினார் அதிசயம் (2)
2. செங்கடலை இரண்டாகப் பிரித்திட்டார் அதிசயம் (2)
உயர் காற்றை தம் ஆணையாலே அடக்கினார்
3. குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம் (2)
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார் அதிசயம் (2)
4. பாவியான என்னையும் உயர்த்தினார் அதிசயம் (2)
ஏழை என் மீதும் நேசக் கரம் நீட்டினார் அதிசயம் (2)

## 307

1. அடவி தருக்களின் இடையில்
   ஒரு நாரகம் எந்த வண்ணம்
   விசுத்தரின் நடுவில் காணுந்நே
   அதி ஸ்றேடனாம் யேசுவினே

**பல்லவி**

வாழ்ந்துமே என்றெப்றியநே
ஜீவ காலமெல்லாம் ஈமரூ யாத்றயில்
நந்தியோடெ ஞான் பாடிடுமே (2)

**சரணங்கள்**

2. பதிநீர் புஷ்பம் சரோனின் அவன்
   தாமரயுமே தாழ்வரயில்
   விசுத்தரில் அதி விசுத்தனவன்
   மா சௌந்தர்ய ஸம்பூர்ணநெ - வாழ்த்துமே
3. பகர்ந்த தைலம் போல் நின் நாமம்
   பாரில் சௌரப்பியம் விசுந்நதால்
   பழி துஷிநிந்ந நெருக்கங்ஙளில்
   என்னெ சுகந்தமாய் மாற்றிடணே - வாழ்த்துமே
4. மனக்ளேஷ தரங்ஙங்ஙளால்
   துக்க ஸாஹரத்தில் முங்ஙும்போள்
   திருக்கரம் நீட்டி எடுத்தணச்சு
   பயப்படெண்டா எந்நுரைச்சவநே - வாழ்த்துமே
5. திருஹிதம் இஹெ திகச்சிடுவான்
   இதோ ஞான் இப்போள் வந்நிடுந்நே
   என்றெ வேலயே திகச்சு கொண்டு
   நின்றெ முன்பில் ஞான் நிந்நிடுவான் - வாழ்த்துமே

## 308

1. அத்திமரம் துளிர்விடாமற் போனாலும்
   திராட்சச்செடி பழம் கொடாமற் போனாலும்
   ஒலிவமரம் பலனற்றுப் போனாலும்
   நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் (2)

2. வயல்களில் தானியம் இன்றிப் போனாலும்
   மந்தையிலே முதலற்றுப் போனாலும்
   தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்
   நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாருப்பேன் (2)
   - அத்தி

3. நதிகளில் தண்ணீர் வற்றிப் போனாலும்
   நாவறண்டு நான் மயங்கி வீழ்ந்தாலும்
   உடலழிந்து உயிர் பிரிந்துப் போனாலும்
   நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாருப்பேன் (2)
   - அத்தி

4. வீட்டினிலே பணமின்றிப் போனாலும்
   நிந்தனையும் துன்பங்கள் வந்தாலும்
   தீமையான பொய்மொழி சொன்னாலும்
   நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் (2)
   - அத்தி

## 309

அபிஷேகிக்கும் எந்தன் இயேசு
என் ஆறுதல் தேறுதல் இயேசு
நீர் என்னிலே நான் உம்மிலே
மகிழ்ந்திடவே நிரப்பிடும்

**சரணங்கள்**

1. அதிசயமானவர் இயேசு
ஆலோசனைக் கர்த்தரும் அவரே
என்மேல் அவர்தம் கண்ணை வைத்தே
அருமையாக நடத்திடுவார் - அதிசய

2. மேய்ப்பரும் மீட்பரும் இயேசு
என் உள்ளத்தின் ஆனந்தம் அவரே
பரவசத்தால் நான் பாடிடுவேன்
பரிசுத்தரை துதித்திடுவேன்- மேய்ப்ப

3. உன்னதமானவர் இயேசு
உயர் அடைக்கலம் தந்தவர் அவரே
நித்தியமாய் நடத்திடுவார்
நிதம் அவரை துதித்திடுவேன் - அபிஷே

**சரணங்கள்**

1. அருணோதயம் எழுந்திடுவோம்
பரனேசுவை ஸ்துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுற வாடவும்

2. இதைப் போன்றொரு அருணோதயம்
எம்மை சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம் ஜோதி சூரியனாம்
எந்தன் நேசரெழும்பும் நாள்

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையாம் இயேசு காருண்யம்
ஒவ்வொன்றாயிதை தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
பூமி விட்டுமே போய் விட்டார்
என்றாலும் நமக்கிந்த நாளையும்
தந்த நேசரைத் துதிப்போம்

5. நான் நிர்வாணியாய் வந்த வண்ணமே
நிர்வாணியாகப் போகின்றேன்
கூடச் செல்லவும் பூவிலொன்றுண்டோ
நாடிப் போமந்த நாட்டிற்கே

6. ஆ! என் நேசரின் அன்பை யெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆ! என்நேச ரோர்நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

7. பார் தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாவரின் கானகந் தனில்
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

8. கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே கைவிடாதேயும்!
ஆசையோடு நான் வாரெனென் துக்கம்
பாசமா யங்கு தீர்ந்திடும்

# 311

1. "அருள் ஏராளமாய்ப் பெய்யும்"
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

**பல்லவி**

அருள் ஏராளம், அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாய் அல்ல
திரளாய் பெய்யட்டுமே

**சரணங்கள்**

2. "அருள் ஏராளமாய்ப் பெய்யும்"
மேக மந்தார முண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

3. "அருள் ஏராளமாய்ப் பெய்யும்"
இயேசு வந்தருளுமே
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்

4. "அருள் ஏராளமாய்ப் பெய்யும்"
பொழியும் இசஷணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே

ஆயிரம் நாவுகள் போதா
ஆண்டவா உந்தனைப் பாட
கணக்கில்லா நன்மைகள் செய்தீர்
கர்த்தா உம்மைப் போற்றிப்பாட

**சரணங்கள்**

1. காலமெல்லாம் உந்தன் அன்பால்
கரம் பிடித்தென்னை நடத்தி
காத்த உம் கிருபையை நினைத்தே
கர்த்தா உம்மைப் போற்றிப் பாட – ஆயிரம்

2. அலை மோதி ஆடும் படகாய்
அலைந்த என்னை நீர் காண்பீர்
ஆணிகள் பாய்ந்த உம் கைகள்
ஆண்டு நடத்தும் உம் அன்பால் – ஆயிரம்

3. வானமும் பூமி ஆழ்கடலும்
வல்லவா நீரே எனச் சொல்ல
வல்ல நல்ல தேவா உம் பாதம்
வந்தேன் ஏசையா நான் ஏழை – ஆயிரம்

## 313

ஆச்சரியமே! அதிசயமே
ஆண்டவர் செயல்கள் ஆதி, பக்தரிடம்

**சரணங்கள்**

1. செங்கடல் இரண்டாய் பிரிந்து போக
சொந்த ஜனங்களைக் கடத்தினாரே
இஸ்ரவேலின் துதிகளாலே
ஈன எரிகோ வீழ்ந்ததுவே – ஆச்சரியமே

2. ஏழுமடங்கு எரி நெருப்பில்
ஏழை தம் தாசருடன் நடந்தார்
தானியேலைச் சிங்கக் கெபியில்
தூதன் துணையால் காத்தனரே – ஆச்சரியமே

3. பனி மழையை நிறுத்தினாரே
பக்தன் எலியா தன் வாக்கினாலே
யோசுவாவின் வார்த்தையாலே
யேகும் சூரியன் நின்றதுவே – ஆச்சரியமே

4. மதிலைத் தாண்டி சேனைக்குள் பாயும்
மாபெலன் தேவனிடம் அடைந்தான்
வீழ்த்தினானே கோலியாத்தை
வீரன் தாவீது கல்லெறிந்தே – ஆச்சரியமே

5. நம் முற்பிதாக்கள் நம்பின தேவன்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடாரே
தம்மை நோக்கி வேண்டும்போது
தாங்கி நம்மை ஆதரிப்பார் – ஆச்சரியமே

## 314

ஆராதிக்கக் கூடினோம்
ஆர்ப்பரித்துப் பாடிடுவோம்
வல்ல இயேசு நம் தேவன்
என்றென்றும் அவர் நம் தேவன்

**சரணங்கள்**

1. தேவ வாசஸ்தலம் என்றும் இன்பமானதே
மகிமை தேவன் கிறிஸ்து இயேசு பிரசன்னம் இங்கே
மகிமை மகிமையே! என் மனம் பாடுதே
மக்கள் மத்தியில் என்றும் மகிழ்ச்சி பொங்குதே - ஆரா

2. சீயோன் பெலனே! வெற்றி சிகரமே!
சேனைகளின் கர்த்தர் இயேசு கிரியை செய்கிறார்
ஜீவன் பெலனும் ஆசீர்வாதமே
நித்திய ஜீவன் இன்றும் என்னில் ஓங்கி நிற்குமே
- ஆரா

3. கர்த்தர் சமூகம் என் வாழ்வின் மேன்மையே
கர்த்தர் இயேசு ராஜன் என்றும் உயர்ந்து நிற்கிறார்
அல்லேலூயா என் ஆவி பாடுதே
ஆராதனை அழகு என்னை கவர்ந்து கொண்டதே
- ஆரா

4. தேவ சாயல் சபையில் தோன்றுதே
தேவர் நடுவில் இயேசு நியாயம் செய்கிறார்
தேவ சேவையே என் கெம்பீர சேவை
தேவாவியில் நிறைந்து நானும் ஆடிப்பாடுவேன்
- ஆரா

## 315

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன் (2)
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

**சரணங்கள்**

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
   நல்லவரே உம்மை ஆராதிப்பேன் – ஆரா
2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
   பணிந்து குனிந்து ஆராதிப்பேன் – ஆரா
3. தூதர்களோடு ஆராதிப்பேன்
   ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன் – ஆரா
4. குடும்பத்தோடு ஆராதிப்பேன்
   குதூகலத்தோடு ஆராதிப்பேன் – ஆரா
5. பாடி மகிழ்ந்து ஆராதிப்பேன்
   ஆடிப் புகழ்ந்து ஆராதிப்பேன் – ஆரா
6. கைத்தாளத்தோடு ஆராதிப்பேன்
   குதித்து, குதித்து ஆராதிப்பேன் – ஆரா

## 316

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

**சரணங்கள்**

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும் இந்த வேளையிலே
2. பத்மு தீவினிலே பக்தனை தேற்றினீரே
என்னையும் தேற்றி ஆற்ற வாரும் இந்த வேளையிலே
3. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்கவாரும் இந்த வேளையிலே
4. நேசரின் மார்பினிலே இனிதாய் சாய்ந்திடவே
ஏக்கமுற்றேன் விரும்பி வந்தேன் உந்தன் பாதத்திலே
5. ஆவியின் வரங்களினால் என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும் இந்த வேளையிலே

## 317

**பல்லவி**

ஆனந்தமே பரமானந்தமே இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

**சரணங்கள்**

1. இந்தப் புவி ஒரு சொந்தமல்ல வென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் - ஆனந்தமே

2. கர்த்தாவே நீரெந்தன் காருண்யக் கோட்டையே
காரண மின்றி கலங்கேனே யான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே - ஆனந்தமே

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம்ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத் தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்றுநாம்
ஜெயக்கீதம் பாடி மகிழ்ந்திடலாம் - ஆனந்தமே

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கைவேலையல்லாத வீடொன்றை மேலே நான்
செய்வேன் எனச்சொல்லிப் போகலையோ - ஆனந்தமே

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார் - ஆனந்தமே

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
என் நேசர் தன்முக ஜோதியதே யல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை - ஆனந்தமே

## 318

**பல்லவி**

இயேசு என் பரிகாரி – இன்ப
இயேசு என் பரிகாரி – என்
ஜீவிய நாட்களெல்லாம் – இன்ப
இராஜா என் பரிகாரி

**சரணங்கள்**

1. என்ன துன்பங்கள் வந்தாலும்
என்ன வாதைகள் நேர்ந்தாலும்
என்ன கஷ்டங்கள் சூழ்ந்தாலும் – இன்ப
இராஜா என் பரிகாரி – இயேசு

2. சாத்தான் என்னைத் எதிர்த்தாலும்
சத்துரு என்னை தொடர்ந்தாலும்
சஞ்சலங்கள் வந்தபோதும் – இன்ப
இராஜா என் பரிகாரி – இயேசு

3. பணக் கஷ்டங்கள் வந்தாலும்
மனக் கஷ்டங்கள் நேர்ந்தாலும்
ஜனம் என்னை வெறுத்தாலும் – இன்ப
இராஜா என் பரிகாரி – இயேசு

4. எனக்கென்ன குறை உலகில்
என் இராஜா துணை எனக்கு
என் ஜீவிய நாட்களெல்லாம் – இன்ப
இராஜா என் பரிகாரி – இயேசு

**319** இயேசுராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே (2)– இயேசு

**சரணங்கள்**

1. அல்லேலூயா துதி மகிமை – என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசுராஜா எங்கள் ராஜா
என்றும் போற்றிடுவோம் – ஓசன்னா
2. துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
கர்த்தர் நம்முடனே – ஓசன்னா
3. யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை முன்னே வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
மீட்பர் நம்முடனே – ஓசன்னா

## 320

இயேசுவின் நாமம் ஓங்கிடவே
நேசமுடன் புகழ் பாடிடுவோம்
காசினியில் நிகர் வேறதற்கில்லை
தாசர்கள் நாம் துதி சாற்றிடுவோம்

**சரணங்கள்**

1. வானமும் பூமியும் யாவையுமே
வார்த்தையினால் உண்டாக்கினவர்
என்னை மண்ணென்று நினை வாக்கினவர்
எனக்கென்றும் சொந்தமவர் – இயேசுவின்

2. அற்புதமாம் அதிசயமாம்
ஆண்டவர் இயேசுவின் நாமமதே
பேய் நடுங்கும் கடும் நோய் அகலும் – நல்
பேர் புகழ் ஓங்கிடும் நாமமதே – இயேசுவின்

3. வாழ்ந்திடும் வானோர் பூதலத்தோர்
வாழ்த்தி வணங்கிடும் நாமமதே
மானிடரின் முழங்கால் முடங்கும் மெய்
மேன்மை உயர்திரு நாமமதே – இயேசுவின்

4. சாவு பயங்கள் நீங்கிடவே
சத்துரு மேல் ஜெயம் பெற்றிடவே
சோதனையில் பல வேதனையில் – என்
சொந்த அடைக்கல நாமமதே – இயேசுவின்

5. வந்துன்னைச் சேர்ப்பே னென்றுரைத்த
வல்ல கிறிஸ்தேசுவின் நாமமதே
நீடூழியாய் நித்ய ராஜ்யத்திலே – தம்
நாமமதை நான் போற்றிடுவேன் – இயேசுவின்

# 321

1. இயேசுவைப்போல் அழகுள்ளோர் யாரையும் இப்பூவினில்
இதுவரை கண்டதில்லை காண்பதுமில்லை

**பல்லவி**

பூரண அழகுள்ளவரே பூவில் எந்தன் வாழ்க்கையதில்
நீரே போதும் வேறே வேண்டாம் எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிட மாட்டேன் வெறும்

**சரணங்கள்**

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை மீட்டுக்கொண்டீரே
சம்பூரணமாக என்னை உந்தனுக்கீந்தேன்

3. எருசலேம் குமரிகள் எந்தனை வளைந்தோராய்
உம்மேல்உள்ள எந்தன்அன்பை நீக்கமுயன்றார்

4. லோக சுகமேன்மை எல்லாம் எந்தனைக் கவர்ச்சித்தால்
பாவ சோதனைகளொல்லாம் என்னை சோதித்தால்

5. நீர்மேல் மோதும் குமிழியைப்போல் மின்னும் ஜட மோகமே
என்மேல் வந்து வேகமாக மோதியடித்தால்

6. தினந்தோறும் உம்மில் உள்ள அன்பு என்னில் பொங்குதே
நேசரேநீர் வேகம்வந்து என்னைச் சேருமே

## 322

இரத்தக் கோட்டைக்குள்ளே
நான் நுழைந்துவிட்டேன்
இனி எதுவும் அணுகாது
எந்தத் தீங்கும் தீண்டாது

**சரணங்கள்**

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய் சிலுவையில் பலியானார்
பாவத்தை வென்றுவிட்டார் - இரத்த

2. இம்மட்டும் உதவின எபினேசரே
இனிமேலும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனைவிட
என் தேவன் பெரியவரே - இரத்த

3. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக்கொண்டீர்
அணைத்துச் சேர்த்துக்கொண்டீர் - இரத்த

4. தாய்தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப்போல நடத்துகின்றீர்
அபிஷேகம் செய்கின்றீர் - இரத்த

5. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரேஎன் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன். - இரத்த

இனியும் உம்மோடு கிட்டிச் சேர
ஆவியின் மாரியை ஊற்றும்
ஆதி அன்பின் ஆழங்களில் என்னை
ஆழ்த்தியே கிருபைகள் ஈந்திடுமே

**சரணங்கள்**

1. பெலவீனன் என் அருகில்
பெலன் தாரும் வந்தெனக்காய்
உம்மைபோல் நான் கனிதரவே
உம தாவியால் நிறைத்திடுமே – இனியும்

2. நல்ல திராட்சைச்செடி நீரல்லோ
நானும் இணைந்து வாழ்ந்திடவே
எல்லா நாளும் கனி தந்திட
இயேசுவே சுத்தமாக்கிடுமே – இனியும்

## 324

இயேசு கிறிஸ்துவின் அன்பு
என்று மாறாதது
இயேசுகிறிஸ்துவின் மாறா கிருபை
என்றும் குறையாதது

**சரணங்கள்**

1. பாவி என்றுன்னை இயேசு தள்ளவேமாட்டார்
ஆவலாய் உன்னை இயேசு அழைக்கின்றாரே - 2
தயங்கிடாதே தாவி ஓடிவா
தந்தை இயேசுவின் சொந்தம் கொள்ள வா - 2

2. உன் மீறுதல்கட்காய் இயேசு காயங்கள் பட்டார்
உன் அக்கிரமங்கட்காய் அவர் நொறுக்கப்பட்டார்
உனக்காகவே அடிகள் பட்டார்
உன்னை உயர்த்த தன்னைத் தாழ்த்தினார் - இயேசு

# 325

இஸ்ரவேலின் ஜெய பெலனே!
சேனை அதிபதியே!
முன்னே செல்லும் எங்கள் இயேசு!
வெற்றி சிறந்தவரே!

**சரணங்கள்**

1. எகிப்தின் ஜனத்தை இருளும் பின்ன
திகைத்துத் தவித்தனரே
ஒளியில் என்றும் இஸ்ரவேலை
நடத்தி நிதமே காத்திடுவார் - இஸ்ரவேலின்

2. கடலைப் பிளந்து வழியைத் திறப்பார்
கர்த்தர் பெரியவரே
பார்வோன் சேனை தொடர்ந்து வரினும்
துணிந்து முன்னே சென்றிடுவோம் - இஸ்ரவேலின்

3. தேவ ஜனத்தின் எதிராய் தோன்றும்
சத்துரு வீழ்ந்திடுவான்
ஓங்கும் புயமும் தேவ கரமும்
தாங்கி நம்மை நடத்திடுமே - இஸ்ரவேலின்

4. பாலைவனத்தில் பசியை ஆற்ற
மன்னா அளித்தனரே
நமது ஆத்ம தாகம் தீர்த்து
புதிய பெலனை அளித்திடுவார் - இஸ்ரவேலின்

5. பொங்கி எழும்பும் யோர்தான் நதியை
தடுத்து நிறுத்தினாரே
அல்லல் யாவும் நீக்கி நம்மை
அக்கரையில் சேர்த்திடுவார் - இஸ்ரவேலின்

## 326

உன்னத வல்லமையை இறைவா எனக்குத் தாரும்
பரலோக வல்லமையை இந்நேரம் ஊற்றுமையா - உன்னத

**சரணங்கள்**

1. உலர்ந்துபோன எலும்புகளால் உலரப்பட்ட எங்களிலே (2)
   உயிர்தரும் ஆவியைதந்து வீரசேனையாய் மாற்றிடுமே - உன்னத

2. வாக்களித்த வல்லமையை பெந்தேகோஸ்தே நாளினிலே
   பொழிந்த இறைவா எங்களிலும் நிரம்பி வழியசெய்தருளும்- உன்னத

3. அடிமை விலங்குகள் தகர்ந்திடவே அக்கினி ஆவியை ஈந்திடுமே
   தடைகளும், களைகளும் எரிந்திடவே மீட்பின் ஆவியை ஊற்றிடுமே - உன்னத

## 327

ஊற்றப்பட வேண்டுமே உன்னதத்தின் ஆவி
உயிர்ப்பிக்க வேண்டும் எம்மை தேவா
முன்மாரியாக அன்று பொழிந்திட்ட ஆவியே
பின்மாரியாக இன்று பொழிந்திடுமே (2)

**அனுபல்லவி**

எண்ணெய் அபிஷேகமே என் தலையை நனைக்க
ஆவியில் நிரப்புமே பாத்திரம் வழிந்தோடும்
நீச்சல் ஆழம் மூழ்கியே நேசர் அன்பில் மகிழ
அக்கினி அபிஷேகம் எந்தன் ஆவல் தீர்த்திடும்
– ஊற்றப்பட

**சரணங்கள்**

1. தேவமைந்தன் இயேசுவை விசுவாசித்தோம்
போதிக்கும் ஆவியாலே நிறைந்திடுமே – எண்ணெய்
2. ஜெப வேண்டுதலிலே தரித்திருப்போம்
ஜெகத்திலே சாட்சியாக எம்மை நிறுத்தும் – எண்ணெய்
3. ஒருமனதோடு கூடி வந்துள்ளோம்
தேவ புத்திரர் என முத்திரைபோடும் – எண்ணெய்

# 328

எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

**சரணங்கள்**

1. சோராது ஜெபித்திட
   ஜெப ஆவி வரம் தாருமே
   தடையாவும் அகற்றிடுமே
   தயை கேட்டு உம்பாதம் வந்தேன் – எந்தன்

2. உம்மோடு எந்நாளும்
   உறவாட அருள் செய்யுமே
   கர்த்தாவே உம் வார்த்தையை
   கேட்டிடக் காத்திருப்பேனே – எந்தன்

3. நம்பிக்கை இல்லாமல்
   அழிகின்ற மாந்தர்களை
   மீட்டிடும் என் இயேசுவே
   போராடி ஜெபிக்கின்றேன் நாதா – எந்தன்

4. நாளெல்லாம் பாதத்தில்
   கர்த்தாவே அமர்ந்திடுவோம்
   கண்ணீரின் ஜெபம் கேளுமே
   கருணையின் பிரவாகம் நீரே – எந்தன்

5. சகாயம் பெற்றிட
   கிருபாசனம் வந்தேனே
   இரக்கங்கள் ஈந்திடுமே
   என்றென்றும் தயை காட்டும் தேவா – எந்தன்

எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே
எம் பூரண சீயோனே

**அனுபல்லவி**

கன்மலையின் மேலே கழுகுபோல்
உன்னதத்தில் வாழுவோம் – இயேசு
பக்தர்களே ஜெயம் பெற்றே
பிதா முகம் காண்போம்

**சரணங்கள்**

1. ஞானக் கன்மலையே கிறிஸ்தேசு எம் அரணே
வான சீயோனிலே அவர் ஆவியால் பிறந்தோம்
ஏழு தூண்களுடன் திட அஸ்திபாரமுடன்
இயேசுவின் மேல் நின்று வீடாய் நாமிலங்கிடுவோம் – எம்

2. அன்பின் பூரணமே அதிலே பயமில்லையே
அன்பர் இயேசுவிடம் அதை நாடிப் பெற்றிடவே
ஆவியால் நிறைந்தே அவர் அன்பிலே நடந்தே
ஆ! பேரின்ப ஆத்மாவில் ஆனந்தங் கொள்வோம் – எம்

3. மா சமாதானமே விசுவாச நம்பிக்கையே
மா பரிசுத்தமே மரணத்தின் பாடுகளே
தேவ சாயலுமே நம்மில் பூரணம் அடைய
தூய வாழ்வைநாடி நாம் முன்னேறியே செல்வோம் – எம்

4. ஓட்டமே ஜெயமாய் நாமும் ஓடியே முடிக்க
ஒவ்வொரு தினமும் புதிய பெலனடைவோம்
பாவ சாபங்களும் புவி ஆசையும் ஜெயித்தோர்
பாழுலகை வேகம்தாண்டி அக்கரை சேர்வோம் – எம்

5. வாலையும் சுழற்றி வலுசர்ப்பம் தோன்றிடுதே
வீர ஆண்பிள்ளையை விழுங்க வகைதேடுதே
வான அக்கினியால் அதைத் கொளுத்திடுவோம்
வல்லமை மிகுந்தகர்த்தர் இயேசு நாமத்திலே – எம்

6. வானங்கள் வழியே இறங்கி பரன்வருவார்
வாஞ்சையாய் சபையாய் அன்று இயேசுவை சந்திப்போம்
மீட்பின் நாள் நெருங்க தலைகள் உயர்த்திடுவோம்
மத்திய வானவிருந்தில் பங்கடைத்திடுவோம் – எம்

## 330

என் ஆத்துமாவே கலங்கிடாதே
உன்னத தேவன் உன் அடைக்கலமே
வானமும் பூமியும் தானம்விட்டு நிலைமாறினாலும்

**சரணங்கள்**

1. பஞ்சம் பசியோ நிர்வாணமோ
மிஞ்சும் வறுமையோ வந்திடினும்
கொஞ்சமும் அஞ்சாதே
தஞ்சம் தந்து உன்னைத் தாங்கிடுவார் – என்

2. உற்றார் உறவினர் மற்றும் பலர்
குற்றமே கூறித் திரிந்திடினும்
கொற்றவன் இயேசுவுன்னை
பெற்ற பிதாவைப்போல் அரவணைப்பார் – என்

3. நெஞ்சில் விசாரங்கள் பெருகுகையில்
அஞ்சாதே என்றவர் வசனம் தேற்றும்
வஞ்சகன் எய்திடும்
நஞ்சாம் கணைகளைத் தகர்த்திடுவார் – என்

4. வாழ்க்கைப் படகினில் அலைகள் மோதி
ஆழ்த்துகையில் உன்அருகில் நிற்பார்
சூழ்ந்திடும் புயலை நீக்கி
வாழ்ந்திடவே வலக்கரம் பிடிப்பார் – என்

5. மரணமே வந்தாலும் மருளாதே
சரணடைந்தால் தைரியம் தந்திடுவார்
அரணவர் ஆபத்தில்
திரணமாய் மதிப்பாய் உன் ஜீவனையே – என்

6. துன்பப் பாதை செல்ல துணித்திடுவாய்
அன்பர் சென்ற பாதை அதுவேதான்
துன்பமே உன் பங்கு
துன்பமூலம் தேவ ராஜ்யம் செல்வாய் – என்

## 331

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
உம் கிருபை தந்தாலே போதும்
அலைமோதும் வாழ்வில் அலையாமல் செல்ல
உம்கிருபை முன்செல்ல அருளும்

**சரணங்கள்**

1. கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினைக் கண்டித்த கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும் – என்

2. பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்
பாரினில் காரிருள் சேதங்கள் அணுகாமல்
பரமனே என்முன் தீபமாய் வாரும் – என்

3. எதிர்காற்று வீச எதிர்ப்போரும் பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரே
இயேசுவே யாத்ரையில் கரைசேர்க்கும் தேவன்
என்ஜீவ படகின் நங்கூரம் நீரே – என்

## 332

என்னை நிரப்பும் இயேசு தெய்வமே
இன்று நிரப்பும் உந்தன் ஆவியால்

**சரணங்கள்**

1. தேற்றரவாளன் பரிசுத்த ஆவி தேற்றிடவாருமே
ஆற்றலைக்கொடுத்து அன்பால் நிரப்பும் ஆவியேவாருமே
- என்னை

2. வரங்களைக் கொடுத்து வாழவைக்கும் வள்ளலே வாருமே
கனிகளால்நிரப்பி காயங்கள் போக்கும் கருணையே வாருமே
- என்னை

3. கோபங்கள் போக்கி சுபாவங்கள் மாற்றும் சாந்தமே வாருமே
பாவங்கள்கழுவி பரிசுத்தமாக்கும் பரமனே வாருமே
- என்னை

## 333

எந்தன் இயேசு வல்லவர்
என்றும் நடத்துவார்
ஆ! பேரின்பம் அவர்என் தஞ்சமே
அனுதினம் அன்பருடன் இணைந்து செல்லுவேன்

**சரணங்கள்**

1. அற்புதமாம் அவர் அன்பு
அண்டினோர் காக்கும் தூய அன்பு
இப்பூவினில் இவரைப்போல் அன்பர் எவருண்டு
மாறாதவர் எந்தன் இயேசு என்றும் பற்றிடுவேன்
- எந்தன்

2. சர்வ வல்ல தேவனிவர்
சாந்தமும் தாழ்மை உள்ளவராம்
எந்நாளுமே எந்தனையே தாங்கிடும் வல்லவராம்
நம்பிடுவேன் என்றென்றுமாய் எந்தன் இயேசுவை
- எந்தன்

3. குற்றங்களை மன்னித்தவர்
தம்மண்டை என்னைச் சேர்த்துக் கொண்டார்
எந்தன் நேசர் ஒப்பற்றவர் - பொறுமை நிறைந்தவர்
சார்ந்திடுவேன் இந்நிலத்தே - எந்தன் தஞ்சமிவர்
- எந்தன்

4. கர்த்தர் எந்தன் மேய்ப்பராவார்
சீரான பாதை நடத்திடுவார்
எந்தன் வழி செம்மையாக்கி ஏற்று நிறுத்திடுவார்
எந்தன் நேசர் காத்திடுவார் என்றும் பின்செல்லுவேன்
- எந்தன்

5. ஜெயங்கொண்ட வேந்தனிவர்
பாதாளம் யாவும் வென்றவராம்
வெற்றியுடன் முன்சென்றிட கிருபை நல்கிடுவார்
முன்செல்லுவேன் இயேசுவுடன் என்றும் ஆனந்தமே
- எந்தன்

# 334

1. என் மீட்பர் சென்ற பாதையில்
நீ செல்ல ஆயத்தமா
கொல்கதா மலை பாதையில்
பங்கைப் பெறுவாயா

**பல்லவி**

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

**சரணங்கள்**

2. ஊரார் இனத்தார் மத்தியில்
துன்பம் சகிப்பாயா
மூர்க்கர் கோபிகள் நடுவில்
திடனாய் நிற்பாயா - சிலுவையை

3. தாகத்தாலும் பசியாலும்
தோய்ந்தாலும் நிற்பாயா
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா - சிலுவையை

4. பாவாத்மாக்கள் குணப்பட
நீ தத்தம் செய்வாயா
கோழை நெஞ்சர் திடப்பட
மெய்யுத்தஞ் செய்வாயா - சிலுவையை

5. லோகத்தார் மாண்டு போகிறார்
மெய் வீரர் இல்லாமல்
பார் மீட்பர் ஜீவனை விட்டார்
தொங்கிச் சிலுவையில் - சிலுவையை

6. வாழ் நாளெல்லாம் நிலை நின்று
சிலுவையை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மேல் வீட்டைச் சேருவேன் - சிலவையை

## 335

**பல்லவி**

என்ன தியாகம் என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ

**சரணங்கள்**

1. விண் தூதர் போற்றிடும் உம் பிதாவையும்
விட்டடிறங்கி வந்தீரே
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரைய்யா
மானிடர்மேல் அன்பினால் – என்ன

2. ஜெனித்த நாள் முதலாய் – கல்வாரியில்
ஜீவனையும் ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய்க் கண்டீரையா
பாவியை மீட்பதற்காய் – என்ன

3. தலையைச் சாய்த்திடவோ உமக்கு ஓர்
ஸ்தலமோ எங்குமில்லை
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ
முன் பாதை காட்டினீரே – என்ன

4. பாடுகளல்லவோ உம்மை மகிமையில்
பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் ஜீவனையும் வைத்தே – என்ன

5. துன்பம் எனக்கினியேன் என் அருமை
இயேசு தான் என் பங்கல்லோ
நேசரின் பின்னே போகத் துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால் – என்ன

## 336

என்னை உண்டாக்கிய என் தேவாதி தேவன்
அவர் தூங்குவதும்மில்லை உறங்குவதுமில்லை

**சரணங்கள்**

1. என்மேல் அவர் கண்ணை வைத்து, ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையில் நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே
- என்னை

2. பெலவீன நாட்களிலே பெலன்தந்து தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம் நமக்களிப்பார்
ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும் துருகமும் பெலன் அவரே
- என்னை

3. ஆவியான தேவனுக்கு ரூபமொன்று மில்லையே
ரூபமில்லை ஆகையால் சொரூபமொன்று மில்லையே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின் இருதயந் தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர்
- என்னை

# 337

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே – நான்
தாழ்ச்சி அடையேன் என்றுமே
அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்

**சரணங்கள்**

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை – தன்
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தினிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார் – கர்த்தர்

2. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும் நான்
எப்பெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே
– கர்த்தர்

3. சத்ருக்கள் முன்பில் எனக்காகவே – அவர்
பந்தியொன்றை ஆயத்தம் செய்தார்
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து
என் பாத்திரம் நிரம்பியே வழியச்செய்தார்
– கர்த்தர்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை என்னைத் தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன் – கர்த்தர்

# 338

கல்வாரி குருசண்டை ஏங்கி நின்றேன்
திரு இரத்தம் புரண்டோடி பெரு வெள்ளமாய்
என் மீது பாய்ந்திட நான் சுத்தமாயினேன்
என் பாவம் நீங்கினதே

**சரணங்கள்**

1. மண் வாழ்வில் இன்பங்கள் வெறுத்துமே
விண் வாழ்வின் நன்மைகள் நாம் பெற்றிட
உன்னத ஜீவனை என்னில் நீர் ஈந்ததால்
உம்மை என்றும் துதிப்பேன்
என்றும் உம்மைத் துதிப்பேன் – கல்வாரி

2. உம் சித்தம் செய்து நான் ஜீவித்திட
உம் பெலனாம் என்னை தேற்றிடுமே
ஆத்தும பாரம் நான் பெற்றென்றும் உமக்காய்
ஊழியம் செய்திடவே
தேவா அருள் செய்குவீர் – கல்வாரி

3. உன்னத ஆவியை என்னில் ஊற்றும்
இன்னிலம் தன்னில் நான் பிரகாசிக்க
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
உம் கரம் பற்றிடுவேன்
உம் வழி நான் நடப்பேன் – கல்வாரி

4. சிலுவைக் காட்சியைக் கண்டிடுவேன்
அதை எண்ணி தினமும் வாழ்ந்திடுவேன்
சாந்த சொரூபியாம் இயேசுவின் சிலுவையில்
சாய்ந்திடுவேன் நானும்
இயேசுவை என்றும் விடேன் – கல்வாரி

5. என்னையே முற்றிலும் உம் கரத்தில்
ஜீவ பலியாகப் படைக்கிறேன்
மன்னவா விண்மீது நீர் வரும் வேளையில்
ஏழையான் காணப்பட
நீர் என்னைக் காத்துக்கொள்வீர் – கல்வாரி

## 339

காணாத ஆட்டின் பின்னே - கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார்
அன்போடு உன்னை அழைக்கின்றாரே
இன்றே திரும்பி நீ வா

**சரணங்கள்**

1. முள்ளும் புதரும் காடும் மலையும்
உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்
சிற்றின்ப சேற்றினில் நீ சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய் - காணாத

2. சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி
கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்
யோனாவைப் போலநீ போனாயல்லோ
இயேசுபரன் வாக்கு வெறுத்தாயல்லோ - காணாத

3. என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்
இயேசுவின் பாதை நீ விட்டோடாதே
நீதி நிறைந்த தம் கரங்களை
நீட்டி உன்னை தாங்கி பயம் நீக்குவார் - காணாத

4. துன்மார்க்க ரெல்லாம் சன்மார்க்கரோடே
தேவ கோபாக்கினையால் மாளுவாரே
கர்த்தரின் பந்தியில் நீ பங்கடைய
கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய் - காணாத

5. எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ
கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே
கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா - காணாத

## 340

கூடாதது ஒன்றுமில்லையே (4)
தேவனால் கூடாதது
கூடாதது ஒன்றுமில்லையே
மனுஷரால் கூடாதது தேவனால் கூடுமே (4)

**சரணங்கள்**

1. ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சொஸ்தமானானே

2. லாசருவே வா என்றாரே
மரித்தவன் பிழைத்தெழுந்தானே
எழுந்திரு என்று சொன்னாரே
யவீரு மகள் பிழைத்தாளே

3. வஸ்திரத்தை தொட்டாளே
வல்லமை புறப்பட்டதே
எப்பத்தா என்று சொன்னாரே
செவிட்டு ஊமையன் பேசினானே

4. கடலின் மேல் நடந்தாரே
கடும் புயல் அதட்டினாரே
பாடையைத் தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே

5. நீ விசுவாசித்தாலே
தேவ மகிமை காண்பாயே
பெலப்படுத்தும் கிறிஸ்துவாலே
பெரிய காரியம் செய்வாயே

6. பாவங்கள் போக்குவாரே
சாபங்கள் நீக்குவாரே
தீராத நோய்களையும்
தீர்ப்பார் கிறிஸ்து இயேசுவே

# 341

சிலுவையின் நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப் பாறிடுவேன் - ஆ - ஆ

**அனுபல்லவி**

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில் - சிலுவை

**சரணங்கள்**

1. பாவப் பாரச் சுமையதால் சோர்ந்து
தளர்ந்ததென் ஜீவியமே - ஆ - ஆ
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால்
இளைப்படையாது மேலோகில்
ஏகுவேன் பறந்தே வேகம் - சிலுவை

2. எவ்வித கொடிய இடறுக்கும் அஞ்சேன்
இயேசுவை சார்ந்து நிற்பேன் - ஆ - ஆ
திருமறை இன்னிசை நாதம்
தேனிலுமினிய வேதம்
தருமெனக்கானந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம் - சிலுவை

## 342

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே
சர்வ சிருஷ்டியை காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றிடுவோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்
ஆ ஆ ஆ அல்லேலூயா (7) ஆமென்

**சரணங்கள்**

1. வானம் பூமி ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை என்றும் மாறாதே
இவ்வாழ்க்கை அழிந்து மறைந்துபோம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான் – ஆ... ஆ...

2. கர்த்தர் கரத்தின் கிரியைகள் நாங்கள்
கிருபை எங்கள் மேல் ஊற்றுவீரே
ஆவி ஆத்துமா சரீரம் உம் சொந்தமே
அதை சாத்தான் தொடாமல் காப்பீரே – ஆ... ஆ...

3. எல்லா மனிதர்க்கும் ஆண்டவர் நீரே
எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றே
எங்கள் இதயத்தை உம்மிடம் படைக்கின்றோமே
ஏங்குகின்றோம் உம் ஆசீர்பெறவே – ஆ... ஆ...

4. சபையின் அஸ்திபாரமும் நீரே
சபையின் தலையானவர் நீரே
சபையின் போஷித்து பாதுகாத்தென்றுமே
சேர்த்துக்கொள்ள வருபவர் நீரே – ஆ... ஆ...

# 343

சிலுவை மீதே தொங்கிய இயேசு
என்னில் அன்பு கூர்ந்தார்
நேசரின் அன்பு எந்தன் உள்ளத்தை
நெருக்கி ஏவிடுதே

**சரணங்கள்**

1. சுகந்த வாசனை பலியாய்த் தம்மை
உவந்து ஜீவன் தந்தார்
என்னில் அன்பு கூர்ந்ததாலே
என்னை அவருக்கே அர்ப்பணித்தேன் - சிலுவை

2. கிறிஸ்து இயேசு அன்பிலிருந்து
பிரிக்க யாரால் கூடும்?
உயர்வோ தாழ்வோ துன்பம் பசியோ
முற்றும் ஜெயம் நான் பெற்றிடுவேன் - சிலுவை

3. எம்மில் அன்பு கூர்ந்ததாலே
தம்மைத் தியாகம் செய்தார்
அவருடன் நான் அறையுண்டேனே
அவரே என்னில் ஜீவிக்கின்றார் - சிலுவை

4. அறிவுக் கெட்டாநேசர் அன்பில்
அகலம் ஆழமுண்டோ
பகையாய் நின்ற பாவம் தகர்த்தார்
சபையில் மகிமை செலுத்திடுவோம் - சிலுவை

5. முடிவு வரையும் அன்பு கூர்ந்தார்
அடிமை வாழ்வடைய
அவரின் வருகை நாளில் நானும்
அவரைப் போல மாறிடுவேன் - சிலுவை

## 344

தாகம் தீர்க்கும் ஜீவ நதி
தரணியில் உண்டோ எனத் தேடினேன்

**சரணங்கள்**

1. அருவியின் நீரை பருகி விட்டேன்
ஆற்றினில் ஊற்றை அருந்தி விட்டேன்
துரவுகள் கடலும் தாகம் தீர்க்கவில்லை
தூரத்துக் கானலாய் ஆகியதே – தாகம்

2. கானகம் சோலையும் தேடிய பின்
வானகம் நோக்கிய அபயமிட்டேன்
கண்களை மெல்ல நானும் திறந்திட
கன்மலை ஒன்று தோன்றக் கண்டேன் – தாகம்

3. மதகுபோல் ஐந்தில் நீர் சுரக்க
மகிழ்வுடன் பருகினேன் தாகமில்லை
என் ஆத்ம தாகம் தீர்த்திட்ட கன்மலை
என் நேசரேசுவை வாழ்த்துகிறேன் – தாகம்

# 345

தாவீதைப் போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன்
இயேசப்பா ஸ்தோத்திரம் (2)

**சரணங்கள்ெ**

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
   அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – இயேசப்பா

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
   அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – இயேசப்பா

3. பரிசுத்த இரத்தத்ததால் பாவங்கள் கழுவிய
   அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – இயேசப்பா

4. கிறிஸ்துவுக்குள்ளாய் முன்குறித்தாரே
   அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – இயேசப்பா

## 346

திருக்கரத்தால் தாங்கியென்னை
திருசித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே

**சரணங்கள்**

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும் – திருக்கரத்தால்

2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம் – திருக்கரத்தால்

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்ப கானான் தேசமதை – திருக்கரத்தால்

## 347

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை
தேவ தேவனுக்கே மகிமை
அல்லேலூயா - துதி

**சரணங்கள்**

1. தேவன் நன்மை வந்தடையச் செய்தார்
தம்மை யென்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வவல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார் - துதி

2. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன் - துதி

3. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒருபோதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாய் நின்றே
விடுவித்துக் காத்திடுவார் - துதி

4. கூப்பிடும் வேளைகளில் என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடந்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேன் - துதி

5. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒருபோதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமலே காத்திடுவார் - துதி

## 348

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூறு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

**சரணங்கள்**

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமம் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே – தேசமே

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார் – தேசமே

3. கசந்த மாரா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார் – தேசமே

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் – தேசமே

5. மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியை பொழியுவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவாய் – தேசமே

## 349

**பல்லவி**

தேவ தேவனை ஏகமாய் நாம் பாடிப் போற்றிடுவோம்
இயேசுவின் நாமத்தினால்
பாவரோக சாபம் நீங்கியே
விடுதலையும் அடைந்தோம் என்றென்றுமாய்

**சரணங்கள்**

1. உலகம் தரக்கூடா சமாதானமும்
சந்தோஷமும் தந்தார் இயேசு ராஜன்
மண்ணுலகில் ஜீவித்தாலும்
விண்ணுலகின் பத்தை அனுபவிக்க
இந்த நற்பாக்கியம் ஈந்தாரே – தேவ

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ
தொடர்ந்து வந்தாலும் திகிலடையோம்
சீயோனின் அரண்களைப்போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம்
சேனையதிபன் நம்மோடிருக்க – தேவ

3. எரிகோவைப் போல் பல எதிர்ப்புகளும்
எழும்பி வந்து நம்மைத் தடுத்தாலும்
முன் வைத்த காலை பின் வைப்பீரோ
வாலிபரே இப்போர் முனையில்
வல்லமையோ டவரைத் துதிப்போம் – தேவ

4. மாமிச சிந்தையால் ஆவியிலே
மரணமும் விழுகையும் நேர்ந்திடுமே
பலப்படுவீர் நீர் பயப்படுவீர்
பட்சிக்கும் தேவன் நம்மோடிருக்க
பரிசுத்த சிந்தையில் பலப்படுவீர் – தேவ

5. சீயோனுக்காய் இதோ சீக்கிரத்தில்
ஸ்ரீயேசு ராஜனும் தோன்றிடுவார்
அல்லேலூயா! ஆர்ப்பரிப்போம்!
ஆனந்த நாள் வேகம் நெருங்கிடுதே
ஆயத்தமாய் அவரைச் சந்திப்போம் – தேவ

## 350

தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

**பல்லவி**

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தருக்கே
அல்லேலூயா இராஜனுக்கே

**சரணங்கள்**

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணி போலக் காத்தருளும்
கிருபையால் நிதம் வழிநடத்தும் – அல்

3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம் – அல்

4. ஜீவனுள்ள நாட்க ளெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
வேத வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம் – அல்

5. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம் – அல்

# 351

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

**அனுபல்லவி**

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

**சரணங்கள்**

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் - தொழுகிறோம்

2. தலை தங்கமய மானவர்
தலை மயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

3. கண்கள் புறாக்கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம் - தொழுகிறோம்

4. கரங்கள் பொன் வளையல்கள் போல
நிறங்களும் தந்தத்தைப்போல
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் - தொழுகிறோம்

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதான எம் மூலைக் கல்லே
ஏராளமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடிவந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

7. பார்த்திபனே கன ஸ்தோத்திரம்
கீர்த்தனம் மங்கள ஸ்தோத்திரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென் - தொழுகிறோம்

## 352

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை
நான் உன்னைக் காண்கிற தேவன்
கண்மணிபோல் உன்னைக் காப்பேன்

**சரணங்கள்**

1. பயப்படாதே நீ மனமே - நான்
   காத்திடுவேன் உன்னைத் தினமே
   அற்புதங்கள் நான் செய்திடுவேன் - உன்னை
   அதிசயமாய் நான் நடத்திடுவேன் - நான்

2. திகையாதே கலங்காதே மனமே - நான்
   உன்னிடம் இருக்க பயம் ஏன்
   கண்ணீர்கள் யாவையும் துடைத்திடுவேன் - உன்
   கவலைகள் யாவையும் தீர்த்திடுவேன் - நான்

3. அனுதினம் என்னைத் தேடிடுவாய் - நான்
   அளித்திடும் பலனைப் பெற்றிடுவாய்
   அத்திமரம் போல் செழித்திடுவாய் - நான்
   ஆசையாய் உண்ணக் கனி கொடுப்பாய்- நான்

4. நீதியின் வலக்கரத்தாலே உன்னைத்
   தாங்குவேன் நான் அன்பினாலே
   ஆவியில் நீயும் ஜெபித்திடுவாய் - தினம்
   அல்லேலூயா என்றே ஆர்ப்பரிப்பாய் - நான்

## 353

நான் பாடும் கானங்களால்
என் இயேசுவைப் புகழ்வேன்
எந்தன் ஜீவிய காலம் வரை
அவர் மாறாத சந்தோஷமே – நான்

**சரணங்கள்**

1. பாவரோகங்கள் மாற்றியே
எந்தன் கண்ணீரைத் துடைப்பரே
உலகம் வெறுத்தென்னைத் தள்ள
பாவியாம் என்னை மீட்டெடுத்தீர் – நான்

2. இளைமைப் பிராய வீழ்ச்சிகள் இல்லை
யாதொரு பயமுமில்லை
அவர் ஸ்நேக தீபத்தின் வழியில்
தம் கரங்களால் தாங்கிடுவார் – நான்

3. நல்ல போராட்டம் போராடி
எந்தன் ஓட்டத்தை முடித்திடுவேன்
விலையேறிய திருவசனம்
எந்தன் பாதைக்குத் தீபமாகும் – நான்

# 354

1. நான் பாவிதான் – ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்
வா என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

2. நான் பாவிதான் – என் நெஞ்சிலே
கறை பிடித்துக் கெட்டேனே
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

3. நான் பாவிதான் – மாபயத்தால்
திகைத்து பாவ பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

4. நான் பாவிதான் – மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

5. நான் பாவிதான் – இரங்குவீர்
அணைத்துக் காத்து இரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

6. நான் பாவிதான் – அன்பாக நீர்
நீங்கா தடைகள் நீக்கினீர்
உமக்கு சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே வந்தேன் – வந்தேன்

## 355

நெஞ்சத்திலே தூய்மையுண்டோ
இயேசு வருகிறார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே
இயேசு அழைக்கிறார்

1. வருந்திச்சுமக்கும் பாவம்
உன்னைக் கொடிய இருளில் சேர்க்கும்
செய்த பாவம் இனி போதும் (2)
அவர் பாதம் வந்து சேரும்
அவர் பாதம் வந்து சேரும் - நெஞ்

2. குருதி சிந்தும் நெஞ்சம்
உன்னைக் கூர்ந்து நோக்கும் கண்கள்
செய்த பாவம் இனி போதும் (2)
அவர் பாதம் வந்து சேரும்
அவர் பாதம் வந்து சேரும் - நெஞ்

# 356

மகிமையின் ராஜா மகிமையோடு
வருகின்றார் மேகமீதில்
ஆனந்தமே பேரானந்தமே
ஆ . . . ஆ . . . ஆனந்தமே பேரானந்தமே

**சரணங்கள்**

1. பூமி அதிசயிக்க வானோர் ஆர்ப்பரிக்க
தூதர் தொனியுடனே மேகமீதில் வருவார்
அன்பர்கள் நாங்கள் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்மே (2)

2. ஆசை மகிபனவர் பிதாவின் மகிமையோடு
நேச மணவாட்டியை மறுரூபமாக்க வருவார்
ஆவலாய் நாமும் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

3. சுத்த பிரகாசமாய் சித்திரத் தையலாடை
தூய நீதியுடனே வெண்வஸ்திரம் தரிப்போம்
விண்ணவர் சாயலில் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

4. ஆவியும் மணவாட்டியும் அழைத்திடும் நேரமல்லோ
ஆயத்த விழிப்புடன் பூரண மடைந்திடுவோம்
காலமும் சென்றது நேரமும் வந்தது
ஆனந்தம் ஆனந்தமே

## 357

லேவியரே ஆசாரியரே ஆனந்தமாய் நாம் கூடி
வந்தோமே

**அனுபல்லவி**

இயேசுவின் பாதத்தில் பரவசமாய்
பாரத மீட்புக்காய் கிருபை பெறுவோம் – லேவியரே

**சரணங்கள்**

1. எட்டுத் திசைக்கும் இயேசு புகழ் பரவ
நித்திய சுவிசேஷம் ஏந்திச் செல்லுவோம் – 2
சாத்தானின் கட்டுகளை அறுத்திடுவோம்
சத்திய சபையை கட்டி எழுப்பிடுவோம் – லேவியரே

2. விசுவாச வீரர்களால் எழும்பிடுவோம்
வெளிப்பாட்டு வரங்களை உபயோகிப்போம்
பாதாளக் கட்டுகளை அறுத்திடுவோம்
பரலோக பலன்களை சேர்த்துக்குவிப்போம் – லேவியரே

3. நம்பிக்கை நங்கூரமாய் நடந்திடுவோம்
தாழ்மையின் ரூபங்களால் வளர்ந்திடுவோம்
பாவத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
காரிய சமர்த்தர்களாய் நின்றிடுவோம் – வேலியரே

4. ஜெபத்தின் ஜெயங்களால் முன் செல்லுவோம்
தியான ஊற்றுகளில் தூது பெறுவோம்
மாமிசத்தின் கட்டுகளை அறுத்திடுவோம்
கண்ணீரின் பள்ளத்தாக்கில் கர்த்தரைக் காண்போம்
– லேவியரே

5. பேச்சின் தூதர்களாய் பறந்திடுவோம்
நடக்கையின் நகல்களாய் விரைந்திடுவோம்
சமுதாயக் கட்டுகளை அறுத்திடுவோம்
நன்மையின் வாசல்களாய் விழித்திடுவோம்
– லேவியரே

6. இயேசுவின் காயங்களின் கனிகளே நாம்
களிகூர்ந்து மகிழ்ந்து ஆடிப்பாடுவோம்
அப்போஸ்தல ஊழியத்தில் ஆர்ப்பரிப்போம்
ஆசீர்வாத மழைக்கு மேகங்களாவோம்
– லேவியரே

## 358

விண்மகிமை கண்முன் கண்டேன்
விண் மன்னன் இயேசென்னை அழைக்கின்றார்

**அனுபல்லவி**

மண்ணுலகின்பங்கள் மாயையல்லோ
வீணானதே மாறிடுதே
விண் ஜீவ கிரீடமோ என் சொந்தமே

**சரணங்கள்**

1. மரண யோர்தான் புரண்டு வந்தால்
மாலுமி இயேசுவின் கப்பல் ஏறி
அக்கரையோரம் நான் சென்றிடுவேன்
அங்கே வரவேற்புக் காத்திருக்கும்– விண்

2. பரதீசிலே பல காட்சிகள்
பார்த்துப் பரவசம் பொங்கிடுமே
கண்ணீர் கவலையும் அங்கில்லையே
கர்த்தரின் மார்பினில் சாய்ந்திடுவேன் – விண்

3. ஜீவ ஜல நதி ஓடிடும்
ஜீவ தண்ணீரால் என் தாகம் தீருமே
கர்த்தரின் கை கோர்த்து நடந்திட
காத்து தவிக்கின்ற தென்னுள்ளமே – விண்

4. புதிய கனி புசித்திடுவேன்
பூக்கள் நடுவே உலாவிடுவேன்
தூதர்கள் பக்தர்களோடு வாழும்
தூய பேரின்பத்தை நாடுகிறேன் – விண்

5. நல்ல சுகம் ஆரோக்கியமும்
நல்லாசீர்வாதங்கள் அங்கே உண்டு
தேவ சமூக இளைப்பாறுதல்
தேவை அதைநாடிக் கண்டடைவேன் – விண்

6. எத்தனையோ பிரதி பலன்கள்
உத்தம ஊழியர் பெற்றிடவே
ஓட்டம் ஜெயத்தோடு முடித்திடும்
ஒன்றே எனதாவல் இயேசுபோதும் – விண்

## 359

1. ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்
தீர்த்திடுவார் உந்தன் தாகமதை
பாவங்கள், ரோகங்கள், சாபங்கள், போக்கிட
பரிவாய் அழைக்கிறார்

**பல்லவி**

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே
இயேசு வல்லவரே அவர் நல்லவரே
உனக்காக ஜீவிக்கிறார்

**சரணங்கள்**

2. ஆரு மற்றவனாய் நீ அலைந்தே
பாவ உளைதனிலே அமிழ்ந்தே
மாய்ந்திடாது உன்னை தூக்கி எடுத்தவர்
மந்தையில் சேர்ந்திடுவார் – வல்லவரே

3. வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனை
சிலுவையின் மீதினில் தீர்த்ததாலே – இனி
சுகமடைந்திடுவாய் – வல்லவரே

4. பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன் திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப்போல் தேவசாயலாக்கி
மகிமை சேர்த்திடுவார் – வல்லவரே

5. வானமும் பூமியும் மாறிப் போயினும்
வாக்கு மாறாத ஓர் வல்ல மீட்பர்
காப்பார் வழுவாது உள்ளங்கையில் வைத்தே
கலங்கிடாதே நீ வா – வல்லவரே

## 360

பிரசன்னம் தாரும் தேவனே
உந்தன் சமூகம் தாருமே
இயேசுவே உந்தன் நாமத்தில்
இந்நேரம் நாங்கள் கூடிவந்தோம்

**சரணங்கள்**

1. பக்தர்கள் போற்றும் நாதா
பரிசுத்த தேவன் நீரே
கேரூபின் சேராபின் துதிபாடிடும்
பரனே நின்பாதம் பணிகின்றோம் – பிர

2. நீரல்லால் இந்தப் பாரில்
தஞ்சம் வேறாருமில்லை
உந்தனின் சமூகத்தால் இளைப்பாறிட
சந்ததம் உமருள் ஈந்திடுமே – பிர

3. நல்மேய்ப்பர் இயேசு தேவா
துன்பங்கள் நீக்கிடுமே
ஆதி அன்பு என்னில் குன்றிடாமல்
நிலைக்க நல் அருள் தந்திடுமே – பிர

4. தேவா உந்தன் சமூகம்
முன் செல்ல வேண்டுகிறேன்
பேரின்பம் எந்நாளும் பொங்கிடவே
உம்மில் மகிழ்ந்து நான் ஆனந்திப்பேன் – பிர

5. வானத்தில் தோன்றும் நாளில்
உம்மைப் போல் மாறிடவே
ஆவி ஆத்மா தேகம் மாசற்றதாய்
காத்திட கர்த்தரே கெஞ்சுகின்றோம் – பிர

# 361

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்சக்கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை விழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
கிருபை விழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா

## 362

இயேசுவோடு சேர்ந்திருப்ப தென்ன பாக்கியம்
இயேசுவுக்காய் ஜீவிப்பது என்ன ஆனந்தம்
ஆசை என்றும் எந்தன் அகம் பெருகிடுதே
ஆனந்தமாய் என்றும் வாழ வாஞ்சித்திடுதே

**சரணங்கள்**

1. போக்கினார் என் பாவமெல்லாம் தாம் மரித்ததால்
நீக்கினார் என் சாபமெல்லாம் தாம் சுமந்ததால்
எண்ணவே உம் சிநேகம் உள்ளில் பெருகிடுதே
மன்னவா உம் கூட வாழ என்று கூடுமோ
– இயேசுவோடு

2. மாட்சிமிகு நாட்டிலே நான் வாசம் செய்திட
மாசிறந்த வீடெனக்காய் ஆயத்தமாக்க
கைகளால் கட்டிடாதோர் நித்திய இராஜ்யத்தை
கண்டிடவே ஆசையுடன் காத்திருக்கின்றேன்
– இயேசுவோடு

3. அன்று தீரும் எந்தன் கஷ்டம் லோகமண்ணிலே
அன்று தீரும் எந்தன் துக்கம் யாவும் நிச்சயம்
அன்று கர்த்தர் நின்று ஒன்றாய் பாடி ஆர்க்கவே
என்று அந்நாள் வந்து சேரும் எந்தன் இயேசுவே
– இயேசுவோடு

4. நல்லவரே வல்லவரே பொன்னுகாந்தனே
அல்லல் தீர்க்க என்று வாரீர் ஆத்தும நேசரே
எல்லையில்லா ஆனந்தமாய் வீணைகளேந்தி
அல்லேலூயா கானம்பாடி வானில் வாழ்ந்திட
– இயேசுவோடு

## 363

வல்லமை அருள்நிறைவே வாரும்
பின்மாரி பொழிந்திடுமே
தேவ ஆவியே தாகம் தீருமே
வல்லமையால் இன்று எமை நிரப்பிடுமே

**சரணங்கள்**

1. புது எண்ணெய் அபிஷேகம்
புது பெலன் அளித்திடுமே
நவ மொழியால் துதித்திடவே
வல்லமை அளித்திடுமே - வல்லமை

2. சத்திய ஆவியே நீர்
நித்தமும் நடத்திடுமே
முத்திரையாய் அபிஷேகியும்
ஆவியின் அச்சாரமாய் - வல்லமை

3. அக்கினி அபிஷேகம்
நுகத்தினை முறித்திடுமே
சத்துருவை ஜெயித்திடவே
சத்துவம் அளித்திடுமே - வல்லமை

4. தூய நல் ஆவிதனை
துக்கமும் படுத்தாமல்
தூய வழி நடந்திடவே
பெலன் தந்து காத்திடுமே - வல்லமை

5. பெற்ற நல் ஆவிதனை
காத்திட வரம் தாரும்
ஆவியினால் நடந்திடவே
ஆளுகை செய்திடுமே - வல்லமை

6. உலர்ந்திடும் எலும்புகளும்
உயிர்பெற்று எழும்பிடவே
எழுப்புதலை கண்டிடவே
வல்லமை அளித்திடுமே - வல்லமை

## 364

ஆராதனை ஆராதனை – துதி
ஆராதனை ஆராதனை . . .
காலையிலும் மாலையிலும்
ஆராதனை அப்பாவுக்கே . . . (ஆராதனை)

**சரணங்கள்**

1. தூய ஆவியே உமக்கு ஆராதனை
துணையாளரே உமக்கு ஆராதனை
வல்லபிதாவே உமக்கு ஆராதனை
வழிகாட்டியே உமக்கு ஆராதனை . . . (ஆராதனை)

2. ஜீவபலியே உமக்கு ஆராதனை
ஜீவத் தண்ணீரே உமக்கு ஆராதனை
மேகஸ்தம்பமே உமக்கு ஆராதனை
மேசியாவே உமக்கு ஆராதனை . . . (ஆராதனை)

3. அப்பா பிதாவே உமக்கு ஆராதனை
அரூபமானவரே உமக்கு ஆராதனை
கன்மலையே உமக்கு ஆராதனை
காண்பவரே உமக்கு ஆராதனை . . . (ஆராதனை)

4. சுழல்காற்றே உமக்கு ஆராதனை
சுட்டெரிக்கும் அக்கினியே ஆராதனை
சுகம்தரும் வல்லமையே ஆராதனை
சுமைதாங்கியே உமக்கு ஆராதனை . . . (ஆராதனை)

# 365

ஜீவனுள்ள ஆராதனை உமக்குத்தானே
ஜீவிக்கின்ற தெய்வம் நீர் ஒருவர்தானே
ஏக தெய்வமே உமக்கு ஆராதனை
திரியேக தெய்வமே உமக்கு ஆராதனை (2)

1. புத்தியுள்ள ஆராதனை உமக்குத்தானே
   பக்தியுள்ள தெய்வம் நீர் ஒருவர்தானே (2) – ஏக
2. சுத்தமுள்ள ஆராதனை உமக்குத்தானே தினம்
   பரிசுத்தமுள்ள தெய்வம் நீர் ஒருவர்தானே (2) – ஏக
3. அதிகாலை ஆராதனை உமக்குத்தானே தினம்
   அதிசயம் செய்ய நீர் ஒருவர்தானே (2) – ஏக
4. இரவிலும் ஆராதனை உமக்குத்தானே
   இரக்கம் காட்ட நீர் ஒருவர்தானே (2)
5. எப்பொழுதும் ஆராதனை உமக்குத்தானே
   இப்பொழுதும் ஆராதனை உமக்குத்தானே (2) – ஏக

# 366

இயேசு நல்லவரு நமக்குப் போதுமானவரு
அற்புதம் செய்பவரு அதிசயமானவரு
ஆலோசனைக் கர்த்தர் பெரியவரு – இயேசு

**சரணங்கள்**

1. துன்பம் வரும் வேளையில் தேடி வந்து தேற்றிடுவார்
துக்கம் நம்மை வாட்டும்போது பக்கம் வந்து ஆற்றிடுவார்
ஜீவனுள்ள தேவனுக்கு ஜீவராகங்கள் பாடுங்களே
– இயேசு

2. இரண்டு மீனும் ஐந்தப்பமும் இயேசுவுக்கு போதுமையா
கோடி ஜனம் கூடினாலும் குறைவில்லாமல் கொடுப்பாரையா
நம்பி வந்தால் நன்மை உண்டு
நன்மை செய்கின்ற இயேசு உண்டு – இயேசு

## 367

கட்டடம் கட்டிடும் சிற்பிகள் நாம்
கட்டிடுவோம் கிறிஸ்தேசுவுக்காய்
சுத்தியல் வைத்து அடித்தல்ல
ரம்பத்தால் மரத்தை அறுத்தல்ல – கட்டடம்

1. ஒவ்வொரு நாளும் கட்டிடுவோம்
ஒவ்வொரு செயலாம் கற்களாலே
உத்தமர் இயேசுவின் அஸ்திபாரம்
பத்திரமாகத் தாங்கிடுவார் – கட்டடம்

2. கைவேலையில்லா வீடொன்றை
கடவுளின் பூரண சித்தப்படி
கட்டிடும் சிறிய சிற்பிகள் நாம்
கட்டிடுவோமே நித்தியத்திற்காய் – கட்டடம்

3. பாவமாம் மணலில் கட்டப்பட்ட
பற்பல வீடுகள் வீழ்ந்திடுமே
ஆவலாய் இயேசுவின் வார்த்தை கேட்டோம்
அவரே மூலைக்கல் ஆகிடுவார் – கட்டடம்

# 368

பரிசுத்தர்கள் கூட்டம் இயேசுவைப் போற்றி
பாடி மகிழ்ந்தாடி அங்கே கூடிட
பரமானந்த கீதமங்கெழும்ப
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

1. ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டி னோரெவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

2. பேதுரு பவுலும் யோவானும் அங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்த சாட்சிகளும் திரளாய்க் கூட
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

3. ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திருமுடியணிந் திலங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

4. சோதனைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லைகளைச் சகித்தவரும்
ஜோதி ரூபமாய் சொர்கலோகில் ஜொலிக்க
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

5. கன்னிகையைப் போல் கர்த்தன் சபையன்று
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
நீ அங்கிருப்பாயோ? (3) சொல் என் மனமே
நான் அங்கிருப்பேனே! (3) என் இயேசுவுடன்

## 369

ஆவியானவரே உம்மை வாஞ்சிக்கிறேன்
மகிமை பிரசன்னம் நிறைவாக
இறங்கட்டும் இந்த வேளையிலே – 2

**சரணங்கள்**

1. ஆவியில் களிகூறவே என்றென்றும் விரும்புகிறேன்
வாஞ்சிக்கின்றேன் எந்நாளும் உந்தன் சமூகத்தையே
நேசமுகம் காண்கையிலே ஆவியில் நிரம்புகிறேன்
பாடி உம்மைத் துதிக்கையிலே பரவசம் கொள்கிறேன்

2. தாவீதுபோல் மகிழ்ந்திடவே சமூகம் வேண்டுகிறேன்
ஆடிப்பாடி துதித்திடவே விடுதலை ஈந்திட்டீரே
உன்னதத்தில் உம்முடனே உறவாட உதவிடுமே
ஆவிக்குள்ளாய் அனுதினமும் மகிழ்ந்து துதித்திடுவேன்

3. மேல்வீட்டறை அனுபவத்தை என்றென்றும் தந்திடுமே
ஆவி மழை கரைபுரள தேசத்தை சந்தியுமே
அஸ்திபாரம் அசைத்திடவே எழுப்பிடும் வாலிபரே
எழுப்புதலால் எம்முள்ளங்கள் உயிர்ப்பிக்கச் செய்திடுமே!

## 370

அக்கினி ஜுவாலை ஆக்கும் தேவா
கொளுந்து விட்டெரிய ஊற்றும் தேவா
பாவம் நெருங்கா அக்கினியால்
சாத்தானை ஜெயிக்க உதவும் தேவா
அல்லேலூயா பாடுவோம் (2)

**சரணங்கள்**

1. எலியாவின் அக்கினி இறங்கட்டுமே
வானம் திறந்து பொழியட்டுமே
கர்த்தரே தேவனென்று அறியட்டுமே
சாத்தானின் சதிகள் முறியட்டுமே – அல்லேலூயா (2)

2. பாவத்தின் கறைகள் நீங்கட்டுமே
சாபத்தின் நுகங்கள் முறியட்டுமே
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுப்பேன்
வெற்றியின் கீதங்கள் பாடிடுவேன் – அல்லேலூயா (2)

3. கர்த்தரின் வல்லமை இறங்கட்டுமே
கர்த்தரின் நாமம் ஓங்கட்டுமே
ஜாதி ஜனங்கள் அசையட்டுமே
சபைகள் பெருகி வளரட்டுமே – அல்லேலூயா (2)

## 371

அபிஷேகியும் தேவா அபிஷேகியும்
ஆனந்த தைலத்தினால்
சுயத்தை உடையும் சுத்திகரியும்
துதியின் உடையால் அலங்கரியும்

1. உமது ஜனங்கள் உம்மில் மகிழ
உன்னத ஆவியால் உயிர்ப்பியுமே
துன்பங்கள் மாற துதிகள் எழும்ப
தூய ஆவியால் நிரப்பிடுமே - அபிஷேகியும்

2. ஆவியின் வரங்கள் ஒன்பதையும்
ஆவியின் கனிகள் ஒன்பதையும்
நொறுங்குண்டதும் நறுங்குண்டதும்
நிலைவர இருதயம் தந்திடுமே - அபிஷேகியும்

3. சாத்தானின் சேனைகள் தகர்த்திடவே
சத்திய ஆவியை தந்திடுமே
சர்ப்பத்தை எடுக்க தேள்களை மிதிக்க
சத்துவம் பொழிந்து வழிந்திடவே - அபிஷேகியும்

# 372

தந்தேன் என்னை இயேசுவே, இந்த நேரமே உமக்கே

**அனுபல்லவி**

உந்தனுக்கு ஊழியம் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

**சரணங்கள்**

1. ஜீவகாலம் முழுதும் தேவபணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும்! உந்தன் கரத்தினில் வைத்து - தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கி பலமாய்யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தில் நாதா வெல்லுவேன் - தந்தேன்

3. உந்தன்சித்த மேசெய்வேன் எந்தன்சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்கு காட்டினும்
இயேசுவே, அங்கே இதோ போகிறேன் - தந்தேன்

4. கஷ்டநஷ்டம் வந்தாலும் துஷ்டர்கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திரும் - தந்தேன்

5. ஒன்றுமில்லை நான்ஐயா உம்மாலன்றி ஒன்றும்செய்யேன்
அன்றும் சீஷர்க்கு அளித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும் - தந்தேன்

# 373

வரவேணும் பரனாவியே
இறங்கும் சுடராய் மேவியே

**சரணங்கள்**

1. பலமாக பாவமும் பாளாக்கும்மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்சசிந்தை ஓடுமே
பலி பீடத்திலென்னை பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபம்கேட்டு இறங்கிய வண்ணம்
– வரவேணும்

2. எந்தன்பாவம் யாவையும் எரிக்கும்பகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீமையும் காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா – 2
இன்றே வானாக்கினி வரவேணும் – வரவேணும்

3. குடிகொள் எந்தப் பாவமும் அடியோடே தொலைந்திடும்
தடுத்தாட் கொள்ளும் தோஷமும், சாம்பலாக செய்திடும்
படிமிசை காற்றுக்கு பயற்தோடு சாம்பல் போல்
அடியேன் இயேசுவுக் கனுதினம் பணி செய்ய
– வரவேணும்

## 374

எத்தனை திரள் என் பாவம் என் தேவனே
எளியன் மேல் இரங்கையனே
நித்தம் என் இருதயம் தீயதென் பரனே
நிலைவரம் எனில் இல்லை நீ என் தாபரமே

1. பந்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனா
பணிந்திடல் ஒழிவேனோ
சுத்த முறுங்கரம் கால்கள் விலாவினில்
தோன்றுவது காயங்கள் தூயசிநேகா – எத்தனை

2. என்றன் அநீதிகள் என்கண்கள் முன்னமே
இடைவிடா திருக்கையிலே
உன்றன் மிகுங் கிருபை ஓ மிகவும் பெரிதே
உத்தம மணமுடையோய் என்னை ஆளும் – எத்தனை

3. ஆயங்கொள்வோன் போல், பாவஸ்திரி போல்
அருகிலிருந்த கள்ளன்போல்
நேயமாய் உன்சரண், சரண்என வணங்கினேன்
நீ எனக்காகவே மரித்தனை என்பரனே – எத்தனை

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்
கொடுபஞ் சத்தால் நலிந்தேன்
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அலநான்
எனை ரட்சித்திடல் உன்தன் நிமித்தமே அப்பனே – எத்தனை

## 375

ஒரு மருந்தரும் குருமருந்தே
உம்பரத்தில் கண்டேனே

**அனுபல்லவி**

அருள் மருந்துடன் ஆனந்த மருந்து
ஆதியிற்றானாய் முளைத்த மருந்து
வரும் வினைகளை மாற்றும் மருந்து
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து - ஒரு

**சரணங்கள்**

1. சிங்கார வனத்தில் செழித்த மருந்து
ஜீவகனி மீதில் படர்ந்த மருந்து
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து - ஒரு
2. மோசே முதல் முன்னோர் காணா மருந்து
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து
தீர்க்கத்தரிசிகள் செப்பிய மருந்து - ஒரு
3. தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து
செவிடு குருடை திறந்த மருந்து
மானா திரித்துவ மான மருந்து
மனுவாய் உலகினில் வந்த மருந்து - ஒரு
4. செத்தோரை உயிரோ டெழுப்பும் மருந்து
ஜீவன் தவறா தருளும் மருந்து
பக்தரைச் சுத்தி கரித்திடும் மருந்து
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து

# 376

மணவாளன் கர்த்தர் இயேசு வருகின்றாரே
மணவாட்டி சந்திக்க ஆயத்தம் தானா
என் பிரியமே நீ ரூபவதி
எழுந்து வா உன் நேசரை சந்திக்கவே

**சரணங்கள்**

1. குருவிகள் பாடும் சத்தம் எங்கும் கேட்குதே
காட்டுப்புறா சத்தம் நம் தேசம் நிறையுதே
கன்மலையின் சிகரங்களில் தங்கும் புறாவே
கர்த்தர் இயேசு வரும் நாளைச்சொல்லிப் பாடிடு

2. மாரிகாலம் சென்றது மழையும் பொழிந்தது
பூமியிலே புஷ்பங்கள் பூத்துக் குலுங்குது
அத்திமரம் காய்காய்க்க காலம் வந்ததே
திராட்சை செடி பூப்பூத்து வாசம் பெருகுதே

3. சாரோனின் ரோஜாவாம் கர்த்தர் இயேசு
பள்ளத்தாக்கின் லீலியாம் பரமன் இயேசு
தாகம் தீர்க்கும் ஜீவநதி கர்த்தர் இயேசு
பாவம் போக்கும் பரிகாரி பரமன் இயேசு

## 377

தேவன் பின் ஜீவியமே தெய்வதாசருக் கவசியமே-2

**சரணங்கள்**

1. ஒருவரிலொருவர் அன்புடன் இருந்தால்
உலகம் எமை எடுத்தே
யேசுவின் சீடர்கள் இவர்களென்று
சாட்சி பகர்ந்திடுமே - நல்

2. பாசமாய் எமையும் நேசித்தார் இயேசு
ஜீவனையே ஈந்தே
நாமுமே அதுபோல் ஒருவரோடொருவர்
நேசமாய் வாழ்ந்திடுவோம் - நல்

3. அன்பரின் அகலம் நீளமும்
உயரம் ஆழமும் அறிந்திடவே
சுத்தர்கள் ஒன்றாய் ஒருமனதுடனே
கர்த்தனை உயர்த்திடுவோம் - நல்

## 378

இலேசான காரியம் எதுவும் இலேசான காரியம்
பெலமுள்ளவன் பெலனில்லாதவன் யாராயிருந்தாலும்
உதவிகள் செய்வது லேசான காரியம்
உமக்கது லேசான காரியம்

**சரணங்கள்**

1. மண்ணைப் பிசைந்து மனிதனைப் படைப்பது
லேசான காரியம் - 2
மண்ணான மனிதர்க்கு மன்னாவைத் தருவது
லேசான காரியம் உமக்கது லேசான காரியம்

2. கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்ந்தது
லேசான காரியம் - 2
ஆழ்கடல் மீதினில் வரிப்பணம் பெறுவதும்
லேசான காரியம் உமக்கது லேசான காரியம்

3. கற்பாறை போல கடலின்மேல் நடப்பது
லேசான காரியம் - 2
கற்சாடி நீரை கனிரசமாக்குவது
லேசான காரியம் உமக்கது லேசான காரியம்

# 379

துதித்துப் பாடிட பாத்திரர் நீரே (2)
துதித்துப் பாடிட பாடல் தந்தீரே
துதியின் மத்தியில் வாசம் செய்பவரே
துதியின் பாடலை எனக்குத் தந்தீரே

1. தூய்மையான தேவனும் நீரே
தூயரைப் பாடிடும் பாடல் தந்தீரே (2)
இரட்சிப்பைத் தந்திடும் இரட்சகர் நீரே
இரட்சிப்பின் துதிகீதம் எனக்குத் தந்தீரே (2) – துதித்து

2. மகிமை நிறைந்த மன்னவர் நீரே
மகிபனைப் பாடிடும் பாடல் தந்தீரே
பரிசுத்த ஆவியின் வல்லமை நீரே
பரிசுத்த பாடல்கள் எனக்கு தந்தீரே (2) – துதித்து

3. ஜெயித்து எழுந்த ஜெயக்கிறிஸ்து நீரே
ஜெயதொனி கீதங்கள் பாடச் செய்தீரே – (2)
கன்மலையான கிறிஸ்துவும் நீரே
கன்மலை ராகங்கள் எனக்குத் தந்தீரே (2) – துதித்து

## 380

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா ராஜாதி ராஜன்
தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
என்றென்றும் நடத்திடுவார்

ஆராதனை (2) அல்லேலூயா (2)
ஆராதனை உமக்கே!

1. துணையாளரே (2) துன்பத்தில் தாங்கும் மணவாளரே
கைகளை நீட்டி காயங்கள் ஆற்றி
கனிவோடு நடத்திடுவார் – ஆராதனை

2. வெண்மேகமே (2) வெளிச்சம் இந்நேரமே
அபிஷேகம் ஊற்றி மறுரூபமாக்கி
ஆற்றலைத் தந்திடுவார் – ஆராதனை

## 381

இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே - (2)
துதி பாடல் நான் பாடி இயேசுவையே போற்றி
என்றென்றும் வாழ்ந்திடுவேன் - (2)
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - (4)
- இயேசு

**சரணங்கள்**

1. சமாதானம் தந்தார் இயேசு எனக்கு (4)
துதிபாடல் நான் பாடி இயேசுவையே போற்றி
என்றென்றும் வாழ்ந்திடுவேன் - (2)
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
2. விடுதலை தந்தார் இயேசு - (4) - துதி பாடல்
3. புது வாழ்வு தந்தார் இயேசு - (4) - துதி பாடல்
4. அபிஷேகம் தந்தார் இயேசு - (4) - துதி பாடல்

## 382

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
எங்கள் குருஇயேசு நாதர்பாதம் கும்பிடுகிறேன்

**சரணங்கள்**

1. அம்புவி படைத்தவரைக் கும்பிடுகிறேன்
   என்னை ஆண்டவரை மீண்டவரை கும்பிடுகிறேன்
2. நம்பும் அடியார்க்கருளை கும்பிடுகிறேன்
   பாவ நாசனை கிருபாசனையே கும்பிடுகிறேன்
3. ஒரே சருவேசுரனைக் கும்பிடுகிறேன்
   ஒன்றும் ஒப்பில்லாத மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
4. அருமை இரட்சகனைக் கும்பிடுகிறேன்
   என் ஆத்துமாவின் நேசரை நான் கும்பிடுகிறேன்

## 383

சந்தோஷமாயிருங்க எப்பொழுதும் சந்தோஷமாயிருங்க(2)
உயர்வானாலும் தாழ்வானாலும்
சர்வ வல்ல தேவன் நம்மோடிருக்கிறார் (2)

**சரணங்கள்**

1. நெருக்கத்தின் நேரத்திலும் கண்ணீரின் பாதையிலும் (2)
நம்மை காண்கின்ற தேவன் நம்மோடிருக்கிறார்
சந்தோஷமாயிருங்க (2)

2. விசுவாச ஓட்டத்திலும், ஊழியப் பாதையிலும் (2)
நம்மை வழிநடத்தும் தேவன் நம்மோடிருப்பதால்
சந்தோஷமாயிருங்க (2)

3. தோல்விகள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும் (2)
நமக்கு ஜெயம் கொடுக்கும் தேவன் நம்மோடிருப்பதால்
சந்தோஷமாயிருங்க (2)

4. என்னதான் நேர்ந்தாலும் சோர்ந்து போகாதீங்க (2)
நம்மை அழைத்த தேவன் கைவிடமாட்டார்
சந்தோஷமாயிருங்க (2)

## 384

பரிசுத்தமாக்குமையா என்னை பரிசுத்தமாக்குமையா
பரிசுத்தமின்றி தரிசிப்பார் உண்டோ?
பரிசுத்தரே மகா பரிசுத்தரே!

1. பரிசுத்தமாயிருக்க என்னை அழைத்தீரே பரிசுத்தரே
கர்த்தர் நீர் விரும்பும் பரிசுத்தம் காண
படைக்கிறேனே முற்றும் படைக்கிறேனே (2)
– பரிசுத்தமா

2. பாவத்தில் விடுதலையே நான் நீதிக்கு அடிமையே
பரிசுத்தமாக்குதல் கிடைக்கும் பலனே
நற்பலனே அது பெரும்பலனே (2) – பரிசுத்தமா

3. வசனத்தால் பரிசுத்தமே உம் இரத்தத்தால் பரிசுத்தமே
ஆவியால் பரிசுத்தம் ஆவியால் பரிசுத்தம்
வேண்டுமையா இப்போ வேண்டுமையா (2)
– பரிசுத்தமா

4. முற்றிலும் பரிசுத்தமாய் என்னை முற்றிலும் பரிசுத்தமாய்
பற்றியெரியும் மகிமையைக் காண
மாற்றுமையா என்னை மாற்றுமையா (2)
– பரிசுத்தமா

கன்மலைமேல் என் கால்கள் நிறுத்தினீர்
உன்னதங்களில் உட்காரச் செய்தீர்
உளையான சேற்றில் உழன்ற என்னையும்
தூக்கினீர் கழுவினீர் காத்து வருகிறீர்

**சரணங்கள்**

1. பாவங்களை மன்னித்தீர் சாபங்களை நீக்கினீர்
சத்துருவின் கையினின்று விடுதலை அளித்தீர் (2)
தினம் தினம் உம் புகழை நான் பாடுவேன்
ஏசையா ஏசையா உம்மை நான் பாடுவேன்

2. எல்லையில்லா ஆனந்தம் எந்தன் வாழ்வில் வந்ததையா
சொல்லொன்னா பேரின்பம் என் உள்ளத்தில் பொங்குதையா
ஜீவனுள்ள நாளெல்லாம் உம் புகழ்பாடுவேன்
ஏசையா ஏசையா உம்மை நான் பாடுவேன்

## 386

எனக்கொரு ஆசை உண்டு (2)
என் இயேசுவைக் காண வேண்டும் (2)
எனக்கொரு ஆவலுண்டு (2)
நான் அவரோடு பேச வேண்டும்

**அனுபல்லவி**

வானகமே வையகமே எனது ஆசை நிறைவேறுமா (2)

**சரணங்கள்**

1. மலையும் காடும் சோலையும் அலைமோதும் கடலும் தேடினேன் (2)
காணேன் அவரை கதறி அழுதேன்
கர்த்தரே வாரும் வாரும் என்றேன் (2) - வானகமே

2. கரம் ஒன்று என்னைத் தொட்டது கண்ணீரை மெதுவாய் துடைத்தது
வேதம் தந்தே தினமும் அதிலே
என்னை பார் என பொழிந்தது (2) - வானகமே

3. தினமும் வேதத்தில் காண்கிறேன் தேவாதி தேவனைத் துதிக்கிறேன்
ஜெபத்தில் பேசி மகிழ்கிறேன்
ஜீவ தேவனை வாழ்த்துகின்றேன் (2)
வானகமே வையகமே எனது ஆசை நிறைவேறிற்று(2)

## 387

1. ஆசையாய்க் கூடுவோம்
அன்புடன் பாடுவோம்
ஈசனார் தம் நேசமாக
வீந்ததைக் கொண்டாடுவோம்
மா சந்தோஷம் மாகெம்பீரம்
மாந்தர் நாமெல்லாருக்கும்
மாட்சியுறும் காட்சி காண
வாரும் பெத்லகேமுக்கு

2. முன்னணை மீதினில்
சின்னவோர் பாலனாய்
உன்னதனொரே குமாரன்
ஒய்யாரமாய்த் தோன்றினார் - மா

3. ரூபமில்லாதவர்
சோபித பூரணர்
சாபம் நிறை பாவ மாம்ச
ரூபெடுத்து வந்தனர் - மா

4. தேசுறை பாலகர்
ஜேசென்னும் பேரினர்
மாசுதிகில் நீக்கி நம்மை
மீட்க மனுவாயினர் - மா

## 388

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே;
அவர் பாவ நாசகர்
சமாதான காரணர்
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர்போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே,
லோகம் ஆளும் நாதரே,
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்
வாழ்க நர தேவனே,
அருள் அவதாரமே!
நீர், இம்மானுவேல், அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

3. வாழ்க, சாந்த பிரபுவே!
வாழ்க நீதி சூரியனே,
மீட்பராக வந்தவர்;
ஒளி, ஜீவன் தந்தவர்
மகிமையை வெறுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்யம் ஏறுதே

# 389

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
   தம் மந்தைக் காத்தனர்;
   கர்த்தாவின் தூதன் இறங்க
   விண் ஜோதி கண்டனர்

2. அவர்கள் அச்சம் கொள்ளவும்
   விண்தூதன்; திகில் ஏன்?
   எல்லோருக்கும் சந்தோஷமாம்
   நற்செய்தி கூறுவோம்

3. தாவீதின் வம்சம் ஊரிலும்
   மெய் கிறிஸ்து நாதனார்
   பூலோகத்தார்க்கு ரட்சகர்
   இன்றைக்குப் பிறந்தார்

4. இதுங்கள் அடையாளமாம்
   முன்னணைமீது நீர்
   கந்தை பொதிந்த கோலமாய்
   அப்பாலனைக் காண்பீர்

5. என்றுரைத்தான் அசஷணமே
   விண்ணோராம் கூட்டத்தார்
   அத்தூதனோடு தோன்றியே
   கர்த்தாவைப் போற்றினார்

6. மா உன்னதத்தில், தேவனே
   நீர் மேன்மை அடைவீர்
   பூமியில் சமாதனமும்
   நல்லோர்க்கும் ஈகுவீர்

# 390

1. ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுத் தொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே
மாதா, மாரியம்மாள்தான்
பாலன், இயேசு கிறிஸ்துதான்

2. வானம் விட்டுப் பூமி வந்தார்
மகா தேவ தேவனே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்
தொட்டிலோ முன்னயையே
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பாலிய பர்வம் எல்லாம் அன்பாய்
பெற்றொர்க்கு அடங்கினார்
அவர்போல் கீழ்ப்படிவோம்
சாந்தத்தோடு நடப்போம்

4. பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீனமாந்தன் போல
துன்பம், துக்கம் சகித்தார்
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்

5. நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணால் கண்டு களிப்போம்
அவர் தாமே மோட்சலோக
நாதர் என்று அறிவோம்
பாலரை அன்பாகவே
தம்மிடத்தில் சேர்ப்பாரே

6. மாட்டுத் தொழுவத்தி லல்ல
தேவ ஆசனத்திலும்
ஏழைக் கோலமாக அல்ல
ராஜ கிரீடம் சூடியும்
மீட்பர் வீற்றிருக்கின்றார்
பாலர் சூழ்ந்து போற்றுவார்

## 391

1. உன் சஞ்சலத்தை விட்டு
   கர்த்தாவின் சபையே,
   உன் மீட்பரைத் துதித்து
   ஆனந்தங் கொள்வாயே;
   நீ நம்பி எதிர்ப்பார்த்த
   உன் மீட்பர் பிறந்தார்;
   கிலேசம் யாவும் ஆற்ற
   உன்னோடு தங்குவார்

2. ஆ இயேசுவே, நீர் வாழ்க!
   பிதாவின் சுதனே
   மா ஏழை நரனாக
   பிறந்த தேவனே,
   விண்ணோருக்காதி கர்த்தர்
   மண்ணில் பிறந்தீரோ?
   அநாதியான நித்தர்
   குழந்தை ஆனீரோ?

3. நான் வானத்துக்கு ஏற
   பூலோகத்தில் வந்தீர்;
   நான் தூதரோடு சேர
   நரர்க்குள் தங்கினீர்
   நான் வாழ உம்மைத் தாழ்த்தி
   பிழைக்க மரித்தீர்;
   நான் என்றும் உம்மை வாழ்த்தி
   வணங்க, ரட்சிப்பீர்

## 392

1. அதோ, மாட்டுத் தொழு பார்!
   மேய்ப்பர் போற்றும் பாலன் யார்?
      இவர் தாம் மாவல்ல கர்த்தர்
      இவர் மகிமையின் ராஜா;
      திருப்பாதம் பணிவோம்,
      ராஜ கிரீடம் சூட்டுவோம்.

2. அன்பின் வார்த்தை சொல்வதார்?
   ஜனம் துதி செய்வோர் ஆர்?

3. லாசரின் கல்லறை பார்,
   அங்கு கண்ணீர் விட்டோர் ஆர்?

4. சிலுவையின் காட்சி பார்,
   அரும் ஜீவன் விட்டதார்?

5. ராஜ கோலம் அணிந்தார்
   லோகம் யாவும் ஆள்கிறார்

## 393

1. உம்மண்டை தேவனே
நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து
நடப்பினும்
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே,
நான் சேர்வதே

2. தாசன் யாக்கோபைப்போல்
ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின்மேல்
நான் துயில்கையில்
எந்தன் கனாவிலே
உம்மண்டை தேவனே,
இருப்பேனே

3. நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல்
விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே
உம்மண்டை தேவனே
நான் சேரவே

4. விழித்து உம்மையே
நான் துதிப்பேன்;
என் துயர்க் கல்லை உம்
வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே
உம்மண்டை தேவனே
நான் சேர்வேனே.

## 394

1. எருசலேம் என் ஆலயம்
   ஆசித்த வீடதே;
   நான் அதைக் கண்டு பாக்கியம்
   அடையவேண்டுமே

2. பொன் தளம் போட்ட வீதியில்
   எப்போ துலாவுவேன்?
   பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
   என்றைக்குத் தொழுவேன்?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
   நிற்கும் அம்மோட்சத்தார்
   யேசுவைப் போற்றிக் களிப்பாய்
   ஓய்வின்றிப் பாடுவார்

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
   சேர்ந்தும்மைக் காணவே
   வாஞ்சித்து, லோக துன்பத்தில்
   களிப்பேன், இயேசுவே

5. எருசலேம் என் ஆலயம்
   நான் உன்னில் வாழுவேன்
   என் ஆவல், என் அடைக்கலம்
   எப்போ கண்டடைவேன்?

# 395

பெத்தலையில் பிறந்தவரைப்
பேற்றித் துதி, மனமே - இன்னும்

**சரணங்கள்**

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் - இங்கு
   தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார்-பெத்
2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் - இங்கு
   பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் - பெத்
3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
   மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே-பெத்
4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்-இங்கு
   ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார் - பெத்
5. இந்தளவாய் அன்புவைத்த எம்பெருமானை - நாம்
   எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே - பெத்

## 396

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

**சரணங்கள்**

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுவதும் நோக, ஐயா, என் இயேசுநாதா – எங்
2. தோளில் பாரம் அழுத்த தூக்கப் பெலம் இல்லாமல்
தாளும் தத்தளிக்கவே; தாப சோபம் உற, நீர் – எங்
3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கி வர – எங்
4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்
5. வல்ல பேயைக் கொல்லவும் மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்
6. வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ?
சண்டாளர்களைத் தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ – எங்
7. மாசணுகாத சத்ய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத் – எங்

குருசினில் தொங்கியே குருதியும் வடிய,
கொல்கொதா மலைதனிலே – நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர், பாவி,
கொள்ளாய் கண் கொண்டு

**சரணங்கள்**

1. சிரசினில் முள்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ – தீயர்
திருக்கரங்கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத் திரள் சூழ – குரு

2. பாதகர் நடுவில், பாவியினேசர்
பாதகன் போல் தொங்க – யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணி
படுத்திய கொடுமைதனை – குரு

3. சந்திர சூரிய, சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ! தேவ
சுந்தர மைந்தனுயிர் விட்ட காட்சியால்
துடிக்கா நெஞ்சமுண்டோ? – குரு

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதனில் – அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற் றோடுது, பார் – குரு

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ? – நின்
எருசலேம் அதிபன் இள மணவாளன்
ஏற்ற மா கோல மிதோ? – குரு

## 398

தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே – கன
நேய மேவியே

1. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே – மருள்
தீர்க்குந் தஞ்சமே – தீய

2. பரத்தை நோக்க மனம் அற்றேனே; பதடிதான் ஐயா
ஒரு பாவி நான், ஐயா – தீய

3. புதிய சிந்தை புதிய ஆசை புதுப்பித்தாக்கவே – அதைப்
புகழ்ந்து காக்கவே – தீய

4. ஏக்கத்தோடென் மீட்பைத்தேடி, இரந்து கெஞ்சவே – அதை
தினம் இதயம் அஞ்சவே

## 399

அக்கினி அக்கினி அக்கினியே!
பரிசுத்த ஆவியே
ஊற்றுமே இயேசுவே உந்தன் ஆவிதனை
உம்மில் என்றும் நான் மகிழ்ந்திடவே – அக்கினி

**சரணங்கள்**

1. உம்மையல்லால் பூமியிலே
விருப்பம் இல்லையே
உம்மையல்லால் பூமியிலே
வேறே தேவன் இல்லை – அக்கினி

2. உம்மையன்றி பூமியிலே
ஏதும் செய்திடேன்
உம் முகத்தை தேடுகிறேன்
கிருபை அளித்திடுமே – அக்கினி

3. உம்மைப் போல நேசிப்பவர்
பூமியில் எவருமில்லை
உம் கரத்தால் அணைத்திடுமே
ஆறுதல் அளித்திடுமே – அக்கினி

# 400

ஆதாரம் நீ தான் ஐயா, என் துரையே
ஆதாரம் நீ தான் ஐயா

**அனுபல்லவி**

சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில்–ஆதா

**சரணங்கள்**

1. மாதா, பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா? எளியனுக்கு – ஆதா

2. கற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே
வற்றா கிருபை நதியே, என் பதியே
வற்றா கிருபை நதியே, என் பதியே – ஆதா

3. சோதனையடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகும் வேளையில் என் சுகிர்தமே
துக்கம் மிகும் வேளையில் உன் தாசனுக்கு – ஆதா

## 401

நான் ஆயத்தமானேன் ஆண்டவரைச் சந்திக்க
நித்திய மகிழ்ச்சி அடைவேன்
மத்திய ஆகாய மீதிலே
மன்னன் இயேசுவைக் காணுவேன்

**சரணங்கள்**

1. மணவாளன் தட்டும்போது ஆயத்தமே
மங்கிடாதே என் விளக்குகளே
ஜீவச்சுடர் ஒளியாய் ஜொலிப்பேன்
தேவப்பிதா தங்கும் மாளிகையில் – நான்

2. சுபதின வெண் வஸ்திரம் ஆயத்தமே
சீருடனே நான் தரித்திடுவேன்
ஆட்டுக் குட்டியானவர் விருந்தில்
அன்பரோடே நானும் வீற்றிருப்பேன் – நான்

3. சுவிசேஷ பாதரட்சை ஆயத்தமே
சேவையிலே நான் அணிந்திடுவேன்
இயேசுவின் நாள் வேகம் நெருங்கிடுதே
இந்த நற்செய்தியைச் சாற்றிடுவேன் – நான்

4. பாடுபட்டு மரிக்கவும் ஆயத்தமே
பாரினிலே என் இயேசுவுக்காய்
பற்பல துன்பங்கள் சகித்திடுவேன்
பேரின்ப ராஜ்ஜியம் சேர்ந்திடுவேன் – நான்

5. எக்காளங்கள் தொனித்திட ஆயத்தமே
என் அரும் இயேசு வருகிறாரே
ஆமென் என் இயேசு வாரும் என்றே
ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன் – நான்

6. பரலோகம் செல்ல நானும் ஆயத்தமே
பொன் நகரம் நான் சுதந்தரிப்பேன்
அல்லேலூயா பாடிப் பறந்திடுவேன்
ஆண்டவர் அழைத்திடும் நாளதிலே – நான்

# 402

**சரணங்கள்**

என் இயேசு ராஜாவுக்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கு
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கிறேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் – நான்

2. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீரே
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே ஆ . . . ஆ . . .

3. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர் ஆ . . . ஆ . . .

4. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடிடுவேன் – நான்

## 403

ஏ ஹமாரே பாப்
தூ ஜோ ஆஸ்மான் மே ஹை
தேரா நாம் பாக் மானா ஜாயே
தேரி பாத்ஷாகத் ஆயே

1. ஜைஸி தேரி மர்ஜி
ஆஸ்மான் மே பூரி ஹோதி
வைஸே ஹி தேரி மர்ஜி
ஜகத் மே பூரி ஹோ ஜாயே

2. ரோஜ் கி ரோடி ஹமாரி
ஆஜ் ஹம்கோ தே தே
ஜீவன் கி ரோடி தூ ஹி ஹை
வஹி ஹமாரா பல் ஹை

3. ஜீஸ் தரஹ் ஹம் அப்னே
அபராதி கோ மாப் கர்த்தே
உஸ் தரஹ் ஹி ஹமாரே
அபராதோங் கோ மாப் கர் தே

4. ஹமே ஆஜ்மாயிஷோங் மே
ஜானே தூ ந தே
பல்கி புராயி ஸே பசா
தேரி ராஹ் மே சலா

5. கியோங்கி ஆஸ்மானி பாத்ஷாஹத்
அவுர் கூவ்வ் குதரத்
ஸாரா ஜமீன் கா ஜலால்
ஹை ஹமேஷா தேரா

## 404

யீசு மஸிஹ் ஹி மேரா கீத் ஹை
யீசு மஸீஹ் மேரா சங்கீத் ஹை
காதா ராஹுங்கா மைஹர் தம் உஸே
சப்ஸே ப்யாரா வஹி கீத் ஹை

1. ஜீவன் கே தா ரோ கோ சேடா ஜோ மைனே
பாயாகி உன்மே ஜீவன் நஹி ஹை
அப்னே விதாதா கீ மஹிமா கருங்கா
ஜிந்தா ஹும் லேகின் யஹ் ஜீவன் நஹிங் ஹை
யீசு கோ பாகர் கே மைனே ஜோ காயா
சப்ஸே அனோகா வஹி கீத் ஹை

2. யீசு மஸீஹ் ஹை மேரா சஹாரா
உஸ்கே சஹாரே மை சல்தா ரஹுங்கா
ஜீத்னா மை உஸ்கே ஸங் ஸங் சலூங்கா
உஸ்கே அனுரூப் டல்தா ரஹுங்கா
மேரா பரோஸா ஹை கேவல் உஸி பர்
வஹ் மேரா ரக்ஷக் வஹி மீத் ஹை

3. ராஹி மஸீஹி பட்தே ஹி ரஹ்னா
அப்தேரி மன்ஜில் ஆனே லஹி ஹை
துனியா மே பஸ்கர் ஹார் ன ஜானா
ஆவாஜ் மன்ஜில் ஸே ஆனே லஹி ஹை
துனியா ஸே ஹாரோ தோ ஹாரா ன சம்ஜோ
ஸச்முச் மே தேரி யஹி ஜீத் ஹை

## 405

சீயோன் தேஷ் ஹமாராஹை தேஷ் ரஹ்தே ஹை ஹம் பரதேஷ்
ஜாயேங்கே ஹம் அப்னே தேஷ் – ஹாலேலூயா

1. துக்ஜோ ஹமாரே யஹாங் ந ஹோங்கே பிர் வஹாங்
ஸாரே துகோங் கா அந்த் ஹோகா துக் கே யே ஆசு யீசு போசேஸ்கா

2. மன் ன லகாயே யஹாங் ஜானா ஹை ஹம் கோ வஹாங்
யஹாங் கே ஸுகோங் கா அந்த் ஹோகா
வஹாங் கே ஸுகோங் கா அந்த் ந ஹோகா

3. ஆயேகா யீஹுு யஹாங் லே ஜாயேகா ஹம்கோ வஹாங்
வாதா யீஹுுகா பூரா ஹோகா
ஆனந்த் ஜீவன் ஹம்கோ மிலேகா

## 406

ராஜாதி ராஜ் மஹிமா கே ஸாத்
ஆ ரஹா ஹை மேகோ(ங்) பர் ஹோ கே சவார்

1. முஸிபத் நிந்தா துகோங் கா ஸில்ஸிலா
கதம் ஹோனே கா சமய் ஆ கயா

2. மேரே ப்ரியகா ஜலாலி சேஹ்ரா
தேக்னே கா அப் சமய் ஆகயா

3. ஸப் துகோங் ஸே பரே ஆனந்த் வாஸ் மே
லே ஜானே கே லியே வோ ஆ ரஹா ஹை

4. அப்னே ப்ரிய கே ஸாத் கர்னே ஸதா கா வாஸ்
ஹம் ஜானே வாலே ஹை ரஹே ஹர் பல் தையார்

## 407

தேரி ஆராதனா கருங் (2)
பாப் ஷமா கர் ஜீவன் தே தே
தயா கீ யாச்னா கருங்

1. தூ ஹி மஹான் சர்வ சக்திமான்
து ஹி ஹை மேரே ஜீவன் கா சங்கீத்
இருதய் கே தார் சேடே ஜங்கார் (2)
தேரி ஆராதனா ஹை மதுர்கீத்
ஜவன் ஸே மேரே து ஜீ மஹிமா பாயே
ஏக் ஹி காம்னா கரூங்

2. சிருஷ்டி கே ஹர் ஏக் கண் கண் மே
சாயா ஹை தேரிஹி மஹிமா கா ராஜ்
பக்ஷி பீ கர்த்தே ஹை தேரி ப்ரஸன்ஸா
ஹர் பல் கனாதே ஹை ஆனந்த் கா ராக்
மேரி பீ பக்தி துஜே க்ரஹன் ஹோ
இருதய் ஸே ப்ரார்த்னா கரூங்

3. பதித் ஜீவன் மே ஜோதி ஜலா தே
துஜ் ஹி ஸே லகி ஹை ஆஷா மேரி
பாப்மய் தன் கோ தூர் ஹடா தே
பூர்ண ஹோ அபிலாஷா மேரி
ஜீவன் கே கடின் துகி ஷணோங்கா
த்ருட்தா ஸே ஸாம்னா கரூங்

# 408

கித்னா பலாயி முஜ்கோ கியா
கைஸே மை தன்ய கஹூங் ப்ரபு

தன்ய ராஜா தன்ய ராஜா
தன்யவாத் ஹோ ஸதா தேரி

1. ஹாதோங் மே தாம்கர்
புத்லி கி நாயி
ராத் தின் ரக்ஷா கியா (2)

2. தின்தா மே படா தா
தயா கர்கே யாத் கியா
தேரி ஸ்துதி கரூங்கா (2)

3. நிர்பல் ஜான்கர்
த்யாகா நஹி முஜ்கோ
த்ருட் கியா அப்னே பல் ஸே (2)

4. ஜோ குத் தூனே
கியா மேரே லியே
கைஸா மை வர்ணன் கரூங் (2)

5. பாபோங் மே மரா தா
குச் பி ஆஷா ந தா
பச்சா லியா அனுக்ரஹ் ஸே (2)

# 409

ஹே குதா தூ ஹை படா
ஹே குதா ஹை ஸதா
ஹே குதா தூ பாக் ஹை
ஹே குதா தூ ஷக்தி ஹை

ஜிந்தகி கீ ஸோதே மே முஜே
ஜிந்தகி பானே கோ தூ சலோ

1. ஆ ஜா மேரா ஜிந்தா குதா
ஜிந்தகி கீ ராஹோங் மே சலா
ஜிந்தகி கீ ஸோதே மே முஜே
ஜிந்தகி பானே கோ தூ சலா

2. ஹம் வபாதார் நஹிங் ஹை
தும் வபாதார் ஜாரூர் ஹோ
பாப் ஹமோரே தூர் கரனே கோ
க்ரூஸ் பர் துமே ஜானா படா

3. ஜகத் கீ ஸப் லோகோங் கே லியோ
தேரா பதன் காயல் ஹுவா ஹை
பிக்ர மன் ஜோ தேரே பாஸ் ஆயே
ஷாந்தி ஸே உஸே பர் தேகா

## 410

யீஷ் கே ஸங் ஜாயேங்கே யம்
ரஹேங்கே ஹம் யீஷ் கே ஸங்

அல்லேலூயா, அல்லேலூயா
ஹா . . . . அல்லேலூயா (4)

1. ரஹ்னா நஹிங் ஹை ஹம்கோ யஹாங்
ஜனா ஹை ஏக் தின் ஹம்கோ வஹாங் (2) – யீஷ்கே லங்

2. யீ சு ஏக் தின் ஆயேகா
ஹம்கோ லேகர் ஜாயேகா (2) – யீஷ் கே ஸங்

3. தன் தௌலத் கோ சோட்னா ஹை
ஸாத் ந குச் லே ஜானா ஹை (2) – யீஷ் கே ஸங்

4. ஸ்வர்கீய தேஷ் மே ஹம் ஜாயேங்கே
ஸாத் யீசு கே ஹம் ரஹேங்கே (2) – யீஷ் கே ஸங்

## 411

யீசு கா நாம் ஹை ஸாரி ஜமின்பர்
ஜீஸ்ஸே ஹம் பாத்தே உத்ஹார்

1. வஹ் துனியா மே ஆயா, லோஹ்ங் பஹாயா
ஃபிதியா ஜஹா (ங்) கோதியா
ஹம்கோ பச்சானே, குஷி திலானே யீஷ்ங் ஸலிப்பர் முவா

2. ஆஸ்மான் கே நீச்சே லோகோ(ங்) கே பீச்மே
கோயீ துஸ்ரா நாம் நஹி ஹை
ஹம்கோ பச்சானே, குஷி திலானே யீஷ்ங் ஸலிப்பர் முவா

3. ஜோ லாவே இமான் அப் யீஷ்ங்கே நாம்பர்
ஜிந்தா ஹமேஷா ரஹேகா
வஹி மார்க் ஹை வஹி ஸத்ய ஹை, வஹி அனந்த் ஜீவன் ஹை

# 412
## மராட்டி பாடல்

தராக் தோ சாமர்த் தோ
யேஷு தேவ் யுகானுயுக் ஆஹே (2)
ஹா - ஹா ஹாலேலூயா
ஹோ - ஹோ ஹோஸன்னா (2)
ஹாலேலூயா ஹாலேலூயா ஹாலேலூயா - (2)

1. ஹா திவஸ் ப்ரபுசா ஆஹே
உல்ஹாஸ் வ ஆனந்த் கரூங் (2)
கித்தி தோ தோர் தோ தேவ்
ஸர்வஸ்வ அப்னாஸ் திலே (2)

2. சலோ ஹோ ஆதா த்யாகடே
மஹிமா ஸ்துதி வர்ணு (2)
ஸ்வார்க்காச்ய தேவாலா
அஸேச் கீத் காவுங் (2)

3. த்யாசா அனுப க்யா
கித்தி தோ சாங்லா ஆஹே (2)
ஸைதானி பந்தனாதுனி
அப்னாஸ் சோடுவித்தோ (2)

## 413

யீசு து ஹை மஹான்
மேரே லியோ ஹை மஹான் (2)
மேரே லியே சப் கே லியே
ப்ரேம் கியா ஹை மஹான்

1. க்ரூஸ் பர் கூர் பஹா அப்னா
அர்ப்பன் கியா ஜீவன் அப்னா (2)
யிஷுப்ரபு துனே சப் கூச்
மேரே லியே கியா – யீஷுது

2. பாப் கி க்ஷமா வோ தேத்தா ஹை
ஸாத் ஹம்கோ லே சல்த்தா ஹை (2)
ஹம் கோ சூடாயா பாப் ஸே
அப்னா பனா லியா – யீஷுது

3. யீஷுஅப்கா ப்யாரா ஹை
வோ ஹி ஏக் சஹாரா ஹை (2)
கைஸா அனோகா ப்யார் ஹம் பர்
ப்ரபு யிஷு னே கியா – யீஷுது

## 414

முக்தி திலாயே யீஷு நாம், ஷாந்தி திலாயே யிஷுநாம்

1. யீஷு தயாகா பஹ்தா ஸாகர்
   யீஷு ஹை தாதா மஹான்
2. சர்னி மே தூனே ஜன்ம லியாஹு யீ
   ஸூலி பர் கியா விஸ்ராம்
3. ஹம் ஸப் கே பாபோங் கோ மிடானே
   யீஷு ஹுவா பலிதான்
4. க்ருஸ் பர் அப்னா கூன் பஹாயா
   ஸாரா சுகாயா தாம்
5. ஹம் பர் யீஷு க்ருபா கீஜே
   ஹம் ஹை பாபி நாதான்

பூமியின் குடிகளே எல்லாரும்
கர்த்தரை கெம்பீரமாய் பாடுங்கள்

சங். - 100:1

கர்த்தரை கெம்பீரமாய் பாடி நம்முடைய
இரட்சணியக் கன்மலையை
சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம்
வாருங்கள்

சங். - 95:1

வழிகளிலே நின்று பூர்வ பாதைகள்
எவை என்று கேட்டு விசாரித்து
நல்ல வழி எங்கே என்று பார்த்து
அதிலே நடவுங்கள். அப்பொழுது
உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல்
கிடைக்கும் என்று கர்த்தர் சொல்கிறார்.

எரே. - 6:18

# 415

ஜெயம் ஜெயம் அல்லேலூயா
ஜெயம் ஜெயம் எப்போதும்
இயேசு நாதர் நாமத்திற்கு
ஜெயம் ஜெயம் எப்போதும்

1. உம்மைப் பின்செல்வேனே சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன்
2. பாவி பாவி பாவி பாவி பரலோகம் செல்லலாம்
அருள் நாதர் பாதத்தண்டை பாவியே ஓடிவா
3. நானே வழி நானே சத்யம் நானே ஜீவன் என்றாரே
நாதன் கிறிஸ்து வண்டை பாவியே ஓடி வா

## 416

ஆவியில் அனல் கொண்டு ஆனந்திக்க
ஆத்தும நேசரே வந்திடுமே - 2
நேசத்தை என்மீது பொழிந்திடவே
பின்மாரி மழையினை ஊற்றிடுமே - 2

நிரம்பட்டும் நிரம்பட்டும் தூய ஆவியே
பரவட்டும் பரவட்டும் ஜீவ நதியே

1. இயேசுவின் நேசத்தால் நிரப்பப்பட
கல்வாரி தரிசனம் தந்திடுமே
மண்பாண்ட பொக்கிஷம் நிரம்பிடவே
உன்னத ஆவியை ஊற்றிடுமே

ஊற்றட்டும் - 2 - பின்மாரியை
தேசமெல்லாம் கரை புறண்டோடட்டுமே

2. தாவீதைப்போல் ஆடிப்பாடி துள்ளிடவே
தெய்வீக அக்கினி ஊற்றிடுமே
தீப்பிடித்து தேசமெங்கும் பரவிடவே
பரலோக வல்லமை ஊற்றிடுமே - ஊற்றிடுமே

3. எலியாவின் நாட்களில் நடந்ததுபோல்
வான அக்கினி இறங்கட்டுமே - 2
கர்த்தரை ஜனங்கள் முழங்கட்டுமே
அவரே தேவன் என்று ஆர்ப்பரிப்போம்

## 417

பிதாவுக்கு ஸ்தோத்திரம் தேவ குமாரனுக்கு ஸ்தோத்திரம்

1. பாவ பாரத்தினின்று என்னை மீட்டிட்டார்
   சாப வல்லமையினின்று என்னை காத்திட்டார் - 2

2. சேனைகளின் தேவன் என் சொந்தமானவரே
   தேவ சேனை தூதரை தந்து விட்டாரே - 2

3. சீக்கிரமாய் வரப்போகும் ஆத்ம நேசரே
   சீக்கிரமாய் காண்பேன் உன் பொன்முகத்தையே
   - பிதாவுக்கு - 2

## 418

ஆதியும் அந்தமுமானவரே
அல்பாவும் ஓமேகாவும் ஆனவரே - 2
அல்லேலூயா அல்லேலூயா (4)

1. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தவரே
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே - அல்லேலூயா

2. பரிசுத்த பலியாய் வந்தவரே
எங்களுக்காய் பலி ஆனவரே - அல்லேலூயா

3. இருக்கிறவராய் இருப்பவரே
நேற்றும் இன்றும் மாறாதவரே - அல்லேலூயா

4. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
திரியேக தேவனுக்கு ஸ்தோத்திரமே - அல்லேலூயா

5. வல்லவரே இயேசு வல்லவரே
சகலத்தையும் செய்ய வல்லவரே - அல்லேலூயா

6. நல்லவரே இயேசு நல்லவரே
இஸ்ரவேலின் கர்த்தர் நல்லவரே - அல்லேலூயா

## 419

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தரே (2)
ஆராதனை உமக்கு ஆராதனை (4)

1. கேருபீன்கள் சேராபீன்கள் போற்றிடும்
எங்கள் பரிசுத்தரே (2) - ஆராதனை

2. ஏழு குத்துவிளக்கின் மத்தியிலே உலாவிடும்
எங்கள் பரிசுத்தரே (2) - ஆராதனை

3. ஆதியும் அந்தமும் ஆனவரே
அல்பாவும் ஓமேகாவும் ஆனாவரே (2) - ஆராதனை

4. இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை
கரங்களில் உடையவரே (2) - ஆராதனை

5. அக்கினி ஜுவாலை போன்ற கண்களையும்
வெண்கல பாதங்களை உடையவரே (2) - ஆராதனை

6. பரிசுத்தமும் சத்தியமும் தாவீதின்
திறவுகோலும் உடையவரே (2) - ஆராதனை

## 420

1. எருசலேமே எருசலேமே எல்லாரும் கொண்டாடுவோம்
எக்காள முழக்கத்தோடு இயேசுவின் புகழ் பாடுவோம்

**பல்லவி**

பூரணமே புது எருசலேமே பூமியில் கொண்டாட்டமே
ஆடலோடும் புதுப்பாடலோடும் – வரும் அல்லேலூயா கூட்டமே

2. அஸ்திபார உபதேசத்தால் அமைந்திட்ட தேசமிது – எங்கள்
அப்போஸ்தலர் தலைவரோடு அணிவகுத்துச் செல்லுது – பூரணமே
3. பரிசுத்தர்கள் பவனி வரும் பசும்பொன் தேசமிது
பாருலகின் எல்லையெங்கும் பரவி புகழ்பாடுது – பூரணமே
4. மணவாளன் இயேசுவோடு மகிழ்ந்திடும் தேசமிது
மணவாட்டியாய் அலங்கரித்து மங்காத ஒளிவீசுது – பூரணமே

# 421

சங்கீதம் பாடி மகிழ்ந்திடுவோம்
சந்தோஷம் உண்டாகப் பாடிடுவோம்
சர்வ வல்ல தேவனின் நாமத்தையே
சகல ஜனங்களில் உயர்த்திடுவோம்

**சரணங்கள்**

1. தேவனின் ஜனமாய் துதித்திடுவோம்
தேவாதி தேவனைப் பணிந்திடுவோம்
ஜீவனுள்ள தேவனின் துதிகளையே
ஜீவனுள்ள நாள் மட்டும் சொல்லி வருவோம் – சங்கீதம்

2. ஆவியான தேவனை ஆராதிப்போம்
ஆவியோடும் உண்மையோடும் தொழுதிடுவோம்
ஆட்டுக் குட்டியானவரின் நாமத்தையே
ஆனந்தம் உண்டாகப் பாடிடுவோம் – சங்கீதம்

3. பரிசுத்தவான்களின் சபையினிலே
பரிசுத்தரே என்றும் உம்மைத் துதிப்போம்
பரிசுத்த ஆவியின் வல்லமையால்
உம்மைப் பாடிபாடித் துதித்திடுவோம் – சங்கீதம்

5. நன்மை செய்யும் நல்லவரை நாடிவருவோம்
நாள்தோறும் உம்மைத்தேடி ஓடிவருவோம்
ஜோதிகளின் பிதாவை துதித்திடுவோம்
சோதிக்கும் சாத்தானை ஜெயித்திடுவோம் – சங்கீதம்

# 422

ஆயத்தமாகிடுவோம் அவர்
ஆண்டவர் என்று சொல்லுவோம்
தேசம் நமக்கு முன்னே
தேவதாசரின் பின் செல்லுவோம்
திருச்சபையே ஓ தேவஜனமே
திகைத்து நில்லாதே
மனம் கலங்கிப் போகாதே

**சரணங்கள்**

1. பரிசுத்தமே அவர் வாழ்க்கையென்போம் - பல
பாடுகளே அவர் பாதையென்போம்
பொறுமையோடு செல்வோம்
புது எருசலேம் அடைவோம் - திருச்சபையே

2. நிந்தை வந்தாலும் தேவ நீதியிலே - நம்
சொந்தம் போனாலும் அவர் மந்தையிலே
என்றும் கனி தருவோம் - நாம்
இயேசுவின் அன்பைச் சுமப்போம் - திருச்சபையே

3. இதயத்திலே வந்து இயேசு தங்கினார் - இந்த
இகமதில் நம் நண்பர் ஆனார்
கிரீடம் தருவேன் என்றார் - அவர்
கிருபையில் வளர்ந்திடுவோம் - திருச்சபையே

## 423

பின்மாரி முன்மாரி ஊற்றிடுமே தேவா
அருள்மாரி இந்நேரம் தாருமே தேவா

ஊற்றிடுமே தேவா ஊற்றிடும்
எங்கள் மீது இப்போதே ஊற்றிடுமே

1. இரட்சிப்பின் ஊற்றுக்கள் சுரக்கட்டுமே
அபிஷேகத்தின் ஆறுகள் ஓடட்டுமே
குருவிகள் பாடிடும் காலம் அல்லவா
காட்டுப்புறா சத்தமும் கேட்குதகல்லவா – பின்மாரி

2. கல்லான உள்ளங்கள் உருகட்டுமே
கற்பாறைகள் ஆட்டைப்போல் துள்ளட்டுமே
தேசத்தில் எழுப்புதல் தாரும் இயேசுவே
அற்புதங்கள் அடையாளங்கள் செய்யும் இயேசுவே
– பின்மாரி

3. வருகைக்காய் தேசத்தை சீர்படுத்திட
தேசமது நேசரை சந்தித்திட
ஆயத்தமாக்கிடும் எந்தன் இயேசுவே
பரலோகத்தின் மகிமையை வீசச் செய்யுமே – பின்மாரி

## 424

1. வான பராபரனே இப்போ வாரும் எம் மத்தியிலே
வந்தநின் திருக்கரத்தால் எம்மை ஆசீர்வதியுமையா
எல்லா மகிமை கனமும் துதியும் எங்களிடம்வாருமையா

2. பக்தரின் மறைவிடமே ஏழை மக்களின் அதிபதியே
பாதமே கூடும் பாலகர் எமக்கு பரிசுத்தமீயுமையா
வாக்கு மாறா தேவா வாரும் வல்லமையால் நிறைக்க

3. கிருபாசனபதியே நின் கிருபையில் நிலைத்திடவே
கஷ்டமதிலும் நஷ்டமதிலும் கருணையால் நின்றிடவே
நின் சக்தியோடு பக்தியில் யாம் பூரணராகிடவே

4. தாய் என்னை மறந்தாலும் ஐயா நீர் மறவாதிருக்க
ஆவியினால் எம் உள்ளமீதினில் அக்கினி பற்றிடவே
யேகோவாவே எங்களின் ராஜா எழுந்து வாருமையா

5. நினைத்திடா தினமதினில் எம் கர்த்தரே வருவீரே
ஆவி ஆத்ம சரீரம் முற்றும் மகிமையில் சேர்த்திடவே
மாசில்லா பரிசுத்தராக மண்மீது துலங்கிடவே

6. வாதை பிணி தீர எம் வாய்த்த மருந்தே நீர்
பாவ சாப ரோக முற்றும் மாற்றிடுமே திருரத்தமே
கல்வாரி அன்பைப் பெற்றிட நாம் விரைந்து ஏகிடவே

7. ஆகாய மேக மீதில் எக்காளம் தொனித்திடவே
அன்பின் தயாளன் ஆனந்த பூமான் வரவே இரண்டாம் முறையே
ஆசையோடு காத்திருந்து ஜெபித்திட வல்லமையாய்

## 425

என் ஆசை நீர் தானய்யா - நேசரே
என் ஆசை நீர் தானய்யா
என் நேசரே என் தெய்வமே
என் ஆசை நீர் தானே (2)

1. சாரோனின் ரோஜா இவர்
பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமே
காட்டு மரங்களுள் நேசர் கிச்சிலி மரமாம்
என் மேல் பறக்கும் நேசக் கொடியும் அவரே - என் ஆசை

2. என் நேசர் வெண்மையானவர்
அவர் பதினாயிரம் பேரில் சிறந்தவர்
நேசரின் கண்கள் புறாக் கண்கள் - அவை
எனக்காக கண்ணீர் சிந்திடும் கண்கள் - என் ஆசை

3. நான் எந்தன் நேசருடையவன்
என் நேசர் என்னுடையவரே
என் புறாவே என் உத்தமியே
என்று சொல்லியே என் நேசர் அணைத்துக்
கொள்வாரே - என் ஆசை

## 426

நீரின்றி வாழ்வேது இறைவா – உம்
நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் நூறாண்டு நான் வாழ்ந்த போது
உம் இல்லத்தில் வாழும் ஒரு நாள் போதும் (நீர்)

**சரணங்கள்**

1. பலகோடி வார்த்தைகள் நான் கேட்ட போதும்
– இயேசுவே நீர்
பேசும் ஒரு வார்த்தைபோதும்
ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே – உம்
வார்த்தையில் உண்டு அற்புதமே – நீரின்றி

2. கல்லுக்குள் தேரையை வைத்தவர் நீர்
அதற்குள்ளும் ஜீவனைத் தந்தவர் நீர்
உமையன்றி அணுவேதும் அசையாதய்யா
உம் துணையின்றி உயிர் வாழ முடியாதய்யா – நீரின்றி

3. எத்தனை நன்மைகள் செய்தீரையா – அதில்
எதற்கென்று நன்றி சொல்லி துதிப்பேனய்யா
அத்தனையும் சொல்ல வேண்டுமென்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதையா – நீரின்றி

உனக்கொருவர் இருக்கின்றார்
உன்னை விசாரிக்கத் துடிக்கின்றார்
உன்னையும் என்னையும் இயேசு நேசிக்கிறார்
உன்னை உள்ளங்கைகளில் வரைந்திடுக்கிறார்

**சரணங்கள்**

1. சாதி சனம் மறந்திட்டாலும் மறந்திடாதவர்
சோதிகளின் பிதாவாம் இயேசுவானவர்
சூழ்நிலைகள் மாறினாலும் – இயேசு உன்னை
மறப்பதில்லை சிலுவையில் ஜீவன் விடும் நேரத்திலும்
வெறுக்கவில்லை – உனக்கு

2. ஆகாதவன் என்று உன்னை யார் தள்ளினாலும்
ஆபிரகாமின் தேவன் உன்னைத் தள்ளிடுவாரோ
தஞ்சம் என்று வருபவரைத் தள்ளாத நேசரவர்
அஞ்சிடாதே மகனே மகளே என்று உன்னை தேற்றிடவே – உனக்கு

3. வியாதியஸ்தன் என்று உன்னை ஒதுக்கி வைப்பார்கள்
வேண்டாத வார்த்தைகளைச் சொல்லி புண்படுத்துவார்கள்
வாழ்வதா, சாவதா என்று நீ அழுது புலம்பிடுவாய்
வாழத்தான் வேண்டும் என்று வியாதியிலே சுகம் தரவே – உனக்கு

4. கஷ்டப்படும்போது நமக்கு உதவுவாரில்லை
கடன்பட்ட போது அதைத் தீர்ப்பவரில்லை
இஷ்டப்பட்ட தெய்வங்களெல்லாம் கும்பிட்டுப் பார்த்தாச்சு – உனக்கு

5. நம்ம கஷ்டங்களைத் தீர்க்க அவை முன்வரவில்லை
உலகத்தில் தெய்வங்கள் உண்டென்று சொல்வதெல்லாம் சும்மாங்க
இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தெய்வமுங்க
ஜனங்களின் பாவம் போக்கி ரட்சிக்க வந்த தெய்வமுங்க – உனக்கு

# 428

பிதாகுமாரன் பரிசுத்த ஆவியானவராம்
திரித்துவ தேவனை துதித்திடுவோம் (2)

**சரணங்கள்**

1. நித்தியத்தின் மகிமை பிரகாசத்தில்
சேரக்கூடாத ஒளி தனில்
மூன்றில் ஒன்றாய் ஜொலித்திடும்
பரம பிதாவை ஸ்தோத்தரிப்போம்

2. பாவத்தின் கோர பலியான
சாபங்கள் தன்னில் ஏற்றுக்கொண்டு
பாவிகளுக்காய் ஜீவன் தந்த
தேவ குமாரனை ஸ்தோத்தரிப்போம்

3. வல்லமையோடு வந்திறங்கி
வரங்கள் பலவும் நமக்கீந்த
ஆவியின் வழியை தினம் காட்டும்
பரிசுத்த ஆவியை ஸ்தோத்தரிப்போம்

4. அனல் போல் சோதனை வந்தாலும்
அக்கினி ஊடாய் நடந்தாலும்
சோதனை நம்மை சூழ்ந்தாலும்
ஜெயம் அளிப்பவரை ஸ்தோத்தரிப்போம்

5. வானவர் விரைவில் வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைப்போமே
வானவருடன் சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிட ஸ்தோத்தரிப்போம்

## 429

எந்த நிலையில் நாமிருந்தாலும்
நம்மை வெறுக்காதவர் நம் இயேசு ஒருவரே
நம் நேசர் ஒருவரே

1. நோயாளியாய் நாமிருந்தால் பலர் வெறுப்பார்கள்
நம் நோய்களையே சொல்லிச் சொல்லி நோக வைப்பார்கள் - எந்த

2. கடனாளியாய் நாமிருந்தால் பலர் வெறுப்பார்கள்
நம் கடன்களையே சொல்லிச் சொல்லி கலங்க வைப்பார்கள் - எந்த

3. ஏழையாக நாமிருந்தால் பலர் வெறுப்பார்கள்
நம் ஏழ்மையையே சொல்லிச் சொல்லி ஏங்க வைப்பார்கள் - எந்த

4. பட்டம்படிப்பு இல்லையென்றால் பலர் வெறுப்பார்கள்-அது
பட்ட மரம் என்று சொல்லி பரிகாசிப்பார்கள் - எந்த

5. அனாதையாய் நாமிருந்தால் பலர் வெறுப்பார்கள் என்
அன்பை உனக்குத் தாரேன் என்று அலைய வைப்பார்கள் - எந்த

## 430

உயிரோடு எழுந்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே - உம்மை ஆராதனை செய்கிறோம்

1. மரணத்தை ஜெயித்தவரே
   உம்மை ஆராதனை செய்கிறோம்
   பாதாளம் வென்றவரே
   உம்மை ஆராதனை செய்கிறோம் - அல்லேலூயா
2. அகிலத்தை ஆள்பவரே
   உம்மை ஆராதனை செய்கிறோம்
   ஆனந்த பாக்கியமே
   உம்மை ஆராதனை செய்கிறோம் - அல்லேலூயா

# 431

தேவா நான் எதினால் விசேஷித்தவன்
ராஜா நான் அதைத் தினம் யோசிப்பவன்
எதினால்? இது எதினால்
நீர் என்னோடு வருவதினால்

**சரணங்கள்**

1. மேக ஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூடச்செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அதுபோதும் என் வாழ்விலே – தேவா

2. பகல் சென்று அந்தகாரம் சூழ்ந்துகொண்டது
பரிசுத்தமான அக்கினி ஸ்தம்பம் செல்லுது
ஆ! ஆ! என் தேவன் தந்தாரே நல்ல
மங்காத அபிஷேகமே – தேவா

3. தாகம் கொண்ட தேவஜனம் வானம்பார்க்குது
ஆவல் கொண்ட கன்மலையும் கூடச்செல்லுது
என் ஏக்கமெல்லாம் என்தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன் – தேவா

4. வாழ்க்கை யிலே கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒருமரம் கூட வருது
மாராவின் நீரைத் தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடுண்டு – தேவா

உம்மை மறவேன் நான் (2)
என் ஏசையா உம்மை மறவேன் நான்
என் தாழ்வினில் என்னை நினைத்தீரே
என் இயேசையா உம்மை மறவேன் நான் - 2

**சரணங்கள்**

1. ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும் (2)
   கன்மலையும் மீட்பரும் நீர்தானையா
   கன்மலையும் மீட்பரும் நீர்தானைய்யா (2)
2. என் வாழ்வில் நீர் செய்த எண்ணில்லா நன்மைகள்
   ஆயிரம் பதினாயிரம் அதற்கு மேலையா
   ஆயிரம் பதினாயிரம் அதற்கு மேலையா (2)

# 433

பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காய்
நான் இலக்கை நோக்கி ஓடுகிறேன் (2)
ஓடுகிறேன் நான் (2)
என் இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன் (2)
அல்லேலூயா, அல்லேலூயா (4)

**சரணங்கள்**

1. இலாபமான அனைத்தையுமே
நஷ்டம் என்று கருதுகிறேன் (2) எனக்கு
இயேசு ராஜாவின் இந்த வேலைக்காக
மகிழ்ச்சியுடன் நான் ஓடுகிறேன்
அல்லேலூயா, அல்லேலூயா (4) – பரம

2. எத்தனைதான் இடறல்கள் வந்தாலும்
விசுவாசத்திலே நிலைத்திருப்பேன் (2) எனக்கு
எனக்காக அப்பா நியமித்த
இந்த பாதையிலே நான் ஓடுகிறேன்
அல்லேலூயா அல்லேலூயா (4) – பரம

3. என் மணவாளன் என் இயேசு ராஜாவை
நான் காணவே நான் வாஞ்சிக்கிறேன் (2)
என் ஆசை எல்லாம் என் இயேசுதானே
அவர் பொன் முகம் தான் நான் பார்க்கணுமே (2)
அல்லேலூயா அல்லேலூயா (4)

## 434

நம்முடைய தெய்வம் இயேசுவல்லால் – இந்த
நானிலத்தில் வேறு தெய்வமில்லை

1. கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம்
பாக்கியமுள்ளது எனப்படுமாம்
2. பாவமறியாத பரிசுத்தராம் இயேசு
பாவிகளை இரட்சிக்க வந்தவராம்
3. கற்சிலை பேசுமா வாய்திறந்த – நம்
கர்த்தர் இயேசு இன்னும் பேசுகிறார்
4. பற்பல கிருபைகள் பகருகின்றார் – நாம்
கற்புடன் அவர் பணி செய்திடவே
5. மறப்பாளோ தாய் தன் பாலகனை – நான்
மறப்பதில்லை என்னும் அன்பு தெய்வம்
6. ஏறெடுக்கும் நம் தேவைகட்கு – அவர்
மாறாமல் பதில் தரும் மகிபனவர்
7. சகலமும் படைத்த சர்வாதிகாரி இயேசு
சகலமும் ஜெயித்திட்ட பரிகாரி

## 435

பாடுவேன் பரவசமாகுவேன்
பறந்தோடும் இன்னலே

1. அலையலையாய் துன்பம் சூழ்ந்து
நிலை கலங்கி ஆழ்த்துகையில்
அலைகடல் தடுத்து நடுவழியிலிருந்து
கடத்தியே சென்ற கர்த்தனை - பாடுவேன்

2. என்று மாறும் எந்தன் துயரம்
என்றே மனமும் ஏங்குகையில்
மாராவின் கசப்பை மதுரமுமாக்கி
மகிழ்வித்த மகிபனையே - பாடுவேன்

3. ஒன்றுமில்லா வெறுமை நிலையில்
உதவுவாரற்றுப் போகையில்
கன்மலை பிளைந்து தண்ணீரைச் சுரந்து
தாகம் தீர்த்த தயவை - பாடுவேன்

4. வனாந்திரமாய் வாழ்க்கை மாறி
பட்டினி சஞ்சலம் நேர்கையில்
வான மன்னாவால் ஞானமாய் போஷித்த
காணாத மன்னா இயேசுவே - பாடுவேன்

5. எண்ணிறந்த எதிர்ப்பினூடே
ஏளனமும் சேர்ந்து தாருகையில்
துன்ப பெருக்கிலும் இன்பமுகம் காட்டி
ஜெயகீதம் ஈந்தவரை - பாடுவேன்

# 436

உங்க கிருபைதான் என்னை தாங்குகின்றது
உங்க கிருபைதான் என்னை நடத்துகின்றது

கிருபையே கிருபையே - 2
கிருபையே கிருபையே - 2

**சரணங்கள்**

1. நெருக்கப்பட்ட நேரத்திலெல்லாம்
என்னை உருவாக்கிய கிருபையிது - 2
2. சோர்ந்து போன நேரத்திலெல்லாம்
என்னை சூழ்ந்துகொண்ட கிருபையிது
3. ஒன்றுமில்லா நேரத்திலெல்லாம்
எனக்கு உதவி செய்த கிருபையிது
4. ஊழியத்தின் பாதையிலெல்லாம்
என்னை உயர்த்திவைத்த கிருபையிது

## 437

அப்பா உம் கிருபைகளால் என்னைக்
காத்துக் கொண்டீரே

**சரணங்கள்**

1. தாங்கி நடத்தும் கிருபையிது
தாழ்வில் நினைத்த கிருபையிது
தந்தையும், தாயும் கைவிட்டாலும்,
தாங்கி நடத்தும் கிருபையிது – அப்பா

2. வியாதி நேரத்தில் காத்த கிருபை
விடுதலை கொடுத்த தேவ கிருபை
சூழ்நிலைகள் மாறினாலும் மாறாமல்
தாங்கிட்ட தேவகிருபை – அப்பா

3. கஷ்டத்தின் நேரத்தில் காத்த கிருபை
கண்ணீரை மாற்றிட்ட தேவ கிருபை
தடைகள் யாவையும் உடைத்து எறிந்து
வெற்றியைத் தந்திட்ட தேவகிருபை – அப்பா

## 438

தேவனே ஸ்தோத்திரம் கோடாகோடி ஸ்தோத்திரம்
துதிகளைச் செலுத்தி நான் பாடுகிறேன் ஸ்தோத்திரம்
நான் உந்தன் பிள்ளையல்லவா
நீர் எந்தன் தந்தையல்லவா

**சரணங்கள்**

1. காரிருளில் நடந்து வந்தேன் கர்த்தாவே ஸ்தோத்திரம்
கந்தையும் உடுத்திருந்தேன் காத்தீரே ஸ்தோத்திரம்
கருணையுள்ள தெய்வம் அல்லவா
என் கண்களைத் திறந்தீர் அல்லவா

2. தாயின் கருவில் கண்டவரே கர்த்தாவே ஸ்தோத்திரம்
தாழ்மை கோலம் கொண்டவரே இயேசுவே ஸ்தோத்திரம்
தந்தைபோல் சுமந்தீர் அல்லவா
தாங்க பலன் தந்தீர் அல்லவா

3. வறுமையில் நினைத்தவரே வல்லவரே ஸ்தோத்திரம்
வாடாத ரோஜாவே வணங்கிடுவேன் ஸ்தோத்திரம்
வருகையிலே நினைவு கூருமே
நீர் வந்தாலே எனக்குப் போதுமே

## 439

குயவனே குயவனே படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையும்
கண்ணோக்கிப் பார்த்திடுமே

**சரணங்கள்**

1. வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்துத் தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்திடுமே
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம்
இயேசுவைப் போற்றிடுமே
என்னையும் அவ்வித பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே - குயவனே

2. விலை போகாத பாத்திரம் நான்
விரும்புவா ரில்லையே
விலையெல்லாம் உம் கிருபையால்
உகந்த தாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கி என்னை
தம்மைப்போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமை ஆக்கிடுமே - குயவனே

3. மண்ணாசையில் நான் மயங்கியே
மெய்வழி விட்டகன்றேன்
கண்போன போக்கை பின்பற்றினேன்
கண்டேனில்லை இன்பமே
காணாமல்போன பாத்ரம்என்னை
தேடி வந்த தெய்வமே
வாழ்நாள்எல்லாம் உம் பாதம் சேரும்
பாதையில் நடத்திடுமே - குயவனே

## 440

பேசும் தெய்வம் நீர்
பேசாத கல்லோ மரமோ நீர் அல்ல

1. என்னைப் படைத்தவர் நீர்
என்னை வளர்த்தவர் நீர்
என்பாவம் நீக்கி என்னைக் குணமாக்கி
என்னோடிருப்பவர் நீர் – இயேசுவே (4) – பேசும்

2. என் பாரம் சுமப்பவர் நீர்
என் தாகம் தீர்ப்பவர் நீர்
என்னைப் போஷித்து என்னை உடுத்தி
என்னோடிருப்பவர் நீர் – இயேசுவை (4) – பேசும்

3. என் குடும்ப வைத்தியர் நீர்
ஏற்றநல் ஔஷதம் நீர்
எந்தன் வியாதி பெலவீனங்களில்
என்னோடிருப்பவர் நீர் – இயேசுவே (4) – பேசும்

4. என்னை அழைத்தவர் நீர்
என்றும் நடத்திடுவீர்
என்மேல் கண்வைத்து ஆலோசனை தந்து
என்னோடிருப்பவர் நீர் – இயேசுவே (4) – பேசும்

5. எனக்காய் வருபவர் நீர்
என் கண்ணீர் துடைப்பவர் நீர்
என்னை இரட்சித்து முடித்து சீயோனில் சேர்த்து
என்னோடிருப்பவர் நீர் – இயேசுவே (4) – பேசும்

## 441

சீயோன் தேசமதில் சேர்ந்தென்றும்
அன்பருடன் வாழ்வேன்
ஜெயகீதம் பேரின்பம்
துதிபாடி மகிழுவேன்

**சரணங்கள்**

1. நகரத்தின் வீதிகள்
பொன்னாக மின்னுதே
இராப்பகல் இல்லையே - என்
இரட்சகர் வெளிச்சமே

2. என் கண்ணீர் யாவையும்
கரத்தால் துடைப்பாரே
சஞ்சல மில்லையே - என்
நேசர் மகிழ்ச்சியே

3. மண் சாயல் மாறியே
விண் சாயல் அணிந்துமே
மறுரூபம் அடைவேனே - என்
இயேசுபோல் மாறுவேன்

4. நிதமும் என் நேசரை
துதிபாடிப் போற்றுவேன்
மகிபனின் தேசத்தில் - நான்
மகிமையாய் வாழுவேன்

# 442

நீங்காத பாவம் நீங்காததேனோ
நீங்கிடும் நாள்தான் இதோ
பாவியை ஒருபோதும் தள்ளாதநேசர்
வாவென்று அழைக்கிறார்

**சரணங்கள்**

1. காணாத ஆட்டை தேடிடும் மேய்ப்பர்
கண்டுன்னைச் சேர்த்திடுவார்
பாவியை ஒருபோதும் தள்ளாதநேசர்
வாவென்று அழைக்கிறார்

2. நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
எங்கு நீ சென்றிடுவாய்
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று அழைக்கிறார்

## 443

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு, நிறைந்திடும் இடம் உண்டு

**சரணங்கள்**

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழையில்லை பணக்காரன் இல்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

2. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

3. இன்பமுண்டு சமாதனாமுண்டு
வெற்றி உண்டு துதிப்பாடல் உண்டு
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவார்

## 444

எத்தனை நன்மைகள் எனக்கு செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் (நான்)
நன்றி ராஜா . . . நன்றி ராஜா . . .

**சரணங்கள்**

1. கரங்களைப் பிடித்து கண்மணி போ
காலமெல்லாம் காத்தீர்

2. தாழ்மையில் என்னைத் தயவுடன் நினைத்தீர்
தேவனே உம்மைத் துதிப்பேன்

3. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைக்கட்டினீர்

4. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையாய் இரட்சித்தீரே

5. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர்

6. முள்முடி தாங்கி திருரத்தம் சிந்தி
சாத்தனை ஜெயித்து விட்டீர்

7. நீர்செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா

8. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர்

## 445

கர்த்தருக்கு நல்ல ஒரு தோட்டமே
கனிமரங்களும் அழகூட்டுமே
நறுமணச் செடிகளின் கூட்டமே
நேசருக்கு இதில் வெகு நாட்டமே

**அனுபல்லவி**

குருவிகள் கூடி பாட்டுப் பாடுதே
கின்னரங்கள்கூட தோற்றுப் போகுதே

**சரணங்கள்**

1. கன்மலையின் வெடிப்பிலே காணுதே!
காட்டு புறாவின் இனிய ரூபமே!!
கேட்க வேண்டும் அதன் குரலோசையே
மீட்பருக்கு மிக அது ஆசையே - குருவிகள்

2. ஜீவதண்ணீர் ஓடும் நல்ல ஓடையே
லீபனோனி லிருந்துரு வாகுதே!
ஜீவதண்ணீர் தரவும் நீரூற்றுமே
செழிப்படைந்திட என்றும் பாயுதே - குருவிகள்

3. தூதாயீம் கனிகள் வாசம் வீசுதே
இனிய கனிகளும் ஏராளமே
அதிகாலையில் நேசரே வாருமே
அருமையான தோட்டத்தைப் பாருமே - குருவிகள்

4. சாலோமோனின் மஞ்சம் இதோ பாருமே
அறுபது சவுகரிய வானுமே
சுற்றி நிற்பதேனோ கொஞ்சம் கேளுமே
இராக்கால பயமெதற்குக் கூறுமே - குருவிகள்

# 446

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுதிடுவோம்

**சரணங்கள்**

1. உன்னத தேவன் நீரே ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே பாரில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம் – மகிமை

2. ஒருவரும் சேரா ஒளியில் வாசம் செய்பவரே
ஒளியினை தந்துமே இதயத்தில் வாசம் செய்யும்
ஆவி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம் – மகிமை

3. பரிசுத்த தேவன் நீரே பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
என்றும் தொழுதிடுவோம் – மகிமை

4. நித்திய தேவனும் நீரே நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம் – மகிமை

## 447

என் இயேசுவே நீர் செய்த நன்மைக்காய்
நான் என்ன நன்றி சொல்லிடுவேன்
என் காணிக்கையாய் உள்ளம் தந்தேனே
என் ஆவி ஆத்துமா சரீரமும் தந்தேன்

**சரணங்கள்**

1. வல்லமையாய் விளங்கும் உம் நாமம்
வல்லமையை எனக்குத் தந்தருளும்
வல்லபரன் உமது வாக்குத்தத்தம்
நினைத்திடுவேனே நான் நித்தம், நித்தம் – என்

2. என் கண்ணீரோடு உம்மைத் தேடினேன்
உந்தன் அன்பதால் நீர் என்னைத் தேற்றினீர்
உலகத்தின் மேன்மை வெறுத்துவிட்டேன்
உலகத்தில் உமக்காய் இனி வாழ்வேன் – என்

3. உம் ஆலயத்திற்கு நான் ஓடி வந்தேன்
என் இதயத்திற்குள் நீர் தேடி வந்தீர்
மனதார காணிக்கையை நானும் தந்தேன்
ஒன்றை நூறாய் மாற்றியே திரும்பத் தந்தீர் – என்

## 448

கர்த்தர் என்னை விசாரிப்பவர்
கர்த்தர் என்னை ஆதரிப்பவர்
கர்த்தர் என்னை உயர்த்துபவர்
கர்த்தர் என்னை தப்புவிப்பவர்

**சரணங்கள்**

1. பெயர் சொல்லி கூப்பிட்டு என்னை
அவர் நித்தம் நடத்திச் செல்வதால்
எந்தன் கவலை பாரத்தை முற்றும்
அவர் மீது வைத்துவிடுவேன் நான் – கர்த்தர்

2. எந்தன் தலையிலுள்ள மயிரெல்லாம்
உன்னதரே எண்ணி வைத்துள்ளார்
அவரின் உத்தரவில்லா தொன்றும்
கீழே விழாது என்றறிவேன் நான் – கர்த்தர்

3. தேவன் எந்தன் பட்சத்தில் இருக்க
மனிதன் எனக்கு என்னதான் செய்வான்
எந்தன் கண்ணீரை தம் துருத்தியில்
அவரின் கணக்கில் வைத்துள்ளாரல்லோ – கர்த்தர்

4. வலது கரத்தைப் பிடித்து என்னையும்
உனது துணை நான் என்று சொல்லி
வழக்காடுவோர் அனைவரையுமே
வெட்கப்பட்டுப் போகச் செய்வாரே – கர்த்தர்

5. தேவன் தமது ஐசுவரியத்தினால்
எந்தன் குறைகளை எல்லாமே
கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில்
நிறைவாக்குவாரே கவலை ஏன் – கர்த்தர்

## 449

மன்னன் இயேசு வருகின்றார் நீ மகிழ்ந்து பாடிடு
மணவாளன் வருகின்றார் நீ ஆயத்தப்படு

**அனுபல்லவி**

அல்லேலூயா ஆனந்தமே
ஆடிப்பாடி நடனமாடி ஆனந்தித்திடு

**சரணங்கள்**

1. மகிமையானவர் மறுரூபமானவர்
கிச்சிலிப்பழம் இவர் கின்னரத் தோட்டம்
லீலிபுஷ்பமே சாரோனின் ரோஜாவே
மென்மையானவர் மகா மேன்மையானவர்

2. பொற்றள வீதி அது பொற்பரன் வீதி
பளிங்குக் கற்களும் அங்கு பளிச்சிடுதே
இரத்தினங்களும் இள நீலமும்
படிகப் பச்சை மரகதமும் பாடிப் போற்றுதே

3. வெண் குதிரைமேல் உலா வருகின்றார்
வெண் கிரீடமும் தலையில் ஜொலித்திடுதே
வெண் சிங்காசனம் புன்சிரிக்குது
நட்சத்திரங்கள் கைகொட்டிப் பாடுது

இந்த நாளை நான் சமர்ப்பிப்பேன்
இயேசுவின் திருப்பாதத்தில்

**அனுபல்லவி**

காலைமுதல் மாலைவரை காக்கும் கர்த்தர் நமது இயேசு
காலைத் தள்ளாட என்றுமே விடார்

**சரணங்கள்**

1. இனிய வார்த்தை எப்போதும் பேச
இயேசு நடத்திடும்
இடுகண்ணில் இருப்போர்
யாரையும் மீட்க
இயேசு காட்டிடும்
இன்பத்தை வெறுத்து துன்பத்தை நாட
இயேசு போதியும்
இன்முகம் காட்டி இரங்கி நோக்க
இயேசு கற்பியும் – இந்த நாளை

2. பிறர் என்ன செய்ய விரும்புவேனோ
அதையே செய்யவும்
பிறர் எனக்கு மன்னிப்பதையே
அவருக்கு மன்னிக்கவும்
பிறர் நலம் கருதியே
சதா உழைக்கவும்
பிறருக்காக என்னை ஒடுக்கி
நான் மரிக்கவும் – இந்த நாளை

## 451

துதியுங்கள் தேவனை
துதியுங்கள் தூயோனை

**சரணங்கள்**

1. அவரது அதிசயங்களைப் பாடி - 2
அவர் நாமத்தைப் பாராட்டி
அவரை ஆண்டவர் என்றறிந்து
அவரைப் போற்றுங்கள்
ஆபிரகாமின் தேவனை ஈசாக்கின் தேவனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள் - துதி

2. இஸ்ரவேலின் மக்களின் மன்னவனை - 2
இடையூற்றினை போக்கி னோனே
கானானின் தேசத்தைக் காட்டினோனே
கர்த்தரைப் பேற்றுங்கள்
ராஜாதி ராஜனை கர்த்தாதி கர்த்தனை
ஆர்ப்பரித்து வணங்குங்கள் - துதி

3. நம்முடைய இரட்சிபின் கர்த்தனையே - 2
நாம் போற்றியே பாடிடுவோம்
நமக்காகப் பாடுகளை சகித்த
மகிபனைத் துதித்திடுவோம்
நம்பினோரை என்றும் கைவிடா நேசரை
ஆர்ப்பரித்து வணங்கிடுவோம் - துதி

## 452

பூரண வடிவுள்ள சீயோனிலே
பாரினில் ஜெயம் கொண்ட பரிசுத்தரே
ஆர்ப்பரிப்போடு கீதங்கள் பாட
ஆனந்தம் பொங்கிடுதே
சீயோன் சீயோன் நகரம்
சீயோன் தூய்மையின் சிகரம்
எருசலேம் பரம நகரம் ஏகுவோம்
என்றென்றும் வாழவே

**சரணங்கள்**

1. தூய பிதாவின் தேசமதில்
நேயர்கள் அவர் முகம் கண்டிடுவார்
கண்ணீர்கள் யாவும் தேவனே துடைப்பார்
கவலைகள் ஒழிந்திடுமே - சீயோன்

2. பளிங்கு நதியின் இருகரைகளிலே
பன்னிரு கனிதரும் விருட்சம் உண்டே
பரமனின் அன்பால் நிறைந்தவர் பாடும்
பாட்டிற்கோர் இணையில்லையே - சீயோன்

3. நகரத்தின் மூலைக்கல் மகிபன் இயேசு
நானிலம் எங்கும் அவர் ஒளி வீசுதே
சீயோனைப் பணிந்து தேவாதி தேவன்
சீக்கிரம் வெளிப்படுவார் - சீயோன்

## 453

துதி செய்வோம் தேவனையே - 2
துதித்து ஸ்தோத்தரிப்போம் - 2
பரிசுத்த அவர் ஸ்தலத்தில் - 2
போற்றியே துதித்திடுவோம் - 2

ஆகாய விரிவினில் வல்லமை விளங்கும் - 2
அவர் நாமம் துதி செய்குவோம் - துதி

1. எக்காள தொனியுடன் மாட்சிமையான
மகத்துவ ராஜனை ஸ்தோத்தரிப்போம்
சுர மண்டலம் வீணையுடன்
போற்றி புகழ்வோம் மகிபனை
தீங்குழல் தம்புரு நடனங்களோடு - 2
துதிப்போம் அவர் நாமமே - துதி

2. கைத்தாளத்தோடு வல்லமையான
செயல்களை நினைத்தே துதிப்பேன்
உன்னத தேவ திருவார்த்தையையே
போற்றிப் புகழ்ந்து ஸ்தோத்தரிப்போம்
சுவாசமுள்ளதும் ஜீவன்கள் யாவும் - 2
துதித்திடும் அல்லேலூயா - துதி

## 454

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி
அவர் செய்த நன்மை ஒன்றும் மறவாதே

1. புவிதனில் உன்னைப் போஷித்திட
   புல்லுள்ள இடங்களில் மேய்ப்பவரே – விசு
   அகில மதில் உம் தாகம் தீர்க்க
   அமர்ந்த தண்ணீர் அண்டை நடத்துகிறார் – என்

2. ஆறுதல் அற்ற என் ஆத்துமாவை
   அவரது வசனத்தால் தேற்றி உன்னை – விசு
   நித்திய நாமத்தினிமித்தவர்
   நீதியின் பதையில் நடத்துகிறார் – என்

3. நானிலத்தில் ஜீவ நாட்களெல்லாம் – விசு
   நன்மையும் கிருபையும் தொடர்ந்திடுமே
   நித்திய வீடதில் அவருடனே
   நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் – என்

## 455

வானங்கள் தேவனின் மகிமையை என்றும்
இனிதாய் வெளிப்படுத்தும் - 2
ஆகாய விரிவுகள் அவர் கிரியைகளை
கூறி அறிவிக்குதே - வான

**சரணங்கள்**

1. பகலுக்குப் பகலும் வார்த்தை பொழியுதே
இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கும்
அவைகளின் தொனியோ பூலோகமெங்கும்
அவை வசனம் பூமியின் கடைசிக்கும் செல்லுதே - வான

2. கர்த்தரின் வேதம் உயிர்ப்பிக்கும் ஆன்மாவை
பேதையை ஞானியாய் மாற்றிடும் சாட்சியாய்
கர்த்தரின் நியாயம் இதய சந்தோஷமே
கற்பனை தூய்மையும் என்றம் நிலை நிற்கும் - வான

3. வசனத்தால் அடியவர் உணர்வடைகின்றார்
மிகப் பலன் உண்டு அதைக் கைக்கொள்வதினால்
கன்மலையும் எந்தன் மீட்பருமானீர்
இதய தியானம் உமக்கு பிரீதியாய் மாறும் - வான

உன்னை வாலாக்காமல் இயேசு தலையாக்குவார்
உன்னை கீழாக்காமல் இயேசு மேலாக்குவார்
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

**சரணங்கள்**

1. இஸ்ரவேலே நீ பயப்படாதே - 2
கரம் பிடித்து உன்னை நடத்திச் செல்வார் - 2
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

2. செங்கடலும் யோர்தானும் - 2
உன்னைக் கண்டு விலகியோடுமே - 2
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

3. சிறியவனை குப்பையிலிருந்து - 2
உயர்த்துகிறீர் அப்பா உயர்த்துகிறீர் - 2
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

4. ஒன்றுமில்லாத என்னை அணைத்தீரே - 2
பயன்படுத்தும் இன்னும் பயன்படுத்தும் - 2
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

5. பாலும் தேனும் ஓடுகின்ற - 2
தேசத்தை போல் உன்னை மாற்றிடுவார் - 2
ஜெயம் ஜெயம் அல்லேலூயா - 4 - உன்னை

## 457

உன்னதமானவர் மறைவில் இருப்போன்
வல்லவரின் நிழலில் தங்குவான்
என் கோட்டையும் நீர் என் அடைக்கலமாம்
நான் நம்பும் தெய்வம் நீரே
தம் சிறகுகளால் உன்னை மூடிடுவார்
அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகுவாய்
அவர் சத்தியமே பரிசை கேடயம்
காத்திடும் என்னை என்றுமே – உன்னத

1. ரா பயம் கொள்ளை நோய்களுக்கெல்லாம்
பகலின் அம்பிற்கும் அச்சம் ஏதும் இல்லை
பதினாயிரம் பேர் எதிராய் வரினும்
அணுகாதிருக்கும் உந்தன் பக்கமே – தம் – உன்னத

2. கர்த்தரே உந்தன் தாபரமாமே
பொல்லாப்பு ஏதும் வருவதுமில்லை
போகும் வழியில் காத்திடுவாரே
தூதரை அனுப்பி நடத்திடுவார் – தம் – உன்னத

# 458

இன்று கண்ட எகிப்தியனைக் காண்பதில்லை
இன்று கண்ட துன்பம் இனி வருவதில்லை
வாதை உந்தன் கூடாரத்தை அணுகிடாது - 2
உன் பாதம் கல்லில் இடராது - 2

1. செங்கடல் பிளந்து வழி கொடுக்கும்
யோர்தான் இரண்டாகப் பிரிந்து விடும்
எரிகோ தூளாக இடிந்து விழும்
கர்த்தரே தெய்வம் என்று முழங்கிடுவாய்

2. நோய்கள் உன்னை நெருங்குவதில்லை
பேய்கள் உன்னை அணுகுவதில்லை
யாக்கோபுக்கு விரோதமான மந்திரமில்லை
இஸ்ரவேலுக் கெதிரான குறியும் இல்லை

3. மலைகளை மிதித்து நொறுக்கிடுவாய்
குன்றுகளை தவிடு பொடியாக்குவாய்
சேனைகளின் தேவன் உன்னோடிருக்கும் போது
மனித சக்தி உன்னை ஒன்றும் செய்யாது

# 459

தேசமே தேசமே பயப்படாதே
இயேசு ராஜா உனக்காக யாவையும் செய்வார்
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசியே நீ பதறாதே
மகிழ்ந்துபாடு மகிழ்ந்துபாடு ராஜா வருகிறார்

**சரணங்கள்**

1. நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய பெரிய காரியங்கள் செய்திடுவார் –விசு

2. போக வேண்டிய தூரமோ வெகு தூரம்
புறப்படு புறப்படு கர்த்தரின் வேலையைச் செய் –விசு

3. எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது
கர்த்தரின் மகிமை உன் மேல் உதித்தது –விசு

4. சின்னவன் ஆயிரம் ஆயிரமாவான்
சிறியவன் பலத்த ஜாதியுமாவான் – விசு

## 460

என் பரலோக ராஜாவுக்கு முன்பாக
நான் ஒன்றும் இல்லை நான் ஒன்றும் இல்லை
என்னைப் படைத்த என் தெய்வத்திற்கு முன்பாக
நான் ஒன்றும் இல்லை நான் ஒன்றும் இல்லை

ஹலேலூயா ஹலேலூயா - 2

1. என்னை உருவாக்கின தெய்வமும் இயேசு தான்
என்னை வாழ வைத்த தெய்வமும் இயேசு தான் - என்

2. என்னை இயக்குகின்ற தெய்வமும் இயேசு தான்
என்னை நடத்துகின்ற தெய்வமும் இயேசு தான் - என்

3. என்னைத் தேடி வந்த தெய்வமும் இயேசு தான்
என்னை உயர்த்தி வைத்த தெய்வமும் இயேசு தான் - என்

4. என்னை அபிஷேகித்த தெய்வமும் இயேசு தான்
என்னை ஆசீர்வதித்த தெய்வமும் இயேசு தான் - என்

## 461

பலத்தினாலும் அல்ல பராக்கிரமும் அல்ல
ஆவியினால் எல்லாம் ஆகும்

1. செங்கடலை கடந்திடுவோம்
எரிகோவை தகர்த்திடுவோம்
கால்மிதிக்கும் தேசம் சுதந்தரிப்போம்
ஜெயத்தின் மேலே ஜெயம் அடைவோம் (நாங்க) – பலத்

2. துக்கத்தில் என் ஆறுதல் அவர்
துன்பத்தில் என் துணை அவரே
பக்கத்திலே ஆயிரேம் பேர் வீழ்ந்தாலும்
பாதுகாக்கும் துணை தேவன் அவரே – (எங்கள்) – பலத்

3. விழித்தெழு விசுவாசியே
ஒற்றுமையாய் செயல்படுவோம்
மகிமையான ஊழியம் தந்திடுவார்
மகிழ்ச்சியோடு ஆராதிப்போம் (நமக்கு) – பலத்

4. பயப்படாதே விசுவாசியே
இயேசு ராஜா முன்னே செல்கிறார்
வெண்கலக் கதவுகளை உடைத்திடுவார்
பொக்கிஷகள் தந்திடுவார் (நமக்கு) – பலத்

5. ஆவியிலே பெலனடைவோம்
இலக்ககை நோக்கி ஓடிடுவோம்
மணவாட்டி சபையே ஆயத்தபடு
மணவாளன் வருகின்றார் – பலத்

## 462

எந்தன் கன்மலையானவரே என்னை
காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்குப் பாத்திரரே
ஆராதனை உமக்கே – 8

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர்
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே – ஆராதனை

2. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரையா
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே – ஆராதனை

3. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
உம்மைப் புகழ்ந்து பாடிடுவேன்
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணியே (எண்ணி) துதித்திடுவோம் – ஆராதனை

## 463

உம்மை ஆராதிக்கும் நேரமெல்லாம்
என்னை அரவணைத்து நிற்கின்றீரே
ஒரு தந்தை போல காக்கின்றீரே
ஆராதனை ஆராதனை ஆராதனை ஆராதனை - 2

1. அதிகாலையில் உம்மை தேட வேண்டுமே
அப்பா பிதாவே என்று பாட வேண்டுமே - உம்

2. உம்மோடு நான் என்றும் வாழ வேண்டுமே
உம் தோழிலே கொஞ்சம் சாய வேண்டுமே - உம்

3. மறு ரூபமமாய் நான் மாற வேண்டுமே
மணவாளன் உம்மைக் கண்டு சேர வேண்டுமே-உம்

## 464

தேவ கிருபையால் ஆனந்திப்போம்
அவர் வழிகளை நாம் அறிவோம்
பின் தொடர்ந்திடுவோம் அவர் சுவடுகளை - 2 தேவ

**சரணங்கள்**

1. இந்த உலகமும் அதின் ஆசைகளும்
மெய் சமாதானம் தந்திடாதே
அன்பர் இயேசுவின் திரு சந்நிதியில்
என்றும் சந்தோஷம் மகிழ்ச்சி உண்டே - தே

2. பெருங்கஷ்டங்களோ கடும் வியாதிகளோ
நம் வாழ்க்கையில் நேரிட்டாலும்
எல்லா நம்பிக்கையும் நாம் இளந்திட்டாலும்
நேசர் இயேசுவின் உதவி உண்டே - தேவ

3. இயேசு நல்லவர் எல்லாம் கொடுப்பவர்
நம்மை என்றுமே நேசிப்பவர்
நம் தேவைகள் அனைத்தையும் அறிந்தவரே
என்றும் அவரே நம் துணையே - தேவ

# 465

கிருபையால் நிலை நிற்கின்றோம் – உம்
கிருபையால் நிலை நிற்கின்றோம்
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

1. பேர் சொல்லி அழைத்தது உங்க கிருபை
பெரியவனாக்கியதும் உங்க கிருபை
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

2. நீதிமானாய் மாற்றியதும் உங்க கிருபை
நித்தியத்தில் சேர்ப்பதும் உங்க கிருபை
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

3. கட்டுகளை நீக்கியதும் உங்க கிருபை – என்
காயங்களைக் கட்டியதும் உங்க கிருபை
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

4. வல்லமையை அளித்தது உங்க கிருபை – எனக்கு
வரங்களைக் கொடுத்தது உங்க கிருபை
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

5. கிருபையைக் கொண்டாடுகிறோம் – தேவ
கிருபையைக் கொண்டாடுகிறோம்
கிருபை (கிருபை) கிருபை (கிருபை) – 2 கிரு

## 466

வானாதி வானவர் நம் இயேசுவை
வாத்தியங்கள் முழங்கிட பாடுவோம்
தேவாதி தேவன் நம் இயேசுவை
நாட்டியங்கள் ஆடியே பாடுவோம்
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4

**சரணங்கள்**

1. வானங்களை விரித்தவரைப் பாடுவோம் - நம்
வானபரன் இயேசுவைக் கொண்டாடுவோம்
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4

2. வாக்குத்தத்தம் தந்தவரைப் பாடுவோம்
வாக்கு மாறா தேவனைக் கொண்டாடுவோம்
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4

3. பாரில் வந்த பரலோக நாயகன்
பலியாகி என்னை மீட்டுக் கொண்டாரே
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4

4. பாவ சேற்றில் வாழ்ந்து வந்த என்னையே
பாசக் கரம் நீட்டி அவர் தூக்கினார்
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4
கொண்டாடுவோம் கொண்டாடுவோம் - 2
ஹலேலூயா ஹா ஹலேலூயா - 4

## 467

புறப்படுங்கள் புறப்படுங்கள்
விதைத்திட புறப்படுங்கள்
விதை என்னும் வேத வசனம்
விதைத்திட புறப்படுங்கள் – புறப்

1. வழியருகே விதைத்திடாதே
சாத்தான் கெடுத்து போடுவான்
இருதயத்தை ஸ்திரப்படுத்தி
விதைத்திட எழும்பிடுங்கள் – புறப்

2. கற்பாறையில் விதைத்திடாதே
மேற் கொள்ள முடியாதே
உபத்திரவம் துன்பமானாலும்
இடறாமல் எழும்பிடுவீர் – புறப்

3. முட்களிலே விதைத்திடாதே
அவைகள் நெருக்கிடுமே
பலன் கொடுக்க முயன்றிடுங்கள்
ஒன்று சேர்ந்து புறப்படுங்கள் – புறப்

4. நல்ல நிலத்தில் விதைத்திடுங்கள்
ஓங்கி வளரச் செய்வார்
பல மடங்கு கனி கொடுத்து
தேவனில் நிலைத்திடுங்கள் – புறப்

## 468

இயேசு ராஜாவுக்கு ஜே ஜே – எங்கள் 2
இகமதில் வாழ்பவர் அல்லேலூயா
அகமதில் வாழ்பவர் அல்லேலூயா
சுகமது தருபவர் அல்லேலூயா – இயேசு

1. சத்திய பரன் அவர் அல்லேலூயா
சந்தோஷம் தருபவர் அல்லேலூயா
மன்னாதி மன்னன் அவர் அல்லேலூயா
மகிமையில் சேர்த்திடுவார் அல்லேலூயா – இயேசு

2. சாத்தானை வீழ்த்தியவர் அல்லேலூயா
சாவதனை ஜெயித்தவர் அல்லேலூயா
சீக்கிரம் வந்திடுவார் அல்லேலூயா
சீயோனில் சேந்திடுவார் அல்லேலூயா – இயேசு

## 469

என் இயேசு பிறந்தாரே
அல்லேலூயா ஆமென்
ஆனந்தப் பண்பாடு
அவரை நீ கொண்டாடு

1. எப்போதும் ஜெபம் செய்யனும்
ஜெபத்தோடு துதி சொல்லணும்
பல பாஷை அதில் நிறையணும்
புதுப்பாட்டு தினம் ஒலிக்கணும் - என்

2. புத்தாண்டு பிறக்கும் நேரத்தில்
புது வாசல் திறக்க போகுது
புத எண்ணெய் அபிஷேகத்தால்
நம் வாழ்க்கை நிறையப்போவது - என்

3. பின்னாலே திரும்பிப்பாராதே
முன்னோக்கி நடந்த சென்றிடு
அடைப்பட்ட வாசல் திறந்திடும்
அடைப்பட்ட யாவும் நடத்திடும் - என்

ஆழியாத ஜீவன் உனக்காகவே - 2
இயேசு தருகிறார் நீ ஓடி வா - 2

1. சுமை சுமந்து சோர்வு அடைந்தாயோ நீ
துயர் நீக்கும் இயேசு உன்னை அழைக்கிறார்
ஆனந்த ஜீவன் உனக்காகவே - 2 இயேசு

2. இருள் சூழந்த காலம் உந்தன் எதிர் நிற்குதே
அருள் ஈயும் இயேசு பாதம் வருவாய் இன்றே
ஆனந்த ஜீவன் உனக்காகவே - 2 இயேசு

3. நோயில்லா வாழ்வை எதிர்பார்க்கிறார்
இயேசுன்னை பேர் சொல்லி அழைக்கிறார்
ஆனந்த ஜீவன் உனக்காகவே - 2 இயேசு

4. கவலையில் ஆழ்ந்து தவிக்கின்றாயோ
கவலையை போக்கும் இயேசு உன்னை அழைக்கிறார்
ஆனந்த ஜீவன் உனக்காகவே - 2 இயேசு

## 471

எலியாவின் தேவன் நம் தேவன்
வல்லமைகயின் தேவன் நம் தேவன்
தாசர்களின் ஜெபம் கேட்பார்
வல்ல பெரும் காரியம் செய்திடுவார்

**பல்லவி**

கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே ஆர்ப்பரிப்போம்

**சரணங்கள்**

1. வேண்டிடும் பக்தரின் ஜெபம் கேட்டே
பனி மழை நிறுத்தினார் வல்ல தேவன்
பஞ்ச காலத்தில் விதவை வீட்டில்
பாத்திரங்களை அவர் ஆசீர்வதித்தார் – கர்த்தரே

2. சத்துருக்கள் முன்னிலையில் தேவ மனிதன்
வீரமுடன் முழங்கினான் தேவ மனிதன்
அக்கினியால் பதிலளிக்கும்
தேவனே தேவன் என்றார் தேவ மனிதன் – கர்த்தரே

3. தேவ ஜனம் கூட்டிச் சேர்த்தே தேவ மனிதன்
பலிபீடம் செப்பனிட்டு பலியுமீந்தார்
கேட்டருளும் கேட்டருளும்
என்றே கதறினார் தேவ மனிதன் – கர்த்தரே

4. வானங்களைத் திறந்தே வல்ல தேவன்
அக்கினியால் பதில் தந்தார் ஜீவ தேவன்
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
என்றே பணிந்தனர் தேவ ஜனங்கள் – கர்த்தரே

## 472

அல்லேலூயா துதி பாடிடுவேன்
ஆனந்த பரவசம் அடைந்திடுவேன்

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. உன் நாமம் பாடனுமே உந்தனையே துதிகணுமே - 2
உம்மோடு சேரணும் ராஜா உம்மைப் போல மாறனும் ராஜா - 2

2. உம் வசனம் தியானிக்கனும் உம் வார்த்தைப்படி ஜீவிக்கணும் - 2
அக்கினியாய் மாறணும் ராஜா ஆவியிலே நிரம்பணும் ராஜா - 2

3. ஆவியோடு பாடணுமே கருத்தோடே பாடணுமே - 2
முழு உள்ளத்தோடு உம்மைத் தேடணும்
முழு மனிதனாக வாழணும் ராஜா

4. உமக்காக வாழணுமே உமக்காக மரிக்கணுமே - 2
உம்முடைய இராச்சியத்தில் சேரணும்
தூதர்களோடு சேர்ந்து பாடணும்

## 473

அல்பாவும் நீரே ஒமேகாவும் நீரே
ஆதியும் நீரே அந்தமும் நீரே

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்திடும்
தூயாதி தூயனைத் துதித்திடுவேன்
மகிமைப் படுத்திடுவேன் மறுரூபமாக்கிடும்

2. வாதை உன் கூடாரம் அணுகிடாதென்றவர்
வாரும் என்றே நான் அழைத்திடுவேன்
வாஞ்சையைத் தீர்ப்பவரே வார்த்தையை அனுப்பிடும் -2

3. வானம் உம் சிங்காசனம் பூமி உம் பாதப்படி
பாதத்தின் அடிகளைப்பின் பற்றுவேன்
என்னையே தருகின்றேன் முற்றிலும் ஏற்றுக்கொள்ளும் - 2

# 474

பயப்படாதே இஸ்ரவேலே தெரிந்து கொள்ளப்பட்டவன்
கலங்கிடாதே விஸ்வாசத்தாலே தேவ மகிமையைக் காண்பாய்
அவர் செய்த அதிசயங்கள் எண்ணி எண்ணி துதி செய்வாய்
தேவ கரத்தின் அற்புதங்கள் தினமும் பெற்று ஆர்ப்பரிப்பாய்
அல்லேலூயா அல்லேலூயா, அல்பா ஒமேகாவுக்கு அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா, யோகோவா தேவனுக்கு அல்லேலூயா

**சரணங்கள்**

1. யோர்தானை போன்ற தடைகளை
   ஜெபத்தினாலே பிளந்திடுவாய்
   எரிகோவின் கோட்டை மதில்களை
   துதி எக்காளத்தாலே தகர்த்திடுவாய் – அல்லே

2. நித்திய கானான் தேசத்திலே
   செழிப்புடன் நீ தளைத்திருப்பாய்
   பூரணமான உன் வாழ்விலே
   தேவனின் சாட்சியாய் வாழ்ந்திடுவாய் – அல்லே

# 475

ஆராதிக்கின்றேன் நான் ஆராதிக்கின்றேன்
ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கின்றேன்
ஆராதனை ஆராதனை உயிருள்ள தேவனுக்கு ஆராதனை
ஆயிரம் ஆயிரம் துதிகள் செலுத்தி ஆராதனை - 2
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா - 2

**சரணங்கள்**

1. அதிகாலை நேரத்தில் உம்மைத் தேடுவேன்
ஆர்வமுடன் என்றென்றும் உம்மை நாடுவேன்
உயிர்வாழும் நாளெல்லாம் உமக்காய் வாழுவேன்
உமது சிரசின் நிழலில் தங்கி என்றும் வாழ்ந்திடுவேன்
கர்த்தர் இயேசுவில் நம்பிக்கை வைப்பேன் பாக்கியமடைந்திடுவேன் - அல்லேலூயா

2. கன்மலையைப் பிளந்தவரே ஆராதிக்கின்றேன்
கடல் மீது நடந்தவரை ஆராதிக்கின்றேன்
எரிகோவைத் தகர்த்தவரே ஆராதிக்கின்றேன்
என்றென்றும் வாழ்பவரை ஆராதிக்கின்றேன்
அதிசயமானவர் அற்புதம் செய்பவர் அடைக்கலமானவரே - அல்லேலூயா

## 476

வல்லமை வல்லமை ஆவியே
என்னை அனலாக்கிடும் (அபிஷேகியும்)

1. சாத்தானின் கோட்டையை முறியடிக்க
வல்லமை தாருமே
தேவனின் ராஜ்யம் எழும்பிக்கட்ட
வல்லமை தாருமே - வல்லமை
2. ஆவியின் வரங்களினால்
என்னை நிரப்பிடும்
கனிகளைக் கொடுத்து சாட்சியாய்
வாழ்ந்தும்மை மகிமைப் படுத்துவேன் - வல்லமை

# 477

ஆவியைப் பொழியும் தேவா
ஆவியை ஊற்றும் தேவா
பரலோக அக்கினி இரங்கட்டும் இப்போதே
இக்கூட்டம் நடுவில் தேவா –ஆவி

1. எலியாவின் அக்கினி வேண்டும்
அக்கினி ஜுவாலையாய் மாற்றும்
பாவத்தைத் தொலைக்க சாபத்தை எரிக்க
சாத்தானை ஜெயிக்கவேண்டும் –ஆவி

2. ஆரோனின் அபிஷேகம் வேண்டும்
பொங்கி வழிந்திட வேண்டும்
நோய்களை நீக்க பேய்களை விரட்ட
நிரம்பி ஊற்றிட வேண்டும் –அவி

3. வேண்டித் தரையில் பொழிந்த
அக்கினி அபிஷேகம் வேண்டும்
அனலாய் வாரும் தனலாய் எரியும்
பரிசுத்த ஆவியே வாரும் –ஆவி

# 478

வாழ்த்துவேன் தேவனே போற்றுவேன் தெய்வமே-2
ஹா ஹலேலூயா - 4

1. இதயத்தில் உம்மை நான்
என்றும் போற்றிடுவேன் தேவா
முழங்கால் யாவும் முடங்கும் முன்பாக - 2
நாவுகள் எல்லாம் அறிக்கை செய்யும் - 2 - வாழ்

2. யாக்கோபே உன்னை - நான்
ஆசீர்வதிப்பேன் என்றீர்
வாக்கு மாறாத நேசரே உம்மை - 2
வாழ்த்துதல் சொல்லி வரவேற்பேன் - 2 - வாழ்

3. வாழ்த்திடுவேன் உம்மையே
என்னில் வாசம் செய்யும் தெய்வமே
வாரும் எந்தன் உள்ளத்தில் வாரும் - 2
வல்லவரே என் நல்லவரே - 2 - வாழ்

## 479

இயேசுவின் அன்பினை அறிவித்திட
இணைந்தே செயல்படுவோம்
சுவிஷேச நற்செய்தி கூறிட
விரைந்தே புறப்படுவோம்

**அனுபல்லவி**

நம் பாரதம் நம் தாயகம்
கர்த்தரை அறியட்டுமே
நம் தாய் மண்ணும்
நம் தலை முறையும் இயேசுவை அறியட்டுமே

**சரணங்கள்**

1. நினிவேயின் ஜனங்களுக்காக
நம் தேவன் பரிதபித்தார்
தீர்க்கன் யோனாவை யோ
அவர் அனுப்பி எச்சரித்தார்
லட்சத்திற்காக பரிதபித்தார்
கோடிகட்காகக் கலங்கிடாரோ – நம்

2. காலங்கள் கடந்திடுதே
நம் வேதமும் நிறைவேறுதே
இயேசுவின் வருகை இதோ
அதி சமிபமாகிறதே
இளைஞர் கூட்டம் இயேசுவுக்காய்
நற்செய்தி சுமந்து புறப்படுவோம் – நம்

## 480

ஸ்திரப்படுவாய் நீ ஸ்திரப்படுவாய்
கர்த்தராலே நீ ஸ்திரப்படுவாய்

**அனுபல்லவி**

தேவ நீதியால் அவரின் வார்த்தையால்
நாம் இன்று ஸ்திரப்படுவோம் – 2

1. விசுவாசியாக அழைக்கப்பட்டோம்
விரைந்தே இயேசுவில் நிலைத்திடுவோம்
கிருபையின் காலம் இது
கிறிஸ்தேசுவின் இரக்க உண்டு

ஒன்று கூடுவோம் ஒப்புக்கொடுப்போம்
தேவ சித்தம் நிறைவேற்றுவோம்

2. இந்தியர் இயேசுவில் ஸ்திரப்பட்டிட
சுவிஷேசப் பணியை ஆதரிப்போம்
தூக்கத்தை உதரி நாம்
புதுப்பணிக்காய் உழைத்திடுவோம்

ஒன்று கூடுவோம் ஒப்புக்கொடுப்போம்
தேவ சித்தம் நிறைவேற்றுவோம்

3. காலமோ சிறிது செயல்படுவோம்
கடமையோ பெரிது புறப்படுவோம்
இயேசுவால் வெற்றி உண்டு
திரப்பில் நின்று ஜெபித்திடுவோம்

ஒன்று கூடுவோம் ஒப்புக்கொடுப்போம்
தேவ சித்தம் நிறைவேற்றுவோம்

# 481

நம் தேவனைத் துதித்துப்பாடி
அவர் நாமம் போற்றுவோம்

**பல்லவி**

களிகூர்ந்திடுவோம், அக மகிழ்ந்திடுவோம்
துதி சாற்றிடுவோம் புகழ் பாடிடுவோம்
அவர் நாமம் போற்றுவோம்

**சரணங்கள்**

1. நம் பாவம் யாவும் நீக்கி மீட்டார்
அவர் நாமம் போற்றுவோம்
துன்மார்க்க வாழ்வை முற்றும் நீக்கி
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்ந்திடு

2. மெய் ஜீவ பாதை தன்னில் சென்று
அவர் நாமம் போற்றுவோம்
நல் ஆவியின் கனிகள் ஈந்து
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்ந்திடு

3. மேலோக தூதர் கீதம் பாடி
அவர் நாமம் போற்றுவோம்
பேரின்ப நாட்டில் தன்னில் வாழ
அவர் நாமம் போற்றுவோம் – களி கூர்ந்திடு

## 482

1. வழியென்றால் எது? அது ஜீவவழி
   வழிகாட்டிட வந்தவர் யார்? அவர் இயேசு

வழியும் அவர் ஒளியும் அவர் ஜீவ நதியும் அவரே
சத்யமும் அவர் நித்யமும் அவர்
ஜீவ அப்பமும் அவரே

2. ஒளியென்றால் எது? அது ஜீவஒளி
   ஒளிகாட்டிடும் உத்தமர் யார்? அவர் இயேசு

3. ஜலம் என்றால் எது? அது ஜீவஜலம்
   ஜலம் காட்டிடும் சற்குரு யார்? அவர் இயேசு

4. சத்தியம் என்றால் எது? அது தேவ சத்தியம்
   சத்தியம் காட்டிடும் சற்குணன் யார்? அவர் இயேசு

5. அப்பம் என்றால் எது? அது ஜீவஅப்பம்
   அப்பம் ஊட்டிடும் அன்னையும் யார்? அவர் இயேசு

## 483

ஆவியை அருளுமே சுவாமி – எனக்காருயிர்
கொடுத்த வானத்தினரசே

1. பாவிக்கு ஆவியின் கனியென்றும் சிநேகம்
சந்தோஷம் நீடியசாந்தம்
தேவ சமாதானம், நற்குணம், தயவு
திடவிசுவாசம் சிறிதெனுமில்லை

2. தீபத்துக்கெண்ணெயைச் சீக்கிரம் ஊற்றும்
திரியவியாமலே தீண்டியே யேற்றும்
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்த வரந்தந்தென் குறைகளைத்தீரும்

3. நற்கனி தேடிவருங் காலங்களல்லவோ?
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்கனி முகங்காணா வெம்பயிரல்லவோ?
முழு நெஞ்சும் விளைவற்ற உவர்நிலமல்லவோ?

## 484

என்ன சுகம் ஆஹா என்ன சுகம்
என் ரட்சகரின் சமூகம் பேரானந்தம்
பரமானந்த மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனபவித்தால் என்னசுகம்

1. பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம்
கின்னரம் தம்புரு வீணை இன்னிசை கேட்கலாம்

2. ஜீவ நதியில் களித்தும் குளிர்க்கலாம்
ஜீவ விருட்சகத்தின் கனியும் புசிக்கலாம்

3. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
சிங்காசனத்தினின்று ஜெயகீதம் பாடலாம்

4. பக்தர்கள் கூட்டத்தில் பாடிக்களிக்கலாம்
பரம பிதாவின் பணிவிடை செய்யலாம்

5. துன்பம் ஒழிந்துமே இன்பமடையலாம்
தூயரின் சமூகத்தில் துதி கொண்டாடலாம்

## 485

இந்தக் காலம் பொல்லாதது
உன்னை இயேசு அழைக்கிறார்
நீ வாழும் வாழ்க்கைதான் அது வாடகை வீடுதான்

1. உன்னை இரட்சிக்க உன் கூடவே இருக்கிறேன்
என்று வாக்கு அளித்தவர் இன்று காத்து வருகிறார் – இந்த கா

2. வாலிப நாட்களில் உன் தேவனை தேடிவா
சாத்தான் களத்தில் போரிட செயல் வீரனாய் திகழுவாய் – இந்த கா

3. காலமோ பெருகிடுதே தேவ ராஜ்ஜியம் சமீபமே
மனம் திரும்பி நீ வாழவே மன்னன் இயேசு உன்னை அழைக்கிறார் – இந்த கா

## 486

ஆராதிக்க கூடிவந்தோம் இயேசைய்யா உம்மை (2)
தேவசபையில் தேவா வந்திறங்குமே
தேவ ஜனங்கள் கூடி துதிக்கின்றோமே (2)
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே – துதி

1. அளவற்ற அன்பினாலே அணைத்தீரே
   எண்ணற்ற நன்மைகளாலே நிறைத்தீரே ஸ்தோத்திரம்

2. பாடத் தெரியாது உம்மை பாடுகின்றோமே
   உலக பாசம் புரியாது உம்மை பாசம் வைத்தோமே

3. ஜீவ நதியே எங்கள் தேவ ஆவியே
   எங்களுக்குள் வாசம் பண்ணும் தூய ஆவியே

4. அற்புதங்கள் செய்யும் ஆவியானவரே எம்மை
   அர்ப்பணித்தோம் உந்தன் அன்பைப் பாடிடவே

# 487

புதுப்பாடல் புண்ணியரை போற்றிடுவேன் புகழ்ந்திடுவேன் - 2
பத்து நரம்பு மீட்டி மீட்டி நடனமாடியே மகிழ்ந்திடுவேன்
அற்புதமே அவர் நாமமே அதிசயமே அவர் நாதம்
அல்லேலூயா அவர் கீதம்

1. தாயின் மேலாய் நேசித்தீரே தந்தையைப்போல போஷித்தீரே
   தேவ அன்பால் நிறைந்து நானும் தேவாதி
   தேவனை துதித்திடுவேன் - என்றும்

2. நெறிந்த நாணல் முறிந்திடாமல் மங்கியதிரி அணைந்திடாமல்
   எண்ணெய் ஊற்றி என்னை மாற்றி புதிதான
   அபிஷேகம் தந்தீரே

# 488

இயேசப்பா உங்க நாமத்தில்
இன்றும் அற்புதங்கள் நடக்குது
பேய்கள் ஓடுது நோய்கள் தீருது
பாவங்கள் பறந்தோடுது - 2

உந்தன் வல்லமைகள் குறைந்து போகவில்லை
உந்தன் உயிர்தெழுதல் மகிமை மாறவில்லை - 2

1. துன்பங்கள் தொல்லைகள் வியாதிகள் வறுமைகள்
வந்தாலும் என் இயேசு குணமாக்குவார் - 2
விசுவாசம் நமக்குள் இருந்தால்போதும்
தேவ மகிமையை கண்டிடுவோம் - 2

2. மாந்திரம் சூனியம் செய்வினை கட்டுக்கள்
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார் - 2
ஆவியானவர் நமக்குள் இருப்பதால்
உலகத்தை நாம் கலக்கிடுவோம் - 2

3. சாத்தானின் சதிகளா பாவத்தின் வாழ்க்கையா
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார் - 2
துதியின் ஆயுதம் நமக்குள் இருப்பதால்
அசுத்த ஆவியைத் துரத்திடுவோம் - 2

## 489

அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய்

முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்பு கூருவேன்

ஆராதனை ஆராதனை – 2

1. எபிநேசரே எபிநேசரே
   இதுவரையில் உதவினீரே – உம்மை

2. எல்ரோய் எல்ரோய்
   என்னைக் கண்டீரே நன்றி ஐயா – உம்மை

3. யேகாவா ராப்பா யேகாவா ராப்பா
   சுகம் தந்தீரே நன்றி ஐயா – உம்மை

# 490

ஒரு விசை ஜனங்ளைத் தொடுங்க
உன்னதத்தில் அபிஷேகம் கொடுங்க
வானமும் பூமியும் நடுங்க
வல்லபிதாவே வந்துவிடுங்க

வாங்க இறங்கி வாங்க
வல்லபிதாவே கொஞ்சம் வாங்க
வாங்க இறங்கி வாங்க
உலகத்தை கலக்கணும் நீங்க

1. எனக்காக இரங்கி வந்து விட்டீங்க
எங்களுக்காக கொஞ்சம் வந்துவிடுங்க
பெந்தேகோஸ்தே நாளில் வந்துவிடுங்க
பிரியமாய் அழைக்கின்றோம் வந்துவிடுங்க
வாங்க இறங்கி வாங்க
பின்மாரி ஊற்றிட வாங்க - 2

2. சாலமோனின் ஆலயத்தில் வந்துவிட்டீங்க
சகினா மகிமையை தந்துவிட்டீங்க
கொர்னேலியு வீட்டிலே வந்துவிட்டீங்க
கூப்பிடும் சத்தத்திற்கு பதில் கொடுத்தீங்க
வாங்க இறங்கி வாங்க
எருசலேமில் இறங்க வேண்ணும் நீங்க

3. மேல் வீட்டின் அறையில் வந்துவிட்டீங்கே
அக்கினியின் நாவுகளால் தொட்டு விட்டீங்க
பரிசுத்த ஆவியை ஊற்றி விட்டீங்க
பல பாஷைகளை மக்களுக்கு தந்துவிட்டீங்க
வாங்க இறங்கி வாங்
திருச்சபையை அனல்மூட்ட வாங்க

## 491

இன்று காணும் எகிப்தியனை
என்றென்றும் காண்பதில்லை
கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்வார்
கலங்கிடத் தேவையில்லை – இன்று

**அனுபல்லவி**

நம் இயேசு நல்லவரே
நமக்காய் யாவும் செய்பவரே – இன்று

**சரணங்கள்**

தடைகள் வந்துவிட்டாலும்
உடைத்து முன்செல்லுவோம்
உன்னத தேவன் உண்டு
உதவிடுவார் தினமே – இன்று

வலக்கரம் பிடித்துவிட்டார்
வாழ்நாளெல்லாம் காப்பார்
சொன்னதைச் செய்யும்வரை
கைவிடவே மாட்டார் – இன்று

பரிசுத்த அலங்காரமே
ஜொலித்திடவே வாழுவோம்
பரமன் இயேசுவுக்கே
சாட்சியாய் நின்றிடுவோம் – இன்று

## 492

நாம் ஆராதிக்கும் தேவன் நல்லவர்
விடுவிக்க வல்லவரே
எரிகின்ற அக்கினிக்கும் ராஜவுக்கும்
விடுவிக்க வல்லவரே

நம்மை காக்கின்றவர் தூதனை அனுப்பிடுவார்
அக்கினி ஜுவாலை நம்மை
அவியாமல் காத்திடுவார்
இடைவிடாமல் ஆராதிப்போம்
வாழ்வில் என்றும் ஜெயமே

## 493

கர்த்தருக்காக பொறுமையோடு
காத்திருந்து பெலனடைவேன்
கழுகுபோல செட்டையடித்து
அவருக்காக பறந்திடுவேன்
ஹல்லேலூயா, ஹல்லேலூயா - 4

1. கர்த்தரின் பாதம் அமர்ந்து நானும்
அவரின் சித்தம் செய்திடுவேன்
அவரின் சாயல் தினமும் அணிந்து
புது பெலனைப் பெற்றிடுவேன் - கர்த்தருக்காக

2. அவர் சமூகம் ஆனந்தமே
அவரின் தஞ்சம் பேரின்பம்
அவரின் வார்த்தை மதுரமாமே
அதை ருசித்து பெலனடைவேன் - கர்த்தருக்காக

3. கர்த்தரின் நாமம் பலத்த துருகம்
நீதிமான் ஓடி சுகித்திருப்பான்
இயேசுவின்அண்டை வந்தவரை
புறம்பே என்றும் தள்ளமாட்டார் - கர்த்தருக்காக

# 494

கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?
வானத்திலும் பூமியிலும் உமக்கு ஒப்பானவர் யார்?

செங்கடலை நீர் பிளந்து உந்தன்
ஜனங்களை நடத்திச் சென்றீர்
நீர் வல்லவர் சர்வ வல்லவர்
என்றும் வாக்கு மாறாதவர் – உமக்கு

தூதர்கள் உண்ணும் உணவால் உந்தன்
ஜனங்களைப் போஷித்தீரே
உம்மைப் போல யாருண்டு
இந்த ஜனங்களை நேசித்திட – உமக்கு

கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களின் தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம் என்றும்
அற்புதம் செய்திடுவீர் – உமக்கு

# 495

பரலோகமே உம்மை துதிப்பதால்
கர்த்தாவே அங்கே வாழ்கிறீர்
ஆலயத்தில் உம்மை துதிக்கிறோம்
கர்த்தாவே எழுந்தருளும்
துதிக்கிறோம் துதிக்கிறோம் (2)
ஒன்றாகக் கூடி துதிக்கிறோம்

1. உந்தன் நாமம் உயர்த்தும் இடத்தில்
   அங்கே வாசம் செய்வீர் – (துதிக்கிறோம்)

2. உம்மை போலோர் தெய்வம் இல்லை
   சர்வ சிருஷ்டிகரே – (துதிக்கிறோம்)

3. துதியும் கனமும் மகிமை யெல்லாம்
   உமக்கே செலுத்துகிறோம் – (துதிக்கிறோம்)

## 496

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்
அலங்கம் இடியும்வரை ஆர்ப்பரிப்போம்
எக்காளம் ஊதி எரிகோவை இடித்து
ஆரவாரத் தொனியோடு கானானுக்குள் நுழைவோம்
இது எழுப்புதலின் நேரமல்லோ – நம்
யோசுவாவின் காலமல்லோ

1. துதிக்கும் நமக்கோ தோல்வி இல்லை
வெற்றி நிச்சயமே
பெலன் கொண்டு திடமனதாய் இருப்போமே
இந்த பாரதத்தை சுற்றிச் சுற்றி சுதந்தரிப்போமே

2. கர்த்தர் நாமம் சொல்ல சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர்கள் மதுரமாகுமே
யோர்தானின் தடைகள் எல்லாம் விலகிப்போகுமே

3. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு யுத்தம் இல்லை
சர்வ வல்லவரின் ஆயுதத்தை அணிந்திடுவோமே
சாத்தானின் இராஜ்யத்தை அழித்திடுவோமே

**497.**

உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை (3)
எல்லாமே உம்மால் ஆகும் -- அல்லேலுயா
எல்லாமே உம்மால் ஆகும்
ஆகும் எல்லாம் ஆகும், உம்மாலேதான் எல்லாம் ஆகும் (2)

1. சொல்லி முடியாத அற்புதம் செய்பவர் நீரே -- ஐயா நீரே
எண்ணி முடியாத அதிசயம் செய்பவர் நீரே ஐயா நீரே (2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)
--- உம்மால்

2. எனக்கு குறித்ததை நிறைவேற்றி முடிப்பவர் நீரே -- ஐயா நீரே
எனக்காக யாவையும் செய்து முடிப்பவர் நீரே -- ஐயா நீரே (2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)
--- உம்மால்

3. வறண்ட நிலத்தை நீருற்றாய் மாற்றுபவர் நீரே -- ஐயா நீரே
அவாந்தர வெளியை தண்ணீராய் மாற்றுபவர் நீரே -- ஐயா நீரே (2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)
--- உம்மால்

## 498.

நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது

பல நன்மை செய்த இயேசுவுக்கே

நன்றி நன்றி நன்றி என்று சொல்லி நான் துதிப்பேன்

நாள்தோறும் போற்றுவேன் - 2

1. எத்தனையோ நன்மைகளை என் வாழ்வில் செய்தாரே
   ஏராளமாய் நன்றி சொல்வேன் - 2
   அத்தனையும் நினைத்து நினைத்து நான் துதிப்பேன்
   ஆண்டவரைப் போற்றுவேன் – 2 - நன்றி

2. மரணப் பள்ளத்தாக்கில் நான் நடக்கும்
   போதெல்லாம் பாதுகாத்தீர் ஐயா - 2
   மீண்டும் ஜீவனைக் கொடுத்து நீர் என்னை
   வாழ வைத்தீரையா – 2 - நன்றி

3. தேவன் அருளிய சொல்லி முடியாத
   ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம் - 2
   அளவில்லா அவரின் கிருபைகளுக்காய்
   ஆயுள் முழுதும் ஸ்தோத்திரம் - 2 - நன்றி

**499**.

எக்காளம் எக்காளம் தொனிக்கிற காலமிது
என் இயேசு மேகத்தில் வருகின்ற நேரமிது } 2
தேவ கோப கலசம் பூமியில் கொட்டப்படுமுன்
இரட்சிக்கப்படு நீ ஆயத்தப்படு - 2

1. எக்காள தொனியோடு இயேசு பிறந்தார்
இந்த எக்காள தொனியோடு மீண்டும் வருவார் } 2
உலகம் இருப்பது கொஞ்ச காலமே - 2
அதை விட்டு விட்டு இயேசுவண்டை வா - 2
இரட்சிக்கப்படு நீ ஆயத்தப்படு - இன்றே - எக்காளம

2. நீ வாழும் இந்த பூமி காணாமல் போகுமுன்
நீ காணும் இந்த வானம் விலகி போகுமுன் } 2
அதிரடியான கடல் அயர்ந்து விலகுமுன் - 2
மாயமான உலகம் முடிந்து போகுமுன - 2
இரட்சிக்கப்படு நீ ஆயத்தப்படு - இன்றே - எக்காளம

3. சூரியனும் சந்திரனும் இருண்டு போகுமுன்
வசனமும் வல்லமையும் மறைந்து போகுமுன் } 2
நியாயத்தீர்ப்பின் நாள் உன்னண்டை வருமுன் - 2
புதிய எருசலேம் நீ கடந்து போக - 2
இரட்சிக்கப்படு நீ ஆயத்தப்படு - இன்றே - எக்காளம

**500**.

ஆபிரகாம் தேவன் ஈசாக்கின் தேவன்

யாக்கோபின் தேவனவர் -- என்னை

அழைத்தும் உன்னத வழியில்

என்றென்றும் நடத்திடுவார் - ஆபிரகாம்

வனாந்திரமோ வாடாதே மனமே
காடையை அனுப்பிடுவார் } 2

தண்ணீர் இல்லையோ எண்ணிப்பார்
அவரின் நன்மைகள் எத்தனையோ } 2 - ஆபிரகாம்

சோதனை வேளையோ சோராதே மனமே
இயேசுவை சார்ந்திடுவாய் } 2

யோர்தானைக் கடந்து இயேசுவைப் பற்றிக் கொள்
என்றென்றும் ஜீவிப்பாய் } 2 - ஆபிரகாம்

கசந்த மாராவோ கவலை வேண்டாமே
கர்த்தர் உன்னோடே உள்ளார் } 2

ஜெபத்திலே நீ விழிப்பாய் இருந்து
வெற்றியை சேர்த்திடுவாய் } 2 - ஆபிரகாம்

அல்லேலூயா பாடி இயேசுவைத் துதித்து
அனுதினம் ஜீவிப்பாயே } 2

அவரின் சித்தம் நித்தமும் செய்ய
ஆவலாய் கீழ்ப்படிவாய் } 2 - ஆபிரகாம்

## 501.

ஆதிபிதாக் குமாரன் ஆவி திரி யேகர்க்கு
அனவரதமும் தோத்திரம் - திரியேகர்க்கு
அனவரதமும் தோத்திரம்
நீதி முதற் பொருளாய் நின்றருள் சருவேசன் - 2
நிதமும் பணிந்தவர்கள் இருதயமலர் வாசன் - 2

நிறைந்த சத்திய ஞான மனோகர
உறைந்த நித்திய வேத குணாகர
நீடு வாரி திரை சூழ மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய் - ஆதி

1. எங்கணும் நிறைந்த நாதர் பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்
துங்கமாமறைப்பிர போதர்
கடைசி நடு சோதனைசெய் அதி நீதர்
பங்கில்லான் தாபம் இல்லான்
பகரடி முடிவில்லான் - பன்ஞானம்
சம்பூரணம் பரிசுத்தம் நீதி என்றும் - 2

பண்பதாய் சுயம்ப விவேகன்
அன்பிரக்க தயாளப்பிரவாகன்
பார்தலத்தில் சிருஷ்டிப்பு மீட்பு பரி
பாலனத்தையும் பன்பாய் நடத்தி அருள் - ஆதி

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு
நடத்தினால் நாம் நீனிலத் தில்லாமல் அழிந்து
தீதுறு நரகில் தள்ளுண்டு மடிவோ மென்று
தேவா திருவுளம் உணர்ந்து பாதகர்க் குயிர்
தந்த பாலன் யேசுவைக்கொண்டு பரன்
எங்கள் மிசை தயை வைத்தனர் இது நன்று

பகர்ந்த தன்னடி யார்க்குறு சஞ்சலம்
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான தேசமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும் - ஆதி

**502**.

இஸ்ரவேலின் நாதனாக வாழும் ஏக தெய்வம்
வழியும் சத்திய ஜீவனாம் தெய்வம்
மீட்பராக பூமியில் பிறந்தார் தேவ மைந்தன்
நித்திய ஜீவனாய் வாழும் தெய்வம்

அப்பா பிதாவே தெய்வமே
உம் திரு ராஜ்யம் வருகவே
உம் திரு சித்தம் பூமியில்
என்றென்றும் நிறைவேற வேண்டுமே } 2

1. செங்கடலில் நீர் அன்று பாதை வகுத்தீர்
பாலைவனத்தில் அன்று மன்னா பொழிந்தீர்
கொடும் வெயிலில் மேக குளிராகி
இருளில் அன்பின் தீபமாய்
சீனாய் மலையின் மேலே நீர்
நீதியின் கட்டளை எடுத்துறைத்தீர் } 2 - அப்பா

2. மனிதனாய் பூவில் அவதரித்தீர்
எனக்காக ஜீவன் பலி கொடுத்தீர்
திரு உடலும் திவ்ய போஜனமாய்
இவ்வுலகத்தின் ஜீவனாய்
வழியும் சத்யமுமானவரே
உம் திரு நாமம் வாழ்த்துகிறோம் } 2 - அப்பா

**503**.

யெகோவா தேவன் சிருஷ்டி கர்த்தரவர்
யெகோவா தேவன் சர்வ வல்லவரே
கீலேயாத் தைலமாம் கன்மலையானவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2 அல்லேலூயா - 4

யெகோவா தேவன் சர்வ வல்லவரே
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2

1. ஆபிரகாம் தேவன் என்றென்றுமுள்ளவர்
யெகோவா ஷாலோம் சமாதான தேவன்
இஸ்ரவேல் தேவனாம் நித்தியமானவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2 அல்லேலூயா – 4

யெகோவா தேவன் சர்வ வல்லவரே
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2

2. போதுமானவரே யெகோவா யீரே
இரட்சண்ய தேவனாம் மேசியா தேவனே
இரட்சகர் வந்திட்டார் சாட்சி கொடுத்திட்டார்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2 அல்லேலூயா – 4

யெகோவா தேவன் சர்வ வல்லவரே
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம் - 2

**504**.

அழைக்குதே உன்னைக் கல்வாரி அன்பு
அறிந்து வா உடனே } 2
தேவன் தம்மையே நமக்காய்
தந்த தியாக காட்சி காண - அழைக்குதே

1. தேவன் நம்மின் பாவம் போக்க
தோளில் பாரம் ஏற்றதேனோ } 2
ஜீவன் நாளின் உன் நல் மீட்பைக் காண
ஞான தேவன் கொடுமை ஏற்றார் - அழைக்குதே

2. தேவன் தானே ஆத்ம மீட்பர்
ஜீவிய பாதையில் நாளும் மீட்பர் } 2
நிர்மலன் இயேசு என் பாடுகள் ஏற்றார்
நம்மை மீட்டு தாங்கத் தானே - அழைக்குதே

3. உன்னைக் காக்க தன்னை தந்தார்
உணர்ந்து தேவன் வழியை நாடு } 2
நித்திய வாழ்வு உன்னை நாடும்
பரத்தில் உன்னை கொண்டு சேர்க்கும் - அழைக்குதே

**505**.

பாரம் இல்லையா – 2
தேசம் அழிகின்றது
யாரை அனுப்புவேன் -- 2
என்ற சத்தம் தொனிக்கின்றது
கிருபை வாசல் அடைகிறதே
நியாயத்தீர்ப்பு நெருங்கிடுதே
இந்த நாளில் மவுனமாயிருந்தால் } 2
அழிவு என்பது நிச்சயமே

சேனையாய் எழும்புவோம் } 2
யுத்தகளத்தில்
அழியும் கோடி மாந்தரை மீட்க } 2
இன்றே புறப்படுவோம்
இன்றே ஜெபித்திடுவோம்
எங்கள் பாரதம் எங்கள் பாரதம் } 2
இயேசுவின் பாரதம் - பாரதம்

1. திறப்பில் நின்று சுவரை அடைக்கும் } 2
தேவன் தேடும் மனிதன் எங்கே
கண்ணீர் சிந்த ஆளில்லை } 2
கதறி ஜெபிக்க ஆளில்லை
யாரை அனுப்புவேன் - 2 } 2
என்ற சத்தம் தொனிக்கின்றதே - சேனையாய்

2. அறுவடையின் காலம் அல்லோ } 2
முடங்கி கிடப்பது நியாயம் தானா
பாவங்கள் வெண்கலமாகும் } 2
இடைவிடாமல் போராடி
வாயில் துதியும் கையில் பட்டயம் } 2
எழுந்து நின்று போரடிப்போம் - சேனையாய்

## 506.

வல்லமை அளித்திடும் தேவனுக்கு – என்
துதி கன மகிமை எல்லாம் } 2
அல்லேலூயா (4) அல்லேலூயா (4) – வல்லமை

1. மாராவின் தண்ணீரை மதுரமாக்கிய
தேவாதி தேவனுக்கே – (2) அல்லேலூயா – வல்லமை

2. வானமும் பூமியும் மாறினாலும் உம்
வார்த்தைகள் மாறுவதில்லை – (2) அல்லேலூயா – வல்லமை

3. வேண்டிடும் பக்தர்க்கு அளித்திடும்
கிருபைகள் பலவிதமே – (2) அல்லேலூயா – வல்லமை

4. சீக்கிரம் வருகிற தேவாதி தேவன்
ராஜாதி ராஜனுக்கு – (2) அல்லேலூயா – வல்லமை

**507**.

அபிஷேகத்தின் வல்லமை என் மீதிலே
ஊற்றுமே இவ்வேளையிலே ஊற்றுமே - (2)
என் தாகம் தீர ஊற்றிடுமே -- அபிஷேகத்தின்

1. மாம்சத்தின் கிரியைகள் அழித்திடவே
உம் அக்கினியை ஊற்றிடுமே
ஆவியின் கனிகளில் நிறைந்து பெருகவே
என் ஆத்துமாவில் ஊற்றிடுமே - அபி

2. தேசத்தில் எழுப்புதல் கண்டு மகிழ்ந்திட
தேவை எந்தன் அபிஷேகமே
ஆதி அப்போஸ்தலரின் நாட்களில் நடந்திட்ட
அற்புதங்கள் காணச் செய்யுமே - அபி

3. மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகவே
தெரிந்து கொண்ட தேவ ஆவியே
ஆமென் இயேசு வாருமே
என்றழைக்க கிருபை தாருமே - அபி

**508**.

தேவா சரணம்  கர்த்தா சரணம்<br>ராஜா சரணம் இயேசையா சரணம் } 2

1. தேவாதி  தேவனுக்கு சரணம்<br>இராஜாதி  இராஜனுக்கு சரணம் } 2

தூய ஆவி சரணம்,  அபிஷேக நாதா சரணம்  -  2

சரணம் சரணம் சரணம்  (2)                                  - தேவா

2. கர்த்தாதி  கர்த்தனுக்கு சரணம்<br>காருண்ய  கேடகமே சரணம் } 2

பரிசுத்த ஆவி சரணம்,  ஜீவ நதியே சரணம்  -  2

சரணம் சரணம் சரணம்  (2)                                  - தேவா

3. மகிமையின் மன்னனுக்கு சரணம்<br>மாசற்ற  மகுடமே சரணம் } 2

சத்தியஆவியே சரணம்,  சர்வ வியாபியே சரணம்  -  2

சரணம் சரணம் சரணம்  (2)                                  - தேவா

**509**.

வழியும் நீரே சத்தியம் நீரே
ஜீவனும் இயேசுவே
உம்மை ஆராதனை செய்து
பாடிப் போற்றுவோம் } 2

ஆராதனை ஆராதனை
ஆராதனை இயேசுவை

1. குருடர் கண்களை பார்க்க
செய்தவர் நீர் தானையா
செவிடர் செவிகள் கேட்கச்
செய்தவர் நீர் தானையா } 2 - ஆராதனை

2. குஷ்டரோகியை குணமாக்கினீர்
நீர் தானையா
மரித்தோரை எழும்ப
செய்தவர் நீர் தானையா } 2 - ஆராதனை

3. பாவ சாபம் நீங்கச்
செய்தவர் நீர் தானையா
கவலை கஷ்டம் நீங்கச்
செய்தவர் நீர் தானையா } 2 - ஆராதனை

## 510.

உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு - 4
என் இயேசையா அல்லேலூயா – 4

1. இன்பத்திலும் நீரே, துன்பத்திலும் நீரே - 2
எவ்வேளையும் ஐயா நீர் தானே - 2
- உம்மை அல்லாமல்

2. என் ஸ்நேகமும் நீரே, என் ஆசையும் நீரே -2
என் எல்லாமே ஐயா நீர் தானே - 2
- உம்மை அல்லாமல்

3. இம்மையிலும் நீரே, மறுமையிலும் நீரே - 2
எந்நாளுமே ஐயா நீர்தானே - 2
- உம்மை அல்லாமல்

**511**.

என்னோடு கூட இருப்பார் இயேசு – 2
எந்நாளும் கூட இருப்பார் இயேசு
எப்போதும் கூட இருப்பார்
கலங்கிட மாட்டேன் நான் கலங்கிட மாட்டேன்
கைவிடமாட்டார் இயேசு கைவிடமாட்டார் } 2 - என்னோடு

1. சோதனை நேரத்தில் கூட இருப்பார்
சோர்ந்திடும் வேளையில் தாங்கி நடத்துவார் } 2
சாத்தானை ஜெயிக்க பெலன் தருவார்
சாய்ந்து இளைப்பாற மார்பில் அணைப்பார் } 2 - என்னோடு

2. செய்திடும் காரியம் வாய்த்திடச் செய்வார்
சேனையின் கர்த்தராய் கூட இருப்பார் } 2
மனுஷரின் தயவை உண்டு பண்ணுவார்
நானிலம் போற்றிட உயர்த்தி மகிழுவார் } 2 - என்னோடு

3. ஆவியின் கனியால் அலங்கரிப்பார்
வல்லமை வரங்களை பெருகப் பண்ணுவார் } 2
போக்கிலும் வரத்திலும் கூட இருப்பார்
பரலோக வாழ்வை எனக்கு தருவார் } 2 - என்னோடு

## 512.

யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்திரம் போதும் எனக்கு
யெகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்
யெகோவா ஷம்மா என் கூட இருப்பீர்
என் தேவையெல்லாம் சந்திப்பீர்
நீர் மாத்ரம் போதும் (3) – எனக்கு

1. யெகோவா ஏலோஹிம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யெகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப்போல் வேறு தேவன் இல்லை
யெகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில் -- நீர் மாத்திரம்

2. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்மேல் எவ்வளவன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுதும் உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும் -- நீர் மாத்திரம்

## 513.

யாக்கோபென்னும் சிறு பூச்சியே
நீ ஒன்றுக்கும் கலங்கி விடாதே
இஸ்ரவேலின் சிறு கூட்டமே
நீ எதற்கும் பயந்து விடாதே } 2

உன்னை உண்டாக்கினவர் உன்னை சிருஷ்டித்தவர்
உன் முன்னே நடந்து செல்கிறார்
தீங்கு உன்னை ஒன்றும் செய்யாதே (2) - யாக்

1. அழைத்தவர் கைவிடுவாரோ – இல்லை
தெரிந்தவர் விட்டிடுவாரோ – இல்லை } 2
பேர் சொல்லி அழைத்த தேவன் - 2
உன்னை மகிமைப்படுத்திடுவார் - 2 - உன்னை

2. பெலவீனன் ஆவதில்லை – இல்லை
சுகவீனம் தொடர்வதில்லை – இல்லை } 2
சாத்தான் உன்னை ஜெயிப்பதில்லை - 2
சாபம் உன்னை அணுகுவதில்லை – 2 - உன்னை

3. வியாதிகள் வருவதில்லை – இல்லை
வாதைகள் தொடர்வதில்லை - இல்லை } 2
ஆண்டுகள் முடிவதில்லை - 2
அவர் கிருபையோ விலகுவதில்லை - 2 - உன்னை

**514**.

உம்மை ஆராதிக்க கூடிவந்தோம் நல்லவரே
ஆவியோடும் நல் உண்மையோடும்
உம்மை ஆராதிக்க கூடிவந்தோம் பரிசுத்தரே
பரிசுத்த உள்ளத்தோடு } 2
ஆராதனை (6) உமக்குத்தானே - உம்மை

1. நீர் செய்த நன்மைகள் ஏராளம் எராளம்
உமக்கே ஆராதனை
உந்தன் கிருபைகள் தாராளம் தாராளம்
உமக்கே ஆராதனை } 2
உம் நாமம் உயர்த்திடுவேன்
உம் அன்பைப் பாடிடுவேன் } 2 - ஆராதனை

2. நீர் தந்த இரட்சிப்பு பெரிதல்லோ பெரிதல்லோ
உமக்கே ஆராதனை
உந்தன் வழிகள் அதிசயம் அதிசயம்
உமக்கே ஆராதனை } 2
மகிமை நிறைந்தவரே
மாட்சிமை உடையவரே } 2 - ஆராதனை

3. நீர் தரும் இன்பமெல்லாம் நிரந்தரம் நிரந்தரம்
உமக்கே ஆராதனை
உந்தன் வார்த்தைகள் வல்லமை வல்லமை
உமக்கே ஆராதனை } 2
உண்மை உள்ளவரே
துதிக்குப் பாத்திரரே } 2 - ஆராதனை

**515**.

குதூகலம் கொண்டாட்டமே
என் இயேசுவின் சந்நிதானத்தில் } 2
ஆனந்தம் ஆனந்தமே
என் அன்பரின் திருப்பாதத்தில் } 2 - குதூகலம்

1. பாவமெல்லாம் பறந்தது
நோய்களெல்லாம் தீர்ந்தது
இயேசுவின் இரத்தத்தினால் } 2
கிறிஸ்துவுக்குள் வாழ்வு கிருபையால் மீட்பு
பரிசுத்த ஆவியினால் } 2 - குதூகலம்

2. தேவாதி தேவன் தினம்தோறும் தங்கும்
தேவாலயம் நாமே } 2
ஆவியான தேவன் அச்சாரமானார்
அதிசயம் அதிசயமே } 2 - குதூகலம்

3. வல்லவர் என் இயேசு
வாழ வைக்கும் தெய்வம்
வெற்றிமேலே வெற்றி தந்தார் } 2
ஒருமனமாய் கூடி ஓசன்னா பாடி
ஊரெல்லாம் கொடியேற்றுவோம் } 2 - குதூகலம்

4. எக்காள சத்தம் தூதர்கள் கூட்டம்
நேசர் வருகின்றார் } 2
ஒருநொடி பொழுதில் மறுரூபமாவோம்
மகிமையில் பிரவேசிப்போம். } 2 - குதூகலம்

**516**.

ஆராதிப்போம் ஆராதிப்போம் ஆண்டவர் } 2
இயேசுவையே ஆராதிபடபோம்
போற்றிடுவோம் வாழ்ந்திடுவோம் புண்ணியர் } 2
புகழ்கூறி பாடிடுவோம் - ஆராதிப்போம்

1. சபையின் அஸ்திபாரம் மூலைக்கல்லாகிய } 2
முன்னவர் இயேசுவையே ஆராதிப்போம்
வல்லபிதாவின் வாக்குப்படி ஜெனித்து } 2
வானகம் சேர்ந்தவரை ஆராதிப்போம் - ஆராதிப்போம்

2. பரிசுத்த ஆவியை பாங்காய் நமக்களித்த } 2
பாவியின் நேசரையே ஆராதிப்போம்
பார்வோனின் சேனையை அழிவில் அழித்த } 2
பரம பிதாவை இன்று ஆராதிப்போம் - ஆராதிப்போம்

3. எரிகோவின் கோட்டையை எளிதில் தகர்த்திட்ட } 2
யெகோவா தேவனை ஆராதிப்போம்
எரிகின்ற அக்கினி சூளையை தகர்த்த } 2
எலியாவின் தேவனையே ஆராதிப்போம் - ஆராதிப்போம்

**517**.

ஆராதனை ஆராதனை – அல்லேலூயா
தேவனுக்கு ஆராதனை

1. ராஜாதி ராஜனுக்கு ஆராதனை
கர்த்தாதி கர்த்தனுக்கு ஆராதனை
ஆராதனை ஆராதனை - 2

2. மன்னாதி மன்னனுக்கு ஆராதனை
மகிமையின் ராஜனுக்கு ஆராதனை.

3. தேவாதி தேவனுக்கு ஆராதனை
தூயாதி தூயனுக்கு ஆராதனை

4. திரியேக தேவனுக்கு ஆராதனை
துதிகளின் பாத்திரர்க்கு ஆராதனை

5. நித்திய தேவனுக்கு ஆராதனை
நிதம் காக்கும் கர்த்தருக்கு ஆராதனை

6. பரிசுத்த தேவனுக்கு ஆராதனை
பக்தர்களின் நேசருக்கு ஆராதனை

**518**.

அள்ள அள்ள குறையாதது என்
அன்பர் இயேசு கிருபையிது } 2
சொல்லச் சொல்ல உள்ளம் மகிழுது என்
சொந்த மீட்பர் கிருபையிது

1. காலை தோறும் புதிதானது – என்
கர்த்தர் இயேசு கிருபையிது } 2
வேளையிலும் மங்காதது என்
வேந்தன் இயேசு கிருபையிது - அள்ள

2. சோர்ந்து நின்ற நேரத்திலே – என்னை
சார்ந்து நின்ற கிருபையிது } 2
கண்ணீரின் வாழ்க்கையிலே என்னைக்
கரை சேர்த்த கிருபையிது - அள்ள

3. பெலவீன நேரத்திலே என்னை
பெலப்படுத்திய கிருபையிது } 2
சுகவீன நேரத்திலே என்னைச்
சுகப்படுத்தின கிருபையிது - அள்ள

**519**.

சர்வ அங்க தகனபலி
எங்கள் சர்வ வல்ல தேவனுக்கு
உதடுகளின் ஸ்தோத்திர பலி
எங்கள் உன்னத நல் ராஜனுக்கு } 2

ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி
நான் செலுத்தும் பலி } 2

1. அசைவாட்டும் ஜீவபலி - எங்கள்
அசைவாடும் தேவனுக்கு } 2
பிசைந்த மாவின் ஓர் மெல்லிய பலி
எங்கள் மெல்லிய நல் ராஜனுக்கு } 2 - ஸ்தோத்திர பலி

2. சமாதான ஜீவபலி - எங்கள்
சமாதான தேவனுக்கே } 2
இடித்து பிழிந்த திராட்சை ரசத்தின் பலி
என்னை நடத்திடும் தேவனுக்கு } 2 - ஸ்தோத்திர பலி

3. என் கைகளின் காணிக்கை பலி
என்னை வாழ வைக்கும் தேவனுக்கு } 2
என் ஆவி ஆத்துமா சரீர பலி
என்னை ஆளுகின்ற தேவனுக்கு } 2 - ஸ்தோத்திர பலி

**520**.

மானில ஜோதியிவர் கிறிஸ்தேசுவே
மனுக்குலத்தின் விளக்கே (இந்த மானில)

1. மங்கிடா தீபமே மறை பொருள் ஞானமே - 2
எங்கும் நிறைந்திடும் என தரும் செல்வமே
மன இருள் நீங்கிடும் மகிமை நிறைந்திடும்
எனதகம் தங்கிடும் கருணை வேந்தா - மானில

2. பாவமில்லா தூய பரிசுத்த வாழ்வே - 2
தேவகுமாரனே அருளின ஈவே
குருசினில் தொங்கிடும் கிறிஸ்துவை தேடுவோர்
குறைகள் அகன்றிடும் பாக்ய மிதே - மானில

3. மேகத்தில் இயேசுவே தோன்றிடும் நாளே - 2
வேகம் நெருங்கிட விரைந்திடுவார்கள்
ஜெயித்திடும் பக்தர்கள் பறந்து மறைந்திடும்
சுபதினம் வந்திடும் முடிவினிலே - மானில

**521**.

*நித்திய இராஜா நிர்மல நாதா*
*நின் பாதம் பணிந்தேன் இக்காலை*
*நின் பாதம் பணிந்தேன் இவ்வேளை*

*என் மன ராஜ்யத்தில்*
*என்றும் அரசாளுகின்ற*
*ராஜாதி ராஜாவுக்கே ஸ்தோத்திரம்*
*இயேசு மகா ராஜாவுக்கே ஸ்தோத்திரம்*

1. கண்ணயர்ந்த வேளையிலும் கண்ணிமைப்போல் காத்தவரே
கற்பகமே உமக்கு ஸ்தோத்திரம்
கண் விழித்த வேளையிலும் கண் மேல் உம் கண் வைத்து
கருத்தாய் போதித்தவா ஸ்தோத்திரம் - என்

2. இப்பகல் வேளையிலும் எப்பக்கம் சூழ்ந்து நிற்கும்
இம்மானுவேலனே ஸ்தோத்திரம்
உம்முடனே நான் இணைய என்னுடனே நீர் பிணைய
வாழ்ந்திடும் வாழ்வுக்காய் ஸ்தோத்திரம் - என்

## 522.

*எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்*
*கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து*
*எத்தனை நாவால் துதிப்பேன்*

*நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்*
*நின்னைச் சொல் மாலையால் சூட்டி மகிழும்* - எத்

1. *நம்பினோரல்லோ அறிவார் எந்தன்*
*தம்பிரானே உந்தன் கம்பீர குணம்*
*அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்*
*சம்பூரண சவரட்சணை செல்வம்* - எத்

2. *பிரார்த்தனை கேட்கும் பெம்மானே இந்த*
*பேதை பலவீனம் பாராதருள் கோனே*
*சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்*
*தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனே* - எத்

3. *துணிவாய் என் நெஞ்சே தீவிரமாய் மிகத்*
*தொழுது ஆண்டவன் செயல் நினைந்து*
*எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை*
*விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு* - எத்

**523**.

கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்
நீ கலங்காதே மனமே } 2

1. கையிடும் வேலையில் ஆசிர்வாதமும்
களங்களில் நிரம்பிடும் தானியமும் } 2
நிறைவான நன்மை உண்டாக
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் } 2 - கர்த்தர்

2. சத்துருக்கள் எதிராய் எழும்பும் போது
கர்த்தரே யுத்தத்தை செய்திடுவார் } 2
வெற்றிமேல் வெற்றியை உனக்குத்தந்து
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பாா } 2 - கர்த்தர்

3. உன்னை அவர் தமக்காக தெரிந்துகொண்டார்
தன்பெயரை உனக்காக வழங்கினாரே } 2
சுற்றமும் நண்பரும் உன்னை மதிக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் } 2 - கர்த்தர்

4. உன் தேசம் முழுவதும் மழை பொழிவார்
உனக்காக பொக்கிஷத்தை திறந்திடுவார் } 2
பிறருக்கு நீயும் கடன் கொடுக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் } 2 - கர்த்தர்

**524**.

எருசலேமே எருசலேமே
நான் உன்னை எப்படி மறப்பேன் } 2
உலகினின் முத்தே உன்னதரின் சொத்தே
இரட்சகரை அருளினீரே } 2

1. நான் உன்னை மறந்தால் என் வலது கரம்
என் தொழிலை மறப்பது போல் } 2
கர்த்தரின் கண்களும் இருதயமும்
எருசலேமே என்றும் உன்னில் உள்ளதே } 2 - எருசலேமே

2. பரிசுத்த நகரமே எருசலேமே
நீ கர்த்தரின் சிங்காசனம் } 2
உனக்கு விரோதமாய் யுத்தம் செய்பவர்
கர்த்தரின் கோபத்தால் அழிந்திடுவார் } 2 - எருசலேமே

3. எருசலேமே நகருக்காய் ஜெபிப்பவர்கள்
மகிழ்ச்சியாய் வாழ்ந்திடுவார் } 2
கடைசி நாளில் கர்த்தரின் பாதம்
ஒலிவமலைமேல் வந்து நிற்குமே } 2 - எருசலேமே

**525**.

*விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் - 2*
*விசுவாசியே பதறாதே*
*கலங்காதே திகையாதே விசுவாசியே – 2*
*கல்வாரி நாயகன் கைவிடாரே - 2* - விசுவாச

*1.* *தந்தை தாயென்னை வெறுத்திட்டாலும்* } 2
*பந்த பாசங்கள் அறுந்திட்டாலும்*
*நிந்தை தாங்கிட்ட தேவன் நம்மை*
*சொந்த கரங்களால் அணைத்துக் கொள்வார்* - விசுவாச

*2.* *பிறர் வசை கூறி துன்புறுத்தி* } 2
*இல்லாதது சொல்லும்போது*
*நீ மகிழ்ந்து களிகூரு*
*விண் கைமாறு மிகுதியாகும்* - விசுவாச

*3.* *கொடும் வறுமையில் உழன்றாலும்* } 2
*கடும் பசியினில் வாடினாலும்*
*அன்று எலியாவை போஷித்தவர்*
*இன்று உன் பசி ஆற்றிடாரோ* - விசுவாச

**526**.

என் முடிவுக்கு விடிவு நீரே
என் வாழ்வுக்கு உதயம் நீரே
என்னையா என்னையா தெரிந்து கொண்டீர் - 2
என்னையா என்னையா அழைத்து விட்டீர் - 2

தகுதியில்லாத என்னை தகுதியாய் மாற்றி
கன்மலையில் நிறுத்தினீரே – 2 - என் முடிவுக்கு

1. பூமியிலே நான் பரதேசி - ஆனால்
உமக்கோ இப்பொழுதே விசுவாசி - என்னையா

2. புல்லைப்போல் உலர்ந்திடும் என் வாழ்க்கை
ஆனால் உம்மிடத்தில் எனக்கோர் இடம் தந்தீர் - என்னையா

3. குயவன் கையில் களிமண் போல்
தேவனே என்னை வனைகின்றீர் - என்னையா

4. சோதித்த பின் சுத்த பொன்னாக - இந்த
மண்ணிலே என்னை விளங்க செய்வீர் - என்னையா

**527**.

ஜெபத்தின் நாயகனே எங்கள் தவத்திரு திருமகனே - 2
அகிலம் போற்றும் மகிபன் உம்மை - 2
வாழ்த்தி வணங்குகிறோம் நாங்கள் - 2

1. ஆவியின் அபிஷேகத்தால் எங்களை நிரப்பி மகிழனுமே - 2
அந்நிய பாஷையில் பரலோக பாஷையில் - 2
பாடி மகிழனுமே - நாங்கள் - 2 - அகிலம்

2. பரிசுத்த ஸ்தலத்தினிலே நாங்கள் துதித்து மகிழனுமே - 2
பரலோக அக்கினி பலி பீடமதிலே - 2
பரவசம் ஆகணுமே - 2 – எங்கள் மீது - அகிலம்

3. ஆராதனை அபிஷேகம் எங்கள் சபையில் இறங்கணுமே - 2
ஏறெடுக்கும் எந்த தேவைகட்கும் - 2
நீர் பதில் தந்து மகிழணுமே-எங்களுக்கு – 2 - அகிலம

## 528.

நான் நிற்பதும் நிர்மூலமாகாததும்
தேவ கிருபையே - நான் உயிருடன்
வாழ்வதும் சுகமுடனிருப்பதும் கிருபையே } 2

கிருபையே தேவ கிருபையே
தேவ கிருபையே தேவ கிருபையே } 2

1. காலையில் எழுவதும் கர்த்தரைத் துதிப்பதும்
மாலையில் காப்புடன் இல்லம் வருவதும் கிருபையே } 2
போக்கிலும் வரத்திலும் தொலைதூரப் பயணத்திலும் - 2
பாதம் கல்லிலே இடறாமல் காப்பதும் கிருபையே - 2

2. அக்கினி நடுவினிலே என்னை எரித்திட நேர்ந்தாலும்
தூதனாக நின்று என்னைக் காப்பதும் கிருபையே } 2
ஆழியின் நடுவினிலும் சீறிடும் புயலினிலும் - 2
நீர்மேல் நடந்து வந்து என்னைக் காப்பதும் கிருபையே - 2

3. கண்ணீர் கவலைகளில் கஷ்ட நஷ்டங்களில்
துஷ்டனின் கைக்கு விலக்கி காப்பதும் கிருபையே } 2
ஆற்றித் தேற்றியே அரவணைத்திடும் - 2
மாபெரும் கிருபையே எங்கள் தேவ கிருபையே - 2

## 529.

கேரூபீன் சேராபீன்கள் ஓய்வின்றி
உம்மைப் போற்றுதே
பூலோக திருச்சபையெல்லாம்
ஓய்வின்றி உம்மை போற்றிட } 2

நீர் பரிசுத்தர் நீர் பரிசுத்தர் நீர் பரிசுத்தர் எங்கள்
பரலோக ராஜாவே இந்த
வானம் பூமியுள்ள யாவும் உங்கள்
நாமத்தை உயர்த்தட்டுமே - கேரூபீன்

1. பூமியனைத்திலும் உந்தன் மகிமை
நிறைந்து வழிகின்றதே ஆலயத்திலும்
உந்தன் மகிமை அலையலையாய் அசைகின்றதே
துதிகன மகிமைக்குப் பாத்திரர்
எல்லா புகழும் உமக்குத்தானே } 2 - நீர்

2. வானம் உமது சிங்காசனம் பூமி உந்தன் பாதபடி
நாங்கள் உந்தன் தேவ ஆலயம்
நீர் தங்கும் தூய ஸ்தலம்
சகலமும் படைத்த என் தேவா
நீர் நித்திய சிருஷ்டிகரே } 2 - நீர்

3. பரலோகத்தில் உம்மையல்லால்
யாருண்டு தேவனே பூலோகத்தில் உம்மைத்தவிர
வேறொரு விருப்பமில்லை
என்றும் உம்மோடு வாழ எம்மை
உமக்காய் தெரிந்தெடுத்தீர் } 2 - நீர்

**530**.

*நான் பயப்படும் நாளினிலே*
*கர்த்தரை நம்பிடுவேன்* } 2
*என் கோட்டையும் அரணுமாயிருக்க*
*நான் அடைக்கலம் புகுந்திடுவேன்* } 2

*1.* *உங்களில் இருப்பவர் பெரியவரே*
*பரிசுத்தமானவரே* } 2
*அவர் காத்திடுவார் என்றும் நடத்திடுவார் - 2*
*நித்திய காலமெல்லாம் நம்மையே* - *நான்*

*2.* *நம்மைக் காப்பவர் அயர்வதில்லை*
*உறங்குவதும் இல்லை* } 2
*அவர் ஆலயத்தில் நான் அபயமிட்டேன் - 2*
*என் கூப்பிடுதல் அவர் செவியினிலே* - *நான்*

## 531.

ஓ! ஓ!! ஓ!!! நான் செய்ததை மறந்தாயோ
சீயோனே என்னைத் தள்ளினாயே

1. எகிப்தின் அடிமையில் இருந்த சீயோனே
   என் பலத்த கரத்தினால் இரட்சித்தேனே
   நீயோ என்கரத்தால் ஆணியை அடித்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

2. சத்துருவாலே பயந்து அலறினாயே
   நானோ செங்கடலைப் பிளந்தேனே
   நீயோ என் சரீரத்தைப் பிளந்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

3. கானகத்தில் கண்ணீர் வடித்த சீயோனே
   ஆள உன் கையில் செங்கோல் கொடுத்தேனே
   நீயோ தடியால் என்னை அடித்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

4. அந்நிய தேசத்தில் அலைந்த சீயோனே
   உன்னை என் புயத்தில் சுமந்தேனே
   நீயோ என் தோளில் சிலுவை வைத்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

5. தண்ணீர் இல்லாமல் தாகத்தால் அலைந்தாயே
   நானோ கன்மலை நீரைக் கொடுத்தேனே
   நீயோ கசப்புக்காடியை கொடுத்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

6. பரதேசியைப்போல் பாழாய் கிடந்தாயே
   நானோ ஜாதியின் மேல் உயர்த்தினேனே
   நீயோ சிலுவையில் என்னை அறைந்தாயே - ஓ! ஓ!! ஓ!!!

# ஆங்கிலப்பாடல்கள்
## பல்லவிகள்

**1** Celebrate, celebrate
Celebrate the victory of the Lord
Celebrate, celebrate
Celebrate the victory of the Lord
He has done mighty things yet again (3)
Celebrate the victory of the Lord

கொண்டாடுங்கள், கொண்டாடுங்கள்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுங்கள்
கொண்டாடுங்கள், கொண்டாடுங்கள்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுங்கள்
இன்னும் அவர் வல்லமை செய்திட்டார் (3)
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுங்கள்

**2**

He is my everything, He is my all
He is my everything, both great and small
He makes my life complete, makes
Everything new
He is my everything but how about you

எல்லாம் என் இயேசுவே, எல்லாம் அவரே
சிறிதும் பெரிதாயினும், எல்லாம் அவரே
புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றார்
எனக்கெல்லாம் இயேசுவே என்றென்றுமே

**3**

He is the same unchanging Jesus
Unchanging Jesus (2)
Yes, He is just the same
Unchanging Jesus
Through eternity
Halleluiah (8)

இயேசு கிறிஸ்து மாறாதவரே
மாறாதவரே மாறாதவரே
ஆமென் இயேசு கிறிஸ்து மாறாதவரே
அல்-லே-லூயா (8)

## 4

He poured in the Oil and the wine,
The kind that restoreth my soul,
He found me bleeding and dying
On the Jericho road,
And He poured in the oil and the wine

Jesus Jesus Jesus
I've got Him on my mind,
Jesus Jesus Jesus
I've got Him on my mind,
Jesus Jesus Jesus
I've got Him on my mind,
I have Jesus on my mind.

எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே
திராட்சை ரசத்தால் என் உள்ளம் தேற்றியே
மரணத்தருவாயில் என்னை அவர் கண்டார்
அன்பால்
எரிகோ நகர் வீதி தனிலே
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார்
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை கவர்ந்தார்
எந்தன் நல்ல இயேசு என் சிந்தை நிறைந்தார்

## 5

He will never let go my hand (2)
Though the storms may come
And the winds may blow,
He will never let go my hand.

இயேசு என்னை கைவிடமாட்டார் (2)
கடும் புயல் வரினும், பெருங்காற்று வீசினும்
அவர் என்னைக் கைவிட மாட்டார்
இயேசு உன்னை இரட்சித்திடவே (2)
சிலுவையில் மாண்டார் விடுதலை ஈந்தார்
இயேசு உன்னை இரட்சித்திடவே
இயேசு உன்னை அழைக்கிறாரே (2)
அவரை அண்டினால் மோட்ச பாக்கியம் பெறுவாய்
இயேசு உன்னை அழைக்கிறாரே

## 6

He’s able, He’s able
I know He is able
I know my Lord is able to carry me through (2)
He heals the broken - hearted,
He sets the captive free
He makes the lame to walk again
And makes the blind to see
Oh yes He’s able, He’s able
I know He is able
I know my Lord is able to carry me through

## 7

I know He is wonderful (2) for
He saves and He keeps and He sanctifies me
So I know He is wonderful
They say He is wonderful (2)
The sun and the moon and the stars declare,
That their Maker is wonderful,
Do you know He is wonderful (2)
If you trust in the name of my Lord Jesus Christ
You will know He is wonderful

**அவர் அற்புதமானவரே (2)**
**என்னை மீட்டென்னைக் காத்தென்னைத் தாங்குகிறார்**
**அவர் அற்புதமானவரே**
**அவர் உன்னதர் என்றனரே (2)**
**விண் சூரிய சந்திர நட்சத்திரங்கள்**
**அவர் உன்னதர் என்றனரே**
**அவர் அற்புதமானவரே (2)**
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினாரே
அவர் அற்புதமானவரே

## 8

In the name of Jesus (2)
We have the victory!
In the name of Jesus (2)
Satan will have to flee
When we stand on the names of Jesus
Tell me who can stand before
In the name of Jesus, Jesus
We have the victory!

இயேசு என்னும் நாமத்தில் (2)
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் (2)
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிரில் நிற்பாரோ!
இயேசு, இயேசு நாமத்திலே
ஜெயம் நமக்குண்டு

## 9

Is anything too hard for the Lord? (2)
Is anything too hard (3) for the Lord?
No, nothing is too hard for the Lord?
No, nothing is too hard, (3) for the Lord.

இயேசுவால் ஆகாததொன்றுண்டோ? என்
இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாதது - (2)
இயேசுவால் ஆகாத தொன்றுண்டோ?
இயேசுவால் ஆகாததொன்றில்லை – என் (2)
என் இயேசுவால் ஆகாதது - (2)
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை

## 10

It's bubbling (3) in my soul
I'm sining and praising
Since Jesus made me whole,
Folks can't understand me,
How can I keep it quiet?
It's Bubbling, Bubbling, Bubbling, Bubbling
Bubbling day and night

என்னுள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே
இயேசென்னை ரட்சித்தார் நான் ஆடிப்பாடுவேன்
எவரும் அறியாரே என்னுள்ளம் பொங்குதே
என்னுள்ளம் பொங்கி, பொங்கி, பொங்கி, பொங்கி
பொங்கி வழியுதே,
அல்லும் பகலும் எந்தன் உள்ளம் பொங்கி வழியுதே

## 11

Oh! Glory to God He has lifted me up
He has lifted me up I know
He reached out His hand
And He lifted me up
And that's why I love Him so
I love Him more and more (2)
And when I stand upon the other shore
I love Him more and more (2)
And when I stand upon the other shore
I'll praise Him more and more

ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
என் தேவனுக்கு மகிமை
நான் இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நான் நின்று அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

## 12

Rejoice in the Lord always and again I say rejoice (3)
Rejoice (2) and again I say rejoice - (2)

கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிரு
கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிரு
எப்போதும் எப்போதும் சந்தோஷமாயிரு
எப்போதும் எப்போதும் சந்தோஷமாயிரு

## 13

Sweet Jesus (2)
What a wonder you are
You are brighter than the morning star;
You are fairer, much fairer
Than the lily of the vale,
You are precious, more precious to me

இன்ப இயேசு என் மதுரம்
என் அற்புதர் நீரே
விடிவெள்ளிக்குமேல் பிரகாசிக்கின்றீர்
உந்தன் ரூபம் வழி
லீலியிலும் அழகுள்ளதே
என் அருமையின் மதுரம் நீரே

## 14

This is the day (2)
That the Lord hath made (2)
We will rejoice (2)
And be glad in it (2)
This is the day that the Lord hath made
We will rejoice and be glad in it
This is the day, this is the day, that the Lord hath made

இன்றைய நாள் இன்றைய நாள்
கர்த்தர் தந்த நாள், கர்த்தர் தந்த நாள்
நாம் மகிழ்ந்தே, நாம் மகிழந்தே
களிகூருவோம், களிகூருவோம்
இன்றையநாள் கர்த்தர் தந்த நாள்
நாம் மகிழ்ந்தே களிகூருவோம் – இன்றைய நாள்

## 15

Come and praise Him
Royal priesthood
Come and worship holy nation
Worship Jesus, our redeemer
He is precious, King of glory

## 16

I have decided to follow Jesus,
I have decided to follow Jesus,
I have decided to follow Jesus,
No turning back, no turning back

Though all may leave me, still I will follow,
Though all may leave me, still I will follow,
Though all may leave me, still I will follow,
No turning back, no turning back

The cross before me, the world behind me,
The cross before me, the world behind me,
The cross before me, the world behind me,
No turning back, no turning back

Take the whole world, but give me Jesus
Take the whole world, but give me Jesus
Take the whole world, but give me Jesus
No turning back, no turning back

## 17

1. HAVE you been to Jesus for the cleansing power?
Are you washed in the Blood of the Lamb?
Are you fully trusting in His grace this hour
Are you washed in the Blood of the Lamb?

**CHORUS**

*Are you washed . . . in the blood . . .*
*In the soul - cleaning Blood of the Lamb?*
*Are your garments spotless? Are they white as snow?*
*Are you washed in the Blood of the Lamb?*

2. Are you walking daily by the saviour’s side?
Are you washed in the Blood of the Lamb?
Do you rest each moment in the Crucified?
Are you washed in the Blood of the Lamb?

3. When the Bridegroom cometh will your robs we white
Pure and white is the Blood of the Lamb?
Will your soul be ready for the Mansions bright,
And be washed in the Blood of the Lamb?

4. Lay aside the garments that are stained with sin,
And be washed in the Blood of the Lamb!
There’s fountain flowing for the soul unclean
Oh, be washed in the Blood of the Lamb!

**சரணங்கள்**

1. பரிசுத்தம் பெற வந்தீட்டீர்களா
ஒப்பில்லா திரு ஸ்நானத்தினால்?
பாவ தோஷம் நீங்க நம்பீனீர்களா?
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

## 18

### I'M NOT ASHAMED TO OWN MY LORD

1. I'm not ashamed to own my Lord,
Or to defend His cause;
Maintain the honour of His Word,
The glory of His Cross..

**CHORUS**

*At the Cross! at the Cross! where I first saw the light*
*And the burden of my heart rolled away . . .*
*It was there by faith I received my sight,*
*And now I am happy all the day*

2. Jesus, my God! I know His name
His name is all my trust;
Nor will he put my soul to shame,
Nor let my hope be lost.

3. Firm as His throne His promise stands;
And he can well secure

What I've committed to His Hands,
Till the decisive hour

4. Then will he own my worthless name
Before His Father's Face;
And, in the new Jerusalem
Appoint my soul a place

**சரணங்கள்**

1. நான் உம்மைப்பற்றி இரட்சகா
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்

## 19

### THERE SHALL BE SHOWERS OF BLESSINGS

1. “THERE shall be showers of blessing;”
This is the promise of love
There shall be seasons refreshing
Sent from the Saviour above

**CHORUS**

*Show . . . ers of blessing*
*Showers of blessing we need;*
*Mercy-drops round us are falling*
*But of the SHOWERS we plead*

2. “There shall be showers of blessing”
Precious reviving again;
Over the hills and the valleys,
Sound of abundance of rain

3. “There shall be showers of blessing”
Send them upon us, O Lord!
Grant to us now a refreshing;
Come, and now honour Thy word

4. “There shall be showers of blessing”
Oh, that to-day they might fall,
Now as to God we’re confessing
Now as on Jesus we call!

## 20

### JOY TO THE WORLD

1. Joy to the world, the Lord is come
Let earth received her King
Let every heart prepare Him room
And heaven and nature sing
And heaven and nature sing
And heaven, and heaven and nature sing.
2. Joy to the world, the Saviour reigns
Let men their songs employ
While fields and floods, rocks hills, and plains
Repeat the sounding joy, - Repeat the sounding joy
Repeat, repeat the sounding joy
3. No more let sins and sorrows grow
Nor thorns infest the ground
He comes to make Him Blessings flow
Far as the curse is found - far as the curse is found
Far as, far as the curse is found.
4. He rules the world with truth and grace
And makes the nations prove
The glories of His righteousness
And wonders of His love - And wonders of His love
And wonders, wonders of His love.

## 21

### THERE'S POWER IN THE BLOOD

1. Would you be free from your burden of sin?
There's Power in the Blood, Power in the Blood;
Would you o'ver evil a victory win?
There's wonderful Power in the Blood

**CHORUS**

*There is Power, Power, wonder working Power,*
*In the Blood of the Lamb;*
*There's Power, Power, wonder working Power,*
*In the Precious Blood of the Lamb*

2. Would you be free from your passion and pride?
There's Power in the Blood, Power in the Blood,
Come for a cleansing to Calvary is tide,
There's wonderful Power in the Blood
3. Would you be whiter, much whiter than snow?
There's Power in the Blood, Power in the Blood,
Sin stains are lost in its life giving flow,
There's wonderful Power in the Blood.
4. Would you do service for Jesus your king?
There's Power in the Blood, Power in the Blood,
Would you live daily His praises to sing?
There's wonderful Power in the Blood

## 22

1. All to Jesus I surrender,
   All to Jesus I freely give;
   I will ever love and trust Him,
   In His presence daily live

   I surrender all I surrender all
   All to Thee, my blessed Saviour,
   I surrender all.

2. All to Jesus I surrender,
   Humbly at His feet I bow,
   Worldly pleasures all forsaken,
   Take me, Jesus, take me now

3. All to Jesus I surrender,
   Make me, Saviour, wholly Thine;
   May Thy Holy Spirit fill me,
   May I know Thy pow'r divine

4. All to Jesus I surrender,
   Lord, I give myself to Thee;
   Fill me with Thy love and power
   Let Thy blessing fall on me

## 23

Soon and very soon we are going to see the King (3)
Hallelujah! Hallelujah!!
We're going to see the king
No more crying there, we're going to see the king (3)
Hallelujah! Hallelujah!!
We are going to see the king

கொஞ்சகாலம்தான் இராஜாதி இராஜனைக் காணுவோம் (3)
அல்லேலூயா அல்லேலூயா !
இராஜாதி இராஜனைக் காணுவோம்
அழுகை அங்கில்லை இராஜாதி இராஜனைக் காணுவேன் (3)
அல்லேலூயா அல்லேலூயா !
இராஜாதி இராஜனைக் காணுவோம்

## 24

There is power power
Wonder working power
In the blood of the lamb
There is power power
Wonder working power
In the Precious blood of the lamb

வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தால்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்